

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

# ஸ்ரீ வசன பூஷண ப்ரமாணத்திரட்டு.

அரும்பதவிளக்கம்.

திருக்குடந்தை, திருப்புறம்பயம்
**T. D.** இராமஸ்வாமி இராமாநுஜதாஸரால்,
இயற்றப்பட்டு,

பண்டிதர்களால் பரிசோதிக்கப்பட்டு,

கும்பகோணம்,
ஸ்ரீ கோமளாம்பா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1922.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

அன்ன புகழ்முடும்பை யண்ணலுலகாசிரியன்
இன்னருளால் செய்த கலையாவையிலும்-உன்னில்
திகழ்வசநபூடணத்தின் சீர்மை யொன்றுக்கில்லை
புகழல்ல விவ்வார்த்தை மெய்யிப்போது



திருமலை அனந்தாண் பிள்ளை கபிஸ்தலம்

ஸ்ரீமத். உ. வே. அனந்தாசாரியஸ்வாமிகள்

உய்ய நினைவுடை யீருங்களுக்குச் சொல்லுகின்றேன்
வைய குருமுன்னம் வாய் மொழிந்த—செய்யகலையாம்
வசனபூடணத்தின் ஆழ்பொருளைக் கற்றதனுக்
காம் நிலையில் நில்லுமறிந்து.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# நூன் முகம்.

முன்னங்குர வோர் மொழிந்த வசநங்கள்
தன்னைமிகக்கொண்டு கற்ருேர் தம்முயிர்க்கு--மின்னணியாச்
சேரச் சமைத்தவரே சீர்வசந பூடணமென்னும்
பேரிக் கலைக்கிட்டார் பின்.

'உடைமையும் வறுமையும் ஒருவழிநில்லா'. இவ்வுலகவாழ்க்கையை, அயர்வறுமமரர்களிலும் அதிசய ஜ்ஞாநத்தை மயர்வறப்பெற்ற மாறன், 'வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை' என்றத்தை, 'இன்னின்ற நீர்மையினியாமுறுமை' என்றும், 'விண்ணுளர் பெருமாற்கடிமை செய்வாரையுஞ் செறுமைம்புலன்' என்று இவ்வழுக்குடம்பைப் போக்கித்தரவேணுமென்று முதலடியிலே ப்ரார்த்தித்தார் இவர் ஒருவரே. ஸர்வார்த்த ஸாதகமான இச் சரீரத்தை, சாஸ்திரங்களெல்லாம் ஒரு தலையாய் ப்ரார்த்திக்க, இவர் 'யானுநீதானுய்த் தெளிதொறு நன்று மஞ்சுவனரக நானடைதல்' என்று வெறுத்து வேண்டாமென்றது:—இது அவனுக்குச் சரீரமாய்ச் சேஷமாயிருந்தாலும், இஸ்ஸம்ஸாரத்திலிருப்பு, அவன் கொடுத்த மயர்வற்ற ஜ்ஞானத்தையும் கெடுத்து, பழய ஸம்ஸாரியாய் ஆக்கி, அவனையும் அகலச்செய்யு மென்றும் பயத்தாலே அருளிச்செய்தாரித்தனை,

இவரைப் பின்பற்றின நம்மாசார்யர்களும், ஆத்ம தர்மத்தையே அவலம்பித்து, தாங்களும் அநுஷ்டித்து பிறருக்கும் உபதேசித்துப் போந்தார்கள். இப்படி உபதேச ப்ராப்தமான ரகஸ்யங்களை க்ரந்த ரூபமாக அருளிச்செய்தவர்களில், லோகாசாரியன் பிள்ளைக்கு ஸமானர்களும், இவர் செய்தருளின ஸ்ரீ வசநபூஷண சாஸ்த்திரத்திற்குச் சமான சாஸ்த்திரமும், இல் _யாதென்பது ஆன்ருேர் கொள்கை.

மற்றவர்களைக்காட்டிலும் இவருக்கு ஏற்றம் வந்தபடி யாவது:— நம்மாழ்வார் ஆசார்ய லக்ஷணம் அருளிச்செய்யும் போது, 'மல்கு நீர்ப்புனற் படப்பை யிரைதேர் வண் சிறுகுருகே!' என்று பக்ஷிகளுக்குச் சமான தர்மத்தை யுடையவர்கள் ஆசாரியர்களென்று வெளியிட்டார். அதாவது, குருகானது எப்படி தன் குஞ்சுகளின் வாய்க்கடங்கின இறையைத் தேடிக் கொடுக்குமோ, அப்படிப்போலே, ஆசார்யர்களும் தங்கள் ஜ்ஞானத்தையும், வ்யுத்பத்தியையும்காட்டாமல், சிஷ்யனுடைய அறிவிற்குத் தக்கபடி, ஆர்த்தங்களை போதிக்கவேணுமென்றார். அவ்வாறே இவரும், சேதநர்கள் விஷயமாக, ரகஸ்யத்ரயார்த்தங்களை வெளியிடும்போது, நாலு தரமாக இட்ட வைபவத்தை நிரூபித்தால், இவர் க்ருபை மற்றவர்களுடைய க்ருபையைக் காட்டிலும் ஒப்பற்றதேயாகும்.

மற்ற சாஸ்த்திரங்களைக் காட்டிலும் இதுக் காதிக்யம் சொல்லும்போது, அவைகள் விசிஷ்ட வேஷத்தைக்கொண்டு வர்ணத்தையே குவாலாக மதித்து, ப்ரவ்ருத்தி தர்மத்தை யுபதேசித்துப் போந்தது. இது அங்ஙனன்றிக்கே, பகவத் ஸம்பந்தத்தையே பற்றுக் கோடாகக்கொண்டு, வர்ணாதிகளால் வரும் உத்க்ருஷ்டங்களை அப்ரயோஜகமென்று கழித்து, சரணாகதியின் உட்பொருளான நிவ்ருத்தி தர்மத்தையே முக்யமாகக்கொண்டு, "ஆசாரியாபிமானமே உத்தாரகமாக" அறுதியிட்ட ஏற்றமுண்டு. இத்தால், "திகழ் வசநபூடணத்தின் சீர்மை யொன்றுக்கில்லை-புகழல்ல விவ்வார்த்தை மெய்" என்று அர்த்தவாத மின்றிக்கே, ஆப்திக்குடலாக, "ஸத்யம் ஸத்யம்" என்னுமாப்போலே, ஸ்வாமி ஸ்ரீவரவர முனிகள், இதன் சீர்மையை ப்ரதிஜ்ஞைபண்ணி யருளினார். வேதங்களில் இலை மறை கனிபோலப் பொதிந்து கிடக்கும் குஹ்யார்த்தங்களை, இப் ப்ரபந்தம் வெளியிட்டிருப்பதால், யாவரும் அபிநிவேசத்துடன் அறிகைக்கும், அநுஷ்டிக்கைக்கும், ஈடான ஜ்ஞாந சக்தி அதிகாரம் தங்களுக்கில்லை யென்ன வொண்ணாதென்பதை, ஸ்வாமி யதீந்த்ர ப்ரவணர் "வசன பூடணத்தின் வான் பொருளைக்கல்லாத தென்னெஞ்சே கவர்ந்து" என்று, இதன் மஹிமையை, லோ

கத்தாருமறியும்படி யியம்பினர். இன்னமும், கடல், பேராழமாயிருக்கச்செய்தேயும், நீர் தெளிவாலே, "மலைகளும் மாமணியும் மலர்மேல் மங்கையும் சங்கமும் தங்குகின்ற அலைகடல்," என்னும்படி, தரையில் கிடக்கும் இரத்தினங்களை தோற்றிவிப்பிக்குமாப்போலே, இப் ப்ரபந்தத்தின் அர்த்தங்கள் கனத்திருக்கச்செய்தேயும், சப்தங்களின், செவ்வையாலே, செம்பொருளெல்லாம் செவ்வே இப் ப்ரபந்தம் யறிவிப்பதால் "ஆர்வசநபூடணத்தி னாழ்பொருளெல்லாமறிவார்-ஆர்" என்று ஸ்வாமி ஸ்ரீ மணவாள மாமுனிகள், இதன் பெருமையை பாரறியப்புகழ்ந்தார். மற்றவர்களும், "அசை விலாவேத மதனுள்ளனைத்தையும்-வசந பூடண வழியாலருளிய, மறையவர் சிகாமணி" என்றருளியபடி, இவருடையவும், இவருடைய ப்ரபந்த்தினுடையவும் அப்ரதிமப்ரபாவத்தை யாவராலுமில்லைசெய்யப்போகாது.

உள்ளும் புறம்பும் ஒத்திருக்கும் கன்னற்கட்டி போன்ற இத்திவ்ய சாஸ்த்ரார்த்தத்தை, விசதவாக் சிகாமணியான ஸ்ரீ மணவாளமா முனிகள், யாவரும் ஆவலுடன் எளிதில் தேனும் பாலும் கன்னலும் அமுதமொத்தாசாயனம்போல் கடுகப்பருகலாம்படி, 'தொண்டர்க் கமுதமான' ப்ரமாணங்களைக்கொண்டு 'மெச்சும்' வியாக்யானமா யருளிச்செய்த ப்ரபாவத்தை, பாவுதலும் வேண்டுமோ! தீம் பண்டங்களை நன்றாக சுவைத்தருந்தினல், அப்போது நாவுக்கினிமையும், பிறகு, சரீரத்திற்கு ஆரோக்யத்தையும் விளைவிக்குமாபோலே; இவ் வ்யாக்யானத்திலுள்ள உபய வேதாந்த ப்ரமாணங்களின், சொற்சுவை, பொருட் சுவை, முதலியவற்றை, நன்றாய் உணர்ந்துணர்ந்து தெளிந்தால், அப்போது மனதிற்கு ஆனந்தத்தையும், ஸ்வரூபாதிகளில் த்ருடாத்யவசாய ஜ்ஞானத்தையும் பிறப்பிக்கும். மற்றப்படி தீம் பண்டத்தை யுண்டவர்களுக்கு, இனிமை யற்று அஜீர்ணத்தையும் உண்டுபண்ணி, முடிவில் வியாதிக்கு ஹேதுவாக்குமாப்போலே, ப்ரமாணங்களை நன்றாயறியாதவர்களுக்கு, விசுவாச மாந்தியத்தால், அநாத்ம புத்தி பிறந்து, முடிவில் ஆத்மநாசத்தையும் விளைவிக்கக்கூடும். ஆகையால், இவைகளை ஒருவாறு அறியும் வண்ணம், ஆசாரியன் ஸந்நிதியில் கேட்ட ஆர்

த்த விசேஷங்களை, ஞாபகார்த்தமாக எழுதிவைத்திருந்ததை, இப்போது அச்சிட்டு வெளிப்படுத்தினேனித்தனை.

திருக்குடந்தை.
4—1—22.

தாசன்,
தி. த. இ. இ.

குறிப்பு.— இக்க்ரந்தத்தை அச்சிட்டு வெளிப்படுத்துவதில், ஸ்ரீமத். உ. வே. சின்னமு. ர. ஸ்ரீநிவாஸ பாட்டராசாரியர் ஸ்வாமிகள் தெரியாத ப்ரமாணங்களைத் தேடிக்கொடுத்து, அறியாத வர்த்தங்களை யறிவித்து, மற்றும் அச்சிடும் காரியங்களில் பல முகமாக நின்றுதவி புரிந்தப் பேருதவிக்குக் கைம்மாறு, பரமமான அஞ்ஜலியைத்தவிர, அவ்வருகு செய்யலாவது, எங்கும் எப்போது மில்லையென்பதை விண்ணப்பித்தேன்.

தி. த. இ. இ.



ஸ்ரீ: ॥

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ॥

# ஸ்ரீவசனபூஷண ப்ரமாணத்திரட்டு.

**1.** யத்ரர்ஷய: ப்ரதமஜா யே புராணா:.

(பதவுரை) யத்ர-எந்த பரமபதத்தில், யே-எந்த, ருஷய:-நித்ய ஸூரிகள், ப்ரதமஜா:-முதலிலுண்டானவர்கள், புராணா:-முன்பும் புதிதாயிருப்பவர்கள் (அதனால் நித்யர்.)

**2.** அநாதிமாயயா ஸுப்த: யதா ஜீவ: ப்ரபுத்ய(ஸ்ய)தே ।
அஜமநித்ரமஸ்வப்நமத்வைதம் புத்ய(ஸ்ய)தே ததா ॥

அநாதிமாயயா-காரணரூபமாயையான ப்ரக்ருதியினால், ஸுப்த:-உறங்குகிற, ஜீவ:-ஜீவாத்மாவானவன், யதா-எப்பொழுது, அஜம்-தன்னைப் பிறப்பில்லாதவனாகவும், அநித்ரம்-உறக்கமில்லாதவனாகவும், அஸ்வப்நம்-ஸ்வப்நசூந்யனாகவும், அத்வைதம்-பரமாத்மாவுக்கும் தனக்கும் பேதமில்லாதவனாகவும், புத்யதே-அறிகிறான்.

**3.** அநந்தா வை வேதா:.

வேதா:-வேதங்கள், அநந்தாவை-எல்லையில்லாதவைகள்.

---

1 ய-வே-அச்சி-ட-62. 2. மாண்டூக்யம்-2-கண்டம்-21-வாக்கியம். 3. ய-வே-காட-ப்ர-1-44.

## முதல் ஸூத்திரம்.

4. ப்ரத்யக்ஷமேகஞ்சார்வாகா: கணாதஸுகதௌ புந: ।
அநுமாநஞ்ச தச்சாபி ஸாங்க்யா: ஶப்தஞ்சதே அபி ॥

அர்த்தாபத்த்யாஸஹிதாநி சத்வார்யாஹ ப்ரபாகர: ।
ந்யாயைகதேஶிநோऽப்யேவ முபமாநம் ப்ரசக்ஷதே ॥

அபாவஷஷ்டாந்யேதாநி பாட்டா வேதாந்திநஸ்ததா ।
ஸம்பவைதிஹ்யயுக்தாநி தாநி பௌராணிகாஜகு: ॥

சார்வாகா:-லோகாயத மதஸ்தர்கள், ப்ரத்யக்ஷம் ஏகம்-ப்ரத்யக்ஷமொன்றையே ப்ரமாணமாக, ஜகு:-சொன்னார்கள். கணாதஸுகதௌ புந:-நையாயிகர்களும் பௌத்தர்களும், அநுமாநஞ்ச-அநுமானத்தையும், தச்ச-அந்தப்ரத்யக்ஷத்தையும் ப்ரமாணமாகச் சொன்னார்கள். ஸாங்க்யா:-கபிலமதஸ்தர்கள், ஶப்தஞ்ச-ஶப்தத்தையும், தே அபி-அந்த ப்ரத்யக்ஷாநுமாநங்களையும் (சொன்னார்கள்) ப்ரபாகர:-ப்ரபாகரன், அர்த்தாபத்த்யாஸஹ-அர்த்தாபத்தியோடுகூட, ஏதாநி சத்வாரி இந்த ப்ரத்யக்ஷாநுமாந ஶப்த அர்த்தாபத்தியென்னும் நான்கையும் (ப்ரமாணமாக) ஆஹ-சொல்லுகிறான். ந்யாயைகதேஶிந:-நையாயிகர்களில் சிலர், ஏவம்-முன்சொன்ன நான்கையும், உபமாநமபி-உபமானத்தையும் (ப்ரமாணமாக) ப்ரசக்ஷதே-சொல்லுகிறார்கள். பாட்டா:-பாட்டமதஸ்தர்களும், ததா-அப்படி, வேதாந்திந:-வைதிகர்களும், ஏதாநி-முன்சொன்ன ப்ரத்யக்ஷாதி ஐந்து ப்ரமாணங்களை, அபாவஷஷ்டாநி-அபாவத்தோடு ஆறு ப்ரமாணங்களாக, ஜகு:-சொல்லுகிறார்கள். பௌராணிகா:-பௌராணிகர்கள், தாநி-கீழ்ச்சொன்ன அந்த ஆறு ப்ரமாணங்களையும், ஸம்பவைதிஹ்யயுக்தாநி-ஸம்பவம், ஐதிஹ்யம் என்ற இவைகளுடன்கூடி எட்டு ப்ரமாணங்களாக, ஜகு:-சொல்லுகிறார்கள்.

சார்வாகர்களுக்கு ப்ரமாணம்-ப்ரத்யக்ஷம்-1.

வைசேஷிகர், பௌத்தர், இவர்களுக்கு ப்ரமாணம்-ப்ரத்யக்ஷம், அநுமானம்-2.

ஸாங்கியருக்கு ப்ரமாணம்-ப்ரத்யக்ஷம், அநுமானம், ஆகமம்-3. நையாயிகர்கள், பூஷணமதத்திலுள்ளார், இவர்களுக்குக் கீழ்ச்சொன்ன மூன்றும் ப்ரமாணங்கள்.

உதயந மதத்தாருக்கு கீழ்ச்சொன்னதோடு உபமானத்தையுஞ்சேர்த்து-4.

ப்ராபாகரர்களுக்குக் கீழ்ச்சொன்னதோடு அர்த்தாபத்தியைச் சேர்த்து-5.

பாட்டர், மாயாவாதிகள், இவர்களுக்கு கீழ்ச்சொன்னதோடு அபாவத்தையுஞ்சேர்த்து ப்ரமாணம்-6.

பௌராணிகர்கள், கீழ்ச்சொன்ன ஆறு ப்ரமாணங்களோடு, ஸம்பவமும், ஐதிஹ்யமும் சேர்த்து 8 ப்ரமாணமென்பார்கள்.

## அஷ்டவித ப்ரமாணங்கள்.

ப்ரமாணமென்பது-ப்ரமாகரணம். ப்ரமையென்பது-யதாவஸ்திதவ்யவஹாராநுகுணஜ்ஞானம். (ஸம்சய அந்யதாஜ்ஞான விபரீதஜ்ஞான மில்லாமல் வ்யவஹரிக்கத்தக்க ஜ்ஞானம்.)

1. ப்ரத்யக்ஷமாவது-ஸாக்ஷாத்கரித்து ப்ரமையையுண்டுபண்ணத்தக்க கண் முதலிய இந்திரியங்கள்.

2-அநுமானமாவது:—வ்யாப்தமாயிருக்கிற சில அடையாளங்களைக்கொண்டு காணப்படாத வேறொரு வஸ்து இருக்கிறதென்று அறிவதற்குக்காரணமான ஹேது ஸம்பந்தஜ்ஞானம். அதாவது-மலையின்கண் மறைந்திருக்கும் அக்னி வெளியில் காணப்படும் தூமாதிகளால் அம்மலையிலிருக்கிறதென்று நிச்சயிக்கைக்குடலாயிருப்பது.

3-ஆகமமாவது:—சாஸ்த்ரமும், ஆப்தர்கள் (உண்மைசொல்லுபவர்கள்) வாக்கியமும்.

4-உபமானமாவது:—அறியாத ஒரு பொருளை யுணர்த்தும் பொருட்டு அதுபோன்ற அறிந்த ஒரு பொருளைத் திருஷ்டாந்தம் காட்டுகை. அதாவது:—மறையை காட்டில் காண விரும்புமொருவனுக்கு அதைக் கண்டறிந்துகொள்ளும்பொருட்டு 'மறைபசுவைப்போலிருக்கும்' என்றுரைப்பது.

5-அர்த்தாபத்தியாவது:—பகலுணுது நான் உபவாசி என்பவன் தேகம் பருத்திருப்பதைக்கண்டு அவன் இரகசியமாக இரவில் புஜிக்கிறுன் என்றறிவது.

6-அபாவமாவது:—ஒன்றின் இல்லாமையை ஸாதித்துக்கொடுக்கும் ஜ்ஞானம். அதாவது:—'இங்கு புததகம் இல்லை' என்றபோது புத்தகம் புலப்படாமையே அவ்வாக்கியம் உண்மை யென்பதை யறிவிக்கிறது.

7-ஸம்பவமாவது:—ஆயிரமுள்ளவிடத்தில் நூறுண்டு என்கிற உபபத்தி.

8. ஐதிஹ்யமாவது:—முதலில் சொன்னுர் இன்னுரென்று அறியாமல் யாவரும் கூறிக்கொண்டிருக்கும் 'இம்மரத்தில் பேயிருக்கிறது' என்பன வார்த்தைகள்.

5. வேஷே கர்த்ராத்ய (ஜு) ஹாவாத் பலவதி ஹி நயெஸ்த் வந்முவே நீயமாநே, தந்மூலத்வேந மாநஷ் தஜிதரஜவிஷம் ஜாயதே ரங்மயாமந் । தஸ்மாத் ஸாங்க்யம் (ஜு) ஸயோகம் ஸபஶு பதிமதம் குத்ரவித் பஞ்வராத்ரம் ஸர்வத்ரைவ ப்ரமாணம் தஜிஜமவமதம் பஞ்வமாஜேவவேஜாத்॥

5. ஸ்ரீரஸ்த உ க். 14.

ஹே ரங்கதாமன்_ஏ ரங்கநாதனே! கர்த்ராத்யபாவாத்_செய்தவனும் அவனடியாக வரும் ப்ர(மா)ம விப்ரலம்பாதிகளுமில்லாமையால், ஸைஷவதி_ஸ்மிருதீதிஹாஸங்களைக்காட்டிலும் ப்ரபலமான, வேதே_வேதமானது, ந்யாயை:_ஸாமாந்ய விசேஷ கதி ஸாமாந்யாதி ந்யாயங்களினால், த்வந்மூசே_தேவரீரைப்ரதிபாதிப்பதாக, நீயமானே_அடைவிப்பிக்கப்பட்டிருந்த வளவில், ததிரத்_அந்த வேதத்தைக்காட்டிலும் வேறான, அகிலம்_ஸமஸ்தமான ஸ்மிருதி முதலியவைகள், தந்மூலத்வேந_அந்த வேதத்தை மூலமாகவுடைத்தாயிருப்பதாலே, மானம் ஜாயதே_ப்ரமாணமாகிறது. தஸ்மாத்_ஆகையால், ஸயோகம்_யோகமதத்தோடும், ஸபசுபதிமதம்_சைவாகமத்தோடுங்கூடின, ஸாங்கியம்_ஸாங்கியாகமம், குத்ரசித்_சில விடத்திலேயே, ப்ரமாணம்_ப்ரமாணமாக ஆகிறது. பஞ்சராத்ரம்_பாஞ்சராத்ராகமமானது, ஸர்வத்ரைவ_ஸர்வாம்சத்திலும் (ப்ரமாணமாகிறது) தத்தம்_இவ்வித அர்த்தமானது, பஞ்சமாதேவ வேதாத்_ஐந்தாம் வேதமான பாரதத்தாலேயே, அவகதம்_அறியப்பட்டது.

6 வாசா விரூப நித்யயா.

விரூப_அழகுள்ளவனே! நித்யயா_எப்போதுமுள்ள, வாசா_வாக்கினால், (வேத வாக்கினால் ஈச்வரனை யறியலாம்)

7. அநாதிநிதநா ஹ்யேஷா வாகுத்ஸ்ருஷ்டா ஸ்வயம்புவா । ஆதௌ வேதமயீ திவ்யா யதஸ்ஸர்வா: ப்ரஸூதய: ॥

யத:_எந்த வாக்கினால், ஸர்வா:_ஸமஸ்தமான, ப்ரஸூதய:_ஜன்மங்களும் (ஸகல ஜகத்தின் ஸ்ருஷ்டிகள் அறியப்படுகிறதோ) அநாதி நிதநா_உத்பத்தி விநாசங்களற்றதாய், திவ்யா_ப்ரமாணந்

6. ய_வே_கா_2_ப்ர_6_ப_2_வா_2. 7. மநு.

தரங்களைக்காட்டிலும் விலக்ஷணையாய், வேதமயீ—வேதஸ்வரூபமான, ஏஷா—இந்த, வாக்—வாக்கானது, ஆதௌ—ஸ்ருஷ்டிகாலத்தில் ஸ்வயம்புவா—ஸ்வயமாகவே (புண்யபாபங்களாலன்றிக்கே தன்னிச்சையினால்) அவதரிக்கிற ஸர்வேச்வரனால், உத்ஸ்ருஷ்டா—உண்டாக்கப்பட்டது.

**8.** ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யமுத்ருத்ய (ஈ்ருத்ய) ஹுஜமுச்ய (வ்ய)தே। வேதஶாஸ்த்ராத்பரம்நாஸ்தி நதைவம் கேஶவாத் பரம்॥

ஸத்யம் ஸத்யம்—மெய்யே மெய்யே, புநஸ்ஸத்யம்—மீளவும் மெய்யே, (அடிக்கடி மெய் என்பது—வேதமே ப்ரபல ப்ரமாணம், கேசவனே பரதேவதை என்பதை எல்லார் நெஞ்சிலும் த்ருடப்படுத்துகைக்காக) புஜம்—கையை, உத்தருத்ய—தூக்கிக்கொண்டு, உச்யதே—சொல்லப்படுகிறது. (அதாவது) வேதஶாஸ்த்ராத்—வேதமாகிற சாஸ்திரத்தைக்காட்டிலும், பரம்—மேலான ப்ரமாணம், நாஸ்தி—கிடையாது, கேஶவாத்—கேசவனைக்காட்டிலும், பரம் தைவம்—உத்க்ருஷ்டையான தேவதை, நாஸ்தி—கிடையாது.

**9.** ஆதௌ வேதா: ப்ரமாணம் ஸ்ம்ருதிருபகுருதே ஸேதிஹாஸை: புராணைர்ந்யாயைஸ்ஸார்த்தம் த்வதர்சாவிதிமுபரி பரிக்ஷீயதே பூர்வபாக:। ஊர்த்வோ (ர்த்வோ) பாகஸ்த்வதீஹாகுணவிபவபரிஜ்ஞாபநைஸ்த்வத்பதாப்தௌ வேத்யோ (த்யோ) வேதைஶ்ச ஸர்வைரஹமிதி பகவந் ஸ்வேந ச வ்யாஸகர்த்த (ர்த்த)॥

ஹே பகவன்—ஏ பகவானே! வேதா:—வேதங்கள், ஆதௌ—முதலடியில், ப்ரமாணம் ப்ரமாணமாகின்றன. ஸ்ம்ருதி:—மந்வாதிஸ்ம்ருதிகள், ஸேதிஹாஸை:—ஸ்ரீராமாயணம் முதலான இதி

---

8. ஹரி—சேஷ—2—15. 9. ஸ்ரீர—ஸ்த—உத்—19.

ஹாஸங்களோடு கூடிய, புராணை:-ஸ்ரீவிஷ்ணுபுராணாதிகளோடும், ந்யாயைஸ்ஸார்த்தம்-பூர்வோத்தர மீமாம்ஸைகளோடும், உபகுருதே-உபகரிக்கிறது. பூர்வ பாக:-(அந்த வேதத்தில்) கர்மகாண்டமானது, த்வதர்ச்சாவிதிம் உபரி-தேவரீரது ஆராதந விதியில், பரிக்ஷீயதே-ஒன்று விடாமல் பர்யவஸிக்கிறது. ஊர்த்வோபாக:-மேலான ப்ரம்ஹபாகமானது, த்வதீஹாகுண விபவபரிஜ்ஞாபநை:-தேவரீருடைய ஸ்ருஷ்டி-முதலிய வ்யாபாரங்கள், ததநுகுணஜ்ஞானசக்த்யாதிகள், விபூதிகள், இவைகளை நன்றாய் தெரிவிப்பதால், த்வத்பதாப்திதல-தேவரீர் திருவடிகளைச்சேருகிறதில், [பரிக்ஷீயதே-பர்யவஸிக்கிறது] ஸர்வை:-ஸமஸ்தங்களான, வேதை:-வேதங்களால், அஹம்-நான்-வேத்ய:-அறிவிக்கப்படுமவன், இதி-என்று, ஸ்வேநச-தேவரீர் முகமாகவும், வ்யாசகத்த-வெளியிட்டருளிற்று.

**10.** அதாதோ தர்ம ஜிஜ்ஞாஸா.

அத-வேதாத்யயநமானபிறகு, அத:-அதே காரணத்தினால், தர்ம ஜிஜ்ஞாஸா-தர்மத்தை யறியவிருப்பம் (கர்த்தவ்யா-செய்யவேண்டும்.)

**11.** அதாதோ ப்ரம்ஹ ஜிஜ்ஞாஸா.

அத-வேதத்தின் பூர்வ பாகமாகிய கர்ம காண்டங்களின் அர்த்தத்தை விசாரித்த பிறகு, அத:-கர்ம பலங்கள் அற்பமென்றும், அஸ்திரமென்றும் ஜ்ஞானமுடையவனாகையால், ப்ரம்ஹஜிஜ்ஞாஸா-அநந்த ஸ்திரபலமான ப்ரம்ஹத்தினுடைய விசாரத்தில் இச்சை (கர்த்தவ்யா-செய்யவேண்டியது.)

**12.** ஸஆத்மா அங்மாந்யந்யா தேவதா:.

---

10. பூர்-மீ-1-1-1. 11. உத்-மீ-1-1-1. 12. தை-உப-சீக்ஷாவல்லி-அநு-5.

ஸ:-அந்த (பரமாத்மாவானவன்) ஆத்மா-ப்ராணன், அந்யா தேவதா:-மற்ற அக்னி இந்த்ரன் முதலிய தேவர்கள், அங்காநி-சரீரங்கள்.

**13.** யே யஜந்தி பித்ரூந் தேவாந் ப்ரா(ஹ்ம)ம்ஹணாந் ஸஹுதா ஶநாந் । ஸர்வபூதாந்தராத்மாநம் விஷ்ணுமேவ யஜந்திதே ॥

யே-எவர்கள்; பித்ரூந் தேவாந்-பித்ருக்களையும் தேவதைக ளையும், ஸஹுதாசநாந்-அக்நியோடுகூடிய, ப்ராம்ஹணாந்-ப்ராம் ஹணர்களையும், யஜந்தி-பூஜிக்கிறார்களோ, தே-அவர்கள், ஸர்வ பூதாந்தராத்மாநம்-ஸர்வ பூதங்களுக்கும் அந்தர்யாமியாயிருக்கிற, விஷ்ணு மேவ யஜந்தி-விஷ்ணுவையே உபாஸிக்கிறார்கள்.

**14.** யேப்யந்ய தேவதா பக்தா யஜந்தே ஶ்ரத்த(ய)யா ऽந்வி தா: । தேऽபி மாமேவ கௌந்தேய யஜந்த்யவிதிபூர்வ கம் ॥

ஹே கௌந்தேய-ஓ அர்ஜுனா! யேऽபி-எந்த சிலபேர், அந்ய தேவதாபக்தா:-வேறொரு தேவதையிடத்தில் பக்தியுடைய வர்களாய்க்கொண்டு, ச்ரத்தயா ऽந்விதா:-விச்வாஸத்துடன் கூடின வர்களாய், யஜந்தே-(அவ்வோ தேவதைகளை) பூஜிக்கிறார்களோ, தேऽபி அவர்களும், அவிதி பூர்வகம்-அசாஸ்த்ரீயமாக, மாமேவ யஜந்தி-என்னையே ஆராதிக்கிறார்கள்.

**15.** த்வதர்ச்சாவிதிம்...த்வத்பதாப்தௌ ।

9-வது இலக்கத்தில் கண்டுகொள்வது.

**16.** இதிஹாஸ புராணாப்யா(ஹ்யா)ம் வேதம் ஸமுப ப்ரும்ஹ (ஹ்ம)யேத் । பிபேத்யல்பஶ்ருதாத் வேதோ மாம யம் ப்ரதரிஷ்யதி ॥

---

13 தக்ஷஸ்ம்ருதி. 14. கீதை 9-23. 16. பார்ஹஸ்பத்யஸ்ம்ருதி.

இதிஹாஸ புராணப்யாம்_இதிஹாஸங்களாலும் புராணங்களாலும், வேதம்_வேதத்தை, ஸமுப ப்ரும்ஹயேத்_விஸ்தரிக்கவேண்டியது. (வேதார்த்தம் தெரிந்துகொள்ளவேணும்) வேத:_வேதமானது, அல்பச்ருதாத்_கொஞ்சந் தெரிந்தவனிடமிருந்து, அயம் இவன், மாம்_என்னை, ப்ரதரிஷ்யதி_வஞ்சிப்பானென்று, பிபேதி_ பயப்படுகிறது.

### 2. ஸூத்திரம்

**17.** ப்ராயேண பூர்வபாகார்த்த பூரணம் தர்மசாஸ்த்ரத: ।

இதிஹாஸ புராணப்யா(ஹா)ம் வேதாந்தார்த்த: (ஷ்டு:) ப்ரகாச்யதே ॥

ப்ராயேண_முக்யமாக, பூர்வபாகார்த்த பூரணம்_வேதங்களின் பூர்வபாகத்தின் அர்த்த நிர்ணயஞ்செய்வது, தர்மசாஸ்த்ரத:_ஸ்ம்ருதிகளைக்கொண்டேதான். இதிஹாஸ புராணப்யாம்_இதிஹாஸ புராணங்களைக்கொண்டே, வேதாந்தார்த்த:_வேதாந்தங்களின் அர்த்தம், ப்ரகாச்யதே_ப்ரகாசிக்கப்படுகிறது.

### 3. ஸூத்திரம்

**18.** வேதவேத்யே(த்யே) பரேபும்ஸி ஜாதே தசரதாத்மஜே ।

வேத: ப்ராசேதஸாத் ஆஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மனா ॥

வேதவேத்யே பரேபும்ஸி_வேதத்தில் சொல்லுகிற பரமபுருஷன், தசரதாத்மஜே ஜாதே_சக்ரவர்த்தித் திருமகனாய் அவதரித்தவளவிலே, வேத:_வேதங்களானவை, ப்ராசேதஸாத்__ப்ரசேதஸ்ஸின் குமாரரான வால்மீகி பகவானிடத்தினின்றும், ராமாயணாத்மனா ஆஸீத்_ ராமாயண ரூபமாகப்பிறந்தது ॥

19. மதிமந்தாந மாவித்ய(த்ய) யேநாஸௌ ச்ருதிஸாகராத் ।

ஜகத்தி(த)தாய ஜநிதோ மஹாபாரதசந்த்ர(சந்த்ர)மா: ॥

18. ஸ்காந்தம். 19. வாயுப்ரோக்தசைவேஷு.

யேந-எந்த வேதவ்யாஸ பகவானால், ச்ருதிஸாகராத்-வேத மாகிற ஸமுத்ரத்தினின்றும் மதிமந்தானம் ஆவித்ய-ஜ்ஞானமாகிற மத்தையிட்டுக்கடைந்து, ஜகத்ஹிதாய-எல்லாருடையவும் உஜ்ஜீவ நார்த்தமாக, அஸௌ-இந்த, மஹா பாரத சந்த்ரமா:-மஹா பாரத மாகிற சந்த்ரன் (அதாவது-சந்த்ரன்போல் ஸுகஜநகமான மஹா பாரதம்) ஜநித:-உண்டுபண்ணப்பட்டதோ ॥

20. வ்யாஸ வாக்யஜலௌகேந குதர்மதருஹாரிணா ।
வேதசைலாவதீர்ணேந நீரஜஸ்கா மஹீ க்ருதா ॥

வேதசைலாவதீர்ணேந-வேதமாகிற மலையினின்றும் பிறந்த தாய், குதர்மதருஹாரிணா-அதர்மமாகிற மரங்களை வேரோடே பிடுங்கிப்போடக்கடவதாயிருக்கிற, வ்யாஸவாக்ய ஜலௌகேந-வ்யா ஸருடைய வாக்யமாகிற ஜலப்ரவாஹத்தினால், நீரஜஸ்கா மஹீ க்ரு தா-பூமியானது அஜ்ஞானமாகிற அழுக்கற்றதாகப் பண்ணப்பட்டது.

21. பிபேதி கஹநாச்சாஸ்த்ராந் நரஸ்தீவ்ராதி வௌஷதாத் ।
பாரதச்சாஸ்த்ரஸாரோऽயம் அத: காவ்யாத்மநா க்ருத: ॥

தீவ்ராதிவௌஷதாத்-க்ரூரமானஔஷதத்தினின்றும்போலே, நர:-சேதநன், கஹநாத் சாஸ்த்ராத்-அறியமுடியாத வேதசாஸ்த் ரத்தினின்றும், பிபேதி-பயப்படுகிறான். அத:-ஆகையால், சா ஸ்த்ரஸார: அயம் பாரத:-வேதஸாரமான இந்த பாரதமானது, காவ்யாத்மநா க்ருத:-காவ்யரூபமாய் செய்யப்பட்டது.

22. விஷ்ணௌ வேதேஷு வித்வத்ஸு குருஷு ப்ராம்ஹ ணேஷு ச । பக்திர்பவதி கல்யாணீ பாரதாதேவ தீமதாம் ॥

தீமதாம்-புத்திமான்களுக்கு, விஷ்ணௌ-பரம ப்ராப்யமான விஷ்ணுவினிடத்திலும், வேதேஷு-அவனை ப்ரதிபாதிக்கிற வே தங்களிடத்திலும், வித்வத்ஸு-அவற்றின் அர்த்தங்களையறிந்த

20. மார்க்கண்டேய புரா. 21. பவிஷ்யத்புரா.

பாகவதர்களிடத்திலும், குருஷு-அவற்றை உபதேசிக்கிற ஆசார்யர்களிடத்திலும், ப்ரம்ஹணேஷு-ஸப்ரம்ஹநிஷ்டர்களிடத்திலும் பாரதாதேவபாரதத்திலேயே, கல்யாணீ பக்திஃ-நன்றான பக்தியானது, பவதி-உண்டாகிறது.

23. யஸ்மிந் கல்பேது யத்ப்ரோக்தம் புராணம் ப்ரம்ஹணாபுரா ।
தஸ்யதஸ்யது மாஹாத்ம்யம் தத்ஸ்வரூபேண வர்ண்யதே ॥

யஸ்மிந் கல்பே து-எந்த கல்பத்திலே, ப்ரம்ஹணா-பிரம்ஹாவினாலே, யத் புராணம் ப்ரோக்தம்-எந்த் குணம் விஞ்சியிருக்கும் போது எந்த புராணஞ்சொல்லப்பட்டதோ, தஸ்ய தஸ்ய து-அந்த (ஸாத்விக ராஜஸதாமஸ) தேவதைகளுடைய, மாஹாத்ம்யம்-மஹிமையானது, தத்ஸ்வரூபேண-அந்தந்த குணாநுகுணமாகவே, வர்ண்யதே-வர்ணிக்கப்படுகிறது.

24. அயேதிஹாஸ புராணயோரிதிஹாஸா பலீயாம்ஸஃ, குதஃ,பரிக்ர(ஹ)ஹாதிரேகாத், ஸர்வத்ர மாத்யஸ்தயோந (லௌகிகவைதிக) ஹூதார்த்தப்ரதீதேஃ, வசநஸௌஷ்டவேந கர்த்துராப்த தமத்வாவகதேஃச ।

அதேதிஹாஸயோரிதிஹாஸா பலீயாம்ஸஃ-இதிஹாஸபுராணங்களிரண்டிலும் இதிஹாஸங்கள் ப்ரபலங்கள்,குதஃ-ஏனென்றால் தேஷாம்-அந்த இதிஹாஸங்களுக்கு, பரிக்ரஹாதிரேகாத்-விசேஷமாய் அங்கிகரிக்கப்பட்டதினாலும், ஸர்வத்ர மாத்யஸ்த்யேந-லௌகிக வைதிகவிஷயங்களிலும் நடுநிலைமையால், பூதார்த்த ப்ரதீதேஃ-முன்னடந்த விஷயங்களைச் சொல்லுகையாலும், வசநஸௌஷ்டவேந-நன்றாய் ஒன்று சேரக்கூடிய வாக்கியங்களால்(அதாவது-முன்பின் விரோதமில்லாமலும் அதிவாதமில்லாமலுமிருக்கிற வாக்கியங்களால்) கர்த்துராப்ததமத்வாவகதேஃச-செய்தவர்கள் நம்பத்தக்கவர்களாயிருப்பதாலும்.

---

23. மாத்ஸ்யபுரா. 24. தத்வநிர்ணயம்.

25. மஹாபாரதம் ஹி பரிக்ர(ஹை)ஹ விசேஷாவஸிதம் ॥

மஹாபாரதம் ஹி-மஹாபாரதமானது, பரிக்ரஹ விசேஷாவஸிதம்-புராணங்களாலே மிகவும் அங்கீகரிக்கப்பட்டது.

26. தர்மேசார்த்தே(யெ-)ச காமேச மோக்ஷேச பரதர்ஷப। யதிஹாஸ்தி தத்அந்யத்ர யந்நேஹாஸ்தி ந தத் க்வசித்॥ இதி லௌகிக வைதிகஸகலார்த்த(நி-)நிர்ணயாயிக்ருதத்வேந, க்வசிதபி அபக்ஷபாதித்வாச்ச(ஹ) புராணேப்யோ (ஹ்யா) ஹலவத்தரம் ॥

பரதர்ஷப-ஹே பீஷ்மா! தர்மேசார்த்தேச காமேச மோக்ஷச-தர்மார்த்த காம மோக்ஷங்களில், யத்-யாதொன்றானது, அந்யத்ர-இதற்கு (பாரதத்திற்கு) வேறான லோகவேதங்களில், அஸ்தி-இருக்கிறதோ, தத்-அதுவானது, இஹ-இந்த பாரதத்தில் அஸ்தி இருக்கிறது. இஹ-இந்த இதிஹாஸத்தில் (பாரதத்தில்) யத் நாஸ்தி-எது இல்லையோ, தத்-அதுவானது, க்வசித்நாஸ்தி-வேறோரிடத்திலுமில்லை. இதி-என்று வைதிக லௌகிக ஸகலார்த்த நிர்ணயாதிக்ருதத்வேந-ஸகல வைதிக லௌகிகார்த்தங்களை நிர்ணயிப்பதற்கு ஏற்படடிருப்பதால், க்வசிதபி அபக்ஷபாதித்வாச்ச-ஒருவிடத்திலும் பக்ஷபாதமில்லாமையாலும், புராணேப்யோ பலவத்தரம்-புராணங்களைக்காட்டிலும் மிகவும் மேலான ப்ரமாணம் ॥

### 4. ஸூத்திரம்

27. இதிஹாஸபுராணம் பஞ்சமம்.

இதிஹாஸங்களும் புராணங்களும் ஐந்தாவது.

28. இதிஹாஸபுராணப்யாம்(ஸ்யாம்) 16-வது இலக்கம் பார்க்க.

### 5. ஸூத்திரம்.

29. வால்மீகயே மஹர்ஷயே ஸந்திதேஶாஸநம் ததஃ। ப்ரம்ஹணா ஸமநுஜ்ஞாதஸ்ஸோப்யுபாவிஶதாஸநே ॥

25, 26. ஸஹ-நாமபாஷ். 27. சா-உ-7-21. 28. பா-ஆ-1-273. 29. ரா-பா-2-26.

ததஃ-பிறகு, வால்மீகயே மஹர்ஷயே-வால்மீக மஹர்ஷிக்கு, ஆஸநம்-ஆஸநத்தை, ஸம்திதேச-நியமித்துக்கொடுத்தார். ப்ரம்ஹா-பிரமனால், ஸமநுஜ்ஞாதஃ-அநுஜ்ஞை பெற்றவராய், ஆஸநே-ஆஸநத்தில், ஸோபி-அந்த வால்மீகி பகவானும், உபாவிசத்-உட்கார்ந்தான்.

30. ந தே வாக் அந்ருதா காவ்யே காசிதத்ர பவிஷ்யதி । குரு ராமகதாம் புண்யாம் ச்லோகபத்தாம்(ஸ்தாம்)மநோரமாம் ॥

அத்ர காவ்யே-இந்த காவியத்தில், காசித் வாக்-ஒரு வாக்யங்கூட, அந்ருதா-பொய்யாக, ந பவிஷ்யதி-ஆகப்போகிறதில்லை, ராமகதாம்-இராமகதையை, புண்யாம்-புண்யமாயும், மநோரமாம்-மநோஜ்ஞமாயுமிருக்கிற, ச்லோகபத்தாம்-ச்லோகரூபமாய் செய்யப்பட்டதாக, குரு-செய்வாக ॥

31. யாவத் ஸ்தாஸ்யந்தி கிரயஸ்ஸரிதச்ச மஹீதலே । தாவத் ராமாயணகதா லோகேஷு ப்ரசரிஷ்யதி ॥

மஹீதலே-பூமியில், கிரயஃ-மலைகளும், ஸரிதச்ச-நதிகளும், யாவத் ஸ்தாஸ்யந்தி-எவ்வளவு காலமிருக்கிறதோ, தாவத்-அவ்வளவுகாலம், ராமாயணகதா-ராமாயணத்தில் சொல்லப்பட்ட கதைகள், லோகேஷு ப்ரசரிஷ்யதி-லோகமெல்லாம் வ்யாபரித்திருக்கப்போகிறது.

32. வேதவேத்யே(ஜ்ஞே) 18-வது இலக்கம் பார்க்க.

33. யத்ய(ஸ்தி)ஸ்தி பதிஶுச்ருஷா யத்ய(ஸ்தி)ஸ்தி சரிதம் தபஃ। யதி வாஸ்த்யேக பத்நீத்வம் சீதோ பவ ஹநூமதஃ ॥

(அக்நிபகவானே!) பதி சிச்ருஷா-நான் பர்த்தாவுக்குப் பணிவிடை செய்வதானது, யதி அஸ்தி-இருக்குமேயானால், சரிதம் தபஃ யதி அஸ்தி-தவமநுஷ்டிப்பது (ஸத்யமாய்) இருக்குமேயா

30. ரா-பா-2-35. 31. ரா-பா-2-37. 33. ரா-ஸு-53-29.

ன பிராட்டியுடைய சரிதம் -



ஞல், ஏகபத்னீத்வம் யதிச அஸ்தி-ஒருவருக்கே பத்நியாயிருப்ப துமிருக்குமேயாஞல், ஹநூமத: சீதோபவ-(தேவரீர்) ஹநூமா ருக்கு குளிர்ந்திருக்கவேண்டும் ॥

**34.** காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம் ஸீதாயாஃசரிதம் மஹத்।
பௌலஸ்த்யவதமித்யேவ சகார சரிதவ்ரத: ॥

ராமாயணம் க்ருத்ஸ்நம் காவ்யம்-இராமாயண காவியம் முழு வதும், ஸீதாயா:-பிராட்டியினுடைய, மஹத் சரிதம்-ப்ரதானமான சரித்ரமே, சரிதவ்ரத:-ஆசரிக்கப்பட்ட வ்ரதங்களையுடைய வால்மீ கிபகவான், பௌலஸ்த்யவதமித்யேவ-இராவணவதமென்றும், சகா ர-செய்தார் ॥

**35.** உத்வாஹு:ஸ்த்வாமுபநிஷதஸாவாஹ நைகா நியந்த்
ரீம் ஸ்ரீமத்ராமாயணமபி பரம் ப்ராணிதி த்வச்சரித்ரே।
ஸ்மர்த்தாரோऽஸ்மஜ்ஜநநி யதமே ஸேதிஹாஸை: புரா
ணைர்நிந்யுர்வேதாநபிவ ததமே த்வந்மஹிம்நி ப்ரமாணம் ॥

ஹே அஸ்மஜ்ஜநநி-ஏ எங்கள் தாயே! அஸௌ ஏகா உப நிஷத்-இந்த ஸ்ரீஸூக்தமென்கிற ஒரு உபநிஷத்மாத்திரம், உத் பாஹு:-கைதூக்கிக்கொண்டு த்வாம்-உம்மை, நியந்த்ரீம்-ஜகத்து க்கீச்வரியாக, நாஹ-சொல்லவில்லை. (ஆனல்) ஸ்ரீமத்ராமாயணம பி-ஸ்ரீராமாயணமும், த்வத்சரித்ரே-தேவரீர் சரித்திரத்திலேயே பரம்ப்ராணிதி-மிகவும் ஜீவிக்கிறது. (ஸ்ரீராமாயணம் தேவரீர் வைபத்தைச் சொல்லியே ஜீவியாநின்றது.) யதமே-எவர்கள், ஸ் மர்த்தார:-ஸ்மிருதிசெய்தவர்களோ, ததமேऽபிச-அவர்களும், வேதாந்-வேதங்களை, ஸேதிஹாஸை:புராணை:-இதிஹாஸங்களோ டுகூடிய புராணங்களோடு, த்வந்மஹிம்நி-தேவரீர் மஹிமையில், ப்ரமாணம் நிந்யு:-ப்ரமாணங்களாகக் காண்பித்தார்கள்.

---

34. ரா-பா-4-7. 35. ஸ்ரீகுண-14.

**36.** க்ருஷ்ணத்வை (ெெஉ) பாயநம் வ்யாஸம் வித்தி (ஃ) நாராயணம் ப்ரஹும் । கோஹ்யந்யோ ஹுவி மைத்ரேய மஹாஹாரதக்ருத் ஹவேத் ॥

க்ருஷ்ணத்வைபாயநம் வ்யாஸம்-க்ருஷ்ணத்வைபாயநரென்று பெயருடைய வ்யாஸமஹரிஷியை, ப்ரபும் நாராயணம் வித்தி-ஸ்வாமியான நாராயணனென்று தெரிந்துகொள். மைத்ரேய-மைத்ரேயரே! புவி-இந்த பூமியில், கோஹ்யந்ய:-மற்றவர் யார்தான், மஹாபாரதக்ருத்பவேத்-மஹாபாரதம் செய்தவனாக ஆவான்.

**37.** ஏவம் விதம் ஹாரதம்துப்ரோக்தம் யேந மஹாத்மநா । ஸோऽயம் நாராயணஸ்ஸாக்ஷாத் வ்யாஸரூபீ மஹாமுநி: ॥

ஏவம் விதம் பாரதம் து-இப்படிப்பட்ட பாரதமானது, யேந மஹாத்மநாப்ரோக்தம்-எந்த மஹாத்மாவால் செய்யப்பட்டதோ, ஸோऽயம் வ்யாஸரூபீ மஹாமுநி:-அந்தவ்யாஸரூபியான மஹாமுனிவர், ஸாக்ஷாத் நாராயண:-ஸாக்ஷாத் நாராயணன் தான்.

**38.** ஸஹோவாச வ்யாஸ: பாராஶர்ய: ।

பாராசர்ய:-பராசரருடைய குமாரரான, ஸஹ வ்யாஸ:-அந்த வ்யாஸபகவான், உவாச-சொன்னார்.

**39.** வேதாநத்யா (ஃ) பயாமாஸ மஹாஹாரதபஞ்சமாந் ।

மஹாபாரதபஞ்சமாந்-மஹாபாரதத்தோடு ஐந்தாகிய, வேதாந்-வேதங்களை, அதத்யாபயாமாஸ-சொல்லிவைத்தார்.

**40.** ஸ்ரீராமாயணவத் மஹாஹாரதம் ப்ரமாணம் ।

ஸ்ரீராமாயணம்போல் மஹாபாரதமும் ப்ரமாணம் தானென்றபடி.

---

36. வி-பு-3-4-5. 38. ஆரணம்-ப்ர-1-அநு-8. 39. பாரதம். 40. ஸஹஸ்ரநாமபாஷ்யம்.

**41.** ஸ உ ச்ரேயாந் பவதி ஜாயமாநஃ ॥

ஸஃ-அவன்(பரமாத்மா)ஜாயமாநஃ-பிறந்தவனாய்-ச்ரேயான் உ பவதி-மிகவும் நிறமுள்ளவனாக ஆகிறான்.

**42.** வ்யாஸப்ரஸாதாத் வக்ஷ்யாமி நாராயணகதாமிமாம் ।

வ்யாஸப்ரஸாதாத்-வ்யாஸருடைய அனுக்ரஹத்தினால், இமாம் நாராயணகதாம் இந்த நாராயணகதையை, வக்ஷ்யாமி-சொல்லப் போகிறேன்.

## 6 ஸூத்திரம்

**43.** தாநஹம் த்வி (த்வி) ஷதஃ க்ரூராந் ஸம்ஸாரேஷு நராத
மாந் । க்ஷிபாம்யஜஸ்ரமசுபாநாஸுரீஷ்வேவ யோநி
ஷு ॥

த்விஷதஃ-த்வேஷமுள்ளவர்களாயும், க்ரூராந்-க்ரூரஸ்வபாவமுள்ளவர்களாயும், அசுபாந்-அசுத்தர்களாயும், நராதமாந்-மனிதரில் கடையோர்களாயுமிருக்கிற, தாந்-அப்படிப்பட்டவர்களை, ஸம்ஸாரேஷு-ஸம்ஸாரத்தில், ஆஸுரீஷு யோநிஷு, ஏவ-அஸுரயோனிகளிலேயே, அஹம்-நான், அஜஸ்ரம் க்ஷிபாமி-எப்பொழுதும் தள்ளுகிறேன்.

**44.** மத்பக்தம் ச்வபசம்வாऽபி நிந்தாம் (ஞாம) குர்வந்தியே
நராஃ । பத்மகோடிசதேநாபி நக்ஷமாமி வஸுந்தரே ॥

வஸுந்தரே-ஏ! பூமியே! மத்பக்தம்-என்னிடத்தில் பக்தியுள்ள, ச்வபசம்வாபி-ச்வபசனையும், யேநராஃ-எந்த மனிதர்கள், நிந்தாம் குர்வந்தி-நிந்தை செய்கிறார்களோ, (அவர்களை) பத்மகோடிசதேநாபி-அநேகம் கோடிபத்மங்களாலும், (பத்மமென்று காலத்தின் ஓர் அளவு) நக்ஷமாமி-பொறுக்கமாட்டேன்.

---

41. அஷ்டகம்-3-ப்ர-6-அ-3-வா-9. 42. பார-ஆதி-1-27. 43. கீதை-16-19. 44. வராஹபுராணம்.

**45.** மத்ப்ராப்திம் ப்ரதி ஜந்தூனும் ஸம்ஸாரே பததாமத: ।
லக்ஷ்மீ: புருஷகாரத்வே நிர்திஷ்டா பரமர்ஷிபி: ॥ மமா
பி ச மதம் ஹ்யேதந் நாந்யதா லக்ஷணம் பவேத் ॥

ஸம்ஸாரே அத: பததாம்-ஸம்ஸாரத்திலே கீழேவிழுகிற, ஜந்தூனும்-ஜந்துக்களுக்கு, மத்ப்ராப்திம்ப்ரதி-என்னையடைவதைக் குறித்து, புருஷகாரத்வே-புருஷகாரத்வத்தில், லக்ஷ்மீ:-பிராட்டியானவள், பரமர்ஷிபி:-மஹரிஷிகளாலே, நிர்திஷ்டா-சொல்லப்பட்டாள். ஏதத்-பிராட்டி புருஷகாரமாயிருப்பதானது, மமாபிச மதம்-எனக்கு மிதுவேஸம்மதம், அந்யதா-வேறான, லக்ஷணம்-ஆகாரம், ந பவேத்-உண்டாகாது.

**46.** அஹம் மத்ப்ராப்த்யுபாயோவை ஸாக்ஷால்லக்ஷ்மீபதி:ஸ்வ
யம் । லக்ஷ்மீ: புருஷகாரேண வல்லபா ப்ராப்தியோகிநீ ॥
ஏதஸ்யாஶ்ச விஶேஷோऽயம் நிகமாந்தேஷு ஶப்த்ய
(ஙு) தே ॥

ஸாக்ஷாத் லக்ஷ்மீபதி:-ஸாக்ஷாத் ஸ்ரீய:பதியாயிருக்கிற, அஹம்-நான், ஸ்வயம்-தானே, உபாயோவை-உபாயபூதனாயிருக்கிறேன். வல்லபா-உபதேசாதிகளாலே என்னை வசீகரிக்கவல்லவளான, லக்ஷ்மீ:-பிராட்டியானவள், புருஷகாரேண-புருஷகாரத்தால், ப்ராப்தியோகிநீ-என்னையடைவிக்கிருள். ஏதஸ்யா:-இந்த பெரிய பிராட்டியாருக்கு, அயம் விஶேஷ: ச-இந்த விசேஷமானது, (அதாவது-எனக்கு மோக்ஷோபாயத்வம், பிராட்டிக்கு புருஷகாரத்வம் என்பது) நிகமாந்தேஷு ஶப்த்யதே-வேதாந்தங்களில் கோஷிக்கப்படுகிறது.

**47.** ஆகிஞ்சந்யைகஶரணா: கேசித் பாக்யா(ஞ்யா)யிகா: புந: ।
மத்பதாம்போருஹத்வந்த்வம் (உாஉ) ப்ரபத்ய•(ஷு) )
ப்ரீதமாநஸா: ॥ லக்ஷ்மீம் புருஷகாரேண வ்ருதவந்தோ
வராநந । மத்க்ஷமாம் ப்ராப்ய ஸேநேஶ ப்ராப்யம் ப்ராபக

45. ஸ்ரீபாஞ்சராத்ரம். 46. ஸ்ரீபாஞ்ச. 47. ஸ்ரீபாஞ்ச.

மேவ மாம் । லப்த்வா (ஸூர)க்ருதார்த்த(ய-ஓ)ாஃப்ராப்ஸ்யந்
தே மாமேவாநந்ய மாநஸாஃ ॥

வராநந ஸேநேச-நல்லமுகமுடைய ஸேநாபதியாழ்வானே! ஆகிஞ்சந்யைக சரணாஃ-உபாயாந்தர சூன்யதையையே தஞ்சமாகவுடைய, கேசித் பாக்யாதிகாஃ-சில பாக்யாதிகர் (பாக்யாதிகராவது-நிர்ஹேதுக கிருபாவிஷயத்வம் விஞ்சியிருப்பார்கள்) மத்பதாம் போருஹத்வந்த்வம்-என் திருவடித்தாமரையிரண்டையும், ப்ரபத்ய-ப்ரபத்திபண்ணி, ப்ரீதமானஸாஃ-ப்ரீதியோடுகூடிய மனதையுடையவர்களாய், புநஃ-மறுபடியும், லக்ஷ்மீம்-பெரிய பிராட்டியை, புருஷகாரேண-புருஷகாரமாய், வ்ருதவந்தஃ-வரித்தவர்களாய், (அத்தாலே) மத்க்ஷமாம்-என் பொறுமையை யடைந்து, ப்ராப்யமேவ மாம்-ப்ராப்யனுன என்னையே, ப்ராபகம்-உபாயமாக, லப்த்வா-அடைந்து, க்ருதார்த்தாஃ-க்ருதக்ருத்யர்களாய், அநந்யமானஸாஃ-வேறொன்றில் பொருந்தாத நெஞ்சையுடையவராய்க்கொண்டு, மாமேவ ப்ராப்ஸ்யந்தே-என்னையே யடையாநிற்பார்கள்.

**48.** ஏதத் ஸாபேக்ஷ ஸம்பந்யாதந்யேஷாமமலாத்மநாம் ।
தேவிஸூரிகுரூணாஞ்ச கடகத்வம் நது ஸ்வதஃ ॥

ஏதத் ஸாபேக்ஷஸம்பந்தாத்-பிராட்டியினுடைய ஸம்பந்தத்தை யபேக்ஷித்து, அமலாத்மநாம்-நிர்மல ஸ்வபாவர்களான, அந்யேஷாம்-மற்ற, தேவிஸூரிகுரூணாம் ச-தேவிமார்களுக்கும் நித்யஸூரிகளுக்கும் ஆசார்யர்களுக்கும், கடகத்வம்-புருஷகாரத்வம், நது ஸ்வதஃ-ஸ்வதந்த்ரமாயில்லை.

**49.** யேச வேதவிதோ விப்ராஃ (ஞூரஃ) யேசாத்யா(ஞூா)த்மவிதோஜநாஃ । தே வதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம் ॥

யே ச விப்ராஃ-எந்த ப்ராம்ஹணர்கள், வேதவிதஃ-வேதமறிந்தவர்களோ, யேச ஜநாஃ-எந்த ஜநங்கள், அத்யாத்மவிதஃ-வே

48. தீபஸங்கிரஹம். 49. பார-ஆர-88-253.

தாந்தமறிந்தவர்களோ, தே-அவர்கள் மஹாத்மாநம் கிருஷ்ணம்-மஹாத்மாவாகிய க்ருஷ்ணனை ஸநாதநம்-நித்யஸித்தமான, தர்மம்-மோக்ஷஸாதநமாக, வதந்தி-சொல்லுகிறார்கள்.

## 7. ஸூத்திரம்

**50.** ஹ்ரீஶ்வ தே லக்ஷ்மீஶ்வ பத்ந்யௌ

தே-தேவரீருக்கு, ஹ்ரீஶ்வ-பூமிப்பிராட்டியும், லக்ஷ்மீஶ்வ இலக்ஷ்மியும், பத்ந்யௌ-தேவிகள்.

**51.** அஸ்யேஶாநா ஜகதோ விஷ்ணுபத்நீ ॥

அஸ்ய ஜகத:-இந்த ஜகத்துக்கு, விஷ்ணுபத்நீ-விஷ்ணுவின் பத்நியான பிராட்டியானவள், ஈசாநா-நியந்திரீ.

**52.** அஹந்தா ப்ரம்ஹ (வு ஹ) ணஸ்தஸ்ய ஸாஹமஸ்மி ஸநாதநீ ।

ஸநாதநீ ஸாஹம்-ஸநாதனியான அந்த நான், தஸ்ய ப்ரம்ஹண:-அந்த ப்ரம்ஹத்திற்கு, அஹந்தா-நிரூபகையாக, அஸ்மி-இருக்கிறேன்.

**53.** தமஸ: பரமோ யாதா ஶங்க (ஜ வ) வக்ர கதாயர: । ஶ்ரீவத்ஸவக்ஷா நித்ய ஶ்ரீரஜய்யஶ்ஶாஶ்வதோ த்ரு (யு) வ: ॥

தமஸ:பரம:-மூல ப்ரகிருதிக்கு மேல்பட்டவரும், யாதா-ஸ்ருஷ்டிப்பவரும், சங்கசக்ர கதாதர:-திருவாழி திருச்சங்கு கதை இவைகளை யேந்தினவரும், ஶ்ரீவத்ஸவக்ஷா:-ஶ்ரீவத்ஸமென்னும் மறுவை திருமார்பிலுடையவரும், நித்யஶ்ரீ:-பிராட்டியின் நித்ய ஸம்பந்த முடையவரும், அஜய்ய:-ஒருவராலும் ஜயிக்கமுடியாதவரும், ஶாஶ்வத:-எக்காலத்திலுமிருப்பவரும், த்ருவ:-நித்யரும் (ஆக ராமன் இருக்கிறார்.)

---

50. புருஷஸூக்தம். 51. ஶ்ரீஸூக்தம். 53. ரா-யு-114-16.

## 8 ஸூத்திரம்

**54.** தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வேச மாநுஷீ ।
விஷ்ணோர் தேஹாநுரூபாம் வை கரோத்யேஷாऽऽத்மநஸ் தநும் ॥

தேவத்வே-அவன் தேவனாயிருக்கும்போது, இயம்-இந்த பிராட்டி, தேவதேஹா-தேவ சரீரத்தைக்கொண்டும், மநுஷ்யத்வே ச-அவன் மநுஷ்யனாகப் பிறக்கும்போது மாநுஷீ-தான் மநுஷ்ய தேஹத்தைக்கொண்டும், விஷ்ணோ:-எம்பெருமானுக்கு, தேஹாநுரூபாம்வை-தேஹத்திற்கு அநுரூபமாக ஆத்மந: தநும்-தன் சரீரத்தை, ஏஷா-இந்த பிராட்டி, கரோதி-செய்கிறாள்.

**55.** ராகவத்வேऽபவத் ஸீதா ருக்மிணீ க்ருஷ்ணஜந்மநி । அந்யேஷு சாவதாரேஷு விஷ்ணோரேஷாऽநபாயிநீ ॥

ராகவத்வே-எம்பெருமான் பெருமாளாய் அவதரித்தபோது, ஸீதா-ஸீதாப்பிராட்டியாக, அபவத்-திருவவதரித்தாள். க்ருஷ்ண ஜந்மநி-கண்ணனாய் அவதரித்த காலத்தில், ருக்மிணீ-ருக்மிணியாக திருவவதரித்தாள். விஷ்ணோ:-எம்பெருமானுடைய, அந்யேஷு ச அவதாரேஷு-மற்ற அவதாரங்களிலும், ஏஷா-இவள், அநபாயிநீ-விட்டுப்பிரியாதவள் ॥

**56.** லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்யரூபயா । ரக்ஷகஸ்ஸர்வஸித்தாந்தே வேதாந்தேஷு ச கீயதே ॥

காருண்யரூபயா-கருணாரூபிணியான, லக்ஷ்ம்யா தேவ்யாஸஹ பெரிய பிராட்டியாரோடுகூட, ஹ்ருஷீகேச:-இந்திரியங்களை நியமிக்கும் எம்பெருமான், ரக்ஷக:-இரக்ஷகனாக, ஸர்வஸித்தாந்தே வேதாந்தேஷு ச-எல்லா ஸித்தாந்தங்களிலும் வேதாந்தங்களிலும், கீயதே-சொல்லப்படுகிறான்.

---

54. வி-பு-1-9-145. 55. வி-பு-1-9-144. 56. லக்ஷ்மீதந்த்ரம்-28-25.

57. ததஸ்ஸா ஹ்ரீமதீ பாலா பர்துர்விஜயஹர்ஷிதா ।
அவோசத் யதி தத்தத்யம்(ய்யம்)பவேயம் சரணம்ஹிவ: ॥

தத:-பிறகு, ஹ்ரீமதீ-வெட்கமடைந்த, ஸா பாலா-அந்த பால பருவமுள்ள ஜானகியானவள், பர்து:-தன் ப்ராணநாயகனுடைய, விஜயஹர்ஷிதா-விஜயத்தைப்பற்றிச் சொல்வதினால் ஸந்தோஷமடைந்தவளாய், அவோசத்-(த்ரிஜடை என்ன) சொன்னளோ, தத் தத்யம் யதி அது ஸத்தியமாயிருக்குமேயானல்; வ:-உங்களுக்கு, சரணம் பவேயம் ஹி-உங்களுக்கு ரக்ஷகையாக ஆகிறேன். (என்று ராக்ஷஸிகளைப்பார்த்து ஸீதாப் பிராட்டி சொன்னள்.)

58. ராஜஸம்ச்ரயவச்யாநாம் குர்வந்தீநாம் பராஜ்ஞயா ।
விதேயாநாம் ச தாஸீநாம் க: குப்யேத்வாநரோத்தம ॥

வாநரோத்தம-ஏ வாநர ச்ரேஷ்டனே ! ராஜஸம்ச்ரயவச்யாநாம்-ராஜ ஸேவையில் அமர்ந்தவர்களும், பராஜ்ஞயா-ராஜாவின் கட்டளையினல், குர்வந்தீநாம்-இட்ட காரியத்தைச் செய்கிறவர்களும், விதேயாநாம்-ராஜகாரியத்தைச் செய்யாமல் போனல் தண்டிக்கப்படுகிறவர்களுமான, தாஸீநாம்-வேலைக்காரிகளிடத்தில், க: குப்யேத்-எவன் கோபிப்பான்.

59. ப்ராப்தவ்யம் து தசா யோகாத் மயைதநிதி நிச்சிதம் ।
தாஸீநாம் ராவணஸ்யாஹம் மர்ஷயாமீஹ துர்பலா ॥

ராவணஸ்ய தாஸீநாம்-ராவணதாஸிகளுடைய, ஏதத்-என்னை அதட்டுதல் செய்ததானது, தசாயோகாத்-காலபலத்தால், ப்ராப்தவ்யமிதி மயாநிச்சிதம்-என்னல் அநுபவிக்கவேணுமென்று நிச்சயிக்கப்பட்டது. துர்பலா அஹம்-க்ருபாபரவசையான நான், (அதாவது-அவர்களையடி, கொலைசெய், என்று சொல்ல நெஞ்சுரமில்லாமலிருக்கிற நான்) இஹ-இந்த ராக்ஷஸிகள் விஷயத்தில் மர்ஷயாமி-பொறுக்கிறேன்.

---

57. ரா-ஸு-58-93. 58. ரா-யு-116-38. 59. ரா-யு-116-40

**60.** பாபாநாம் வா ஶுபாநாம் வா வதார்ஹாணாம் ப்லவங்க
(ஶ)ம । கார்யம் கருணமார்யேண ந கஶ்சிந்நாபராத்ய
(ய)தி ॥

ஹே ப்லவங்கம–ஏ வாநரோத்தம! பாபாநாம் வா–உன் அபிப்ராயப்படி பாபஞ்செய்தவர்களாயும், ஶுபாநாம்வா–என் அபிப்பிராயப்படி புண்யஞ்செய்தவர்களாயும், வதார்ஹாணாம்–கொல்லுகிறதற்கு யோக்கியர்களாயுமிருக்கிறவர்கள் விஷயத்தில், ஆர்யேண–பெரியவரான உம்மாலே, கருணம் கார்யம்–கிருபை செய்யவேணும், கச்சித்–எவனும் நாபராத்யதி ந–அபராதஞ்செய்கிறதில்லை யென்பதில்லை.

**61.** அபத்யலாபோ வைதேஹி மமாயம் ஸமுபஸ்திதஃ । கிமி
ச்ச (ஸ)ஸி ஸகாமா த்வம் ப்ரூ (ஹி)ஹி ஸர்வம் வரா
நநே ॥

ஹே வராநநே–நல்ல முகமுடையவளே! மம–எனக்கு, அயம் அபத்யலாபஃ–பிள்ளையாகிற இந்த லாபமானது, ஸமுபஸ்திதஃ–வந்து கிட்டிற்று. ஸகாமா த்வம்–ஆசையோடுகூடிய நீ, கிமிச்சஸி–எதை விரும்புகிறாய், ஸர்வம்–விரும்பியவற்றை யெல்லாம் ப்ரூஹி–சொல்லுவாயாக.

**62.** தபோவநாநி புண்யாநி த்ரஷ்டு (ஷ்டு)மிச்சாமி ராகவ ।
கங்கா (தீ)தீரநிவிஷ்டாநி ருஷீணாம் புண்யகர்மணாம் ॥
ஃபலமூலாஶிநாம் வீர பாதமூலேஷு வர்த்திதும் ।
ஏஷ மே பரமஃ காமோ யந்மூலஃபலபோஜிஷு ।
அப்யேகராத்ரம் காகுத்ஸ்த வஸேயம் புண்யகீர்த்திஷு ॥

ஹே வீர ராகவ–ஏ வீரனான ராகவனே! புண்யகர்மணாம்–புண்யகர்மாக்களையுடையவர்களும், பலமூலாசிநாம்–பழங்கிழங்குகளை புஜிக்கிறவர்களுமான, ருஷீணாம்–மஹருஷிகளுடைய, பாதமூலேஷு வர்த்திதும்–திருவடியின்கீழ் இருப்பதற்காக, கங்காதீரநிவிஷ்

60. ரா–யு–116–44. 61. ரா–உ–42–32. 62. ரா–உத்–42–33 + 35.

டாநி-கங்கையின் கரையிலிருக்கின்றனவும், புண்யாநி, (அதனுல்) பரிசுத்தங்களாயுமிருக்கிற, தபோவநாநி-(அந்தரிஷிகளுடைய) தபோவனங்களை, த்ரஷ்டுமிச்சாமி-பார்ப்பதற்கு இச்சிக்கிறேன். மூலபலபோஜிஷு-கிழங்கு பழங்களை புஜிக்கிறவர்களும், புண்யகீர்த்திஷு-பாவனமான கீர்த்தியுடையவர்களுமான மஹரிஷிகளிடத்திலே, ஏகராத்ரமபி-ஒரு நாளாகிலும், வஸேயம்-வாஸம்பண்ணவாசைப்படுகிறேன் இதியத்-என்று யாதொன்றுண்டோ, மே ஏஷ: பரம: காம:-எனக்கு இதுவே உயர்ந்த ஆசையாயிருக்கிறது.

**63.** நவல்வத்யைவ (ஜெஹ்வ) ஸௌமித்ரே ஜீவிதம் ஜாஹ்நவீஜலே। த்யஜேயம் ராவவம் வம்ஶே ஹர்துர்மா பரிஹாஸ்யதி ॥

ஹே ஸௌமித்ரே-ஏ லக்ஷ்மண! பர்து:-பர்த்தாவாகிய பெருமாளிடத்தில் நின்றுமுண்டான, ராகவம்-ரகுஸந்தானமானது பர்துர்வம்ஶே-சக்ரவர்த்தித் திருமகன் வம்சத்தில், மாபரிஹாஸ்யதி-இல்லாமலிருக்கவொண்ணுது (என்று நான்) அத்யைவ-இப்போதே, ஜாஹ்நவீஜலே-கங்கையின் ஜலத்தில், நத்யஜேயம்கலு-விடவில்லை, இதுவுனக்கும் தெரியுமென்று அர்த்தம் (கர்ப்பிணியான நான் பிராணனை விட்டால் குலம் நசிக்கும் என்றெண்ணி நான் ப்ராணனை விடவில்லை என்று கருத்து.)

**64.** பதிர்ஹி தைவதம் நார்யா: பதிர்பந்து: பதிர்கதி:। ப்ராணைரபி ப்ரியம் தஸ்மாத் ஹர்து:கார்யம் விஶேஷத: ॥

ஹி-யாதொரு காரணத்தால், நார்யா:-பெண்களுக்கு, பதி:-நாயகனனவன், தைவதம்-தேவதை (தைவம்போல் ஆராதிக்கத் தகுந்தவன்). பதி: பந்து:-பதியானவன் பந்துக்கள்போல் லாளநம் பண்ணத்தகுந்தவன். பதி: கதி:-பதியானவன் ப்ராப்ய ப்ராபக பூதனுகிறுன். தஸ்மாத்-ஆகையாலே, பர்த்து: ப்ரியம்-கணவனுக்கு ப்ரியமானது, ப்ராணை:-பிராணங்களாலேயும், விஶேஷ

63. ரா-உத்-48-8. 64. ரா-உத்-48-17.

தோ அபி-அதற்கு மேற்பட்டதாலும், கார்யம்-செய்யவேண்டும்.

**65.** ஶக்யா லோபயிதும் நாஹ மைஶ்வர்யேண தநேந வா ।
அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா ॥

அஹம்-நான், ஐஶ்வர்யேண-(நீ கொடுக்கிற) அதிகாரத்தினு லாவது, தநேந வா-தநத்திலாவது, லோபயிதும் நஶக்யா-வஞ்சிக் கமுடியாதவள், (ஏனெனில்) பாஸ்கரேண ப்ரபா யதா அநந்யா-ஸூர்யனைவிட்டு காந்தி எப்படி பிரியாதிருக்குமோ, ததா அஹம் ராகவேண அநந்யா-அப்படி யேராகவரைவிட்டுநான்பிரியமாட்டேன்.

**66.** நேயமர்ஹதி வைஶ்வர்யம் ராவணாந்தஃ புரே ஶுபா ।
அநந்யா ஹி மயா ஸீதா பாஸ்கரேண ப்ரபா யதா ॥

ஶுபா இயம்-சுபையான இந்த ஸீதாப் பிராட்டி ராவணாந்தப் புரே-இராவணனுடைய அந்தப்புரத்திலே, ஐச்வர்யம் ந சார்ஹதி அதிகாரம்பெற யோக்கியையல்லள். (ஏனெனில்) பாஸ்கரேண ப்ர பாயதா அநந்யா-ஸூர்யனைவிட்டு காந்தி யெப்படி பிரியாதோ, மயா ஸீதா அநந்யாஹி-அப்படி என்னை விட்டுப் பிரியாதவள் ஸீதை.

**67.** ஸர்வாந் ஸமாகதாந் த்ருஷ்ட்வா ஸீதா காஷாயவாஸிநீ ।
அப்ரவீத் ப்ராஞ்ஜலிர் வாக்யமதோத்ருஷ்டி ரவாங்முகீ ॥

காஷாயவாஸிநீ-காஷாயத்தை யுடுத்திய ஸீதா-ஸீதையான வள், ஸமாகதாந் ஸர்வாந் த்ருஷ்ட்வா-வந்த எல்லாரையும் பார்த்து, அதோ த்ருஷ்டிஃ-கீழ் நோக்கிய கண்களையுடையவளாய், அவாங் முகீ-கவிழ்த்த தலையை யுடையவளாய், ப்ராஞ்சலிஃ-கையுமஞ்சலியு மாய், வாக்யம் அப்ரவீத்-வார்த்தை சொன்னாள்.

**68.** யதாஹம் ராகவாதந்யம் மநஸாபி நசிந்தயே । ததா மே மாதவீ தேவீ விவரம் தாதுமர்ஹதி ॥ மநஸா கர்மணா வாசா

---

65. ரா-ஸு-21-15. 66. ரா-யு-121-19. 67. ரா-உத்-97-14. 68. ரா-உத்-97-15.

யதாராமம் ஸமர்த்யயே । ததா மே மாதவீ தேவீ
விவரம் தாதுமர்ஹதி । யதைதத் ஸத்யமுக்தம்மே வேத்
மி(த்ரி)ராமாத்பரம் நவ ॥ ததாமே மாதவீதேவீ விவரம்
தாதுமர்ஹதி ॥

அஹம்-நான், யதா-எப்படி, ராகவாத் அந்யம்-பெருமானைக் காட்டிலும் வேறு புருஷனை மநஸா அபி ந சிந்தயே-மனதாலும் நினைக்கவில்லையோ, ததா-அது ஸத்யமானால், மே-எனக்கு, மாதவீதேவீ-பூமிதேவியானவள், விவரம்தாதும் அர்ஹதி-இடந்தருவாளாக. யதா-எப்படி, மநஸா கர்மணா வாசா-மனம், வாக்கு, செய்கை, இவைகளால், ராமம் ஸமர்த்தயே-ராமனையே பற்றியிருந்தேனோ, ததா-அது ஸத்யமாம் பக்ஷத்தில், மாதவீ தேவீவிவரம் தாதுமர்ஹதி-பூமிப்பிராட்டி யிடந்தருவாளாக. ராமாத் அந்யம்-ராமனையொழிய, பரம் நவேத்மி-வேறொருத்தரை யறியேனென்கிற, ஏதத்-இந்த, மே உக்தம்-என்னுடைய வார்த்தை, ஸத்யம்-மெய்யாகில், மாதவீ தேவீ விவரம் தாதுமர்ஹதி-பூமிப் பிராட்டி யிடந்தருவாளாக.

69. ததா ஶபந்த்யாம் வைதேஹ்யாம் ப்ராது ராஸீந் மஹாத்
புதம் । ஹூதலாத்உத்திதம் திவ்யம் ஸிம்ஹாஸந
மநுத்தமம் । த்ரி(யி)யமாணம் ஶிரோபிஸ்து நாகைரமி
தவிக்ரமை: । திவ்யம் திவ்யேந வபுஷா ஸர்வரத்ந விபூ
ஷிதம் ॥ தஸ்மிம்ஸ்து தரணீதேவீ பாஹுப்யாம்(ஹ்யாம்)
க்ருஹ்யமைதிலீம் । ஸ்வாகதேநாபி நந்த்யைநாம்(ஏநாம்)
ஆஸநே சோபவேஶயத் ॥ தாமாஸநகதாம் த்ருஷ்ட்வா
ப்ரவிஶந்தீம் ரஸாதலம் । புஷ்பவ்ருஷ்டி ரவிச்
சிந்நா திவ்யா ஸீதாமவாகிரத ॥

வைதேஹ்யாம்-ஸீதாப் பிராட்டியானவள், ததா ஶபந்த்யாம்-அப்படி சபதம்பண்ணுங்காலத்தில், மஹாத்புதம்-பெரிய ஆச்சரிய

69. ரா-உத்-97-18.

கரமானதும், திவ்யம்_திவ்யமானதும், அநுத்தமம்_உயர்வற்றதும், பூதலாத் உத்திதம்_பூமியினின்றும் உயரக்கிளம்பினதும், அமித விக்ரமை:_ அளவற்ற பராக்ரமமுடைய, நாகை:_ ஸர்ப்பங்களால், சிரோபி:_தலைகளால், த்ரியமாணம்_தூக்கப்பட்டதும், திவ்யேந வபுஷா_திவ்யமான அமைப்பின் அதிசயத்தோடு கூடினதும், ஸர்வரத்ந விபூஷிதம்_ஸகல ரத்நங்களால் அலங்கரிக்கப்பட்டதும், திவ்யம்_லோகோத்தரமானதுமான, ஸிம்மாஸநம்_ ஸிம்மாஸநமானது, ப்ராதுராஸீத்_வெளிக்கிளம்பிற்று, தஸ்மிந் து_ அந்த ஸிம்மாஸநத்தில், தரணீ தேவீ_பூதேவியானவள், மைதிலீம்_ஸீதாப்பிராட்டியை, பாஹுப்யாம் க்ருஹ்ய_இரண்டு கைகளாலும் எடுத்துக்கொண்டு, ஏநாம்_இந்தப் பிராட்டியை, ஸ்வாகதேந_நல்வரவுனல், அபிநந்த்ய_ஸந்தோஷப்படுத்திவைத்து, ஆஸநேச_அந்த ஆஸநத்தில், உபவேசயத்_உட்காரவைத்தாள். ஆஸநகதாம்_ஆஸநத்திலிருந்தவளாய், ரஸாதலம் பிரவிசந்தீம்_பாதாளலோகத்தை பிரவேசியா நிற்கிற, தாம்_அந்த ஸீதாப் பிராட்டியை, த்ருஷ்ட்வா_பார்த்து, திவ்யா_தேவலோகத்திலுண்டான, புஷ்பவ்ருஷ்டி:_புஷ்பவர்ஷமானது, ஸீதாம்_ஜானகியின்மேல், அவிச்சிந்நா_இடைவிடாமல், அவாகிரத்_பொழிந்தது.

**70.** ஔதார்ய காருணிகதாச்ரித வத்ஸலத்வ பூர்வேஷு ஸர்வமதி சாயிதமத்ர மாத:। ஸ்ரீரங்கதாம்நி யதுஷதாங்ய உதாஹரந்தி ஸீதாவதார முவமேத உமூஷ்ய யோக்யம் ॥

ஹே மாத:_வாரீர் நிருபாதிக மாதாவான ஸ்ரீரங்கநாய்ச்சியாரே! ஔதார்ய_ஸர்வேஷ்டங்களைக் கொடுப்பதென்கிற ஔதார்யமென்ன, காருணிகதா_கருணையோடு கூடியிருக்கும் தன்மையென்ன, ஆச்ரித வத்ஸலத்வ_ஆச்ரிதர்களிடத்தில் வாத்ஸல்யமென்ன, பூர்வேஷு_இவை முதலாகவுடைய கல்யாண குணங்களில், ஸர்வம்_எல்லா கல்யாண குணங்களும், ரங்கதாம்நி_ஸ்ரீரங்கக்ஷேத்திர

70. ஸ்ரீகுணர_57.

70- பின்னையும் [illegible] [illegible]
[illegible]
[illegible]
[illegible]

த்தில், அத்ர-உம்முடைய அர்ச்சாவதாரத்தில், அதிசாயிதம்-மே ன்மையை யடைந்திருக்கிறது. அங்பத்-வேறான, ஸீதாவதாரமு கம்-ஸீதாவதாரம் முதலிய அவதாரத்தை, உதாஹரந்தி-(ச்ருதி ஸித்தமான தேவரீர் குண ஸமூஹங்களுக்கு) உதாஹரணமாகச் சொல்லுகிறார்கள். ஏதத்-இந்த ஸீதாவதாரம் முதலிய அவதார மானது, அமுஷ்ய-ஸ்ரீரங்க நாய்ச்சியாரான இந்த அவதார விசே ஷத்துக்கு, யோக்யம்-அப்யாஸம். (ஸமஸ்த கல்யாண குணங்க ளோடுகூடி யிங்கு ஸ்ரீரங்கநாய்ச்சியாராய் எழுந்தருளியிருப்பதற் காக, ஸீதாவதாரம் முதலிய அவதாரங்கள் எடுத்து அப்யஸித்துக் கொண்டீரென்று கருத்து.)

## 9 ஸூத்திரம்.

**71.** ஸ ப்ரா(ஹ்ரா)தாஸ்வரணௌகாடம் நிபீட்ய ரகுநந்தந:
நீ: । ஸீதாமுவாசாதியசா: ராகவஞ்ச மஹாவ்ரதம் ॥

அதியசா:-மஹா யசஸ்ஸையுடைய, ஸ: ரகுநந்தந:-அந்த இளைய பெருமாள், ப்ராது:-சரணௌ-தமையனுடைய திருவடி களை, காடம் நிபீட்ய-கெட்டியாய் பிடித்துக்கொண்டு, மஹா வ்ர தம் ராகவம் ச-ஸத்யவ்ரதனான ராமனைக்குறித்தும், உவாச-சொன் னார். ஸீதாம்-ஸீதையைக்குறித்தும், [உவாச சொன்னார்.] 'ஸீதா முவாச' என்பது புருஷகாரத்தைச் சொன்னது. 'ராகவமுவாச' உபாயத்தைச் சொன்னது.

**72.** ஏவமுக்தஸ்து ராமேண லக்ஷ்மணஸ் ஸம்யதாஞ்சலி: ।
ஸீதா ஸமக்ஷம் காகுத்ஸ்தமிதம் வசநமப்ர(ப்ரு)வீத் ॥

ராமேண-பெருமாளால், ஏவம்-இவ்விதமாய், உக்த:-சொல்ல ப்பட்ட, லக்ஷ்மண:து-இளைய பெருமாள், ஸம்யதாஞ்சலி:-அஞ்ச லியோடு கூடினவராய்க்கொண்டு, ஸீதாஸமக்ஷம்-ஸீதாப்பிராட்டி முன்னிலையில், காகுத்ஸ்தம்-பெருமாளை (நோக்கி) இதம் வசநம்- இந்த வார்த்தையை, அப்ரவீத்-சொன்னார்.

**73.** பரவாநஸ்மி காகுத்ஸ்த த்வயி வர்ஷஶதம் ஸ்திதே ।
ஸ்வயம் து ருசிரே தேசே க்ரியதாமிதி மாம் வத ॥

---

71. ரா-அயோ-31-2. 72. ரா-ஆர-15-6. 73. ரா-ஆர-15-7.

ஹே காகுத்ஸ்த_ஏ பெருமாளே ! த்வயி_தேவரீர், வர்ஷஶதம்_அநேக வருஷம், ஸ்திதே_இருந்தாலும், பரவாந் அஸ்மி_உமக்குப் பரதந்த்ரனாயிருக்கிறேன். ஸ்வயம்து_தேவரீரே, ருசிரே_ரமணீயமான, தேசே_இடத்தில், க்ரியதாமிதி_ஆச்ரமம் செய்யப்பட்டுமென்று, மாம் வத_அடியேனைக்குறித்து அருளிச்செய்யவேணும்.

**74.** கேந தே நாக நாஸோரு விக்ஷதம் வை ஸ்தநாந்தரம் ।
கஃக்ரீடதி ஸரோஷேண பஞ்சவக்த்ரேண போகிநா ॥

ஹே நாக நாஸோரு_யானையின் துதிக்கைபோன்ற துடையையுடையவளே !, தே_உன்னுடைய, ஸ்தநாந்தரம்_ஸ்தநமத்தியமானது, கேந_எவனால், விக்ஷதம் வை_புண் படுத்தப்பட்டது, பஞ்சவக்த்ரேண_விரித்த முகமுடையதும், ஸரோஷேண_கோபமுடையதுமான, போகிநா_பாம்பினால், கஃ_எவன், க்ரீடதி_விளையாடுகிறான்.

**75.** ஸ பித்ரா ச பரித்யக்தஃ ஸுரைஶ்ச ஸமஹர்ஷிபிஃ ।
த்ரீந்லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ ஶரணம் கதஃ ॥

பித்ரா ச_தாய் தந்தையாலும், ஸ மஹர்ஷிபிஃ_மஹரிஷிகளோடுகூடிய, ஸுரைஃ ச_தேவர்களாலும், பரித்யக்தஃ_விடப்பட்ட, ஸஃ_அந்த காகாஸுரன், த்ரீந்லோகாந்_மூன்று உலகங்களை, ஸம்பரிக்ரம்ய_நன்றாய்த் திரிந்து, தமேவ_அந்த பெருமாளையே, ஶரணம் கதஃ_சரணமடைந்தான்.

**76.** ஸ தம் நிபதிதம் பூமௌ ஶரண்யஃ ஶரணாகதம் ।
வதார்ஹமபி காகுத்ஸ்தஃ க்ருபயா பர்யபாலயத் ॥

பூமௌநிபதிதம்_பூமியில் விழுந்து கிடக்கிறதும், ஶரணாகதம்_சரணாகதனுமான, தம்_அந்த காகாஸுரனை, ஶரண்யஃ காகுத்ஸ்தஃ_அந்த ரக்ஷகனான பெருமாள், வதார்ஹமபி_வதத்திற்கு யோக்யமானாலும், க்ருபயா_கருணையால், பர்யபாலயத்_காப்பாற்றினார்.

---

74. ரா_ஸு_38_26. 75. ரா_ஸு_38_33. 76. ரா_ஸு_38_34.

[illegible]

**77.** புரதஃ பதிதம் தேவீ தரண்யாம் வாயஸம் ததா । தச்சி
ரஃ பாதயோஸ்தஸ்ய யோஜயாமாஸ ஜாநகீ ॥ தமுத்தாப்
ய கரேணாத க்ருபாபீயூஷஸாகரஃ । ரரக்ஷ ராமோ, கு
ணவாந் வாயஸம் தயயேக்ஷத ॥

ஜாநகீ தேவீ_ஸீதா தேவியானவள், ததா-அப்போது, தர
ண்யாம்_பூமியில், புரதஃபதிதம்-முன்னிலேயில் விழுந்த, வாயஸம்_
காகத்தை, தஸ்ய பாதயோஃ-பெருமாளுடைய திருவடிகளில், தச்
சிரஃ-அந்த காகாஸுரனுடைய தலையை, யோஜயாமாஸ-சேர்த்து
வைத்தாள். அத-பிறகு, க்ருபாபீயூஷஸாகரஃ-கிருபையாகிற அமு
தத்திற்குக்கடலான, குணவாந்-குணசாலியான, ராமஃ-பெருமாள்,
தம்_அந்த காகத்தை, கரேண_கையால், உத்தாப்ய-எடுத்து, ரர
க்ஷ-ரக்ஷித்தார். வாயஸம்_காகத்தை, தயயா-தயையினுல், ஐக்ஷத-
கடாக்ஷித்தார்.

**78.** இஹ ஸந்தோ நவா ஸந்தி ஸதோவா நாநுவர்த்தஸே ।
ததாஹி விபரீதா தேபுத்தி (ஷ்டி) ராசாரவர்ஜிதா ॥

இஹ-இந்த விடத்தில், ஸந்தஃ-ஸத் புருஷர்கள், நவா ஸந்
தி-இல்லையா, ஸதஃ வா-இருந்தார்களாகில், நாநுவர்த்தஸே-அவர்
களை அநுவர்த்தநம் பண்ணவில்லை, ததாஹி-அதனலேயன்றே,
தே-உனக்கு, புத்திஃ விபரீதா-புத்தியானது விபரீதமாயிருக்கிறது.
ஆசார வர்ஜிதா-பெரியோர்கள் போகும்படியான வழியில் போகாம
லிருக்கிறது.

**79.** பாபாநாம்_60_வது இலக்கத்தைப்பார்க்க.

**80.** மாதர் மைதிலி ராக்ஷஸீஸ்த்வயி ததைவார்த்ரா (த்ரா)
பராதாஸ் த்வயி ரக்ஷந்த்யா பவநாத்மஜால் லகுதரா
ராமஸ்ய கோஷ்டீக்ருதா । காகம் தம் ச விபீஷணம் சர
ணமித்யுக்திக்ஷமௌ ரக்ஷதஸ் ஸாநஸ்ஸாந்த்ர (த்ர) மஹா
கஸஸ்ஸுகயது க்ஷாந்திஸ்தவாகஸ்மிகீ ॥

77. பாத்மபுராணம். 78. ரா_ஸு_21_9. 80. ஸ்ரீகுணர_50.

ஹே மாத:-ஏ உலகத்திற்கு தாயே! மைதிலி-ஸீதா தேவியே, த்வயி-தேவரீர் விஷயத்தில், ததைவ-அப்படிப்பட்ட, ஆர்த்ராப ராதா:-அபராதங்களைப்பண்ணின கை உலராதவர்களான (அதாவது-தீரக்கழிய அபராதஞ்செய்த) ராக்ஷஸீ:-ராக்ஷஸிகளை, பவநாத்மஜாத்-திருவடியிடமிருந்து, ரக்ஷந்த்யா-ரக்ஷிக்கிற, த்வயா-உன்னால், காகம்-காகாஸுரனையும், தம் விபீஷணம் ச-அந்த விபீஷணனையும், சரணம் இதி உக்திக்ஷமௌ-சரணமென்று சொல்லினவர்களை, ரக்ஷத:-ரக்ஷித்த, ராமஸ்ய-பெருமாளுடைய, கோஷ்டீ-கோஷ்டியானது, லகுதரா க்ருதா-தாழ்வாகப் பண்ணப்பட்டது. ஸா-அப்படிப்பட்ட, ஆகஸ்மிகீ-நிர்ஹேதுகமான, தவ க்ஷாந்தி:-உம்முடைய பொறுமையானது, ஸாந்த்ர மஹாகஸ:-நெருக்கமான மாஹாபராதங்களையுடைய, ந:-அடியோங்களை-ஸுகயது-ஸுகிப்பிக்கவேண்டும்.

## 10 ஸூத்திரம்.

**81.** ஶ்ருணாதி நிகிலாந் தோஷாந் ஶ்ரீணாதி ச குணைர்ஜகத்॥

நிகிலாந்தோஷாந்-எல்லா தோஷங்களையும், ஶ்ருணாதி-நசிப்பிக்கிறாள். ஜகத்-உலகத்தை, குணை:-குணங்களால், ஶ்ரீணாதி-விஸ்தரிக்கச்செய்கிறாள்.

## 12 ஸூத்திரம்.

**82.** பிதேவ த்வத்ப்ரேயாந் ஜநநி பரிபூர்ணாகஸி ஜநே ஹித
ஸ்ரோதோவ்ருத்த்யா பவதி ஹி கதாசித் கலுஷதீ: ।
கிமேதந்நிர்தோஷ: க இஹ ஜகதீதி த்வமுசிதைருபாயைர்
விஸ்மார்ய ஸ்வஜநயஸி மாதா ததஸி ந: ॥

ஹே ஜநநி-ஏ தாயே! பரிபூர்ணாகஸிஜநே-பூர்ணமான பாபஞ்செய்த ஜநங்களிடத்தில், பிதேவ-தகப்பன்போல, ஹிதஸ்ரோதோ வ்ருத்த்யா-ஹித விஷயமான வியாபாரத்தோடுகூடினவனாய், த்வத்ப்ரேயாந்-உம்முடைய ப்ரியனான பகவான், கதாசித்-ஒரு கால

---

82. ஸ்ரீகுண-11.

த்தில், கலுஷதீ: பவதிஹி-கோபத்தையடைந்த புத்தியையுடைய வனுகிருன். (அப்போது) கிம் ஏதத்-இச்சிற்றத்திற்கு அடியெ ன்ன, இஹஜகதி-இந்த உலகத்தில், க: நிர்தோஷ:-அபராதமற்றி ருப்பார் யார்? இதி-என்று, உசிதை: உபாயை:-உசிதமான உபாய ங்களால், விஸ்மார்ய-அபராதங்களை மறக்கும்படிசெய்து, ஸ்வஜந யஸி-தன் பரிஜநமான அநந்தகருட விஷ்வக்ஸேநாதிகளுடன் ஸம மாகச்செய்கிருய், தத்-ஆகையால், ந: அடியோங்களுக்கு, மாதா அஸி-தாயாக இருக்கிறீர்.

**83.** ப்ராணஸம் ஶயமாபந்நம் த்ருஷ்ட்வா ஸீதா2ய வாயஸம் ।
த்ராஹி த்ராஹீதி ஹர்தாரமுவாச தயயா விஹும் ॥

அத-பிறகு ஸீதா-ஸீதாப்பிராட்டியானவள், ப்ராண ஸம்ஶ யம் ஆபந்நம்-ப்ராணனில் ஸந்தேஹம் ஜனிக்கும்படியான ஆபத் தையடைந்த, வாயஸம்-காகாஸுரனை, த்ருஷ்ட்வா-பார்த்து, தய யா-கருணையால், த்ராஹி த்ராஹி இதி-ரக்ஷிப்பாயாக ரக்ஷிப்பாயா க என்று, பர்த்தாரம் விபும்-தனக்கு பர்த்தாவான பெருமாளை, தயயா உவாச-தயையினுல் சொன்னுள்.

**84.** மித்ரமௌபயிகம் கர்தும் ராம: ஸ்தாநம் பரீப்ஸதா। வத ம் சாநிச்ச (?) தாகோரம் த்வயா2ஸௌ புருஷர்ஷப: ॥
விதித: ஸஹி தர்மஜ்ஞ: ஶரணாகத வத்ஸல: । தேந மை த்ரீபவது தே யதி ஜீவிதுமிச்சஸி ॥

ஸ்தாநம் பரீப்ஸதா-நீ நிலைக்க ஓரிடம் வேண்டுமென்கிற எண்ணமுடையவனும், கோரம் வதம் ச அநிச்சதா-கோரமான வதம்வேண்டாமென்றெண்ணமுடையவனுயுமிருக்கும் பக்ஷத்தில், வத்யா-உன்னுல், புருஷர்ஷப:-புருஷோத்தமரான, ராம:-பெரு மாள், மித்ரம் கர்தும் ஔபயிகம்-ஸ்நேஹிதராகச்செய்ய தகுந்தவர். ஸஹி-அந்த ராமரோவென்றுல், தர்மஜ்ஞ:-தர்மங்களை யறிந்தவரெ ன்றும், ஶரணாகதவத்ஸல:-சரணமென்று வந்தவர்களிடத்தில் வா த்ஸல்ய முள்ளவரென்றும், விதித: ஹி-எங்கும் ப்ரஸித்திபெற்ற

83. பாத்மபுராணம். 84. ரா-ஸு-21-19-20.

வரன்றோ, ஜீவிதும் இச்சஸியதி-நீ ஜீவித்திருக்க நினைக்கும்பக்ஷத்தில், தே-உனக்கு, தேந-அவருடன், மைத்ரீபவது-ஸ்நேஹமுண்டாகவேண்டும்.

## 14 ஸூத்திரம்

**85.** நத்வேவாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே ஜநாதிபா:।
நசைவ ந ஭விஷ்யாமஸ்ஸர்வே வயமித: பரம் ॥

அஹம்-நான், ஜாது-இப்போது நடக்கிற காலத்திற்கு முன் காலத்திலும், நாஸம் இதி து நைவ-இல்லையென்கிறதில்லை. த்வம்-நீயும், நாஸீ: இதி ந-இல்லையென்கிறதில்லை, இமே ஜநாதிபா:-இங்கு வந்திருக்கிற ராஜாக்களும், ந ஸந்தி இதிந-இல்லையென்கிறதில்லை. வயம் ஸர்வே-நான் நீ இராஜாக்கள் ஸகலரும், அத:பரம்-இனி வரப்போகிற காலத்திலும், நபவிஷ்யாம: இதி ந-இருப்போமில்லையென்பதில்லை.

**86.** தேஹிநோऽஸ்மிந் யதா தேஹே கௌமாரம் யௌவநம்
ஜரா। ததா தேஹாந்தர ப்ராப்தி: தீரஸ்தத்ர நமுஹ்யதி॥

தேஹிந:-ஒரு தேஹத்திலிருக்கிற ஆத்மாவுக்கு- அஸ்மிந் தேஹே-இந்த தேஹத்தில், கௌமாரம்-பாலியமும், யௌவநம்-யௌவநமும், ஜரா-கிழத்தனமும், யதா-எப்படியோ, ததா-அப்படியே, தேஹாந்தர ப்ராப்தி:-வேறு தேஹத்தை யடைகிறதும், தத்ர-அந்த விஷயத்தில், தீர:-தைர்யமுள்ளவன். நமுஹ்யதி-மயக்கத்தை யடையமாட்டான்.

**87.** அந்தவந்த இமே தேஹா நித்யஸ்யோக்தாஶ்ஶரீரிண:।
அநாஶிநோऽப்ரமேயஸ்ய தஸ்மாத் யுத்த்ய (ஸ்வ) ஸவ ஹா
ரத ॥

நித்யஸ்ய-நித்யனும், அநாசிந:-அழிவில்லாதவனும், அப்ரமேயஸ்ய-(ஜ்ஞானஸ்வரூபனாகையாலே)-அளவிறந்த வைபவத்தையுடையனுமிருக்கிற, சரீரிண:-ஆத்மாவினுடைய, இமே தேஹா:-இந்த சரீரங்கள், அந்தவந்த:-நாசமுள்ளவைகளாக, உக்தா:-

85. ஸ்ரீகீதை-2-12. 86. ஸ்ரீகீதை-2-13. 87. ஸ்ரீகீதை-2-18.

சொல்லப்பட்டிருக்கின்றன. தஸ்மாத்-ஆகையினால், ஹேபாரத-ஏ பரதவம்சத்திலுண்டான அர்ஜுநனே! யுத்த்யஸ்வ-சண்டை செய்வாக ॥

**88.** ந ஜாயதே ம்ரியதே வா கதாசித் நாயம் பூத்வா பவிதா வா ந பூய: । அஜோ நித்ய: சாச்வதோऽயம்புராணோ ந ஹந்யதே ஹந்யமாநே சரீரே ॥

(இவ்வாத்மாவானது) கதாசித்-ஒருக்காலும், நஜாயதே ம்ரியதேவா-பிறப்பதுமில்லை, சாவதுமில்லை. அயம்-இந்த ஆத்மாவானவன், பூத்வா-உண்டாகி, பூய:-மறுபடியும், நபவிதாவா-உண்டாகப்போகிறானில்லை. அயம்-இந்தஜீவன், அஜ:-பிறப்பில்லாதவன் நித்ய:-நாசமில்லாதவன். சாச்வத:-ஸ்திரமாயிருக்கிறவன், புராண:-முன்புமிருக்கிறவன். (ஆகையால்) சரீரே-சரீரமானது, ஹந்யமாநே-கொல்லப்பட்டிருந்தபோதிலும், ந ஹந்யதே-கொல்லப்படுகிறதில்லை.

**89.** வாஸாம்ஸி ஜீர்ணாநி யதா விஹாய நவாநி க்ருஹ்ணாதி நரோऽபராணி । ததா சரீராணி விஹாய ஜீர்ணாந்யந்யாநி ஸம்யாதி நவாநி தேஹீ ॥

நர:-மனிதன், யதா-எப்படி, ஜீர்ணாநி-கந்தல்களாயிருக்கிற, வாஸாம்ஸி-வஸ்த்ரங்களை, விஹாய-விட்டு, அபராணி நவாநி-வேறான நூதன வஸ்த்ரங்களை, க்ருஹ்ணாதி-எடுத்துக்கொள்கிறானோ, ததா-அப்படியே, தேஹீ-ஆத்மாவானவன், ஜீர்ணாநி-பழையதான, சரீராணி-சரீரங்களை, விஹாய-விட்டு, நவாநி-புதிதாயும், அந்யாநி-வேறாயுமிருக்கிற, சரீராணி-சரீரங்களை, ஸம்யாதி-அடைகிறான்.

**90.** பூமிராபோऽநலோ வாயு:கம் மநோ புத்திரேவ ச । அஹங்கார இதீயம்மே பிந்நா ப்ரக்ருதிரஷ்டதா ॥

அபரேயமிதஸ் த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே

---

88. ஸ்ரீகீதை-2-20. 89. ஸ்ரீகீதை-2-22. 90. ஸ்ரீகீதை-7-4-5,

பராம் । ஜீவபூதாம் மஹாபாஹோ யயேதம் தார்யதே ஜகத் ॥

மே-என்னுடைய, இயம்-இந்த, ப்ரக்ருதி:-மாயையானது, (சரீரமானது) பூமி:-பூமி, ஆப:-ஜலம், அநல:-நெருப்பு, வாயு:-காற்று, கம்-ஆகாசம், மந:-மனது, புத்தி:-புத்தி, அஹங்கார:-அஹங்காரம், இதி அஷ்டதா பிந்நா-என்று எட்டுவிதமாய் வேறுபட்டிருக்கிறது. ஹே மஹாபாஹோ-ஏ புஜபலமுள்ள அர்ஜுநனே! இயம்-இம்மாயையானது, அபரா-தாழ்ந்தது, இத: து-இதைக்காட்டிலும், அந்யாம்-வேறானதும், யயா-எதனால், இதம் ஜகத்-இந்த உலகம், தார்யதே-தரிக்கப்படுகிறதோ, தாம்-அப்படிப்பட்டதுமான, மே-என்னுடைய, ஜீவபூதாம்-ஜீவஸ்வரூபமான, ப்ரகிருதிம்-சரீரத்தை, பராம்-ச்ரேஷ்டமாக, வித்தி-அறிந்துகொள். அசேதநமான ஐந்து பூதங்களும் பிரகிருதி மஹத் அஹங்காரங்களும் எனக்கு தாழ்ந்த சரீரம், ஜீவஸ்வரூபமாயிருக்கின்ற சரீரமே மேலானது. அதனால்தான் இப்பிரபஞ்சம் தரிக்கப்படுகின்றது.

**91.** ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ மத்த: ஸ்மிருதிர்ஜ்ஞாநமபோஹநம் ச । வேதைச்ச ஸர்வைரஹமேவ வேத்யோ வேதாந்தக்ருத் வேதவிதேவ சாஹம் ॥

ஸர்வஸ்ய ச-ஸமஸ்த ப்ராணிகளுடைய, ஹ்ருதி-மனதில், அஹம்-நான், ஸந்நிவிஷ்ட:-இருக்கிறேன். மத்த:-என்னிடத்திலிருந்தே, ஸ்மிருதி:-பூர்வாநுபூத விஷயமான ஸ்மிருதியும், ஜ்ஞாநம்-அறிவும், அபோஹநம் ச-அஜ்ஞானமும், (உண்டாகின்றன) ஸர்வை:-ஸமஸ்தங்களான, வேதை: ச-வேதங்களினாலும், வேத்ய:-தெரிந்துகொள்ளத் தகுந்தவன், அஹமேவ-நானே, வேதவித்-வேதார்த்தங்களை யறிந்தவனும், வேதாந்த க்ருத் ச-வேதாந்தத்தை ச்செய்தவனும், அஹமேவ-நானே.

**92.** ஈச்வரஸ்ஸர்வ பூதாநாம் ஹ்ருத்தேசேऽர்ஜுந திஷ்

---

91. ஸ்ரீகீதை-15-15. 92. ஸ்ரீகீதை-18-61.

டதி । ப்ரா (ஹ்ா) மயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா ॥

ஹே அர்ஜுந-ஓ அர்ஜுனா! யந்த்ராரூடாநி-தன்னாலுண்டாக்கப்பட்டதாயும் ப்ரகிருதியென்று பெயருடையதாயும் தேஹேந்த்ரிய ரூபமாயுமிருக்கிற யந்த்ரத்திலேறின, அதாவது சரீரத்திலிருக்கிற, ஸர்வபூதாநி-ஸகல ப்ராணிகளையும், மாயயா-ஸத்வம் முதலிய குணங்களுள்ள விஷ்ணுமாயையாலே, ப்ராமயந்-பூர்வகர்மாநுசாரமாய் பிரவிருத்திசெய்வித்துகொண்டு, ஈச்வர:-ஈச்வரனவன், ஸர்வ பூதாநாம்-ஸகல ப்ராணிகளுடைய, ஹ்ருத்தேசே-இருதயத்தில், திஷ்டதி-இருக்கிறான்.

**93.** பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம் ।
தர்மஸம்ஸ்தாபநார்த்தா(ய-ா)ய ஸம்பவாமி யுகேயுகே ॥

ஸாதூநாம்-பெரியோர்களுடைய, பரித்ராணாய-காப்பாற்றுவதற்காகவும், துஷ்க்ருதாம்-கெட்டவர்களுடைய, விநாசாய ச-நாசத்திற்கும், தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய-தர்மத்தை நிலைநிறுத்துவதற்கும், யுகே யுகே-யுகந்தோறும் ஸம்பவாமி-உண்டாகின்றேன்.

**94.** ஸமோऽஹம் ஸர்வபூதேஷு ந மே த்வேஷ்யோऽஸ்தி ந ப்ரிய: । யே பஜந்தி து மாம் பக்த்யா மயி தே தேஷு சாப்யஹம் ॥

அஹம்-நான், ஸர்வபூதேஷு-எல்லா பிராணிகளிடத்திலும், ஸம:-ஸரியாயிருக்கிறேன், மே-எனக்கு, த்வேஷ்ய:-சத்ருவும், ந அஸ்தி-இல்லை. ப்ரிய: ந-இஷ்டனுமில்லை. யே து-எவர்கள், மாம்-என்னை, பக்த்யா-பக்தியோடு பஜந்தி-ஸேவிக்கிறார்களோ தே-அவர்கள், மயி-என்னிடத்திலிருக்கிறார்கள். அஹமபி-நானும், தேஷு-அவர்களிடத்தில், இருக்கிறேன்

**95.** ப்ரகிருதே: க்ரியமாணாநி குணை: கர்மாணி ஸர்வச: ।
அஹங்கார விமூடாத்மா கர்த்தாஹமிதி மந்யதே ॥

93. ஸ்ரீகீதை-4-8. 94. ஸ்ரீகீதை-9-29. 95. ஸ்ரீகீதை-3-27.

95. [illegible]

ப்ரகிருதேः-மூல ப்ரகிருதியினுடைய, குணைः-ஸத்வாதிமுக் குணங்களால், ஸர்வசः-நானாவிதமாய், க்ரியமாணாநி-பண்ணப்படுகிற, கர்மாணி-கிருத்தியங்களை, அஹங்கார விமூடாத்மா-அஹங்காரத்தால் புத்தியில்லாத ஜீவன், அஹம் கர்த்தேதி-நான் பண்ணுகிறேனென்று, மந்யதே-எண்ணுகிறான்.

**96.** யததோஹ்யபி கௌந்தேய புருஷஸ்ய விபச்சி(ஶ்சி)தः ।
இந்த்ரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸபம் மநः ॥

ஹே கௌந்தேய-ஏ அர்சுனா! யததः அபி (இந்த்ரியங்களை ஜயிக்கவேணுமென்று) யத்நஞ்செய்கிற, விபஸ்சிதः-ப்ராஜ்ஞனான, புருஷஸ்ய-புருஷனுடைய, மநः-மனதை, ப்ரமாதீநி-கலங்கச்செய்கிற (பலிஷ்டங்களான) இந்த்ரியாணி-இந்த்ரியங்கள், ப்ரஸபம்-பலாத்காரமாக, ஹரந்திஹி-இழுத்துக்கொண்டு போகின்றன.

**97.** அஸம்ஶயம் மஹா பாஹோ மநோ துர்நிக்ர(க்ரு)ஹம் சலம் । அப்யா(ஹ்யா)ஸேந து கௌந்தேய, வைராக்யேண ச க்ருஹ்யதே ॥

மஹா பாஹோ-பெரிய கையையுடைய, கௌந்தேய-ஓ அர்ஜுனனே! மநः-மனது, துர்நிக்ரஹம்-அடக்குவதற்கு மிகவும் கஷ்டம், சலம்-சஞ்சலமுள்ளது (என்பதில்) அஸம்சயம்-ஸந்தேகமில்லை. (அப்படியிருந்தபோதிலும்) அப்யாஸேந-வழக்கத்தாலும், வைராக்யேண ச-வைராக்கியத்தாலும், க்ருஹ்யதே-அடக்கப்படுகிறது.

**98.** தாநி ஸர்வாணி ஸம்யம்ய யுக்த ஆஸீத மத்பரः । வஶே ஹி யஸ்யேந்த்ரியாணி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா ॥

யுக்தः-யோகத்தையுடையவன், தாநி ஸர்வாணி ஸம்யம்ய-அப்படிப்பட்ட இந்திரியங்களையடக்கி, மத்பரः-என்னையே ப்ரதானமாக அடைந்தவனாக, ஆஸீத-இருக்கக்கடவன். யஸ்யஹி-எவனுக்கு, இந்த்ரியாணி-இந்த்ரியங்கள், வசே-ஸ்வாதீனத்தில் (இரு

96. ஸ்ரீகீதை-2-60. 97. ஸ்ரீகீதை-6-35. 98. ஸ்ரீகீதை-2-61

க்கின்றனவோ) தஸ்ய-அவனுக்கு, ப்ரஜ்ஞா-புத்தியானது, ப்ரதிஷ்டிதா-நிலையாயிருக்கிறது.

**99.** யதோ யதோ நிஶ்சரதி மநஶ் சஞ்சலமஸ்திரம் । ததஸ்
ததோ நியம்யைததாத்மந்யேவ வஶம் நயேத் ॥

அஸ்திரம்-அஸ்திரமாயும், சஞ்சலம்-சஞ்சலமுமான, மந:-மனது, யத:யத:-எந்தெந்தவிடத்தில, நிச்சரதி-ஓடுகிறதோ, தத: தத:-அந்தந்த விடத்திலிருந்து, ஏதத்-இந்த மனதை, நியம்ய-அடக்கி, ஆத்மந்யேவ-தன்னிடத்திலேயே வசம் நயேத்-ஸ்வாதீநமாகப் பண்ணவேண்டியது.

**100.** சதுர்விதா பஜந்தே மாம் ஜநாஸ்ஸுக்ருதிநோऽர்ஜுந ।
ஆர்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ (ர்த்தீ) ஜ்ஞாநீ ச பர
தர்ஷப ॥

ஹே பரதர்ஷப அர்ஜுந-ஓ பரதகுல ச்ரேஷ்டனான அர்ஜுனா! ஆர்த்த:-நஷ்டமான ஐச்வர்யத்தை மீளவும் கோருகிறவன், ஜிஜ்ஞாஸு:-ஸ்வாத்ம ப்ராப்தியை விரும்புகிறவன், அர்த்தார்த்தீ-தரித்திரனாயிருந்து ஐச்வர்யத்தைக் கோருகிறவன், ஜ்ஞாநீச-பகவானை யடைய விருப்பமுள்ளவன், (என்று) சதுர்விதா:-நாலு வகைப்பட்ட, ஸுக்ருதிந:-புண்யசாலிகளான, ஜநா:-ஜநங்கள், மாம்-என்னை, பஜந்தே-அடைகிறார்கள்.

**101.** த்வௌ (ஔ) பூதஸர்கௌ (ஔ) லோகேऽஸ்மிந்
தைவ ஆஸுர ஏவ ச । தைவோ விஸ்தரஶ: ப்ரோக்த:
ஆஸுரம் பார்த்த மே ஶ்ருணு ॥

அஸ்மிந் லோகே-இவ்வுலகில், தைவ:-தைவ மென்றும், ஆஸுர: ஏவச-ஆஸுரமென்றும், பூத ஸர்கௌ-பூத ஸ்ருஷ்டிகள், த்வௌ-இரண்டு விதங்கள். தைவ:-தைவ ஸ்ருஷ்டியானது, விஸ்தரஶ: ப்ரோக்த:-விஸ்தாரமாய் சொல்லப்பட்டது. ஹே பார்த்த-ஏ குந்தீ புத்ரனே! ஆஸுரம் மே ஶ்ருணு-ஆஸுர ஸ்ருஷ்டியைப்பற்றி என்னிடமிருந்து கேள்.

99. ஸ்ரீகீதை-6-26. 100. ஸ்ரீகீதை-7-16. 101. ஸ்ரீகீதை-16-6.

**102.** தைவீ ஸம்பத் விமோக்ஷாய நிபந்தாயாஸுரீ மதா ।
மா சுச: ஸம்பதம் தைவீமபிஜாதோஸி பாண்டவ ॥

தைவீ ஸம்பத்-தேவ ஸம்பத்தானது, விமோக்ஷாய-மோக்ஷத்தின் பொருட்டும், ஆஸுரீ-அஸுர ஸம்பத்தானது, நிபந்தாய-பந்தத்தை யுண்டாக்குவதற்கும், மதா-(காரணமென்று) நிச்சயிக்கப் பட்டிருக்கிறது. ஹே பாண்டவ-ஏ பாண்டு புத்ரனான அர்ஜுநனே! தைவீம் ஸம்பதம்-தைவ ஸம்பத்தை, அபிஜாத: அஸி-அடையப் பிறந்தவனாக-இருக்கிறாய். மா சுச:-விசனப்படாதே.

**103.** ஹந்த தே கதயிஷ்யாமி விபூதீராத்மந: சுபா: ।
ப்ராதாந்யத: குருச்ரேஷ்ட நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே ॥

ஹே குரு ச்ரேஷ்ட-ஏ குருகுல ச்ரேஷ்டனே! தே-உனக்கு, சுபா:-நல்லதுகளான, ஆத்மந:-என்னுடைய, விபூதீ:-ஐச்வர்யங்களை, ப்ராதான்யத:-முக்கியமானவைகளை, வக்ஷ்யாமி-சொல்லுகிறேன். ஹந்த-ஐயோ, (ஏனென்றால்) மே விஸ்தரஸ்ய-என்னுடைய விபூதிகளின் விஸ்தாரத்திற்கு, அந்த: நாஸ்தி-முடிவில்லை.

**104.** ந து மாம் சக்யஸே த்ரஷ்டும் (த்ருஷ்டும்) அநேநைவ ஸ்வ சக்ஷுஷா । திவ்யம் ததாமி தே சக்ஷு: பச்ய மே யோகமைச்வரம் ॥

அநேந-இந்த, ஸ்வசக்ஷுஷைவ து-உன் கண்ணினாலேயே, மாம்-என்னை, த்ரஷ்டும்-பார்ப்பதற்கு, நசக்யஸே-சக்தனாகமாட்டாய், திவ்யம்-ஜ்ஞான ஸ்வரூபமான, சக்ஷு:-கண்ணை, தே-உனக்கு, ததாமி-கொடுக்கிறேன். மே-என்னுடைய, ஐச்வரம் யோகம்-அசிந்த்யமான ப்ரபாவத்தை, பச்ய-பார்.

**105.** பச்யாமி தேவாந் தவ தேவ தேஹே ஸர்வாந் ஸ்ததா பூதவிசேஷ ஸங்காந் । ப்ரஹ்மாண (ப்ரஹ்மா) ண

102. ஸ்ரீகீதை-16-5. 103. ஸ்ரீகீதை-10-19. 104. ஸ்ரீகீதை-11-8. 105. ஸ்ரீகீதை-11-15.

மீசம் கமலாஸநஸ்யும் ருஷீம்ஸ்வ ஸர்வா நுரமாம் ஸ்வ
திவ்யாந் ॥

ஹே தேவ-ஓ கிருஷ்ணனே ! தவ-உம்முடைய, தேஹே-விச்வரூப சரீரத்தில், தேவாந்-தேவர்களையும், ததா-அப்படியே, ஸர்வாந் பூத விசேஷ ஸங்காந்-பலவித ஜங்கம ஸ்தாவரங்களான பூதங்களையும், ஈசம்-சிவனையும், கமலாஸநஸ்தம்-தாமரைப்பூவை ஆஸநமாகவுடைய, ப்ரம்ஹாணம்-பிரமனையும், ஸர்வாந் ருஷீந்-எல்லா ரிஷிகளையும், திவ்யாந் உரகாந்-விசித்திரமான ஸர்ப்பங்களையும், பச்யாமி-பார்க்கிறேன்.

**106.** மந்மநா பவ மத்பக்தோ மத்யா (ஜ்யா) ஜீ மாம் நமஸ்குரு।
மாமேவைஷ்யஸி யுக்த்வைவமாத்மாநம் மத் பராயண: ॥

மந்மநா:-என்னிடத்தில் மனதை வைத்தவனும், மத்பக்த:-என்னிடத்தில் பக்தியையுடையவனும், மத்யாஜீ-என்னை யாராதிக்கிறவனும், பவ-ஆகக்கடவாய். மாம்-என்னை, நமஸ்குரு-நமஸ்காரஞ்செய். ஏவம்-இவ்விதமாய், மத் பராயண:-என்னை சரணமடைந்தவனாய், ஆத்மாநம்-மனதை, யுக்த்வா-யோகத்தில் நிலைநிறுத்தி, மாமேவ-என்னையே, ஏஷ்யஸி-அடைவாய்.

**107.** தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா து ரத் யயா। மாமேவ யே ப்ரபத்ய (ந்)ந்தே மாயாமேதாம் தரந்தி தே ॥

குணமயீ-குணஸ்வரூபமாயும், தைவீ-தைவ ஸம்பந்தமாயுமிருக்கிற, ஏஷா-இந்த, மம-என்னுடைய, மாயா-மாயையானது, துரத்யயா-தாண்டமுடியாதது. மாமேவ-என்னையே, யே-எவர்கள், ப்ரபத்யந்தே-சரணமடைகிறார்களோ, தே-அவர்கள், ஏதாம் மாயாம்-இந்தப் பிரகிருதியை, தரந்தி-தாண்டுகிறார்கள்.

**108.** தத: பதம் தத் பரிமார்கிதவ்யம் யஸ்மிந் கதா ந நிவர்த்தந்தி பூய:। தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யேத் யத: ப்ரவ்ருத்தி: ப்ரஸ்ருதா புராணீ ॥

---

106. ஸ்ரீகீதை-9-31. 107. ஸ்ரீகீதை-7-14. 108. ஸ்ரீகீதை-15-4.

ததஃ-பின்பு, யஸ்மிந்-எந்த ஸ்தாநத்தில், கதாஃ-அடைந்தவர்கள், பூயஃ-மறுபடியும் ந நிவர்த்தந்தி-திரும்பி ஸம்ஸாரத்திற்கு வருவதில்லையோ, தத் பதம்-அந்த ஸ்தாநமானது, பரிமார்க்கிதவ்யம்-தேடத்தக்கது. யதஃ-எவனிடத்திலிருந்து, புராணீ-வெகுகாலமாய் தொடர்ந்து வந்திருக்கிற, ப்ரவ்ருத்திஃ-ஸம்ஸார ப்ரவ்ருத்தியானது, ப்ர ஸ்ருதா-பரவி யிருக்கிறதோ, தமேவ ஆத்யம் புருஷம்-அவ்வாதி புருஷனையே, ப்ரபத்யேத்-சரணமடையவேண்டும்.

**109.** தமேவ ஶரணம் கச்ச (முமு) ஸர்வபாவேந பாரத । தத்
ப்ரஸாதாத் பராம் சாந்திம் ஸ்தாநம் ப்ராப்ஸ்யஸி ஶாஶ்வதம் ॥

ஹே பாரத-ஓ பரதவம்சத்தி லுதித்தவனே! ஸர்வபாவேந-கரணத்ரயத்தாலும், தமேவ-ஸகல ஜகத்திற்கும் நியாமகனும் ஆச்ரித வாத்ஸல்யத்தினால் உனக்கு சாரதியாயும், எதிரிலிருந்து உன்னை யேவுகிறவனுமிருக்கிற அவனையே (என்னையே) சரணம் கச்ச-சரணமடைவாய். தத் ப்ரஸாதாத் அவனுடைய அநுக்ரஹத்தினால், பராம் சாந்திம்-ஸர்வ கர்மபந்த நிவ்ருத்தியையும், சாச்வதம்-நித்யமான, ஸ்தாநம்-பரமபதத்தையும், ப்ராப்ஸ்யஸி-அடைவாய்.

**110.** மத் ப்ராப்திம்-45-வது இலக்கம் பார்க்க.

**111.** த்வமேவோபாயபூதோ மே பவ ॥

த்வமேவ-தேவரீரே, மே-எனக்கு, உபாய பூதஃ பவ-உபாயமாக ஆகவேணும்.

**112.** ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ ।
அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ(ஹ்யோ)மோக்ஷயிஷ்யாமி
மா ஶுசஃ ॥

ஸர்வ தர்மாந்-சகல தருமங்களையும், பரித்யஜ்ய-விட்டுவிட்டு, மாம் ஏகம்-என்னொருவனையே, சரணம் வ்ரஜ-உபாயமாக அடை.

---

109. ஸ்ரீகீதை-18-62. 112. ஸ்ரீகீதை-18-66.

அஹம்-நான், த்வா-உன்னை, ஸர்வ பாபேப்ய:-ஸகல பாபங்களினின்றும், மோக்ஷயிஷ்யாமி-விடுவிப்பேன். மா ஶுச:-விசனப்படாதே.

**113.** உபாத்தே ஸத்தாஸ்திதி நியமநாத்யை: (ஶ்சித்) விசிதேள ஸ்வமுத்திஶ்ய ஶ்ரீமாநிதி வததி வாகௌபநிஷதீ । உபாயோபேயத்வே தஹிஹ தவ தத்த்வம் நது குணௌ அதஸ்த்வாம் ரங்கேஶய ஶரணமவ்யாஜமபஜம் ॥

ஹே ஶ்ரீரங்கேசய-ஏ ரங்கநாதனே! ஶ்ரீமாந்-பெரிய பிராட்டியாரையுடைய பெருமாள், சிதசிதேள-சேதநாசேதநங்களை, ஸத்தாஸ்திதி நியமநாத்யை:-ஸ்ருஷ்டி-ஸ்திதி நியமநங்களை முதலாகவுடைய வ்யாபாரங்களால், ஸ்வம்-தன்னை, உத்திஶ்ய-பலபாக்காகவெண்ணி, உபாத்தே-ஸ்வீகரிக்கிறான், இதி-என்று, ஔபநிஷதீ வாக்-உபநிஷத் வாக்யமானது, வததி-சொல்லுகிறது. தத்-ஆகையால், இஹ-இவ்விஷயத்தில், உபாயோபேயத்வே-உபாயத்வ உபேயத்வங்கள், தவ-தேவரீருக்கு, தத்த்வம்-ஸ்வரூபம், நது குணௌ-குணங்களல்ல, அத:-ஆகையால், த்வாம்-தேவரீரை, அவ்யாஜம்-நிர்வ்யாஜமாக, சரணம்-உபாயமாக, அபஜம்-அடைந்தேன்.

**114.** கார்ப்பண்ய தோஷோ பஹதஸ்வபாவ: ப்ருச்சாமி த்வாம் தர்மஸம்மூடசேதா: । யச்ச்ரேயஸ்ஸ்யாந்நிஶ்சிதம் ப்ரூஹி தந்மே ஶிஷ்யஸ்தேஹம் ஶாதி மாம் த்வாம் ப்ரபந்நம் ॥

அஹம்-நான், கார்ப்பண்ய தோஷோபஹதஸ்வபாவ:-துக்கியாகிய, தோஷத்தால் கலங்கின ஸ்வபாவத்தையுடையனாய், தர்மஸம்மூடசேதா:-தர்மமின்னது, அதர்மமின்னதென்று அறியாத மனதையுடையனாய்க்கொண்டு, த்வாம் ப்ருச்சாமி-உம்மைக் கேட்கிறேன். மே-எனக்கு, யத்-யாதொன்று, ச்ரேய:-நன்மையோ, தத்-அத்தை, நிச்சிதம் ப்ரூஹி-நிச்சயித்து அருளிச்செய்யவேணும். அஹம்-நான், தே ஶிஷ்ய:-உனக்கு சிஷ்யன், த்வாம்

---

113. ஶ்ரீரங்கராஜஸ்தவம்-உத்-87. 114. ஶ்ரீகீதை-2-7.

ப்ரபந்நம் மாம்-உம்மை சரணம் புகுந்த என்னை, சாதி-நியமித்து அருளவேணும்.

## 15 ஸூத்திரம்.

115. ஶ்ருதிஃ ஸ்மிருதிர்மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்ய வர்த்ததே । ஆஜ்ஞாச்சே (ஹ்ஹ) தீ மம த்ரோஹீ மத்பக்தோ ऽபி ந வைஷ்ணவஃ ॥

ச்ருதிஃ-வேதங்களும், ஸ்மிருதிஃ-மன்வாதி ஸ்மிருதிகளும், மம-என்னுடைய, ஆஜ்ஞைவ-கட்டளைகளே, யஃ-எவன், தாம்-அவைகளை, உல்லங்க்ய-தாண்டி, வர்த்ததே-இருக்கிறானோ, (அவன்) ஆஜ்ஞாச்சேதீ-என் கட்டளையை மீறி நடந்தவன். (ஆதலால்) மத்பக்தோऽபி-அவன் என்னிடத்தில் பக்தி செய்தவனாயினும், ந வைஷ்ணவஃ-வைஷ்ணவனல்லன்.

## 16 ஸூத்திரம்.

116. த்வம் மாதா ஸர்வலோகாநாம் தேவதேவோ ஹரிஃபிதா ।
த்வயைதத் விஷ்ணுநாசாம்ப ஜகத் வ்யாப்தம் சராசரம் ॥

(ஏ லக்ஷ்மியே) த்வம்-தேவரீர், ஸர்வலோகாநாம் மாதா-ஸர்வஜகத்துக்கும் தாயாக இருக்கிறீர். தேவதேவஃ ஹரிஃ-எல்லா தேவதைகளுக்கும் மேலான தேவதையான பகவான், பிதா-தகப்பனாக இருக்கிறார். ஹே அம்ப-ஏ தாயே! ஏதத்-இந்த, சராசரம் ஜகத்-சேதநா சேதநரூபமான உலகமானது, த்வயா-உம்மாலும், விஷ்ணுநா ச-விஷ்ணுவினாலும், வ்யாப்தம்-வ்யாபரிக்கப்பட்டிருக்கிறது.

117. அகில ஜகந் மாதரம்.

அகில ஜகந் மாதரம்-எல்லா வுலகத்துக்கும் தாயாகிய (பெரியபிராட்டியை சரணமடைகிறேன்.)

118. பிதாऽஸி லோகஸ்ய சராசரஸ்ய த்வமஸ்ய பூஜ்யஶ்ச கு-

---

115. விஷ்ணுதர்மம். 116. ஸ்ரீவிபு. 7-9. 117. கத்யம். 118. ஸ்ரீகீதை-11-43.

ருர்மரீயாந் । ந த்வத்ஸமோऽஸ்த்யப்ய (ஹ்ய) யிக: குதோ
ऽந்யோ லோகத்ரயேऽப்யப்ரதிம ப்ரபாவ ॥

த்வம்-நீர், அஸ்ய-இந்த, சராசரஸ்ய லோகஸ்ய-சேதநா சேதந ரூபமான உலகத்திற்கு, பிதா அஸி-தகப்பனாராக இருக்கிறீர். பூஜ்ய: ச பூஜ்யரா;யும், கரீயாந் குரு:-மேலான ஆசார்யராயுமிருக்கிறீர். ஹே அப்ரதிமப்ரபாவ-ஈடல்லாத மஹிமையை யுடையவனே! லோகத்ரயேऽபி-மூன்றுலகிலும், த்வத் ஸம: நாஸ்தி-தேவரீருக்கு ஸமமானவன் இல்லை. அந்ய: அப்யதிக:-வேறு மேலானவன், குத:-எது, (கிடையாதென்றபடி.)

## 17 ஸூத்திரம்.

119. அமர்யாத: க்ஷுத்ர: (த்ர:) சலமதிரஸூயாப்ரஸவ
பூ: க்ருதக்நோ (ஞோ) துர்மாநீ ஸ்மரபரவஶோ வஞ்
சநபர: । ந்ருஶம்ஸ: பாபிஷ்ட: கதமஹமிதோ து:க
ஜலதேரபாராதுத்தீர்ண ஸ்தவ பரிசரேயம் சரணயோ:॥

அமர்யாத:-வேதத்தில் சொல்லப்பட்ட மர்யாதையைத் தவிர்ந்தவனும், க்ஷுத்ர:-நீச விஷயங்களில் அதி சபலனும், சலமதி:-நிலையில்லாத புத்தியை யுடையவனும், அஸூயா ப்ரஸவபூ:-அஸூயைக்கு உத்பத்திஸ்தானமாயும் க்ருதக்ந:-உபகாரிகளிடத்தில் அபகாரத்தைச் செய்பவனும், துர்மாநீ-ஈச்வரோऽஹம் என்றிருப்பவனும், ஸ்மரபரவச:-காமனுக்குப் பரதந்த்ரனும், வஞ்சநபர:-சூதனுப் வஞ்சிப்பவனும், ந்ருசம்ஸ:-விச்வஸிப்பாரிடத்தில் க்ரூரனும், பாபிஷ்ட:-பாபத்தில் நிலை நின்றவனுமான, அஹம்-அடியேன், அபாராத்-கரைகாண வொண்ணாததான, இத: துக்க ஜலதே:-இந்த துக்க ஸமுத்ரத்தினின்றும், கதம்-எப்படி, உத்தீர்ண:-கரையேறினவனுப், தவ-தேவரீருடைய, சரணயோ:-திருவடிகளில், பரிசரேயம்-கைங்கரியம் பண்ணப்போகிறேன்.

---

119. ஸ்தோத்ரரத்நம்-62.

**120.** ஜ்ஞாத்வா (ஜ்ஞா) வ நோ வ விஹிதாகரணைர் நிஷித்த ஸம்ஸேவனைஸ்த்வதுபசாரஶதைரஸஹ்யை: । பக்தாபசாரஶதைர்பவதாऽப்யனந்தைர் ஹஸ்தீஶ வாக்தனுமனோ ஜநிதைர்ஹதோऽஸ்மி ॥

ஹே ஹஸ்தீச-ஏ கரிகிரிபதியே! ஜ்ஞாத்வாச-அறிந்தும், நோச-அறியாமலும், வாக்தனுமனோஜநிதை:-வாக்கு, மனது, காயம் இவைகளால் செய்யப்பட்டனவும், பவதா அபி-தேவரீராலும், அனந்தை:-எண்ண முடியாதனவும், விஹிதாகரணை:-க்ருத்யாகரணங்களாலும் நிஷித்தஸம்ஸேவனை:-அக்ருத்ய கரணங்களாலும், த்வதுபசாரசதை:-தேவரீரிடத்தில் செய்யப்பட்ட அநேக அபசாரங்களாலும், அஸஹ்யை:-பொறுக்க முடியாததான, பக்தாபசாரசதைரபி-அநேக பாகவதாபசாரங்களாலும், ஹத: அஸ்மி-அடிபட்டவனாயிருக்கிறேன். (என் ஸ்வரூபமானது நஷ்டமாயிற்றென்றபடி.)

**121.** அதிக்ராமந்நாஜ்ஞாம் தவ விதிநிஷேதேஷு பவதே-ऽப்யபித்ரு (ஹ்ய) ஹ்யந் வாக்தீக்ருதிபிரபி பக்தாய ஸததம் । அஜாநந் ஜாநந் வா பவதஸஹநீயாமஸி ரதஸ்ஸஹிஷ்ணுத்வாத் ரங்கப்ரவண தவ மாமேவமர்ஹ: ॥

ஹே ரங்கப்ரவண-ஏ ஸ்ரீரங்கத்தில் நித்யவாஸஞ் செய்யுமவனே! தவ-தேவரீருடைய, விதி நிஷேதேஷு-ப்ரவிருத்தி நிவ்ருத்திகளில், ஆஜ்ஞாம்-ஆஜ்ஞையை, அதிக்ராமந்-தாண்டிக்கொண்டு, பவதேऽபி-தேவரீர் பொருட்டும், பக்தாய அபி-பாகவதர்கள் பொருட்டும், வாக் தீ க்ருதிபி: அபி-வாசிக மானஸகாயிகரூபங்களான கர்மங்களாலே, ஸததம்-எப்போதும், அஜாநந்-தெரியாமலும், ஜாநந்வா-தெரிந்தும், அபித்ருஹ்யந்-நன்றாக த்ரோஹஞ்செய்துகொண்டு, பவதஸஹநீயாமஸி-தேவரீரால் பொறுக்கமுடியாத அபராதத்திலும், ரத:-ஆஸக்தனான நான், ஸஹிஷ்ணுத்வாத்-பொறுக்கிற ஸ்வபாவத்தினால், தவ-தேவரீருக்கு, அர்ஹ:-ரக்ஷணீயன

---

120. வரதராஜஸ்தவம்-79. 121. ஸ்ரீரங்க-உத்-91.

ன்றிக்கே, மாபூவம்_ஆகக்கடவேனல்லேன். (ஹரிக்கத்தகுந்தவனுகிறேன்.)

## 18 ஸூத்திரம்.

**122.** ராஜ ஸம்ஶ்ரய_58_வது இலக்கம் பார்க்க.

**123.** பாபநாம்_60_வது இலக்கம் பார்க்க.

**124.** ஹேயம் ஶரணம்_57_வது இலக்கம் பார்க்க.

## 19 ஸூத்திரம்.

**125.** ஆபரணஸ்யாபரணம் ப்ரஸாதநவிதேஃ ப்ரஸாதநவிஶேஷஃ ।
உபமாநஸ்யாபி ஸகே ப்ரத்யுபமாநம் வபுஸ்தஸ்யாஃ ॥

ஹே ஸகே_தோழனே! தஸ்யாஃ_அந்த ஊர்வசியினுடைய, வபுஃ_சரீரமானது, ஆபரணஸ்ய_பூஷணத்திற்கும், ஆபரணம்_பூஷணமாயிருக்கும், ப்ரஸாதந விதேஃ_வஸ்த்ராதி அலங்காரத்திற்கும், ப்ரஸாதந விசேஷஃ_அதிசயமான அலங்கார விசேஷமாயிருக்கும். உபமானஸ்ய_உபமானத்திற்கும், ப்ரத்யுபமானம்_நேரான உபமானமாயிருக்கும். (இவளுடைய முகாதிகளைக்கண்டு சந்த்ராதிகளையறியாமலாயிருக்குமென்றபடி.)

**126.** அர்ஜுநஃ கேஶவஸ்யாத்மா க்ருஷ்ணஶ்சாத்மா கிரீடிநஃ ॥

அர்ஜுநஃ_அர்ஜுநன், கேசவஸ்ய_கிருஷ்ணனுக்கு, ஆத்மா_ப்ராண பூதன், கிரீடிநஃ_அர்ஜுநனுக்கு, க்ருஷ்ணஃ ச_கிருஷ்ணன், ஆத்மா_ப்ராண பூதன்.

**127.** அஸ்தாந ஸ்நேஹ காருண்ய தர்மாதர்மதியாகுலம் ।
பார்த்தம் (த்ரு_௧௦) ப்ரபந்நமுத்திஶ்ய (ஜிஶ்) ஶாஸ்த்ராவதரணம் க்ருதம் ॥

அஸ்தாந_இடமில்லாதவிடத்தில், ஸ்நேஹ_ப்ரீதியாலும், காருண்ய_தயவாலும், தர்மாதர்மதியா_தர்மத்தில் அதர்ம புத்தியாலே, ஆகுலம்_கலங்கின, ப்ரபந்நம்_சரணாகதி செய்த, பார்த்தம் உத்

---

125. விக்ரமோர்வசீயம். 127. ஸ்ரீகீதா_ஸங்_5.

திச்ய-அர்ஜுனனை யுத்தேசித்து, சாஸ்த்ராவதரணம்-ஸ்ரீகீதாசாஸ்த்ராவதாரமானது, க்ருதம்-செய்யப்பட்டது.

**128.** தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே ஸமவேதா யுயுத்ஸவ: ।
மாமகா: பாண்டவாச்சைவ கிமகுர்வத ஸஞ்ஜய ॥

(த்ருதராஷ்ட்ரன் சொல்லுகிறான்) ஹே ஸஞ்ஜய-ஓ ஸஞ்ஜயனே! தர்மக்ஷேத்ரே-புண்ய பூமியான, குருக்ஷேத்ரே-குருக்ஷேத்ரத்தில், யுயுத்ஸவ:-யுத்தம்புரிய ஆவல்கொண்ட, மாமகா:-என்னுடையவர்களான துர்யோதனாதிகளும், பாண்டவா: ச்சைவ-பாண்டு புத்திரர்களான தர்ம புத்திராதிகளும், ஸமவேதா:-ஒன்று சேர்ந்தவர்களாய், கிம் அகுர்வத-என்ன செய்தார்கள்.

**129.** ந காங்க்ஷே (ஜெ க்ஷ) விஜயம் க்ருஷ்ண நச ராஜ்யம் ஸுகானி ச । கிம் நோ ராஜ்யேந கோவிந்த கிம் போகைர் ஜீவிதேந வா ॥ ஏஷாமர்த்தே (யெ-) காங்க்ஷிதம் நோ ராஜ்யம் போகா: ஸுகானி ச । த இமேவஸ்திதா யுத்தே (ஷெ) ப்ராணாந் த்யக்த்வா தனானி ச ॥

ஹே கிருஷ்ண-ஏ கிருஷ்ணனே! விஜயம்-ஜயத்தை, ந காங்க்ஷே-இச்சிக்கிறேனில்லை. ராஜ்யம்-ராஜ்யத்தையும், ஸுகானிச-ஸுகங்களையும், ந ச காங்க்ஷே-இச்சிக்கிறேனில்லை. ஹே கோவிந்த-ஏ கோவிந்தனே! ந:-எங்களுக்கு ராஜ்யேந கிம்-ராஜ்ஜியத்தால் என்ன ப்ரயோஜநம், போகை: ஜீவிதேந வா கிம்-ஸுகங்களாலும் பிழைப்பதாலும் என்ன பிரயோஜநம். ந:-எங்களுக்கு, (எங்களாலே) ஏஷாம் அர்த்தே-எவர்களின்பொருட்டு, ராஜ்யம்-இராஜ்ஜியமும், போகா:-போகங்களும், ஸுகானிச-ஸுகங்களும், காங்க்ஷிதம்-ஆசைப்பட்டனவோ, தே இமே-அந்த இவர்கள், ப்ராணாந்-ப்ராணங்களையும், தனானி ச-தனங்களையும், த்யக்த்வா-விட்டு, யுத்தே-யுத்த களத்தில், அவஸ்திதா:-இருக்கிறார்கள்.

128. ஸ்ரீகீதை-1-1. 129. 1-32-33.

130. தாந் ஸமீக்ஷ்ய ஸ கௌந்தேய: ஸர்வாந் பந்தூ நவஸ்திதாந் । க்ருபயா பரயாऽऽவிஷ்டோ விஷீதந்நித மப்ர (ப்ரு) வீத் ॥

ஸ: கௌந்தேய:—அந்த அர்ஜுநன், அவஸ்திதாந்—யுத்தம் பண்ணவேணுமென்று கூடியிருக்கிற, தாந் ஸர்வாந் பந்தூந்—அந்த தன் ஸர்வ பந்துக்களையும், ஸமீக்ஷ்ய—பார்த்து, பரயா க்ருபயா—மிக்க தயையோடு, ஆவிஷ்ட:—கூடிக்கொண்டு, விஷீதந்—வ்யஸநப் பட்டவனுப்க்கொண்டு, இதம் அப்ரவீத்—ஒரு வார்த்தைச் சொன்ஞன்.

131. கதம் நஜ்ஞேய மஸ்மாபி: பாபா தஸ்மாந் நிவர்திதும் । குலக்ஷய க்ருதம் தோஷம் ப்ரபஶ்யத்பிர் ஜநார்தந ॥

ஹே ஜநார்தந—வாரீர் க்ருஷ்ணனே! குலக்ஷயக்ருதம்—குல நாசத்தாலுண்டான, தோஷம்—தோஷத்தை, ப்ரபஶ்யத்பி:—நன்ருய் பார்க்கிற, அஸ்மாபி:—நம்மால், அஸ்மாத்பாபாத்—இந்த பாபத்தினின்றும், நிவர்திதும்—திரும்புகைக்கு, கதம்—எப்படி, நஜ்ஞேயம்—அறிந்துகொள்ளத்தகுந்ததன்று.

132. அஹோ பத மஹத் பாபம் கர்தும் வ்யவஸிதா வயம் ।
யத் ராஜ்யஸுகலோபேந ஹந்தும் ஸ்வஜநமுத்ய(த்)தா: ॥

யத்—யாதொரு காரணத்தாலே, வயம்—நாம், ராஜ்ய ஸுகலோபேந—இராஜ்ய ஸுகத்திலாசையாலே, ஸ்வஜநம்—பந்துக்களை, ஹந்தும்—ஸம்ஹரிக்க, உத்யதா:—உத்யோகித்தோமோ, (ஆகையால்) மஹத் பாபம்கர்தும்—பெரிய பாபத்தைச்செய்ய, வ்யவஸிதா:—நிச்சயித்தோம். அஹோ பத—ஐயோ! இதொரு ஆச்சரியமிருந்தபடியென்.

## 20 ஸூத்திரம்.

133. ஶங்கசக்ரகதாபாணே த்வாரகாநிலயாச்யுத ।
கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷ மாம் ஶரணாகதம் ॥

---

130. ஶ்ரீகீதை–1–27. 131, ஶ்ரீகீதை–1–39. 132. ஶ்ரீகீதை–1–45. 133. பாரதம்–ஸபா–66.

சங்க சக்ர கதாபாணே-ஆஸ்ரிதரை ரக்ஷிக்கும் பொருட்டாக திருவாழி, திருச்சங்கு, கதை முதலிய ஆயுதங்களைக் கையில் தரித்துக்கொண்டிருக்கிறவனே! த்வாரகா நிலய-த்வாரகையை வாஸஸ்தானமாக வுடையவனே! அச்யுத-ஆச்ரிதரை யொருக்காலும் கை நழுவ விடாதவனே! கோவிந்த-கோவிந்தனே! புண்டரீகாக்ஷ-செந்தாமரைபோன்ற திருக்கண்களையுடையவனே! சரணுகதாம்-சரணமாகவடைந்த, மாம்-என்னை, ரக்ஷ-இரக்ஷிப்பாயாக.

## 22 ஸூத்திரம்.

**134.** ஏவ முக்த்வா ஹ்ருஷீகேஶம் குடாகேஶ: பரந்தப: ।
ந யோத்ஸ்ய இதி கோவிந்தமுக்த்வா தூஷ்ணீம் பபூவ ஹ ॥

பரந்தப:-சத்ருக்களை தபிக்கச்செய்கிறவனுன, குடாகேச:-அர்ஜுநன், ஹ்ருஷீகேசம்-க்ருஷ்ணனைக் குறித்து, ஏவம் உக்த்வா-இவ்விதமாகச் சொல்லி, ந யோத்ஸ்யே-நான் யுத்தஞ்செய்ய மாட்டேன், இதி-என்று, கோவிந்தம்-கிருஷ்ணனைக் குறித்து, உக்த்வா-சொல்லி, தூஷ்ணீம் பபூவஹ-மௌனமாயிருந்தான்.

**135.** நஷ்டோ மோஹ: ஸ்ம்ருதிர்லப்தா (ப்யா) த்வத்ப்ரஸாதாந் மயாச்யுத । ஸ்திதோऽஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசநம் தவ ॥

ஹே அச்யுத-ஓ நாசமற்றவனே! த்வத் ப்ரஸாதாத்-உம்முடைய அநுக்கிரஹத்தாலே, மயா-என்னால், ஸ்ம்ருதி:-ஆத்ம ஸ்வரூபாநுஸந்தாநமானது, லப்தா-அடையப்பட்டது, மோஹ:-அஜ்ஞானமானது, நஷ்ட:-போய்விட்டது. கத ஸந்தேஹ:-ஸந்தேஹ நிவிருத்தி யடைந்தவனுய், ஸ்தித: அஸ்மி-இருக்கிறேன். தவ-உன்னுடைய, வசநம்-வார்த்தையை, கரிஷ்யே-நிறைவேற்றுவேன்.

**136.** ஸர்வ குஹ்ய தமம் பூய: ஶ்ருணு மே பரமம் வச: ।
இஷ்டோऽஸி மே த்ருட(ஊ்ட)இதி ததோ வக்ஷ்யாமி தே ஹிதம் ॥

---

134. ஸ்ரீகீதை-2-9. 135. ஸ்ரீகீதை-18-73. 136. ஸ்ரீகீதை-18-64.

ஸர்வ குஹ்யதமம்-கீழ் உபதேசித்த அர்த்தங்களெல்லாவற்றிலும் பரம ரஹஸ்யமான, பரமம் வச:-ஸர்வோத் க்ருஷ்டமான, வார்த்தையை, பூய:-மறுபடியும், மே ச்ருணு-என் பக்கல் நின்று கேள். மே-எனக்கு, த்ருட:-த்ருடனாக, இஷ்ட:-இஷ்டனாக, அஸி-இருக்கிறாய், இதி த்த:-என்றுகொண்டு, தே-உனக்கு, ஹிதம் வக்ஷ்யாமி-ஹிதஞ் சொல்லுகிறேன்.

**137.** மந்மநா ஭வ மத்஭க்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு । மாமே
வைஷ்யஸி ஸத்யம் தே ப்ரதிஜாநே ப்ரியோऽஸி மே ॥

மந்மநா:-என்னிடத்தில் வைத்த மனதையுடையவனும், மத்பக்த:-என்னிடத்தில் பக்தியுள்ளவனும், மத்யாஜீ-என்னை யாராதிக்கிறவனும், பவ-ஆகக்கடவாய். மாம் நமஸ்குரு-என்னை நமஸ்காரஞ்செய். மாமேவ-என்னையே, ஏஷ்யஸி-அடைவாய், ஸத்யம்-இது மெய். தே-உனக்கு, ப்ரதிஜானே-ப்ரதிஜ்ஞை பண்ணு நின்றேன். மே ப்ரிய: அஸி-நீ எனக்கு இஷ்டனன்றோ.

**138.** அந்தவந்த:-87-வது இலக்கம் பார்க்க.

**139.** கரிஷ்யே-135-வது இலக்கம்பார்க்க.

**140.** அஸ்மாந் வேத்த (த்யு) பராந்வேத்த(த்யு)வேத்தார்த்தம் (த்யு
ய-ம்) வேத்த (வெத்யு) ஭ாஷிதும் । யத்யதஸ்மத்ஹிதம்
க்ருஷ்ண தத்தத் வாச்ய: ஸுயோதந: ॥

ஹே கிருஷ்ண-ஓ கிருஷ்ணனே! அஸ்மாந் வேத்த-எங்களையறிவீர், பராந் வேத்த-சத்துருக்களையறிவீர், அர்த்தம் வேத்த-அங்குப்போனால் சொல்லுங்காரியமறிவீர், ஭ாஷிதும் வேத்த-வார்த்தை சொல்லவும் வல்லீர். (ஆகையாலே) யத் யத் அஸ்மத் ஹிதம்-எது எது எங்களுக்கு நன்மையானதோ, தத் தத்-அது அது, துர்யோதந: வாச்ய:-துர்யோதனன் சொல்லப்படத் தகுந்தவன். (அதாவது துர்யோதனுக்குச் சொல்லவேணுமென்று கருத்து.)

---

137. ஸ்ரீகீதை-18-68. 140. பார-உத்-71-92.

## 23 ஸூத்திரம்.

141. நஜாதிபேதம் ந குலம் நலிங்கம் ந குணக்ரியா: । நதேச காலௌ நாவஸ்தாம் யோகோஹ்யமபேக்ஷதே ॥ ப்ரம்ஹ (ப்ரம்ஹ) க்ஷத்ரவிச: ஶூத்ரா: (ஶூத்ரா:) ஸ்திரியஶ் வாந்தரஜாதய: । ஸர்வ ஏவ ப்ரபத்யே (தே) ரந் ஸர்வ தாதாரமச்யுதம் ॥

அயம் யோக: ஹி-இந்த யோகமானது, ஜாதிபேதம் ந அபேக்ஷதே-ப்ராம்ஹணாதி ஜாதிபேதத்தை அபேக்ஷியாது, ந குலம்-நல்ல குலத்தையும் அபேக்ஷியாது, ந லிங்கம்-ஆச்ரமத்தையும் அபேக்ஷியாது, ந குணக்ரியா:-சமதமாதி ஆத்ம குணங்களையும் ஸ்நானாதி ஆசாரங்களையும் அபேக்ஷியாது, ந தேசகாலௌ-தேச காலங்களையும் அபேக்ஷியாது, ந அவஸ்தாம்-பால்யம், யௌவநம், புத்ரனோடு கூடியிருக்கும் தன்மை, இவை முதலிய அவஸ்தைகளையும் அபேக்ஷியாது, ப்ரம்ஹக்ஷத்ரவிச:-ப்ராம்ஹணக்ஷத்ரவைச்யர்கள், ஶூத்ரா:-ஶூத்திரர்கள், ஸ்திரிய: ச-பெண்கள், அந்தர ஜாதய:-நீச ஜன்மாக்களான அந்தரஜாதிகளில் பிறந்தவர்கள், ஸர்வே ஏவ-எல்லாரும், ஸர்வதாதாரம்-ஸர்வத்தையும் ஸ்ருஷ்டிப்பவரான, அச்யுதம்-எம்பெருமானை, ப்ரபத்யேரந்-ப்ரபத்திபண்ணுகின்றார்கள்.

142. ப்ரபத்தே: க்வசிதப்யேவம் பராபேக்ஷா ந வித்யதே ।
ஸா ஹி ஸர்வத்ர ஸர்வேஷாம் ஸர்வகாமபலப்ரதா ॥

ப்ரபத்தே:-ப்ரபத்திக்கு, ஏவம்-கர்மாதிகளைப்போலே, க்வசிதபி-ஒருக்காலும், பராபேக்ஷா-ஸஹாயாந்தராபேக்ஷை, நவித்யதே-இல்லை, ஸாஹி-அந்த ப்ரபத்தியோவென்றால், ஸர்வத்ர-எல்லாதேசத்திலும், ஸர்வேஷாம்-எல்லாருக்கும், ஸர்வகாமபலப்ரதா-ஆசைப்பட்ட பலங்களையெல்லாம் கொடுக்கும்.

## 25 ஸூத்திரம்.

143. வஸந்தே வஸந்தே ஜ்யோதிஷா யஜேத ॥

---

141. பாரத்வாஜஸம்ஹிதை. 142. ஸநத்குமாரஸம்ஹிதை.

-முதல் ப்ரதாணம். 51

வஸந்தே வஸந்தே-ஒவ்வொரு வஸந்தகாலத்திலும், ஜ்யோதி ஷா-ஜ்யோதிஷ்டோமம் என்கிற யாகத்திஞல், யஜேத-யாகம் பண் ணவேண்டும்.

26 ஸூத்திரம்.

144. பத்தவைராச்ச (வு) பாபாச்ச (வு) ராக்ஷஸேந்த்ராத் விபீஷண: । அதேசகாலே ஸம்ப்ராப்த: ஸர்வதா ஸங்க்ய தாமயம் ॥

பத்த வைராத்-ப்ரபல விரோதத்தையுடையவனையும், பாபாத்ச-மாதாவினிடத்தில் அபராதஞ்செய்த மஹா பாபியாயுமிருக்கிற, ராக்ஷஸேந்த்ராத்-ராவணனிடத்திலிருந்து, அயம் விபீஷண:-இந்த விபீஷணன், அதேசகாலே-அதேசத்தில், அகாலத்தில், ஸம்ப்ராப்த:-வந்தான். ஸர்வதா-முற்றிலும், சங்க்யதாம்-சங்கிக்கப்படுவனுகிறன்.

145. அதேசகாலே ஸம்ப்ராப்த இத்யம் ஸ விபீஷண: । விவக்ஷா சாத்ர மேஸ்தீயம் தாம் நிபோதயயாமதி ॥ ஸ ஏஷ தேச: காலச்ச ஹவதீஹயயாதயா । புருஷாத் புருஷம் ப்ராப்ய தயா தோஷ குணவபி ॥ தௌராத்ம்யம் ராவணே த்ருஷ்ட்வா விக்ரமம் ச ததா த்வயி । யுக்த மாமமநம் தஸ்ய ஸத்ரு (ஓ) ஸம் தஸ்ய பாத்தித: ॥

ஸ:-அந்த, (ராவணனல் அவமாநிதனை) அயம்-இந்த, (சரணமென்று வந்த) விபீஷண:-விபீஷணனென்பவன், அதேசகாலே ஸம்ப்ராப்த:-அதேசத்திலே, அகாலத்திலே வந்தான், இதி அத்ர-என்கிற விஷயத்தில், மே-எனக்கு, இயம் விவக்ஷாச-இந்த சொல்ல வேண்டுமென்கிற இச்சையானது, அஸ்தி-இருக்கிறது. ஸ:-அந்த விபீஷணன், இஹ-இவ்விடத்தில் (எப்பொழுது எவ்விடத்தில் வந்தானே, அவ்வரவுக்கு) ஸ: ஏஷ: தேச: கால:ச-இதுவே தேசமும் காலமும், (எப்படி ஆகுமோ, அப்படிப்பட்டதை) யதாமதி-

---

144. ரா-யு-17-57. 145. ரா-யு-17-46.

நான் அறிந்தவளவும் (விஜ்ஞாபித்துக்கொள்ளப்படுகிற அந்த விவக்ஷையை) நிபோத-அறிந்துகொள். புருஷாத்-புருஷாதமனான ராவணனைக்காட்டிலும், புருஷம்-புருஷோத்தமரான தேவரீரை, ப்ராப்ய-ப்ராப்யராக புத்திபண்ணி, ததா-அப்படியே, தோஷகுணௌ அபி ப்ராப்ய-ராவணனிடத்திலிருந்தால் வரும் தோஷத்தையும், தேவரீரை யடைந்தால் வரும் குணத்தையும் எண்ணி, ராவணே-ராவணனிடத்தில், தௌராத்ம்யம்-கெட்டத் தன்மையையும், ததா-அப்படி, த்வயி-தேவரீரிடத்தில், விக்ரமம் ச-ஆண்பிள்ளைத் தனத்தையும், த்ருஷ்ட்வா-பார்த்து, (வந்தவனுகையாலே) தஸ்ய-அந்த விபீஷணனுக்கு ஆகமநம், யுக்தம்-இவ்வரவு யுக்தம், தஸ்ய புத்திதஃ-அவனுடைய புத்திக்கும், ஸத்ருசம்-இது தகுந்தது.

## 27 ஸூத்திரம்.

**146.** த்வ(அ)யேந மந்த்ரரத்நேந மத்ப்ரியேண ஸஜேத் ஸதா ।
அசிராத் மத்ப்ரஸாதேந மல்லோகம் ச ஸ கச்சதி ॥

[எவன்] மத்ப்ரியேண-எனக்கு மிகவும் ப்ரியமான, மந்த்ரரத்நேந த்வயேந-மந்த்ரஶ்ரேஷ்டமான த்வயத்தாலே, ஸதா-எப்போதும், பஜேத்-பஜிக்கிறானோ, ஸஃ-அவன், அசிராத்-சீக்கிரம், மத்ப்ரஸாதேந-என் அநுக்ரஹத்தால், மல்லோகம் ச-என் லோகமான வைகுண்டத்தையும், கச்சதி-அடைகிறான்.

**147.** சஞ்சலம் ஹி மநஃ க்ருஷ்ண ப்ரமாதி பலவத் த்ரு(ட)஢ம்। தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுது஦ஷ்கரம்॥

ஹே கிருஷ்ண-ஓ கிருஷ்ணனே! மனஃ-மனதானது, சஞ்சலம்-சஞ்சலமாயும், ப்ரமாதீ-கலக்கத்தையுண்டு பண்ணுகிறதாயும், பலவத்-அடங்காததாயும், த்ருடம் ஹி-த்ருடமாயுமிருக்கிறது. தஸ்ய-அம்மனதினுடைய, நிக்ரஹம்-வசப்படுத்துவதானது, வாயோரிவ-காற்றினுடைய போல, ஸுதுஷ்கரம்-மிகவும் செய்ய முடியா

147. ஸ்ரீகீதை-6-34.

ததாக, மந்யே-எண்ணுகிறேன்.

## 29 ஸூத்திரம்.

148. ரஜஸ்வலைகவஸ்த்ராஹம் ந து மாம் நேதுமர்ஹஸி।
குரூணாம் ச புர: ஸ்தாதும் ஸபாயாம் நாஹமுத்ஸஹே॥

அஹம்-நான், ரஜஸ்வலா-ரஜஸ்வலையாயும், ஏகவஸ்த்ரா-ஒரு துகிலையுடையவளாயுமிருக்கிறேன். (ஆகையால்) மாம்நேதும் நது அர்ஹஸி-என்னை யிப்போது அழைத்துக்கொண்டு போவது உசிதமல்ல, குரூணாம் ச புர:-குருக்கள் முன்னிலையிலும், ஸபாயாம்-ஸபையிலும், ஸ்தாதும்-இருப்பதற்கு, அஹம் ந உத்ஸஹே-நான் ஸஹிக்கமாட்டேன்.

149. ஶ்வபசோऽபி மஹீபால விஷ்ணுபக்தோ த்விஜாதிக:।
விஷ்ணுபக்திவிஹீநஸ்து யதிஶ்ச ஶ்வபசாதம:॥

ஹே மஹீபால-ஏ மஹாராஜாவே! விஷ்ணுபக்த:-விஷ்ணு பக்தியுடையவனான, ஶ்வபச: அபி-நாய்மாம்ஸம் புஜிக்கிறவனும், த்விஜாதிக:-ப்ராம்ஹணனைக் காட்டிலும் ச்ரேஷ்டன். விஷ்ணுபக்திவிஹீந: யதி: து-விஷ்ணுபக்தியில்லாத ஸந்யாஸியும், ச்வபசாதம:-ச்வபசனைக்காட்டிலும் அதமன்.

150. விப்ராத் த்வி (த்ரி) ஷட்குணயுதாத் அரவிந்தநாப
பாதாரவிந்தவிமுகாத் ஶ்வபசம் வரிஷ்டம் ॥

த்விஷட்குணயுதாத்-பன்னிரண்டு குணங்களோடு கூடியவனும், அரவிந்தநாபபாதாரவிந்தவிமுகாத்-தாமரைபோன்ற உந்தியையுடைய பகவானுடைய திருவடித்தாமரைகளில் விமுகனுயுமிருக்கிற, விப்ராத்-ப்ராம்ஹணனைக்காட்டிலும், ச்வபசம் வரிஷ்டம்-ச்வபசன் ச்ரேஷ்டன். (பன்னிரண்டு குணங்களாவன:—சமம், தமம், தபஸ்ஸு, சௌசம், பொறுமை, ருஜுத்தன்மை, விரக்தி, ஜ்ஞானம், விஜ்ஞானம், ஸந்தோஷம், ஸத்யம், ஆஸ்திகத்தன்மை.)

---

148. பார-ஸபா. 149. 150. ஸ்ரீபாகவதம்.

**151.** அநாசாராந் து³ராசாராந ஜ்ஞாத்ரூந் ஹீநஜந்மந꞉ । மத்
ப⁴க்தாந் ஶ்ரோத்ரியோ நிந்த³ந்ஸத்³ய꞉சண்டா³லதாம்வ்ரஜேத் ॥

அநாசாராந்-ஆசாரத்தை விட்டவனும், துராசாராந்-கெட்ட ஆசாரத்தையனுஷ்டிப்பவனும், அஜ்ஞாத்ரூந்-ஜ்ஞானமில்லாதவனும், ஹீநஜன்மந꞉-தாழ்ந்தஜாதியில் பிறந்தவர்களாயுமிருக்கிற, மத்பக்தாந்-என்னுடைய பக்தர்களை, நிந்தன்-தூஷிக்கிற, ச்ரோத்ரிய꞉-அபிஜனவித்யாவ்ருத்தங்களாலே பெருமையுடைய ப்ராம்ஹணோத்தமன், ஸத்ய꞉-உடனே, சண்டாலதாம்-சண்டாலத்தன்மையை, வ்ரஜேத்-அடைவான்.

## 31 ஸூத்திரம்

**152.** ஏவமுக்தஸ்து த⁴ர்மஜ்ஞ꞉ ப்ரத்யுவாச விபீ⁴ஷண꞉ ।
ஸமுத்³ரம் ராக⁴வோ ராஜா ஶரணம் க³ந்துமர்ஹதி ॥

ஏவம் உக்த꞉-இவ்விதம் சொல்லப்பட்டவரும், தர்மஜ்ஞ꞉-தர்மத்தையறிந்தவருமான விபீஷண꞉ து-விபீஷணாழ்வான், ப்ரத்யுவாச-பதில் சொன்னான். ராஜா ராகவ꞉-அரசனான ராகவனானவர் ஸமுத்ரம்-ஸமுத்ரத்தை, சரணம் கந்துமர்ஹதி-சரணமடையயோக்யமாகிறார்.

## 32 ஸூத்திரம்.

**153.** ஏவமுக்தா꞉ ஸ்த்ரய꞉ பார்த்தா²꞉ (த்⁴ரு—டா꞉) யமௌச ப⁴ரத
ர்ஷப⁴ । த்³ரௌபத்³யா ஸஹிதா꞉ ஸர்வே நமஶ்சக்ருர்ஜநார்த³நம் ॥

ஹே பரதர்ஷப-ஓ ஜனமேஜயனே! ஏவம்-இவ்விதமாய் உக்தா꞉-சொல்லப்பட்டவர்களான, த்ரய꞉ பார்த்தா꞉-மூன்று குந்திபுத்திரர்களும், யமௌச-நகுலஸஹதேவர்களும், ஸர்வே-எல்லாரும், த்ரௌபத்யாஸஹிதா꞉-தரௌபதியோடு கூடியவர்களாய் ஜநார்த்தநம்-கண்ணனை நமச்சக்ரு꞉-நமஸ்காரம் செய்தார்கள்.

**154.** ஶங்கசக்ர—133-வது இலக்கம் பார்க்க.

**155.** ஸபித்ராச—75-வது இலக்கம் பார்க்க.

---

151. ப்ரம்ஹாண்டபுராணம். 152. ரா-யு-19-31. 153. பாரதம்.

**156.** ஸோऽஹம் தே தேவதேவேஶ நார்ச்சநாதௌ ஸ்துதௌ ந ச
ஸாமர்த்ய(ஶ்ரு)வாந் க்ருபாமாத்ரமநோவ்ருத்திः ப்ரஸீத மே ॥

ஹே தேவதேவேச-ப்ரம்ஹாதி தேவர்களுக்கும் தேவர்களான நித்யஸூரிகளுக்கும் ஸ்வாமியானவனே! ஸः அஹம்-அப்படிப்பட்ட நான், தே-தேவரீருடைய அர்ச்சநாதௌ-அர்ச்சனை முதலியவற்றில், ந ஸாமர்த்யவாந்-ஸாமர்த்யமில்லாதவன், ஸ்துதௌ நச-ஸ்தோத்திரம் பண்ணுவதிலும் ஸாமர்த்தியமில்லாதவன். (ஆகையால்) மே-எனக்கு, க்ருபாமாத்ரமனோவ்ருத்திः-நிர்ஹேதுக கிருபையாலே திருவுள்ளமுகந்து, ப்ரஸீத-ப்ரஸன்னராகவேணும்.

**157.** பரமாபதமாபந்நோ மநஸாऽசிந்தயத் ஹரிம் ।
ஸ து நாகவரः ஶ்ரீமாந் நாராயணபராயணः ॥

நாராயணபராயணः-நாராயணனையே உத்க்ருஷ்டமான ப்ராப்யமாகவுடையவனும், ஸ்ரீமான்-தானிருந்தவிடத்தில் பகவான் வரும்படியான பாக்கியத்தையுடையவனுமான, ஸது நாகவரः-அந்த ஸ்ரீகஜேந்த்ராழ்வான், பரமாபதமாபந்நः-இதுக்குமேலில்லையென்னும்படியான ஆபத்தையடைந்து, மநஸா-மனதால், ஹரிம்-விரோதிகளை ஸம்ஹரிக்கும் ஸ்வபாவனான பகவானை, அசிந்தயத்-நினைத்தான்.

**158.** ஸோऽஹம் பருஷிதஸ்தேந தாஸவச்சாவமானிதः ।
த்யக்த்வா புத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச ராகவம் ஶரணம் கதः ॥

ஸः அஹம்-ராவணனுக்கு ஹிதோபதேசம் பண்ணின நான், தேந-அந்த ராவணனாலே பருஷிதः-கடினோக்திகள் சொல்லப்பட்டவனாய், தாஸவத் ச-வேலைக்காரனைப்போல், அவமானிதः-அவமானிக்கப்பட்டவனாய் புத்ராந்ச-பிள்ளைகளையும், தாராந்ச-பாரியையும், த்யக்த்வா-விட்டு, ராகவம் சரணம் கதः-பெருமாளைச் சரணமடைந்தேன்.

**159.** பாஹும் ஹஸ்ரஜஹ்ரோஹாஹமுபயாயாரிஸூதநः ।
அஞ்ஜலிம் ப்ராங்முகः க்ருத்வா ப்ரதிஶிஶ்யே மஹோததேः ॥

---

156. வி-பு-5-7-10. 157. வி-த-69-80. 158. ரா-யு-17-16.
159. ரா-யு-21-1.

புஜகபோகாபம்-ஸர்பத்தின் உடல்போலேயிருக்கிற, பாஹும்-திருக்கையை, உபதாய-தலையணையாகக் கொண்டு, அரிஸூதநஃ-சத்ருக்களை நிரஸிக்கும் பெருமாள், ப்ராங்முகஃ-கிழக்கு முகமாக, அஞ்ஜலிம் க்ருத்வா-கைகூப்பி, மஹோததேஃ-ஸமுத்திரத்திற்கு அபிமுகமாக ப்ரதிசிச்யே-சயனித்தார்.

**160.** ஸப்ராதுஃ-71 வது இலக்கம் பார்க்க.

**161.** ஸோ஽ஹம் த்வாம் ஶரணமபாரமப்ரமேயம் ஸம்ப்ராப்
தஃ பரமபதம் யதோ ந கிஞ்சித் । ஸம்ஸாரஶ்ரமபரிதாப
தப்தசேதா நிர்வாணே பரிணததாம்நி ஸாபிலாஷஃ ॥

யதஃ-யாவனொருவனைப் பற்ற, கிஞ்சித்-ஒன்றும், ந பரமபதம்-பரமப்ராப்யமில்லையோ, அபாரம்-எல்லையற்றவராயும், அப்ரமேயம்-அளவிறந்த வைபவத்தையுடையவராயுமிருக்கிற, த்வாம்-தேவரீரை, ஸம்ஸார ச்ரமபரிதாபதப்த சேதாஃ-ஸம்ஸார ப்ரயாஸத்தாலுண்டான துக்கத்தாலே கொதித்த மனதையுடையவராய், பரிணததாம்நி-பக்வமான தேஜஸ்ஸையுடைய, நிர்வாணே-பரமபதத்தில், ஸாபிலாஷஃ-ஆசையுடையவனுயிருக்கிற, ஸஃ அஹம்-அந்த நான், சரணம் ஸம்ப்ராப்தஃ-சரணமாக அடைந்தேன்.

**162.** மூடோ஽யமல்பமதிரல்பவிசேஷ்டிதோ஽யம் க்லிஷ்டம்
மனோ஽ஸ்ய விஷயைர்ந மயி ப்ரஸங்கீ । இத்தம் க்ருபாம்
குருமயி ப்ரணதே஽கிலேச த்வாம் ஸ்தோதுமம்புஜ
஭வோ஽பி ஹி தேவ நேஶஃ ॥

அயம் மூடஃ-இவன் மூடன், அல்பமதிஃ-அல்பபுத்தியுடையவன், அயம்-இவன், அல்பவிசேஷ்டிதஃ-அல்ப வ்யாபாரத்தையுடையவன், அஸ்ய மனஃ-இவன் மனது, விஷயைஃ க்லிஷ்டம்-விஷயங்களாலே கஷ்டப்பட்டிருக்கிறது. மயி ந ப்ரஸங்கீ-என்னிடத்தில் சற்றும் ப்ராவண்யமில்லை. இத்தம்-இவ்விதமாய் தேவரீர் விசாரித்துக்கொண்டு, ப்ரணதே மயி-வணங்கின என்னிடத்தில், க்ருபாம் குரு-கிருபை பண்ணியருளவேணும். அகிலேச-எல்லாவற்றிற்கும் நாயகனே! தேவ-தேவனே! த்வாம்-தேவரீரை,

ஸ்தோதும்-ஸ்துதி செய்ய, அம்புஜபவ: அபி ஹி-பிரமனும், ந ஈச:-ஸமர்த்தனல்ல.

**163.** ஹ்ரவந்தம் ப்ரபந்நா ஸா ஹ்ரவந்தமவாப ஹ ॥

பகவந்தம்-பகவானை, ப்ரபந்நா ஸா-ப்ரபத்திபண்ணின அந்த மாதவீதேவியானவள், பகவந்தம் அவாப ஹ-பகவானை யடைந்தாள்.

**164.** தம் ப்ரபிந்ந ஶிரோக்ரீ (ஶ்ரீ) வமாஸ்யேப்ய: (ஸ்ய:)ஸ்ருதஶோணிதம் । விலோக்ய ஶரணம் ஜக்மு ஸ்தத்பத்ந்யோ மது ஸூதநம் ॥

ப்ரபிந்நசிரோக்ரீவம்-பிளக்கப்பட்ட தலை கழுத்து இவைகளை யுடையவனும், ஆஸ்யேப்ய:-முகங்களில் நின்றும், ஸ்ருதசோணிதம்-கக்கப்பட்ட ரக்தத்தையுடையவனுமிருக்கிற, தம்-அந்த காளியனை, விலோக்ய-பார்த்து, தத்பத்ந்ய:-அந்தக் காளியனுடைய பத்நிகள், மதுஸூதநம்-கண்ணனை, சரணம் ஜக்மு:-சரணாகதி செய்தார்கள்.

**165.** ப்ரணாமப்ரவணா நாத தைத்யஸைந்யபராஜிதா: ।
ஶரணம் த்வாமநுப்ராப்தாஸ்ஸமஸ்தா தேவதா கணா: ॥

ஹே நாத-ஏ ஸ்வாமின்! தைத்யஸைந்யபராஜிதா:-அஸுர ஸைந்யங்களால் ஜயிக்கப்பட்டவர்களான, ஸமஸ்தா: தேவதாகணா:-எல்லா தேவக்கூட்டங்களும், ப்ரணாமப்ரவணா:-நமஸ்காரத்தில் ப்ரவணர்களாய், த்வாம் சரணம் அநுப்ராப்தா:-தேவரீரைச் சரணமடைந்தார்கள்.

**166.** ராக்ஷஸைர்வத்ய (த்ய)மாநாநாம் வாநராணாம் மஹாசமூ: । ஶரண்யம் ஶரணம் யாதா ராமம் தஶரதாத்மஜம் ॥

ராக்ஷஸை: வத்யமாநாநாம்-ராக்ஷஸர்களால் அடிபட்டவர்களான, வாநராணாம்-வாநரங்களுடைய, மஹாசமூ:-பெரிய ஸைந்யங்கள், சரண்யம்-ரக்ஷகனான, தசரதாத்மஜம் ராமம்-சக்ரவர்த்தித் திருமகனை, சரணம் யாதா:-சரணமாக அடைந்தன.

---

164. வி-பு-5-7-47. 166. ரா-யு-94-17.

## 34 ஸூத்திரம்.

**167.** அர்ச்சாவதாரவிஷயே மயாப்யுத்தேசதஸ்தயா ।
உக்தா குணா ந ஶக்யந்தே வக்தும் வர்ஷஶதைரபி ॥

அர்ச்சாவதாரவிஷயே-அர்ச்சாவதாரவிஷயத்திலிருக்கிற, குணா:-குணங்கள், மயாபி-என்னாலும், உத்தேசத:-சுருக்கமாய், உக்தா:-சொல்லப்பட்டன, (உள்ள குணங்களையெல்லாம்) வர்ஷ சதைரபி வக்தும் ந சக்யந்தே-நூறு வர்ஷங்களாலும் சொல்ல முடியாது.

## 36 ஸூத்திரம்.

**168.** பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவஶிஷ்யதே । ஸர்வம் பூர்ணம் ஸஹோம் ॥

பூர்ணஸ்ய-அநந்தாவதாரங்களுக்கும் மூலமான வ்யூஹ வாஸுதேவனிடமிருந்து, பூர்ணம்-கல்யாணகுணங்களாலே பூர்ணமான அர்ச்சாவதாரமே, அவசிஷ்யதே-பரத்வாதிகளில் சரமமாயிருக்கிறது. ஓம்-ப்ராப்யமான அர்ச்சாவதாரத்தில், ஸர்வம்-ஸர்வகுணங்களும், ஸஹ பூர்ணம்-பூர்ணமாயிருக்கிறது.

## 37 ஸூத்திரம்.

**169.** வாஸுதேவோऽஸி பூர்ண: ॥

வாஸுதேவனை தேவரீர் பூர்ணகுணங்களோடு இருக்கிறீர்.

## 38 ஸூத்திரம்.

**170.** தஷிச்ச (வு/ஹ) யா மஹாதேஜா புங்க்தே (ஹு/ஜ/த) வை ஷக்தவத்ஸல: । ஸ்நாநம் பாநம் தயா யாத்ராம் குருதே வை ஜகத்பதி: ॥ ஸ்வதந்த்ரஸ்ஸஜகந்நாயோऽப்யஸ்வதந்த்ரோ யயா தயா । ஸர்வஶக்திர்ஜகத்யாதாऽப்யஶக்தஇவ சேஷ்டதே ॥

---

167. பாத்மஸம்ஹிதை. 168. கடவல்லீ. 170. விஷ்வக்ஸேந ஸம்ஹிதை.

பக்தவத்ஸலஃ-ஆச்ரிதர்களுடைய தோஷத்தைப் பாராதவனு யிருக்கிற, மஹாதேஜாஃ-பெருமதிப்பனுன ஸர்வேச்வரன், தந்திச்சயா-ஆச்ரிதருடைய இச்சையாலே, புங்க்தே வை-புஜியா நின்றுன். ஜகத்பதிஃ-ஜகத்துக்கு ஸ்வாமியானவன், ஆச்ரிதர்களுடைய இச்சையாலே, ஸ்நாநம்-ஸ்நாநத்தையும், பாநம்-தாஹசாந்தியையும், ததா யாத்ராம்-அப்படியே யாத்ரையையும், குருதே-பண்ணுகிருன். ஸஃ ஜகந்நாதஃ-அந்த ஜகந்நாதன், ஸ்வதந்த்ரோऽபி-ஸ்வதந்த்ரனுயிருக்கச் செய்தேயும், அஸ்வதந்த்ரஃ யதா-அஸ்வதந்த்ரன் எப்படியிருப்பனே, ததா-அப்படியிருக்கிருன். ஜகத்தாதா-ஸர்வகாரணபூதன், ஸர்வசக்தோऽபி-ஸர்வசக்தனுயிருக்கச்செய்தே, அசக்த இவ சேஷ்டதே-அசக்தனைப்போல நடிக்கிருன்.

**171.** ஆஸ்தாம் தே குணராசிவத் குணபரீவாஹாத்மநாம் ஜந்மநாம் ஸங்க்யா (ஜீவ) பௌமநிகேதநேஷ்வபி குடீகுஞ்ஜேஷு ரங்கேச்வர । அர்ச்யஃ ஸர்வ ஸஹிஷ்ணுரர்ச்சகபராதீநாகிலாத்மஸ்திதிஃ ப்ரிணீஷே ஹ்ருதயாளுபிஸ்தவ ததஃ ஶீலாத் ஜடீபூயதே ॥

ஹே ரங்கேச்வர-ஏ ஸ்ரீரங்கநாதனே! தே குணராசிவத்-தேவரீருடைய திருக்கல்யாணகுணங்களுடைய போல, குணபரீவாஹாத்மநாம்- (அந்த குணங்களைக்காரணமாயுடையதாலும், அவைகளை வெளிப்படுத்துவதாலும்) அந்த குணங்களின் ப்ரவாஹரூபங்களான, ஜந்மநாம்- அவதாரங்களுடைய, ஸங்க்யா-எண்ணுவதானது, ஆஸ்தாம்-இருக்கட்டும். (திருக்கல்யாணகுணங்கள் போல அவதாரங்களும் எண்ணிமுடியாதென்றபடி) [தேவரீர்] பௌமநிகேதநேஷு-பூமியிலுண்டான திருக்கோயில்களிலும், குடீகுஞ்ஜேஷு அபி-பாகவதர்களின் திருமாளிகைகளிலும், ருஷிகள் ஆச்ரமங்களிலும், அர்ச்யஃ-ஆராதிக்கத்தகுந்தவராய், ஸர்வ ஸஹிஷ்ணுஃ-ஸர்வாபராதங்களைப் பொறுக்குமவராய், அர்ச்சகபராதீநாகிலாத்மஸ்திதிஃ-அர்ச்சகனிட்ட வழக்கான தனது எல்லாதசை

171. ஸ்ரீர-உத்-74.

யையுடையவராய், ப்ரீணிஷேப்ரீதராகிறீர். ததঃ-அப்படிப்பட்ட, சீலாத்-பெரியவராயிருந்து தாழ்ந்தவரோடு முறையறக்கலக்கும் ஸ்வபாவத்தாலே, ஹ்ருதயாளுபிঃ-ஸஹ்ருதயார்களால், ஜடீபூய தே-ஜடராக ஆகுகை. ( அந்த ஸௌசீல்யத்தை யநுஸந்தித்து ஆழ்வாராதிகள் அவற்றிலே ஈடுபடுகிறார்களென்றபடி. )

**172.** ஏவம் பஞ்சப்ரகாரோஹமாத்மநாம் பததாமயঃ । பூர்வஸ்மாஊபி பூர்வஸ்மாத் ஜ்யாயாம் ஸ்ரைவோத்தரோத்தரঃ ॥ ஸௌலப்ய (ஹ்யு) தோ ஜகத்ஸ்வாமீ ஸுலபோஹ்யுத்தரோத்தரঃ ॥

ஏவம் பஞ்சப்ரகாரঃ அஹம்- இப்படி ஐந்து ப்ரகாரமாயிருக்கிற நான், அதঃ பததாம் ஆத்மநாம்-ஸம்ஸாரத்தில் அழிந்திக்கிடக்கிற ஆத்மாக்களைக்குறித்து, பூர்வஸ்மாத் அபி பூர்வஸ்மாத-பூர்வ பூர்வத்தைக்காட்டிலும், உத்தரோத்தரঃ-மேல் மேல், ஜ்யாயான்-அதிசயித்து இருக்கிறேன். ஜகத்ஸ்வாமீ- உலகத்துக்கு ஸ்வாமியானவன், உத்தரோத்தரঃ- மேல் மேல், ஸௌலப்பதঃ- ஸௌலப்ய குணத்தால், ஸுலபঃ ஹி- ஸுலபனுயிருக்கிறானன்றோ.

## 39 ஸூத்திரம்.

**173.** ஹௌமநிகேதநேஷு — 171-வது இலக்கம் பார்க்க.

## 40 ஸூத்திரம்.

**174.** ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு யாபுத்திঃ (ஷிঃ) ஸாவிதா ந்ருணாம் । தாமேவ ஹஜதே ஜந்துருபதேஶோ நிரர்த்த (டி) கঃ ॥

ந்ருணும்-மனிதர்களுக்கு, யா புத்திঃ-எந்தபுத்தியானது, ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு- அநேகஜந்மங்களில், பாவிதா-வாஸனையோடுகூடிக்கொண்டிருக்கிறதோ, தாம் ஏவ-அந்த புத்தியையே, ஜந்துঃ- ஜந்துவானவன், பஜதே-அடைகிறான், உபதேசঃ; ஶாஸ்த்ரம், நிரர்த்தகঃ-பிரயோஜநமற்றது.

---

172. விஷ்வக்ஸேநஸம்ஹிதை,

## 49 ஸூத்திரம்.

175. அவித்யா (ஜ்ஞா) தோதேவே பரிப்ருட (வ்யூஹ) தயா வா
விதிதயா ஸ்வஹக்தேர்ஹூம்நா வா ஜகதி கதிமந்யாம
விதுஷாம் । கதிர்கம்யஸ்சாஸௌ ஹரிரிதி ஜிதந்தாஹ்
வயமநோரஹஸ்யம் வ்யாஜஹ்ரே ஸ ஖லு ஹகவான்
ஶௌநகமுனிஃ ॥

அவித்யாதஃ-அஞ்ஜானத்தாலாவது, பரிப்ருடதயா விதிதயா வா-பரிச்சேதிக்கவொண்ணாதவனென்று ஜ்ஞானத்தாலேயாவது, ஸ்வபக்தேஃ-தன் பக்தியினுடைய, பூம்நாவா-ஆதிக்யத்தாலேயாவது, தேவே-பகவானிடத்தில், ஜகதி-இவ்வுலகில், அந்யாம் கதிம்-பகவானைத்தவிர வேறு உபாயமுண்டென்று, அவிதுஷாம்-அறியாதவர்களுக்கு, அஸௌ ஹரிஃ-இந்த பகவான், கதிஃ கம்யச்ச-ப்ராப்யராயும் ப்ராபகனாயுமாகிறான், இதி-என்று, பகவான்-ஸர்வஜ்ஞனை, ஸஃ சௌனகமுனிஃ-அந்த சௌனகமஹரிஷியானவர், ஜிதந்தாஹ்வயமநோஃ ரஹஸ்யம்-ஜிதந்தையென்று பெயரையுடைய மந்த்ரத்தின் ரஹஸ்யத்தை, வ்யாஜஹ்ரே-வியாக்கியானம் பண்ணினார்.

## 50. ஸூத்திரம்

176. இதம் ஶரணம ஜ்ஞாநாமிதமேவ விஜாநதாம் । இதம் தி
தீர்ஷதாம் பாரமிதமாநந்த்யமிச்ச (தா) தாம் ॥

இதம்-இந்தப்ரபத்தியே, அஜ்ஞாநாம்-அறிவில்லாதவர்களுக்கும், சரணம்-உபாயம், விஜாநதாம்-அறிவுடையோர்களுக்கும், இதமேவ-இதுவே உபாயம், பாரம்-(ஸம்ஸாரஸமுத்திரத்தின்) கரையை, திதீர்ஷதாம்-கடக்கவேணுமென்று விருப்பமுடையவர்களுக்கும், இதம்-இதுவே உபாயம், ஆநந்த்யம் இச்சதாம்-முடிவில்லாதபேற்றை பெறவிரும்புகிறவர்களுக்கும், இதம்-இதுவே உபாயம்.

177. அபாயோபாய நிர்முக்தா மத்ய (ம) மாம் ஸ்திதிமாஸ்
திதா । ஶரணாகதிரக்ரியை (ஷை) ஷா ஸம்ஸாரார்ண
வதாரிணீ ॥

---

176. லக்ஷ்மீதந்த்ரம். 17-100. 177. லக்ஷ்மீ 17-19.

அபாயோபாய நிர்முக்தா-பாபப்ரவ்ருத்திகளாலும், ஸாதநாந்தரங்களாலும் விடப்பட்டதும், மத்யமாம் ஸ்திதிம் ஆஸ்திதா-அநர்த்தகரமுமன்றிக்கே, உபாயாந்தரங்களுக்கு அங்கமாய், ஸ்வயம் உபாயமுமின்றிக் கேயிருக்கையால் நடுவுபட்டிருக்கிற நித்ய நைமித்திககர்மங்களையுடையதாய், அக்ரியா-ஸர்வாதிகாரமாய் சீக்கிரம் பலத்தைக்கொடுப்பதாய் ஸ்வரூபாநுரூபமாயிருக்கையாலே ச்லாக்யமாயிருக்கிற, ஏஷா சரணாகதி:-இந்தப்ரபத்தியானது, ஸம்ஸாரார்ணவதாரிணீ-ஸம்ஸாரக்கடலைக் கடத்திவைக்கும்.

**178.** யத்யேந காமகாமேந நஸாத்யம் ஸாதநாந்தரை: । முமுக்ஷுணா யத் ஸாங்க்யே (ஞ்ஞேவ) ந யோகேந நவ ஹக்தித: ॥ ப்ராப்யதே பரமம் யாம யதோ நாவர்த்ததே புந: । தேந தேநாப்யதே தத்தத் ந்யாஸேநைவ மஹாமுநே ॥ பரமாத்மா ச தேநைவ ஸாத்யதே புருஷோத்தம: ॥

காமகாமேந-காமபுருஷார்த்தத்தை ஆசைப்படாநின்ற, யேந-யாவனொருவனாலே, யத்-யாதொரு புருஷார்த்தம், ஸாதநாந்தரை:-உபாயாந்தரங்களால், ந ஸாத்யம்-பெறப்படாதிருக்கிறதோ, யத:-யாதொரு பரமபதத்தினின்றும், புந: நாவர்த்ததே-மீண்டும் திரும்பிவரமாட்டானோ, பரமம் தாம-அப்படிப்பட்ட பரமபதமானது-முமுக்ஷுணா-மோக்ஷத்தில் இச்சையுடையவர்களாலே, ஸாங்க்யேந யோகேந பக்தித:-கர்மம், ஜ்ஞாநம், பக்தி என்கிற உபாயங்களாலே, ந ச ப்ராப்யதே-அடையப்படாதிருக்கிறதோ, ஹே மஹாமுனே-ஓ மஹாமுனியே! தேந தேந-அந்தந்த அதிகாரிகளாலே, தத்தத்-அந்தந்த புருஷார்த்தங்கள் ந்யாஸேநைவ-ப்ரபத்தியினாலேயே, ஆப்யதே-ஆடையப்படும். பரமாத்மா ச புருஷோத்தம:-ஸர்வஸ்வாமியான புருஷோத்தமனும், தேநைவ ஸாத்யதே-அந்த ப்ரபத்தியினாலேயே சாதிக்கப்படுகிறான்.

**179.** இதம் சரணமஜ்ஞாநம்-176-வது இலக்கம் பார்க்க.

**57 ஸூத்திரம்.**

**180.** உபாயோபேயத்வே ததிஹ- 113-வது இலக்கம் பார்க்க.

---

178. லக்ஷ்மீ தந்த்ரம்.

**181.** யே ச வேதவிதோ விப்ராஃ- 49-வது இலக்கம் பார்க்க.

**182.** ஶரண்யம் ஶரணம் ச த்வா மாஹுர்திவ்யா மஹர்ஷயஃ ।

த்வாம்-தேவரீரை, சரண்யம்-ரக்ஷகனையும், சரணம் ச-உபாயமாகவும், திவ்யாஃ மஹர்ஷயஃ-திவ்யஜ்ஞானமுள்ள மஹரிஷிகள், ஆஹுஃ-சொல்லுகிறார்கள்.

**183.** அம்ருதம் ஸாதநம் ஸாத்யம் ஸம்பஶ்யந்தி மநீஷிணஃ ।

மநீஷிணஃ-பெரியோர்கள், அம்ருதம் ஸாதநம்-நித்ய ஸித்தமான உபாயமாகவும், ஸாத்யம்-உபயோகமாகவும், ஸம்பச்யந்தி-பார்க்கிறார்கள்.

## 58 ஸூத்திரம்.

**184.** ஹக்த்யா லப்ய (ஹ்ய) ஸ்த்வநந்யா ।

அநந்யயா-இதர விஷயங்கள் கலசாத, பக்த்யா து-பக்தியினாலேயே, லப்யஃ-அடையத்தகுந்தவன்.

**185.** உஹயபரிகர்மிதஸ்வாந்தஸ்ய ஐகாந்திகாத்யந்திகஹக்தியோகைகலப்யஃ ॥

உபயபரிகர்மிதஸ்வாந்தஸ்ய-கர்மஜ்ஞானங்களாலே யலங்கரிக்கப்பட்ட (பரிசுத்தமான) மனதையுடையவனுடைய, ஐகாந்திகாத்யந்திக பக்தியோகைகலப்யஃ-அநந்யப்ரயோஜனமாயும், இதற்குமேலில்லையென்னலாம்படியாயுமிருக்கிற பக்தியோகம் ஒன்றில் மாத்திரம் அடையப்படுகிறான்.

**186.** ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு தபோ த்யா(ஜ்ஞா)ந ஸமாதிஹிஃ।
நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே ஹக்திஃ ப்ரஜாயதே ॥

ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு-அநேகமாயிரம் ஜந்மங்களில், தபோர்ஜ்ஞானஸமாதிபிஃ-கர்மஜ்ஞானபக்திகளினால், க்ஷீணபாபாநாம்-நசித்தபாபங்களையுடைய, நராணாம்-மனிதர்களுக்கு, க்ருஷ்ணே-

---

184. லக்ஷ்மீ தந்த்ரம். 185. ஆத்மஸித்திஃ. 186. லக்வத்ரிஸ்மிருதி:

கண்ணனிடத்தில், பக்திः ப்ரஜாயதே-பக்தியானது உண்டாகிறது.

187. ஸர்வஜ்ஞோऽபி ஹி விஸ்வேஸஃ ஸதா காருணிகோऽபி ஸந் । ஸம்ஸாரதந்த்ரவாஹித்வாத் ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே ॥

விச்வேசः-ஸர்வேச்வரன், ஸர்வஜ்ஞः அபி ஹி-ஸர்வஜ்ஞனுயும், ஸதா காருணிகः அபி ஸந்-எப்பொழுதும் தயையுள்ளவனுயுமிருந்தாலும், ஸம்ஸாரதந்த்ரவாஹித்வாத்-ஸம்ஸாரமாகிற தந்த்ரத்தை நடத்துபவனுயிருப்பதாலே, ரக்ஷாபேக்ஷாம்-ரக்ஷயபூதனுன இச்சேதநனுடைய அபேக்ஷையை, ப்ரதீக்ஷதே-பார்த்திருக்கிறுன்.

## 70 ஸூத்திரம்.

188. ஸ்வத்வமாத்மநிஸம்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ர(ஜு)ம்ஹணி ஸ்திதம்। உபயோரேஷஸம்பந்தோ ந பரோऽபிமதோமம॥

ஆத்மநி-ஜீவாத்மாவினிடத்தில், ஸ்வத்வம் ஸம்ஜாதம்-ஸொத்து என்னும் தன்மையானது சேர்ந்து உண்டாயிற்று. (ஸ்வத்வமாவது-இஷ்டப்படி நியோகஞ்செய்ய யோக்யமாயிருக்குகை; அதாவது ஆத்மாவுடன் கூட உண்டானது) ப்ரம்ஹணி-பிரம்ஹத்தின் பக்கலில், ஸ்வாமித்வம் ஸ்திதம்-யஜமானத்தன்மையானது இருக்கிறது. உபயோः-இருவருக்கும், ஏஷः ஸம்பந்தः-இதுவே ஸம்பந்தம். பரः-வேறுருஸம்பந்தமானது, மம அபிமதः ந-எனக்கு இஷ்டமில்லை.

## 72 ஸூத்திரம்.

189. பவாம்ஸ்து ஸஹவைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே। அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ர(ரு)தः ஸ்வபதஸ்சதே ॥

பவான் து-தேவரீரோவென்றுல், வைதேஹ்யாஸஹ-பிராட்டியோடு கூட, கிரிஸாநுஷு-மலைகளின் தாழ்வரைகளில், ரம்ஸ்யதே-க்ரீடிக்கப் போகிறீர். அஹம்-நான், ஜாக்ரதः-விழித்துக்

188. விஷ்ணுதர்மம். 189. ரா-அயோ-31-25.

கொண்டும், ஸ்வபதஃ சு-கண் வளர்ந்துகொண்டுமிருக்கிற, தே-தே வரீருக்கு, ஸர்வம் கரிஷ்யாமி-ஸர்வவித கைங்கரியங்களையும் பண்ணக்கடவேன்.

**190.** ஹவந்தமேவாநுசரந் நிரந்தரம் ப்ரஶாந்தநிஶ்ஶேஷ
மநோரதாந்தரஃ । கதாஹமைகாந்திக நித்ய கிங்கரஃ ப்ர
ஹர்ஷயிஷ்யாமி ஸநாத ஜீவிதஃ ॥

பவந்தமேவ-பரிபூர்ணனான நின்னையே, நிரந்தரம்-இடைவிடாமல், அநுசரன்-அநுவர்த்தித்தவனாய், ப்ரசாந்தநிஶ்ஶேஷமநோரதாந்தரஃ-நின்னையொழிந்தவிஷயங்களில் மனோவ்யாபாரங்களை நிச்சேஷமாகத் தவிர்ந்தவனான, அஹம்-ருசியொழிய உபாயமில்லாத நான், ஐகாந்திகநித்யகிங்கரஃ-ஏகரூபமாய் யாவதாத்மபாவியான கைங்கரியத்தை ஸ்வரூபமாக உடையவனாய், ஸநாதஜீவிதஃ-ஸத்தையையுடையவனாய், கதா-எப்பொழுது, ப்ரஹர்ஷயிஷ்யாமி-தேவரீரை மிகவும் உகப்பிக்கக்கடவேன்.

## 73 ஸூத்திரம்.

**191.** நாயம் தேவோ நமர்த்யோ வா நதிர்யக் ஸ்தாவரோऽபி வா ।
ஜ்ஞாநாநந்தமயஸ்த்வாத்மா ஶேஷோ ஹி பரமாத்மநஃ ॥

அயம்-இந்த ஜீவாத்மா, ந தேவஃ-தேவனல்ல, ந மர்த்யஃ-மனிதனல்ல, ந திர்யக் ஸ்தாவரஃ அபி வா-திர்யக்குமல்ல, ஸ்தாவரமுமல்ல. து-ஆனால், ஆதமா-இவ்வாத்மா, ஜ்ஞாநாநந்தமயஃ-ஜ்ஞாநஸ்வரூபன், ஆநந்தஸ்வரூபன், பரமாத்மநஃ-பரமாத்மாவுக்கு, சேஷஃ ஹி-தாஸன்.

**192.** ஸ்வரூபமணுமாத்ரம் ஸ்யாத் ஜ்ஞாநாநந்தைகலக்ஷணம் ।

ஸ்வரூபம்-ஜீவாத்மஸ்வரூபமானது, அணுமாத்ரம் ஸ்யாத்-அணுப்ரமாணமாயிருக்கிறது. ஜ்ஞாநாநந்தைகலக்ஷணம்--ஜ்ஞாநம், ஆநந்தம் இவைகளையே ஆகாரமாகவுடையது.

**193.** தாஸபூதாஃ ஸ்வதஃ ஸர்வே ஹ்யாத்மாநஃ பரமாத்மநஃ ।
நாந்யதா லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவ ச ॥

---

190. ஸ்தோத்ரரத்நம். 191. பாகவதம். 193. பாஞ்சராத்ரம்.

பரமாத்மந:-ஈச்வரனுக்கு, ஸர்வே ஆத்மாந:-எல்லா ஜீவாத்மாக்களும், ஸ்வத: ஹி-ஸ்வரூபத்திலேயே, தாஸபூதா:-சேஷபூதர்கள், தேஷாம்-அவர்களுக்கு, பந்தே-பத்தாவஸ்தையிலும், ததைவ-அப்படியே, மோக்ஷே ச-மோக்ஷத்திலும், அந்யதா லக்ஷணம்-வேறு ஸ்வாதந்திரியலக்ஷணமானது, ந-இல்லை.

## 74 ஸூத்திரம்.

194. ஸ்வோஜ்ஜீவநேச்சா (ஹா)யதி தே ஸ்வஸத்தாயாம் ஸ்ப்ருஹா யதி । ஆத்மதாஸ்யம் ஹரே: ஸ்வாம்யம் ஸ்வபாவம் ச ஸதா ஸ்மர ॥

தே-உனக்கு, ஸ்வோஜ்ஜீவநேச்சா யதி-மோக்ஷத்தில் ருசியிருக்கும்பக்ஷத்தில், ஸ்வஸத்தாயாம் ஸ்ப்ருஹா யதி-தேசகாலாதிஸம்பந்தரூபமில்லாகிகஸத்தாவிலக்ஷணமாய், சாஸ்த்ரங்கொண்டறியவேண்டியதாயிருக்கும் ஸத்தையில் ஆசையிருக்கும்பக்ஷத்தில், ஆத்மதாஸ்யம்-ஆத்மாவின் சேஷத்வத்தையும், ஹரே: ஸ்வாம்யம்-பகவானுடைய ஸ்வாமித்வத்தையும், ஸதா ஸ்வபாவம் ச-எப்பொழுதுமுள்ள ஸ்வபாவத்தையும், ஸ்மர-அநுஸந்தித்துக்கொள்.

## 79 ஸூத்திரம்

195. ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்யோ நைவ க்ரா (மா) மகுலாதிபி:। விஷ்ணுநா வ்யபதேஷ்டவ்ய ஸ்தஸ்ய ஸர்வம் ஸஏவ ஹி॥

ஏகாந்தீ-ப்ரபந்நனானவன், க்ராமகுலாதிபி:-க்ராமம், குலம், இவை முதலியவைகளால், நைவ வ்யபதேஷ்டவ்ய:-சொல்லப்படுமவனல்லன். விஷ்ணுநா வ்யபதேஷ்டவ்ய:-பகவத்ஸம்பந்தத்தையிட்டுச் சொல்லப்படுமவன். ஹி-ஏனென்றால், தஸ்ய-அவனுக்கு, ஸர்வம்-க்ராமகுலாதிகளெல்லாம், ஸ ஏவ-ஸர்வேச்வரனேயிறே.

## 81 ஸூத்திரம்.

196. சரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்காம் பரபலார்தந: । மாம் நயேத் யதி காகுத்ஸ்த: தத்தஸ்ய ஸத்ருசம் பவேத் ॥

195. விஷ்வக்ஸேநஸம்ஹிதா. 196. ரா-ஸு-39-30.

பரபலார்தநː-சத்ருஸைந்யங்களை நாசம் பண்ணுமவரான, காகுத்ஸ்தː-ககுத்ஸ்த குலத்தில் பிறந்த சக்ரவர்த்தித்திருமகன், சரைː து-பாணங்களால், லங்காம்-லங்காபட்டணத்தை, ஸங்குலாம் க்ருத்வா-வ்யாகுலப்படித்தி, . மாம்-என்னை, நயேத் யதி--அழைத்துக்கொண்டுபோவாராகில், தத்-அந்த காரியம், தஸ்ய-பராக்ரமசாலியான அவருக்கு, ஸத்ருசம் பவேத்-தகுந்ததாக ஆகும்.

**197.** ரக்ஷமாம்—133—வது இலக்கம் பார்க்க.

**198.** ஸீதொஹவ—33—வது இலக்கம் பார்க்க.

## 82 ஸூத்திரம்.

**199.** அஸந்தேஸாத்து ராமஸ்ய தபஸஸ்சாநுபாலநாத் ।
ந த்வா குர்மி தஸக்ரீவ (ஸ்ரீரா) வ பஸ்ம பஸ்மார்ஹ தேஜஸா ॥

ராமஸ்ய அஸந்தேசாத் து-பெருமாள்நியமனமில்லாமையாலும்,தபஸː அநுபாலநாத் ச-பாதிவ்ரத்யமென்னும் தபஸ்ஸை ரக்ஷிக்கவேண்டியிருப்பதாலும், பஸ்மார்ஹ-தஹிக்க யோக்யனே!, த்வாம்-உன்னை, தபஸா-பதிவிரதத்தன்மையின் ப்ரபாவத்தால், பஸ்ம நகுர்மி-பஸ்மமாகச் செய்யாதிருக்கிறேன்.

## 83 ஸூத்திரம்.

**200.** குருஷ்வ மாமநுசரம் வைதர்ம்யம் நேஹவித்ய (ஷஷ)தே ।
க்ருதார்த்தோ(யெ-ஒர)ஹம் பவிஷ்யாமி தவ சார்த்தː (வாய-ஒː) ப்ரகல்பதே ॥

மாம் அநுசரம் குருஷ்வ-அடியேனை தேவரீர் பின்னேவரும்படி நியமிக்கவேணும். இஹ-இந்த விஷயத்தில், வைதர்ம்யம் ந வித்யதே-விரோதமில்லை. (அத்தால்) அஹம்-நான், க்ருதார்த்தː பவிஷ்யாமி-க்ருதார்த்தனாக ஆகுவேன், தவச-தேவரீருக்கும், அர்தː-சேதனலாபமானது, ப்ரகல்பதே-உண்டாகிறது.

**201.** ந ச ஸீதா த்வயா ஹீநா நசாஹமபி ராகவ । முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந் மத்ஸ்யாவிவோத்ரு(ஸ்ரீரா)தௌ ॥

199. ரா-ஸு-22-20. 200. ரா-அ-30-22. 201. ரா-அ-53-31.

ஹே ராகவ-ஏ ராகவனே! த்வயா விநா-தேவரீரைவிட்டால், நச ஸீதா-ஸீதையுமில்லை, ந சாஹமபி-நானுமில்லை, யதி ஜீவாவ:-ஜீவிப்போமானால், ஜலாத்-ஜலத்திலிருந்து, உத்ருதௌ-வெளிப்படுத்தப்பட்ட, மத்ஸ்யௌ இவ-மீன்போல, முஹூர்த்தம் ஜீவாவ:-முஹூர்த்தகாலமே ஜீவிப்போம்.

**202.** தநுராதாய ஸகுணம் கநித்ரபிடகாதர: ।
அக்ர (த) தஸ்தே கமிஷ்யாமி பந்தாநமநுதர்சயந் ॥
ஆஹரிஷ்யாமி தே நித்யம் மூலாநி ச பலாநி ச ।
வந்யாநி யாநி சாந்யாநி ஸ்வாஹாராணி தபஸ்விநாம் ॥

ஸகுணம் தநுராதாய-ஏற்றிய நாணுடனேவில்லையெடுத்துக்கொண்டு, கநித்ரபிடகாதர:-மண்வெட்டியையும் கூடையையும், சிரஸ்ஸில் தரித்து, பந்தாநம் அநுதர்சயந்-உமக்கு வழிகாட்டிக்கொண்டே, தே அக்ரத:-கமிஷ்யாமி உமக்குமுன்பு செல்வேன். நித்யம்-பிரதிதினமும், மூலாநிச பலாநிச-கிழங்குகளையும் பழங்களையும், வந்யாநி-காட்டிலுள்ளதான, தபஸ்விநாம்-ருஷிகளுக்கு, ஸ்வாஹாராணி-ஸுகமாகக் கொண்டுவரத்தகுந்த, யாநிச அந்யாநி-வேறு எவைகளுண்டோ, (அவைகளையும் தேவரீருக்கு,) ஆஹரிஷ்யாமி-கொண்டு கொடுப்பேன்.

**203.** பவாம்ஸ்து-189-இலக்கம் பார்க்க.

**204.** ஸீதாஸமக்ஷம்-72-இலக்கம் பார்க்க.

**205.** பரவாநஸ்மி-73-இலக்கம் பார்க்க.

**206.** ஸ (ச) த்ர சாமரபாணிஸ்து லக்ஷ்மணோऽநுஜகாம ஹ ॥

லக்ஷ்மண: து-இலக்ஷ்மணனோவென்றால், சத்ரசாமர பாணி:-திருக்குடையையும், திருவெண்சாமரத்தையும், கையில் தரித்துக்கொண்டு, அநுஜகாம ஹ-பெருமாளைப் பின்தொடர்ந்து போனார்.

**207.** அத தஸ்மிந் திநே புண்யே ஶுபலக்நே ஶுபோதயே ।
ராகவஸ்யாபிஷேகார்த்தம் மங்களம் சக்ரிரே ஜநா: ॥

---

202. ரா-அ-31-23-24. 206. ரா-அ-12-32. 207. பாத்மபு-2-49

அத-அதன்பின், தஸ்மிந் திநே-அந்தப் பட்டாபிஷேகத் திருநாளில், சுபலக்நே-நல்ல லக்னத்தில், சுபோதயே-நல்ல முஹூர்த்தத்தில், ராகவஸ்ய-சக்கிரவர்த்தித் திருமனுக்கு, அபிஷேகார்த்தம்-திருவபிஷேகத்திற்காக, மங்களம்-மங்கள காரியங்களை, சக்ரிரே-பண்ணினார்கள்.

208. மந்த்ரபூத ஜலைஶ்ஶுத்தை (த்தை) ர்முநயஸ் ஸம்ஶிதவ்ரதா꞉ । ஜபந்தோ வைஷ்ணவாந் ஸூக்தாந் சதுர்வேதமயாந்ஶுபாந் ॥ அபிஷேகம் சுபம் சக்ரு꞉ காகுத்ஸ்தம் ஜகதாம்பதிம் । தஸ்மிந் ஶுபதமே லக்நே தேவதுந்துபயோ திவி ॥ நிநேது꞉ புஷ்பவர்ஷாணி வவர்ஷுஶ்ச ஸமந்தத꞉ । திவ்யாம்பரைர் பூஷணைஶ்ச திவ்யகந்தாநுலேபநை꞉ ॥ புஷ்பைர்நாநாவிதைர் திவ்யைர் தேவ்யாஸஹ ரகூத்வஹ꞉ அலங்க்ருதஶ்ச ஶுஶுபே முநிபிர்வேதபாரகை꞉॥ ஛த்ரம் ச சாமரம் திவ்யம் (ம்) த்ருதவாந் லக்ஷ்மணஸ்ததா । பார்ஶ்வே பரதஶத்ருக்நௌ (ஞௌ) தாளவ்ருந்தம் விவேஜது꞉ ॥ தர்பணம் ப்ரததௌ ஶ்ரீமாந் ராக்ஷஸேந்த்ரோ விபீஷண꞉ । தயாரபூர்ணகலஶம் ஸுக்ரீ(ஸ்ரீ)வோ வாநரேஶ்வர꞉ ॥ ஜாம்பவாம்ஶ்ச மஹாதேஜா புஷ்பமாலாம் மநோஹராம் । வாலி புத்ரஸ்து தாம்பூலம் ஸகர்பூரம் ததௌப்ரியாத் ॥ ஹநுமாந் தீபிகாம் திவ்யாம் ஸுஷேணஸ்து த்வஜம் ஶுபம் । பரிவார்ய மஹாத்மாநம் மந்த்ரிணஸ் ஸமுபாஸிரே ॥

ஸம்ஶிதவ்ரதா꞉ முநய꞉-தீக்ஷ்ணமான வ்ருதத்தோடுகூடிய ருஷிகள், சதுர்வேதமயாந்-நான்கு வேதஸ்வரூபங்களாயும், சுபாந்-சுபங்களாயுமிருக்கிற, வைஷ்ணவாந் ஸூக்தாந்-விஷ்ணுவை ப்ரதிபாதிக்கிற மந்த்ரங்களை, ஜபந்த꞉-ஜபித்துக்கொண்டு, சுத்தை꞉-ஸ்வத꞉ பரிசுத்தங்களான, மந்த்ரபூத ஜலை꞉-வேதோக்த மந்த்ரங்களாலே பாவநமாக்கின ஜலத்தாலே, ஜகதாம் பதிம்-உலகத்திற்கு நாயகனான, காகுத்ஸ்தம்-ராகவனுக்கு, அபிஷேகம் சக்ரு꞉-திருவபி

208. பாத்மபு-2-49.

ஷேகஞ்செய்தார்கள். சுபதமேதஸ்மிந் லக்நே-அப்படிப்பட்ட மங்களகரமான காலத்தில், திவி-ஆகாசத்தில், தேவதுந்துபய: நிநேது:-தேவதுந்துபி முதலான வாத்யங்கள் முழங்கின, ஸமந்தத:-நாலு பக்கத்திலும், புஷ்பவர்ஷாணி வவர்ஷு:-புஷ்பவர்ஷங்களை வர்ஷித்தார்கள். முனிபி: வேதபாரகை:-வேதபாராயணம் பண்ணிக்கொண்டிருக்கும் மஹரிஷிகளோடு (கூடியவரும்) திவ்யாம்பரை:-திவ்யமான வஸ்த்ரங்களாலும், பூஷணை: ச-திவ்யாபரணங்களாலும், திவ்யகந்தாநுலேபநை:-நல்ல வாஸனையோடுகூடிய சந்தனங்களாலும், திவ்யை:-திவ்யங்களான, நாநாவிதை: புஷ்பை:-அநேகவிதமான புஷ்பங்களாலும், அலங்க்ருத: ச-அலங்கரிக்கப்பட்டவரும், தேவ்யா ஸஹ-ஸீதாப்பிராட்டியோடு கூடினவருமான, ரகூத்வஹ:-ரகு குலத்தில் ச்ரேஷ்டரான சக்கிரவர்த்தித் திருமகன், சுசுபே-விளங்கினார். ததா-அப்பொழுது, லக்ஷ்மண:-இளையபெருமாள், திவ்யம் சத்ரம் சாமரம் ச-லோகோத்தரமான திருக்குடையையும் திருவெண்சாமரத்தையும், த்ருதவான்-தரித்தார். பரதசத்ருக்நௌ-பரதன், சத்ருக்னன், இவர்கள், பார்ச்வே-இருபக்கத்திலும், தாளவ்ருந்தம் விவேஜது:-விசிறியைக்கொண்டு விசிறினார்கள். ஸ்ரீமான்-ஸ்ரீமானான, ராக்ஷஸேந்த்ர: விபீஷண:-ராக்ஷஸாதிபதியான விபீஷணாழ்வான், தர்ப்பணம் ப்ரததௌ-கண்ணாடி ஸமர்ப்பித்தார். வாநரேச்வர: ஸுக்ரீவ:-வாநராதிபதியான (ஸுக்ரீவ)மஹாராஜர், பூர்ணகலசம் ததார-பூர்ணகலசத்தை தரித்தார். மஹாதேஜா: ஜாம்பவான் ச-பெருமதிப்பையுடைய ஜாம்பவான், மநோஹராம் புஷ்பமாலாம்-மனத்திற்குப்பிடித்த புஷ்பமாலையை ஸமர்ப்பித்தார். வாலி புத்ர: து-அங்கதன், ஸகர்ப்பூரம் தாம்பூலம்-கர்ப்பூரத்தோடுகூடிய தாம்பூலத்தை, ப்ரியாத் ததௌ-ப்ரீதியோடு கொடுத்தார். ஹநுமான்-திருவடி, திவ்யாம் தீபிகாம்-திவ்யமானக் கைப்பந்தத்தைப் பிடித்தார். ஸுஷேண: து-ஸுஷேணன், சுபம் த்வஜம்-அழகான த்வஜத்தைப் பிடித்தான் மந்த்ரிண:-மந்திரிகள், மஹாத்மானம் பரிவார்ய-பெருமாளைச் சுற்றிக்கொண்டு, ஸமுபாஸிரே-ஸேவித்தார்கள்.

## 84 ஸூத்திரம்.

**209.** இதம் புண்யமிதம் மேத்யம் (ஸ்ரீம்) இதம் பஹு ம்ருகத்விஜம் । இஹ வத்ஸ்யாமி ஸௌமித்ரே ஸார்த்த மேதேந பக்ஷிணா ॥

லக்ஷ்மண-ஓ லக்ஷ்மணா ! இதம் புண்யம்-இவ்விடம் புண்ணியத்தைக் கொடுக்கும்படியானது, இதம் மேத்யம்- இவ்விடம் பரிசுத்தமானது, இதம் பஹு ம்ருகத்விஜம்-இவ்விடம் அநேகவிதமான மிருகங்களோடும் பக்ஷிகளோடுங்கூடியது. ஏதேந பக்ஷிணா ஸார்த்தம்- இந்த பக்ஷிராஜனுன பெரிய திருவுடையாருடன், இஹ வத்ஸ்யாமி-இங்கு வஸிக்கப்போகிறேன்.

**210,** காசிதாவஸதஸ்யாந்தே ஸ்தித்வா த்ருஷ்ட்வா பஹிர் குரும் । தந்மயத்வேந கோவிந்தம் தத்யௌ (ஸ்ரீ) மீலிதலோசநா ॥ தச்சித்தவிமலாஹ்லாதக்ஷீண புண்ய சயா ததா । ததப்ராப்தி மஹாது:கவிலீநாசேஷ பாதகா ॥ சிந்தயந்தீ ஜகத்ஸூதிம் பரப்ரம்ஹஸ்வரூபிணம்। நிருச்வாஸதயா முக்திம் கதாந்யா கோபகன்யகா ॥

காசித்-ஒரு கோபகன்யகை, பஹி:-வெளியில், குரும் த்ருஷ்ட்வா-பெரியோர்களைப் பார்த்து, (தான் போகக்கூடாமையாலே) ஆவஸதஸ்யாந்தே ஸ்தித்வா-க்ருஹத்துக்குள்ளேயிருந்தே, கோவிந்தம்-கோவிந்தனே, தந்மயத்வேந-அவன் மயமாகவே, மீலிதலோசநா-மூடிய கண்களையுடையவளாய், தத்யௌ-த்யாநம் பண்ணினுள். ததா-அப்போது, தச்சித்த- அந்த க்ருஷ்ணனிடத்தில் வைத்த மனதையுடையவளாதலால், வந்த விமலாஹ்லாத-நிர்மல ஸுகத்தால், க்ஷீணபுண்யசயா-போக்கடிக்கப்பட்ட புண்ய ஸமூஹங்களையுடையவளாயும், ததப்ராப்தி- அவனையடையாததிஞல் வந்த, மஹாதுக்க- மஹாதுக்கத்திஞலே, விலீநாசேஷபாதகா-நசித்த பாப ஸமூஹங்களையுடைய்வளாயும், பரப்ரஹ்ம ஸ்வரூபிணம்-பரப்ரஹ்

209. ரா-ஆ-15-19. 210. வி-4-513-20.

மஸ்வரூபியான, ஜகத்ஸூதிம்-ஜகத்காரண வஸ்துவை, சிந்தய ந்தீ-த்யாநம் பண்ணிக்கொண்டு, நிருச்ச்வாஸதயா-மூச்சில்லாமை யால், அங்யா கோபகன்யகா-வேறு கோபகன்னிகையானவள், முக் திம் கதா-தேஹவிமோசநத்தையடைந்தாள்.

## 86 ஸூத்திரம்.

**211.** விஷ்ணோ꞉கார்யம் ஸமுத்திச்ய (திஸ) தேஹத்யா
கோ யதா க்ருத꞉ । ததா வைகுண்ட மாஸாத்ய (ஏ) முக்
தோ பவதி மானவ꞉ ॥

விஷ்ணோ꞉ கார்யம் ஸமுத்திச்ய-எம்பெருமானுடைய காரிய த்தை உத்தேசித்து, யதா-எப்பொழுது, தேஹத்யாக꞉ க்ருத꞉-தேஹத்தின் தியாகமானது செய்யப்பட்டதோ, ததா-அப்போது, மாநவ꞉-மநுஷ்யன், வைகுண்ட மாஸாதய- வைகுண்டத்தையடை ந்து, முக்தோ பவதி-முக்தனுகிறன்.

**212.** தேவகார்ய பரோபூத்வா ஸ்வாம் தநும் ய꞉ பரித்யஜேத்।
ஸ யாதி விஷ்ணுஸாயுஜ்யமபி பாதகக்ருந் நர꞉ ॥

ய꞉-எவன், தேவகார்யபர꞉ பூத்வா- தேவகார்யத்தைச் செய் கிறவனுய் ஆகி, ஸ்வாம் தநும் பரித்யஜேத்- தன்னுடைய சரீரத் தை விடுகிறனே, ஸ꞉ நர꞉-அந்த மனிதன், பாதகக்ருத் அபி-பா பியானுலும், விஷ்ணு ஸாயுஜ்யம் யாதி- விஷ்ணுவின் பதவியை அடைகிறன்.

**213.** ரங்கநாதம் ஸமாஸ்ரித்ய தேஹத்யாகம் கரோதி ய꞉ ।
தஸ்ய வம்ஸே ம்ருதா꞉ ஸர்வே மச்சந்த்யாத்யந்திகம் லயம்॥

ரங்கநாதம் ஸமாச்ரித்ய-நம்பெருமாளை யாச்ரயித்து, (அவர் விஷயமாக) ய꞉ தேஹத்யாகம் கரோதி-எவன் தேஹத்தை விடு கிறனே, தஸ்ய வம்சே ம்ருதா꞉ ஸர்வே- அவனுடைய வம்சத்தில்

---

211. ஆக்நேயபுராணம். 212. வாயுபுராணம். 213. வாமந புராணம்.

மரணமடைந்தவர்க ளெல்லோரும், ஆத்யந்திகம் லயம் கச்சந்தி-ஸூக்ஷ்மசரீர விமோசநத்தையடைகிறார்கள்.

**214.** அக்நிப்ரவேஶம் யஸ்வாபி குருதே மத்஗தாத்மநா । ஸ யாத்யக்னிப்ரகாஶேந விமாநேந மமாலயம் ॥ ப்ராணாம்ஸ்த்யஜதி யோ மர்த்யோ மாம் ப்ரபந்நோऽப்யநாஶகம் ।

பாலஸூர்யப்ரகாஶேந வ்ரஜேத் யாநேந மத்க்ருஹம் ॥

மத்கதாத்மநா-என்னிடத்தில் வைத்த மனதினாலே, யஃசாபி-எவனாகிலும், அக்நிப்ரவேசம் குருதே-அக்நிப்ரவேசம் பண்ணுகிறானோ, ஸஃ-அவன், மம ஆலயம்- என்னுடைய பரமபதத்தை, அக்நி ப்ரகாசேந விமாநேந-அக்னிபோல் ப்ரகாசிக்கிற விமாநத்தினால், யாதி-அடைகிறான். மாம் ப்ரபந்நஃ யஃ மர்த்யஃ-என்னிடத்தில் பரந்யாஸம் பண்ணின எந்த மனிதன், ப்ராணாந் த்யஜதி-ப்ராணனை விடுகிறானோ, (அவன்) அநாசகம் மத் க்ருஹம்- நாசமில்லாத என்னுடைய பரமபதத்தை, பாலஸூர்ய ப்ரகாசேந விமாநேந- பாலஸூர்யனைப்போல் விளங்குகிற விமானத்தினால், வ்ரஜேத்-அடைவான்.

## 94 ஸூத்திரம்.

**215.** ஶமதமநியதாத்மா ஸர்வபூதாநுகம்பீ விஷயஸுகவிரக்தோ ஜ்ஞானதீப்தஃ ப்ரஶாந்தஃ । அநியதநியதாங்கோ நைவ ஹ்ருஷ்டோ ந ருஷ்டஃ ப்ரவஸித இவ கேஹே வர்த்ததே யஸ்ஸ முக்தஃ ॥

யஃ-எவன், சமதமநியதாத்மா-சாந்திதாந்திகளாலே கட்டுப்பட்ட மனதையுடையவனாய், ஸர்வபூதாநுகம்பீ-எல்லாபூதங்களிடத்தில் தயையுள்ளவனாய், விஷயஸுகவிரக்தஃ-சப்தாதிவிஷயஸுகங்களில் ஆசையற்றவனாய், ஜ்ஞாநதீப்தஃ-ஜ்ஞாநத்தால் விளங்குகிறவனாய், ப்ரசாந்தஃ-அடக்கமுள்ளவனாய், அநியதநியதாங்கஃ-சாஸ்

214. பாரதம்-ஆச்-பாவம். 215-ப. வி.

த்ரங்களில் சொல்லப்பட்ட அங்கங்களை சிலகாலவிசேஷத்தில் புஜிப்பவனும், நைவஹ்ருஷ்டஃ-ஸந்தோஷமில்லாதவனும், ந ருஷ்டஃ-கோபமில்லாதவனும், ப்ரவஸித இவ-தேசாந்தரம் போனவன்போல, கேஹே வர்த்ததே-வீட்டிலிருக்கிறானே, ஸஃ முக்தஃ-அவன் முக்தியடைந்தவனே.

**216.** அமாநித்வம தம்பித்வமஹிம்ஸா க்ஷாந்திரார்ஜவம் ।
ஆசார்யோபாஸநம் சௌசம் ஸ்தைர்யமாத்மவிநிக்ரஹஃ ॥

அமாநித்வம்-அடக்கம், அதம்பித்வம்-டம்பமில்லாமலிருப்பது, அஹிம்ஸா-ஹிம்ஸைசெய்யாமலிருப்பது, க்ஷாந்திஃ-பொறுமை, ஆர்ஜவம்-சூதில்லாமலிருப்பது, ஆசார்யோபாஸநம்-ஸத்குருஸேவை, சௌசம்-மனச்சுத்தி, ஸ்தைர்யம்-நல்லகார்யத்தில் விடாமுயற்சி, ஆத்மவிநிக்ரஹஃ-சரீரஸ்வாதீநம், (இவைகள் ஜ்ஞாநங்கள், மற்றது அஜ்ஞாநங்கள்.)

## 95 ஸூத்திரம்.

**217.** பரமாத்மநி யோ ரக்தோ விரக்தோऽபரமாத்மநி ।
ஸர்வைஷணாவிநிர்முக்தஸ்ஸ பைக்ஷம் போக்துமர்ஹதி ॥

யஃ-எவன், பரமாத்மநி ரக்தஃ-பரமாத்மாவினிடத்தில் ஆசையுள்ளவனும், அபரமாத்மநி-பகவத்வ்யதிரிக்தவிஷயங்களில், விரக்தஃ-ஆசையற்றவனும், ஸர்வைஷணாவிநிர்முக்தஃ-ஈஷணாத்ரயங்களை விட்டவனுமிருக்கிறானோ, ஸஃ-அவன், பைக்ஷம் போக்துமர்ஹதி-பிக்ஷைவாங்கி புஜிக்க யோக்கியனாகிறான்.

## 96 ஸூத்திரம்.

**218.** சமஸ்சித்தப்ரசாந்திஸ் ஸ்யாத் தமஸ்சேந்த்ரிய நிக்ரஹஃ ॥

சமஃ-சமமானது, சித்தப்ரசாந்திஃ ஸ்யாத்-மனதையடக்கிறதாக ஆகிறது. தமஃ-தமமானது, இந்த்ரியநிக்ரஹஃ-பாஹ்ய இந்திரியங்களையடக்கிறது.

---

216. ஸ்ரீகீதை-13-8. 217. பார்ஹஸ்பத்யஸ்மிருதி.

**219.** தமோ பாஹ்யகரணாநாமநர்த்தவிஷயேப்யோ (ஹ்யா) நியமநம், ஸமோऽந்தஃகரணஸ்ய ததா நியமநம் ॥

தமஃ-தமமாவது, பாஹ்யகரணாநாம் அநர்த்தவிஷயேப்யஃ நியமநம்-பாஹ்யேந்திரியங்களை அநர்த்தகரமான சப்தாதிவிஷயங்களினின்றும் அடக்குவது, சமஃ-சமமாவது, அந்தஃகரணஸ்ய ததா நியமநம்-மனதை அப்படியடக்குவது.

## 97 ஸூத்திரம்.

**220.** தஸ்மை ஸ வித்வாநுபஸந்நாய ஸம்யக் ப்ரசாந்தசித்தாய ஸமாந்விதாய। யேநாக்ஷரம் புருஷம் வேத ஸத்யம் ப்ரோவாச தாம் தத்த்வதோ ப்ரம்ஹவித்யாம் ॥

ஸம்யக் உபஸந்நாய-நன்றாய் கிட்டிநின்றவனாய், ப்ரசாந்தசித்தாய-மனச்சுத்தியையுடையவனாய், சமாந்விதாய-பாஹ்யேந்திரிய நிக்ரஹமுடையவனாயிருக்கிற, தஸ்மை-அந்த சிஷ்யனைக்குறித்து, ஸஃ வித்வான்-அந்த ஆசாரியன், யேந-எந்த ப்ரம்ஹவித்யையால், ஸத்யம்-ஸத்யமான, அக்ஷரம்-நாசரஹிதமான, புருஷம்-புருஷனை, வேத-அறிவனோ, தாம் ப்ரஹ்மவித்யாம்-அந்த ப்ரஹ்மவித்யாம்-அந்த ப்ரம்ஹவித்யையை, தத்த்வதஃ-உள்ளபடி, ப்ரோவாச-உபதேசிக்கவேண்டும்.

**221.** ஏதேந ஸ்ரவணோபயுக்தமவதாநம் விவக்ஷிதம் ।
நதூபாஸநோபயுக்தாத்யந்தேந்திரிய ஜயாதிஃ ॥

ஏதேந-இதனால், ச்ரவணோபயுக்தம்-கேட்பதற்கு உபயோகமான, அவதாநம்-ஜாக்கிரதையானது, விவக்ஷிதம்-சொல்லப்பட்டது. உபாஸநோபயுக்த-உபாஸநத்திற்கு உபயோகமான, அத்யந்தேந்திரிய ஜயாதிஃ-அதிகமான இந்திரிய அடக்கம் முதலியவை, நது-சொல்லப்படவில்லை.

**222.** தைவாதீநம் ஜகத் ஸர்வம் மந்த்ராதீநம் து தைவதம் ।
தந்மந்த்ரம் ப்ராம்ஹணாதீநம் ப்ராம்ஹணா மமதேவதாஃ ॥

---

219. கீதாபாஷ்யம். 220. மு-உப-1-2-12. 221. ச்ருதப்ரகாசிகை.

ஸர்வம் ஜகத்-எல்லாவுலகும், தைவாதீநம்-தைவத்திற்கு ஸ்வாதீநமானது, தைவதம்து மந்த்ராதீனம்-தேவதையானது மந்த்ரங்களுக்கு ஸ்வாதீனமாயிருக்கிறது, தத் மந்த்ரம் ப்ராம்ஹணாதீநம்-அந்த மந்த்ரமானது ப்ராம்ஹணர்களுக்கு ஸ்வாதீநமானது, ப்ராம்ஹணாঃ மம தேவதாঃ-அந்த ப்ராஹ்மணர்கள் எனக்கு தேவதைகள்.

**223.** ப்ரஹ்ம (ப்ரஹ்ம) வித் ப்ராஹ்ம (ப்ராஹ்ம) ணோவிதுঃ।

ப்ரஹ்மவித்-ப்ரஹ்மத்தையறிந்தவன், ப்ராஹ்மணঃ விதுঃ-ப்ராஹ்மணனென்று சொல்லப்படுகிறான்.

## 99 ஸூத்திரம்.

**224.** ஸராக்ஷஸபரீவாரம் ஹதவாம்ஸ்த்வாம் மஹாத்யு(தே)
திঃ। இந்த்ரியாணி புரா ஜித்வா ஜிதம் த்ரிபுவநம் த்வயா॥

ஸராக்ஷஸபரீவாரம்- பரிஜநங்களான ராக்ஷஸர்களோடு கூடிய, த்வாம்-உன்னை, மஹாத்யுதிঃ-அதிககாந்தியையுடைய, (பெருமாள்) ஹதவாந்-கொன்றார். த்வயா-உன்னால், இந்த்ரியாணி-இந்திரியங்களை, புரா ஜித்வா-முன்பு ஜயித்து, த்ரிபுவனம் ஜிதம்-மூன்று உலகங்களும் ஜயிக்கப்பட்டது.

**225.** தஸ்மாதேவம்வித் ஶாந்தோ தாந்தோ உபரதஸ்திதிக்ஷுঃ
ஸமாஹிதோ பூத்வாऽऽத்மந்யேவாத்மாநம் பஶ்யேத்॥

தஸ்மாத்-ஆகையால், ஏவம்வித்-இவ்விதமறிந்தவன், சாந்தঃ தாந்தঃ-அந்தர்பஹிரிந்திரியங்களை அடக்கினவனாய், உபரதঃ-ஸர்வவிஷயவிரக்தனாய், ஸமாஹிதோ பூத்வா-ஜாக்கிறதையுடையவனாய், ஆத்மநி ஏவ-தன் ஆத்மாவிலேயே, ஆத்மாநம் பஶ்யே-பரமாத்மாவைப்பார்க்கவேண்டும்.

**226.** ஏகாந்தீ து விநிஶ்சித்ய தேவதாவிஷயாந்தரைঃ।
பக்த்யுபாயம் ஸமம் க்ருஷ்ணப்ராப்தௌ க்ருஷ்ணைகஸாதநঃ॥

---

224. ரா-யு-114-18. 225. ப்ரு-உப-2-4.

க்ருஷ்ணைகஸாதந꞉-கண்ணனொருவனையே யுபாயமாகவுடைய, ஏகாந்தீ து-பரமைகாந்தியானவன், க்ருஷ்ணப்ராப்தௌ-கண்ணனைய டைகிறவிஷயத்தில், தேவதா விஷயாந்தரை꞉-தேவதாந்தரங்களோ டும், விஷயாந்தரங்களோடும், ஸமம்-ஸமமாக, பக்த்யுபாயம்-பக்தி யென்னுமுபாயத்தை, விநிச்சித்ய-நிச்சயித்து, (ப்ரபத்தி செய்ய வேண்டும்.)

## 102 ஸூத்திரம்.

227. ராமோ ஹாமிநி லோகஸ்ய வாதுர்வர்ண்யஸ்ய ரக்ஷிதா।
மர்யாதாநாம் வ லோகஸ்ய கர்த்தா காரயிதா வஸ꞉ ॥

ஹே பாமிநி-ஏ அழகு பொருந்தியவளே தாய், ராம꞉-பெருமாள் லோகஸ்ய-உலகத்திற்கும், சாதுர்வர்ண்யஸ்ய, நான்கு வர்ணத்திற் கும், ரக்ஷிதா-ரக்ஷிக்கிறவன், ஸ꞉-அவர், லோகஸ்ய மர்யாதாநாம் ச-இந்த லோகத்தின் மர்யாதைகளுக்கும், கர்த்தா காரயிதா ச-செய் கிறவராயும், செய்விக்கிறவராயுமிருக்கிறார்.

228. அஹமஸ்யாவரோ ப்ராதா குணைர்தாஸ்யமுபாகத꞉।
க்ருதஜ்ஞஸ்ய பஹுஜ்ஞஸ்ய லக்ஷ்மணோ நாம நாமத꞉॥

க்ருதஜ்ஞஸ்ய-உபகார ஸ்மரணமுடையவராய், பஹுஜ்ஞஸ் ய-அல்போபகாரத்தையும் பஹுவாக நினைக்கிற, அஸ்ய-இந்த பெ ருமாளுக்கு, அஹம் அவர꞉ ப்ராதா-நான் தம்பி. குணை꞉-அவர்கு ணங்களால், தாஸ்யமுபாகத꞉-தாஸனாயிருக்கும் தன்மையையடைந் தேன், நாமத꞉-பெயரினால், லக்ஷ்மண꞉ நாம-லக்ஷ்மணனென்று ப்ர ஸித்தன்,

முதல் ப்ரகரணம் முற்றிற்று.

---

227. ரா-ஸு-35-11. 228. ரா-கி-4-12.

## இரண்டாவது ப்ரகரணம்.

### 120 ஸூத்திரம்.

229. காலேஷ்வபி ச ஸர்வேஷு திக்ஷு ஸர்வாஸு சாச்யுத।
ஶரீரே ச கதௌ சாபி வர்த்ததே மே மஹத் பயம்॥

ஸர்வேஷு காலேஷு அபிச-ஸமஸ்தகாலங்களைப் பார்த்தாலும், திக்ஷு ஸர்வாஸுச-எல்லா புண்யதேசங்களைப் பார்த்தாலும், சரீரே ச-என்னுடைய தேஹத்தைப்பார்த்தாலும், கதௌ சாபி-உபாயாந்தரங்களைப்பார்த்தாலும், அச்யுத-ஆச்ரிதர்களை நழுவவிடாதவனே! மே-எனக்கு, மஹத் பயம் வர்த்ததே-விசேஷமான பயமிருக்கிறது.

### 121 ஸூத்திரம்.

230. ஸக்ருதேவ ஹி ஶாஸ்த்ரார்த்த: க்ருதோயம்தாரயேத் நரம்।
உபாயாபாயஸம்யோகே நிஷ்டயா ஹீயதேऽநயா॥
அபாயஸம்ப்லவே ஸத்ய:(ஏவ:)ப்ராயஶ்சித்தம் ஸமாசரேத்।
ப்ராயஶ்சித்திரியம் ஸாऽத்ர யத் புந: ஶரணம் வ்ரஜேத்॥
உபாயநாமுபேயத்வஸ்வீகாரேऽப்யேதஹேவ ஹி॥

ஸக்ருதேவ ஹி-ஒரு தடவையானாலும், க்ருத:-செய்யப்பட்ட, அயம் ஶாஸ்த்ரார்த்த:-இந்த ப்ரபத்தியானது, நரம்-சேதனனை, தாரயேத்-காப்பாற்றும், உபாயாபாயஸம்யோகே- ஸாதநாந்தரங்கள், நிஷித்தானுஷ்டானங்கள், இவைகளின் சேர்க்கையில், அநயா நிஷ்டயா ஹீயதே-ப்ரபத்தி அனுஷ்டானமில்லாதவனாகிறான். அபாய ஸம்ப்லவே-ப்ரமாதிகமாக நிஷித்தானுஷ்டான முண்டானால், ஸத்ய:-உடனே, ப்ராயஶ்சித்தம் ஸமாசரேத்- ப்ராயச்சித்தம் பண்ணவேண்டும், புந: சரணம் வ்ரஜேத்-மறுபடி சரணாகதி செய்யவேண்டும், (இதி) யத்-என்பது யாதொன்றுண்டோ, ஸா-அதுவானது, அத்ர-இவ்விஷயத்தில், ப்ராயஶ்சித்தி:-ப்ராயஶ்சித்தம்.

229. ஜிதஸ்தோ-9. 230. லக்ஷ்மீதந்த்ரம்.

உபாயா நாமுபாயத்வ ஸ்வீகாரே அபி-உபாயாந்தரங்களில், உபாயத்வ புத்தி பிறந்தாலும், ஏத தேவ-இதுவே ப்ராயச்சித்தம்.

## 122. ஸூத்திரம்

**231.** நிர்வாணமய ஏவாயமாத்மா ஜ்ஞானமயோऽமல: । (ஒ–்வா)
துக்காஜ்ஞானமயா யர்மா: ப்ரக்ருதேஸ்தே து நாத்மந: ॥

அயம் ஆத்மா-இந்த ஜீவாத்மாவானவன், அமல:-நிர்மலனுயும், ஜ்ஞான மய:-ஜ்ஞானஸ்வரூபியாயும், நிர்வாணமய ஏவ-ஸுகமயனுகவுமிருக்கிறுன். துக்கா ஜ்ஞானமயா: தர்மா: து-துக்கம் அஜ்ஞானம் முதலிய தர்மங்களோ, பிரக்ருதே:-பிரகிருதியினுடையன. ந ஆத்மந:-ஆத்மாவின் தர்மங்களல்ல.

## 123 ஸூத்திரம்.

**232.** புருஷ: ஸ பர: பார்த்த (ஜூ–ி) ஸக்த்யா லப்ய(ஸ்து) ஸ்த்வநந்யயா। யஸ்யாந்த:ஸ்தாநி ஸூதாநி யேந ஸர்வமிதம் ததம்॥

ஹே ப்ார்த்த-ஓ அர்ஜுனனே! பூதாநி-ஸர்வ ப்ராணிகளும் யஸ்ய அந்த:ஸ்தாநி-எவனுக் குள்ளிருக்கின்றனவோ, யேந-ஏவனுல், இதம் ஸர்வம்-இந்த ஸகல ப்ரபஞ்சமும், ததம்-விஸ்தரிக்கப் பட்டதோ, ஸ: பர: புருஷ:-அந்தப்பரமபுருஷன், அநந்யயா-விஷயாந்தரங்கலசாத, பக்தயா-பக்தி யோகத்தால், லப்ய:-அடையத் தகுந்தவன்.

**233.** ஸக்த்யா த்வநந்யயா ஶக்ய அஹமேவம் வியோऽர்ஜுந ।
ஜ்ஞாதும் த்ருஷ்டும்(ஒ–ஷ்டும்) வ தத்த்வேந ப்ரவேஷ்டும் வ பரந்தப ॥

ஹே அர்ஜுந-ஓ அர்ஜுனனே! ஹே பரந்தப-ஓ சத்துருக்களைக் கொல்லுகிறவனே! ஏவம் வித:-இந்த விச்வரூபியான, அஹம்-நான், அநந்யயா-என்னிடத்திலேயே வைக்கப்பட்ட, பக்த்யா து-பக்தியாலேயே, தத்த்வேந-உண்மையாக, த்ரஷ்டும்-பார்ப்ப

---

231. வி-4-6-7-22. 232. ஶ்ரீகீதை-8-22. 233-ஶ்ரீகீதை-11-54

தற்கும், ஜ்ஞாதும் ச-அறிவதற்கும், ப்ரவேஷ்டும் ச-என் ஸ்வரூபத்தையடைவதற்கும், சக்ய:-தகுந்தவனாகிறேன்.

### 125 ஸூத்திரம்.

**234.** விசித்ரா தேஹஸம்பத்திரீஸ்வராய நிவேதிதும்। பூர்வ
மேவ க்ருதா ப்ரஹ்மந் (ஸ்ரு ஹஸ்த) ஹஸ்தபாதாதிஸம்யுதா ॥

ஹேப்ரஹ்மன்-ஓ ப்ராஹ்மணரே! விசித்ரா-விசித்திரமாயும், ஹஸ்தபாதாதி ஸம்யுதா-கைகால்களோடு கூடினதுமான, தேஹஸம்பத்தி:-கரணகளேபரங்கள், ஈச்வராய நிவேதிதும்-ஈச்வரனிடத்தில் ஸமர்ப்பிப்பதற்கு, பூர்வமேவ க்ருதா-முன்பே ஸ்ருஷ்டிக்கப்பட்டது.

**235.** மந்மநா:-106-வது இலக்கம் பார்க்க.

**236.** ஸததம் கீர்த்யந்தோ மாம் யதந்தஸ்ச த்ருட(ஞ்ச) வ்ரதா:॥
நமஸ்யந்தஸ்ச மாம் பக்த்யா நித்யயுக்தா உபாஸதே ॥

யதந்த:-இந்திரியநிக்ரஹஞ்செய்தவர்களாய், ஸததம்-எப்போதும், மாம் கீர்த்தயந்த:-என்னை த்யானஞ்செய்தவர்களாய், த்ருடவ்ரதா:-ஸ்திரமான பக்தியையுடையவர்களாய், நித்யயுக்தா:- ஜாக்கிரதையுள்ளவர்களாய், பக்த்யா-பக்தியினால், மாம்-மனதிலிருக்கிற என்னை, நமஸ்யந்த: ச- நமஸ்காரஞ்செய்தவர்களாய், உபாஸதே-உபாஸிக்கிறார்கள்.

**237.** ஓமித்யாத்மாநம் த்யா(யே)யத।

ஆத்மாநம்-பரமாத்மாவை, ஓம் இதி-ப்ரணவார்த்தங்கொண்டு த்யாயத-த்யானம் பண்ணுங்கள்.

**238.** ஆத்மாநமேவ லோகமுபாஸீத।

ஆத்மாநம் ஏவ-பரமாத்மாவையே, லோகம்-உலகசரீரனாக, உபாஸீத-உபாஸிக்கவேண்டியது.

---

234. விஷ்ணுதத்வம். 236. ஸ்ரீகீதை-9-14. 237. முண்ட-உப-2-2-6. 238. ப்ரு-உப-3-4-15.

## 127. ஸூத்திரம்.

**239.** ஆத்மா வா அரே த்ர (ஊ) ஷ்டவ்ய: ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய: ।

அரே–ஓ சிஷ்யனே! ஆத்மாவா–ஆத்மாவே, மந்தவ்ய:–மநநம் பண்ணத்தகுந்தது, ச்ரோதவ்ய:–கேட்கத்தகுந்தது. த்ரஷ்டவ்ய:–பார்க்கத்தகுந்தது. நிதித்யாஸிதவ்ய:–பக்திபண்ணத்தகுந்தது, (தர்சந ஸமாநாகாரமாக த்யானம்பண்ணவேண்டும்.)

## 129 ஸூத்திரம்.

**240.** த்ரைகுண்யவிஷயா வேதா நிஸ்த்ரைகுண்யோ ப ஹவார்ஜுந । நிர்த்வந்த்வோ நித்யஸத்த்வஸ்தோ நிர்யோக க்ஷேம ஆத்மவாந் ॥

ஹே அர்ஜுந–ஓ அர்ஜுனனே! வேதா:–வேதங்கள், த்ரைகுண்ய விஷயா:–ஸத்வரஜஸ்தமோகுணங்களை முக்கியமாக உடையன, நிஸ்த்ரைகுண்ய:–மூன்று குணங்களற்றவனாயும், நிர்த்வந்த்வ:–ஸுகதுக்கமில்லாதவனாயும், நித்யஸத்த்வஸ்த:– எப்போதும் ஸத்வகுணமுள்ளவனாயும், நிர்யோகக்ஷேம:–யோகக்ஷேமமில்லாதவனாயும், ஆத்மவான்–ஸ்வரூப ப்ரவணனாயும், பவ–ஆகக்கடவாய்.

**241.** அக்நீஷோமீயம் பசுமாலபேத ।

அக்நீஷோமீயம்–அக்நிஷோம தேவதையைக் குறித்தான, பசும் ஆலபேத–பசுவை ஹிம்ஸிக்கவேண்டும்.

**242.** அத பாதகபீதஸ்த்வம் ஸர்வபாவேந பாரத । விமுக்தாந்ய ஸமாரம்போ நாராயணபரோ பவ ॥

த்வம்–நீ, பாதகபீத: அத–ஸ்வரூபவிருத்தங்களான உபாயாந்தரங்களில் பயமுடையவனாகில், பாரத–ஓ யுதிஷ்டிர! விமுக்தாந்ய ஸமாரம்ப:– பகவத் வ்யதிரிக்தங்களெல்லாவற்றின் ஆரம்பத்தை விட்டவனாய், ஸர்வபாவேந–ஸகல எண்ணங்களாலும், நாராயணபர: பவ–நாராயணபரனாக ஆகக்கடவாய்.

---

239. ப்ரு-உப-4-4-5. 240. ஸ்ரீகீதை-2-45. 242. பார-ஸ்ரீவிஷ்ணுதர்மம்.

## 130 ஸூத்திரம்.

243. ஶ்யேநேநாபிசரந் யஜேத ।

ச்யேநேந-ச்யேநமென்னும் பெயருள்ள யாகத்தாலே, அபிசரந்-ஹிம்ஸைக்காக, யஜேத-யாகம் பண்ணவேண்டும்.

## 131 ஸூத்திரம்.

244. ஆஜ்ஞா தே ஸநிமித்தநித்ய விதய: ஸ்வர்காதி காமயத்
விதி: ஸோऽநுஜ்ஞாऽபிசரச்ச்ருதிஸ்ஸதஶாஸ்த்ர வஶதோ பாயோ
ऽபிசாரஶ்ருதி: । ஸர்வீயஸ்ய ஸமஸ்தஶாஸிதுரஹோ
ஸ்ரீரங்க ஸர்வஸ்வ தே ரக்ஷாகூதநிவேதிநீ ஶ்ருதிரஸௌ
த்வந்நித்யஶாஸ்திஸ்தத: ॥

ஹே ஸ்ரீரங்க ஸர்வஸ்வ-கோயிலை ஸர்வஸ்வமாக உடையவனே! ஸநிமித்தநித்யவிதய:-நைமித்திகவிதிகளோடு கூடிய நித்ய விதிகள், தே-தேவரீருடைய, ஆஜ்ஞா-கட்டளை, ஸ:-அந்த, ஸ்வர்காதிகாம்யத்விதி:-ஸ்வர்க்கம் முதலியவற்றை ஆசைப்பட்டவர்களுக்காக ஏற்பட்ட ஜ்யோதிஷ்டோமாதி விதியானது (காம்யவிதிகள்) அநுஜ்ஞா-அநுஜ்ஞையாகிறது (அநுஜ்ஞையாவது-செய்யாவிடில் தோஷமின்றிக்கே, செய்தால் அந்தந்த பலங்களைப் பெறக்கூடிய கர்மங்கள்) அபிசாரச்ருதி:-சத்ருவதாதி ஸாதநவிதாயக ச்ருதியானது, சடசித்தசாஸ்த்ரவசதோபாய:-சாஸ்த்ரத்தில் அப்ராமாண்யபுத்தியுடையவர்களுக்கு ப்ராமாண்யபுத்தியுண்டாய் தத்வசமாக்கும் வழி, தத:-ஆகையால், ஸர்வீயஸ்ய-எல்லாருக்கும் ஹிதபரராய், ஸமஸ்தசாஸிது:-ஸமஸ்தாதிகாரிகளுக்கும் ருச்யநுகுணமாக ஶாஸ்த்ரப்ரவர்த்தகரான, தே-தேவரீருடைய, ரக்ஷாகூதநிவேதிநீ-ரக்ஷணரூபமான தாத்பர்யத்தைத் தெரிவிக்கிற, அஸௌ-கீழ்ச்சொன்ன, ச்ருதி:-ச்ருதியானது, த்வந்நித்யசாஸ்தி:-தேவரீருடைய நித்யமான சாஸநமாகிறது. அஹோ-ஆச்சரியம்.

---

244. ஸ்ரீரங்க-உத்-20

## 133 ஸூத்திரம்.

**245.** யஜ்ஞேந தாநேந தபஸாऽநாஶகேந ப்ராஹ்மண (ஞா) ஞு விவிதிஷந்தி ॥

யஜ்ஞேந-யாகத்தினாலும், தாநேந-தானத்தினாலும், தபஸா-தபஸ்ஸாலும், அநாசகேந-உபவாஸத்தாலும், ப்ராஹ்மணுः-ப்ரஹ்மவிஷயஜ்ஞானமுள்ளவன், விவிதிஷந்தி-தெரிந்துகொள்ளவேண்டுமென்று இச்சிக்கிருன்.

**246.** அவித்ய (ஞு) யா ம்ருத்யும் தீர்த்வா வித்யயாऽம்ருதம ஶ்நுதே ॥

அவித்யயா-கர்மாதிகளாலே, ம்ருத்யும்-உபாஸநவிரோதிபாபங்களை, தீர்த்வா-போக்கி, வித்யயா-உபாஸநத்தாலே, அம்ருதம்-மோக்ஷத்தை, அஶ்நுதே-அடைகிருன்.

**247.** ஸர்வாபேக்ஷா ச யஜ்ஞாதி ஶ்ருதேரஶ்வத் ॥

யஜ்ஞாதிஶ்ருதேः-யாகாதிகர்மங்களை யங்கங்களோடு செய்யவேணுமென்று வேதங்களில் சொல்லியிருப்பதால், அச்வவத்-குதிரைபோல, அதாவது:-ஜேணம் முதலிய உடுப்புக்களில்லாத குதிரை கமநஸாதநமாகாதாப்போலே, ஸர்வாபேக்ஷா ச-(பக்தியோகமானது) ஸகல கர்மங்களையும் அங்கமாக அபேக்ஷிக்கிறது.

**248.** கஷாயபக்திः கர்மாணி ஜ்ஞானம் து பரமா கதிः ।

கர்மாணி-யாகாதிகர்மங்கள், கஷாயபக்திः-ரஜஸ்தமஸ்ஸுக்களைப் போக்கடிக்கும் ஸாதநங்கள். ஜ்ஞாநம் து பரமாகதிः-ஜ்ஞானமே மோக்ஷமடைவதற்கு உயர்ந்த உபாயம்.

**249.** கஷாயே கர்மபிः பக்வே ததோ ஜ்ஞாநம் ப்ரவர்த்ததே ॥

கர்மபிः-கர்மாநுஷ்டானங்களாலே, கஷாயே-பாபங்கள், பக்வே-பக்வமானபோது, ததः-அதனால், ஜ்ஞாநம் ப்ரவர்த்ததே-ஜ்ஞானமுண்டாகிறது.

---

245. ப்ரு-உப-4-4. 246. மைத்ரீய-உப-7-9. 247. ப்ர-ஸூ-3-4-26.

**250.** ஜந்மாந்தர—186-வது இலக்கம் பார்க்க.

### 139 ஸூத்திரம்.

**251.** பத்ரம் புஷ்பம் ஃபலம் தோயம் யோமே ஃபக்த்யா ப்ரயச்ச (ஹ)தி। தத‍ஹம் ஃபக்த்யுப ஹ்ருதமச்நாமி ப்ரயதாத்மந:॥

ய:-எவன், மே-எனக்கு, பத்ரம்-எலையாவது, புஷ்பம்-புஷ்பத்தையாவது, பலம்-பழத்தையாவது, தோயம்-ஜலத்தையாவது, பக்த்யா-பக்தியோடு, ப்ரயச்சதி-கொடுக்கிறானோ, ப்ரயதாத்மந:-அநந்யப்ரயோஜநதையாகிற மந:சுத்தியையுடையவனுடைய, பக்த்யுபஹ்ருதம்-பக்தியால் கொடுக்கப்பட்ட, தத்-அத்தை, அஹம்-நான், அச்நாமி-ஸ்வீகரிக்கிறேன்.

**252.** அந்யத் பூர்ணாதபாம் கும்பாதந்யத் பாதாவநேஜநாத் ।
அந்யத் குசலஸம்ப்ரச்நாத நசேச்ச (ஹ) தி ஜநார்தந: ॥

ஜநார்த்தந:-கண்ணன், பூர்ணாத் அபாம்கும்பாத் அந்யத்-குடிக்கும் தண்ணீர் நிறைந்த ஒரு குடத்தை வைப்பதைக் காட்டிலும் மற்ற எவையும், பாதாவநே ஜநாத் அந்யத்-திருவடியை சோதிப்பதைக் காட்டிலும மற்ற எவையும், குசலஸம்ப்ரஶ்நாத் அந்யத்-குசலப்ரச்நத்தைக் காட்டிலும் மற்ற எவையும், ந இச்சதி-இச்சியான் காண்.

**253.** ஏதத் ஸாம காயந்நாஸ்தே ।

ஏதத் ஸாம-இந்த ஸாமத்தை, காயன்-பாடிக்கொண்டு, ஆஸ்தே-இருக்கிறான் (முக்தன்)

### 141 ஸூத்திரம்.

**254.** த்வதங்க்ரி (ஹி) முத்திச்ய கதாபி கேநசித் யதாதயாவாபி ஸக்ருத் க்ருதோஞ்ஜலி: । ததைவ முஷ்ணாத்யசுபாந்யசேஷத: சுபாநி புஷ்ணாதி ந ஜாது ஹீயதே ॥

த்வதங்க்ரிம்-தேவரீருடைய ஸர்வ ஸுலபமான திருவடிகளை உத்திச்ய-உத்தேசித்து, கதாபி-எப்போதாகிலும், கேநசித்-ஜாதி

---

251. ஸ்ரீகீதை-9-26. 252. மஹாபாரதம்-உத்-ப. 253. தை-உப-3-10-5. 254. ஸ்தோத்ராத்நம்.

பேதமில்லாமல் எவனுலேயாவது, யதாததாவாபி-ஒரு நியமத்தோ டில்லாமல் எவ்விதமாயாவது, ஸக்ருத்க்ருத:-ஒருதரம் செய்யப் பட்ட, அஞ்ஜலி:-அகாரவாச்யனுன ஸர்வேச்வர னுடைய ஹ்ருத யத்தை ஜலபண்டமாய்ச் செய்யக்கூடிய அஞ்சலிமுத்திரையானது, ததைவ-தேசகாலதேஹநியதிகளில் பலப்ரதாநம் பண்ணுகையாகி ற விளம்பமில்லாமல் அப்போதே, அசுபாநி-ஸகலபாபங்களேயும், அசேஷத:-குவியலாக, முஷ்ணுதி-போனவழிதெரியாதபடி போக் குகிறது. சுபாநி-தேசவிசேஷப்ராப்திமுதலிய யாவற்றையும், புஷ் ணுதி-போஷிக்கின்றது.

**255.** நமஸ்வக்ரு:—153-வது இலக்கம் பார்க்க.

**256.** ஬த்தாஞ்ஜலிபுடாஹ்ருஷ்டா நம இத்யேவ வாதிந: ॥

பத்தாஞ்சலிபுடா:-கூப்பினகைகளேயுடையவராய், ஹ்ருஷ் டா:-ஸந்தோஷமடைந்தவர்களாய், நம: இத்யேவவாதிந:-நம: என் று சொல்லுகிறவர்களாய், (பகவானைச் சரணமடைநதார்கள்.)

## 143 ஸூத்திரம்.

**257.** சித: பரமசில்லாபே ப்ரபத்திரபி நோபயி: ।
விபர்யயே து நைவாஸ்ய ப்ரதிஷேதாய பாதகம் ॥

சித:-சேதனனுக்கு, பரமசில்லாபே-பரமாத்மாவை பெறுகிற விஷயத்தில், ப்ரபத்திரபி-ப்ரபத்தியும், ந உபதி:-ஸாதனமன்று. விபர்யயேது-ஈச்வரன் சேதனனைப் பெற நினைக்கும்போது (எதிர் தட்டாகும்போது) அஸ்ய பாதகம்-இந்த சேதநனுல் செய்யப்பட்ட பாதகங்களும், ப்ரதிஷேதாய நைவ-ப்ரதிபந்தகமாகாது.

## 145 ஸூத்திரம்.

**258.** ஏபிஸ்வ ஸசிவைஸ்ஸார்த்தம் ஶிரஸா யாசிதோ மயா । ப்
ரா(ஹ்ரா)து: ஶிஷ்யஸ்ய ஊாஸஸ்ய ப்ரஸாதம் கர்துமர்ஹதி ॥

ஏபி: ஸசிவை: ச ஸார்த்தம்-இந்த மந்திரிகளோடு கூட, சிர ஸா-தலேவணங்கி, மயா-என்னுல், யாசித:-கேட்டுக்கொள்ளப்பட்ட,

258. ஸ்ரீரா-அ-104-12.

தேவரீர், ப்ராதுஃ-தம்பியும், சிஷ்யஸ்ய-சிஷ்யனும், தாஸஸ்ய-த்ாஸனுமான என் விஷயத்தில், ப்ரஸாதம் கர்தும் அர்ஹஸி-அநுக்ரஹம் செய்யவேண்டும்.

**259.** யத் த்வத்ப்ரியம் தஹிஹ புண்யமபுண்யமந்யத் நாந்யத் தயோர்ஹவதி லக்ஷணமத்ர ஜாது । யத்தூர்த்தாயிதம் தவ ஹி யத் கில ராஸகோஷ்ட்யாம் தத்கீர்த்தநம் பரமபாவநமாமநந்தி ॥

இஹ-இவ்வுலகில், யத் த்வத்ப்ரியம்-எது உனக்கு ப்ரீதிகரமோ, தத்புண்யம்-அதுவானது புண்யம், அந்யத்-தேவரீருக்கு ப்ரியமல்லாதது, அபுண்யம்-பாபம். அத்ர-இவ்வுலகில், அந்யத்-மற்றது, தயோஃ-புண்ணியபாபங்களுக்கு, லக்ஷணம் ஜாது ந பவதி-லக்ஷணமாக ஒருக்காலுமாகிறதில்லை. ராஸகோஷ்ட்யாம்-ராஸக்ரீடையில், தவ யத் தூர்த்தாயிதம்-தேவரீருடைய எந்த தூர்த்தனுடைய காரியங்களுண்டோ, தத்கீர்த்தநம்-அந்த தூர்த்தச்செயலைச் சொல்லுவது, பரமபாவநம்-மஹாபரிசுத்தமாக, ஆமநந்தி-பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

## 146 ஸூத்திரம்.

**260.** அஹமஸ்ம்யபராதாநாமாலயோऽகிஞ்சநோऽகதிஃ ।

அஹம்-நான், அபராதாநாமாலயஃ-அபராதங்களுக்குக் கொள்கலமாய், அகிஞ்சநஃ-உபாயசூன்யனையும், அகதிஃ-கதியற்றவனையும், அஸ்மி-இருக்கிறேன்.

**261.** த்வத்பாதாரவிந்தயுகளம் சரணமஹம் ப்ரபத்யே(த்யே) ॥

அஹம்-அடியேன், த்வத்பாதாரவிந்தயுகளம்-தேவரீருடைய இரண்டு திருவடித்தாமரைகளை, சரணம் ப்ரபத்யே-உபாயமாகப் பற்றுகிறேன்.

**262.** ரிபூணுமபி வத்ஸலஃ ।

---

259. அதிமானுஷஸ்தவம்–53. 260. பாஞ்சராத்ரம். 261. சரணுகதிகத்யம்.

ரிபூணும் அபி-சத்ருக்களிடத்திலும், வத்ஸலஃ-வாத்ஸல்யகு ணமுடையவன்.

263. ஆநயைநம் ஹரிஶ்ரேஷ்ட உத்தமஸ்யாஹயம் மயா । விபீ
ஷணோ வாஸுக்ரீ (ஸ்ரீ) வ யதிவா ராவணஃ ஸ்வயம் ॥

ஹே ஹரிச்ரேஷ்ட ஸுக்ரீவ-வானரோத்தமனுன ஸுக்ரீவ னே! ஏநம்-இவனை, ஆநய-அழைத்துவா, மயா அஸ்ய அபயம்த த்தம்-என்னால் இவனுக்கு அபயங்கொடுக்கப்பட்டது. விபீஷணோ வா-விபீஷணனுக இருந்தாலும் இருக்கட்டும். யதிவா ராவணஃ ஸ்வயம்-லோகஹிம்ஸகனுன ராவணனுயிருந்தாலு மிருக்கட்டும்.

## 149 ஸூத்திரம்.

264. நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ (ஹ்யா) ந மேதயா ந ப
ஹுநா ஶ்ருதேந । யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய
ஸ்தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம் ॥

அயம் ஆத்மா-இந்த பரமாத்மா, ப்ரவசநேந-மநநத்தாலே, ந லப்யஃ-அடையத்தகுந்தவனல்லன், நமேதயா-பக்தியினுலும் அடையத்தகுந்தவனல்லன், ந பஹுநாச்ருதேந-அதிகமாயிருந்துள்ள ச்ரவணத்தாலும் ப்ராப்யனுகமாட்டான். ஏஷஃ யம் ஏவ-இந்த ஸர் வேச்வரன், எவனை வ்ருணுதே-அங்கீகரிக்கிறுனே, தேந-அவ னுல், லப்யஃ-லபிக்கப்படுமவன், ஏஷஃ ஆத்மா-இந்த பரமாத்மா, தஸ்ய-அவனுக்கே, ஸ்வாம் தநூம்-தன் திருமேனியை, விவ்ரு ணுதே-ப்ரகாசிப்பிக்கிறுன்.

## 151 ஸூத்திரம்.

265. தமப்ய (ஹ்) ஹாஷ ஸௌமித்ரே ஸுக்ரீவஸஶிவம் கபிம்।
வாக்யஜ்ஞம் மதுரைர்வாக்யைஃ ஸ்நேஹயுக்தமரிந்தம॥

ஹே அரிந்தம ஸௌமித்ரே-பகைவரையடக்கவல்ல லக்ஷ்ம ணு! ஸுக்ரீவஸசிவம்-ஸுக்ரீவமந்திரியாயும், வாக்யஜ்ஞம்-பே சத்தெரிந்தவருமான, தம் கபிம்-அந்த சிறிய திருவடியை, மது

---

263. ரா-யு-18-38. 264. கடோபநிஷத்-2-வது வல்லீ
265. ரா-கி-3-27.

ரை: வாக்யை:-மதுரமான சொற்களுடனே, ஸ்நேஹயுக்தம்-ஸ்நேஹத்துடன் கூடியிருக்கும்படி, அப்யபாஷ-பேசுவாயாக.

**266.** ஸோஹம்-158 இலக்கம் பார்க்க.

**267.** ஸர்வலோக ஶரண்யாய ராகவாய மஹாத்மநே ।
நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணமுபஸ்திதம் ॥

(ஏ வானரர்களே) ஸர்வலோகசரண்யாய-எல்லா உலகங்களுக்கும் ரக்ஷகனும், மஹாத்மநே ராகவாய-கம்பீரத்தன்மையுள்ள பெருமாளின்பொருட்டு, உபஸ்திதம்-வந்திருக்கிற, விபீஷணம் மாம்-விபீஷணனென்று பெயரையுடைய என்னை, க்ஷிப்ரம்-விரைவில், நிவேதயத-அறிவியுங்கோள்.

**268.** ஆநயைநம்-263. வது இலக்கம் பார்க்க.

### 162 ஸூத்திரம்

**269.** ஹாரோऽபி நார்ப்பித: கண்டே ஸ்பர்ஶஸம்ரோதபீருணா । ஆவயோரந்தரே ஜாதா: பர்வதா: ஸரிதோ த்ரு (த்ரு) மா: ॥

ஹார: அபி-ஒரு முத்துமாலையும், கண்டே-கழுத்தில், ஸ்பர்சஸம்ரோதபீருணா-ஆலிங்கநத்திற்கு விரோதியாம் என்னுமச்சமுள்ள பிராட்டியாலே, ந அர்ப்பித:-ஸமர்ப்பித்துக்கொள்ளவில்லை. (பெருமாளாலே ஸமர்ப்பிக்கப்படவில்லையென்றும் சொல்லலாம்) (ஏனெனில் ;) ஆவயோ: அந்தரே-எங்களிருவர் மத்தியிலும், பர்வதா:-மலைகளும், ஸரித:-நதிகளும், த்ருமா:-மரங்களும், ஜாதா:-இருக்கிறாப்போலேயிருக்கும்.

### 166 ஸூத்திரம்.

**270.** தீபோ நேத்ராதுரஸ்யேவ ப்ரதிகூலாऽஸி மே த்ரு(டு)வம் ।தத் மச்ச (கச்ச) ஹ்யப்ய (ஹ்ய) நு ஜ்ஞாதா யதேஷ்டம் ஜநகாத்மஜே ॥

ஜநகாத்மஜே-ஏ ஜானகியே, நேத்ராதுரஸ்ய-கண் ரோகமுடையவனுக்கு, தீப இவ-விளக்குபோல, மே ப்ரதிகூலா அஸி-

எனக்கு ப்ரதிகூலமாயிருக்கிறுய். த்ருவம்-நிச்சயம். தத்-ஆகை யால், அநுஜ்ஞாதா-உத்திரவு பெற்றவளாய், யதேஷ்டம் கச்ச- இஷ்டப்படி போவாயாக.

271. ஸபங்காமநலங்காராம் விபத்மா (ஹா) மிவ பத்மி (ஹி) நீம் ।

ஸபங்காம்-அழுக்கப்படிந்தவளும், அநலங்காராம்-அலங்கார மற்றவளும், விபத்மாம்-தாமரைப் பூக்களில்லாத, பத்மிநீம் இவ- தாமரைப்பொய்கையைப் போன்றவளுமாகிய (பிராட்டியை திரு வடி கண்டார்.)

272. தீர்வமுஷ்ணம் விநிஃவஸ்ய மேதிநீமவலோகயந் । உவாவ மேவஸங்காஶம் விஹீஷணமுபஸ்யிதம் ॥ திவ்யாங்மரா மாம் வைதேஹீம் திவ்யாஹரணஹூஷிதாம் । இஹ ஸீதாம் ஶிரஸ் ஸ்நாதாமுபஸ்யாபய மா சிரம் ॥

(பெருமாள்) தீர்க்கம் உஷ்ணம் விநிச்வஸ்ய-சுடும்படியான பெருமூச்சுவிட்டுக்கொண்டு, மேதிநீம் அவலோகயந்-பூமியைப்பார்த்துக்கொண்டு உபஸ்திதம்-கிட்டேயிருக்கிற, மேகஸங்காசம் விபீஷணம்-மேகநிறத்தையுடைய விபீஷணனைப்பார்த்து, உவாச-சொன்னுர். திவ்யாங்கராகாம்-திவ்ய சந்தனக்காப்பு அணிந்தவளாயும்; திவ்யாபரணபூஷிதாம்-நல்ல ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவளாயும், சிரஸ் ஸ்நாதாம்-சிரஸ் ஸ்நாநம்பண்ணினவளாயுமிருக்கிற, வைதேஹீம் ஸீதாம்-ஜநகராஜன் திருமகளான ஸீதாப்பிராட்டியை, இஹ-இவ்விடத்திற்கு உபஸ்தாபய-அழைத்துக்கொண்டுவா, மா சிரம்-தாமதம் வேண்டாம்.

273. அஸ்நாதா த்ர(ஷ்டு) ஷ்டுமிச்சாமி ஹர்த்தாரம் ராக்ஷஸாயிப ॥

ஹே ராக்ஷஸாதிப-ஏ ராக்ஷஸராஜனுன விபீஷணனு! பர்த்தாரம்-என் பர்தாவாகிய பெருமாளே, அஸ்நாதா-ஸ்நாநம் பண்ணுமலே த்ரஷ்டுமிச்சாமி-பார்க்க இச்சிக்கிறேன்.

271. ரா-ஸு-15-21. 272. ரா-யு-118-6,7. 273. ரா-ஸு-118-17

**274.** யதாऽऽஹ ராமோ ஹர்த்தா தே தயா தத கர்துமர்ஹஸி॥

தே பர்த்தா ராம:-உமக்கு பர்த்தாவாகிய பெருமாள், யதா ஆஹ-எப்படிச்சொன்னரோ, ததா-அப்படி, தத்-அதை, கர்துமர்ஹஸி-செய்யக்கடமைபட்டவள். (என்று பிராட்டியைப்பார்த்து விபீஷணன் சொன்னர்.)

## 168 ஸூத்திரம்.

**275.** ஆஹ்லாதசீதநேத்ராம்பு: புலகீக்ருதகாத்ரவாந் ।
ஸதா பரகுணாவிஷ்ட: த்ர(ஷ்ட)ஷ்டவ்ய: ஸர்வதேஹிபி: ॥

ஆஹ்லாதசீதநேத்ராம்பு:-பகவதநுபவத்தாலுண்டான ஸந்தோஷத்தாலே சீதளமான கண்ணீரையுடையவனாய், புலகீக்ருதகாத்ரவான்-மயிர் கூச்சலோடுகூடிய சரீரத்தையுடையவனாய், ஸதா பரகுணாவிஷ்ட:-எப்பொழுதும் பரமாத்மாவின் குணங்களால்ஆவேசமடைந்தவன்போலிருப்பவனாய், ஸர்வதேஹிபி: த்ரஷ்ட்வ்ய:-இவ்விதமாய் ஸகலஜநங்களால் பார்க்கத்தகுந்தவனாய் (ஜ்ஞாநியிருப்பான்)

## 169 ஸூத்திரம்.

**276.** ஆர்த்தாநாமாசுபலதா ஸக்ருதேவ க்ருதா ஹ்யஸௌ ।
த்ரு(ஷ்ட)ப்தாநாமபி ஜந்தூநாம் தேஹாந்தர நிவாரிணீ ॥

அஸௌ-இந்த ப்ரபத்தியானது, ஆர்த்தாநாம்-ஆர்த்தியுடையவர்களுக்கு, ஸக்ருதேவ க்ருதா-ஒரு தடவை செய்யப்பட்டதாய், ஆசுபலதா-சீக்கிரம் பலம் கொடுக்கும், த்ருப்தாநாமபி ஜந்தூநாம்-த்ருப்த ப்ரபந்நரான சேதநருக்கும், தேஹாந்தர நிவாரிணீ-இன்னொரு தேஹம் வரவொட்டாது.

## 179 ஸூத்திரம்.

**277.** அஸந்நேவ ஸ பவதி । அஸத்ப்ரஹ்மே (ப்ரஹ்மே)தி வேத வேத் । அஸ்தி ப்ரஹ்மேதி சேத் வேத । ஸந்தமேநம் ததோ விதுரிதி ॥

ப்ரஹ்ம-ப்ரஹ்மமானது, அஸத்-இல்லை ; இதி-என்று, வேதசேத்-அறிகிறனேயாகில், ஸ:-அவன், அஸந்நேவபவதி-இல்லா

தவனாக ஆகிறான். ப்ரஹ்ம அஸ்தி இதிவேதசேத்-ப்ரஹ்மமிருக்கிறதென்று அறிகிறானேயாகில், ததஃ-அக்காரணத்தினால், ஏநம்-இவனை, ஸந்தம்விதுஃ இதி-இருக்கிறவனாக அறிகிறார்கள் என்று,

## 182 ஸூத்திரம்.

**278**. ந காமகலுஷம் சித்தம் மம தே பாதயோஃஸ்திதம் ।
காமயே வைஷ்ணவத்வம் து ஸர்வஜந்மஸு கேவலம் ॥

தே-தேவரீருடைய, பாதயோஃ-திருவடிகளில், ஸ்திதம்-வ்யவஸ்திதமான, மம சித்தம்-என் மனது, ந காமகலுஷம்-பரமபதத்தை யாசைப்பட்டுக் கலங்குகிறதில்லை. ஸர்வஜன்மஸு-எல்லா ஜன்மங்களிலும், வைஷ்ணவித்வம் து கேவலம்-கேவலதாஸ்ய ஜன்மமான வைஷ்ணவத்வத்தையே காமயே-இச்சிக்கிறேன்.

**279**. நஹிமே ஜீவிதேநார்தோ(யே-ா)நைவார்த்யைர்நவ ஹூஷணைஃ। வஸந்த்யா ராக்ஷஸீமத்யே விநா ராமம் மஹாரயம்॥

மஹாரதம் ராமம் விநா-மஹாரதனாகிய பெருமாளைப்பிரிந்து, ராக்ஷஸீமத்யே வஸந்த்யாஃ மே-அரக்கர் மத்தியில் வஸிக்கின்ற எனக்கு, ஜீவிதேந அர்த்தஃ நஹி-ப்ராணனால் பிரயோஜனமில்லை. அர்த்தைஃ நைவ-அர்த்தங்களாலும் ஒரு பிரயோஜனமில்லை. நசபூஷணைஃ-ஆபரணங்களாலு மொரு ப்ரயோஜனமில்லை.

**280**. ந தேஹம் நப்ராணாந் ந ச ஸுகமஶேஷாபி லஷிதம்
ந சாத்மாநம் நான்யத் கிமபி தவ ஶேஷத்வவிபவாத் ।
பஹிர்பூதம் நாத க்ஷணமபி ஸஹே யாது ஶததா
விநாசம் தத் ஸத்யம் மதுமதந விஜ்ஞாபநமிதம் ॥

தவ-தேவரீருடைய, சேஷத்வவிபவாத்-சேஷத்வமாகிற பெருமைக்கு, பஹிர்பூதம்-புறம்பாயுள்ள, தேஹம்-அந்தரங்கமான சரீரத்தையும், நஸஹே-வேண்டேன், ப்ராணாந் ந-தேஹத்திற்கு தாரகமான ப்ராணங்களையும் சேஷத்வத்திற்கு புறம்பாகில் வேண்டேன், அசேஷாபிலஷிதம்-எல்லாருக்கும் ஆசைப்படத்தகுந்த,

278. ஜிதந்தாஸ்தோத்ரம். 279. ரா-ஸு. 280. ஸ்தோத்ரரத்நம் 57

ந ஸுகம்-ஸுகத்தையும் சேஷத்வத்திற்கு புறம்பாயாகில் வேண்டேன். ஆத்மாநம் ச ந-சேஷத்வத்திற்கு புறம்பாயாகில் ஆத்மாவையும் வேண்டேன். அந்யத் கிமபி-பின்னும் வேறொன்றையும், ந ஸஹே-சேஷத்வத்திற்கு புறம்பாயாகில் வேண்டேன். நாத-ஸர்வசேஷியானவனே ... க்ஷணமபி-க்ஷணகாலமும், ந ஸஹே-ஸஹிக்கில்லேன். தத்-அந்த வஸ்துக்கள், சததா விநாசம் யாது அநேக விதமாய் விநாசத்தை அடையட்டும். மதுமதந-ஓ மதுஸூதனனே! இதம்-இந்த, விஜ்ஞாபநம் விண்ணப்பமானது, ஸத்யம்-மெய்யானது.

## 183 ஸூத்திரம்.

281. விஷஸ்ய விஷயாணாம் ச தூரமத்யந்தமந்தரம் ।
உபபுக்தம் விஷம் ஹந்தி விஷயா: ஸ்மரணாதபி ॥

விஷஸ்ய-விஷத்திற்கும், விஷயாணாம் ச-சப்தாதி விஷயங்களுக்கும், அந்தரம்-தாரதம்யமானது, அத்யந்தம் தூரம் மிகவும் அதிகமானது, விஷம்-விஷமானது, உபபுக்தம் ஹந்தி-புஜித்தவனைக்கொல்லும், விஷயா:-விஷயங்களானவை, ஸ்மரணாதபி-நினைத்தமாத்திரத்திலும் கொல்லும்.

## 184 ஸூத்திரம்.

282. ஆஸ்வாத்ய (த்ய) தஹநஜ்வாலா முதந்யாசமநம் யதா ।
ததா விஷயஸம்ஸர்காத் ஸுகசிந்தா சரீரிண: ॥

தஹநஜ்வாலாம்-அக்னி ஜ்வாலையை, ஆஸ்வாத்ய-பானம்பண்ணி, யதா உதந்யாசமநம்-எப்படி தாஹத்தைத்தீர்க்க நினைக்கிறானோ, ததா-அப்படித்தான், சரீரிண:-ஆத்மாக்களுக்கு, விஷயஸம்ஸர்காத்-விஷய ஸங்கத்தாலே, ஸுகசிந்தா-ஸுகிக்கவேணுமென்றுயோசிப்பது.

283. விஷயாணாம் து ஸம்ஸர்காத் யோ விஹர்த்தி ஸுகம் நர:।
ந்ருத்யத: ஃபணிந: ச்சாயாம் விஶ்ரமாயாஶ்ரயத ஸ: ॥

விஷயாணாம் து-விஷயங்களுடைய, ஸம்ஸர்காத்-ஸம்பந்தத்தாலே, ய: நர:-எந்த மனிதன், ஸுகம் பிபர்த்தி-ஸுகத்தையநு

பவிக்கிறுனே, ஸ꞉-அவன், ந்ருத்யத꞉ பணிந꞉-படத்தை விரித்து ஆடுகிற பாம்பினுடைய, சாயாம்-நிழலை, விச்ரமாய-இளைப்பாறுவதற்கு, ஆச்ரயேத-அடைகிறுன்.

## 188 ஸூத்ரம்.

284. அஜ்ஞ꞉ ஸுகமாராத்ய꞉ (ஸு꞉) ஸுகதரமாராத்ய (ஸு)
தே விசேஷஜ்ஞ꞉ । ஜ்ஞாநலவதுர்விதக்தம் (ஞ்ம்) ப்ரஹ்
மா (ஸ்ரூஹ்ரா) பி நரம் ந ரஞ்ஜயதி ॥

அஜ்ஞ꞉-குணதோஷ விவேசநமில்லாதவன், ஸுகமாராத்ய꞉-ஸுகமாக பூஜிக்கப்படுவான், விசேஷஜ்ஞ꞉-விசேஷஜ்ஞானமுடையவன், ஸுகதரம் ஆராத்யதே-மிகவும் ஸுலபமாக பூஜிக்கப்படுகிறுன். ஜ்ஞானலவதுர்விதக்தம்-அல்ப ஜ்ஞானத்தாலே கர்வமடைந்த, நரம்-மனிதனை, ப்ரஹ்மாபி-பிரமனும், ந ரஞ்ஜயதி-ஸமாதானப்படுத்தமுடியாது.

## 193 ஸூத்ரம்.

285. யா ப்ரீதிர்மயி ஸம்வ்ருத்தா மத்பக்தேஷு ஸதாஸ்து
தே । அவமானக்ரியா தேஷாம் ஸம்ஹரத்யகிலம் ஜகத் ॥

யா ப்ரீதி꞉-எந்த ப்ரீதியானது, மயி-என்னிடத்தில், ஸம்வ்ருத்தா-இருக்கின்றதோ, (அதுவானது) மத்பக்தேஷு-என் ஆச்ரிதர்களிடத்திலும், தே ஸதா அஸ்து-உமக்கு எப்போதுமிருக்கக்கடவது. தேஷாம்-அவர்களுடைய, அவமானக்ரியா-அவமானம் பண்ணுதலானது, அகிலம் ஜகத்-ஜகத்தெல்லாம், ஸம்ஹரதி-நாசம் செய்யும்.

## 197 ஸூத்ரம்.

286. அர்ச்சா (வதா) வதாரோபாதாநவைஷ்ணவோத்பத்திவிந்
தநம் । மாத்ருயோனி பரீக்ஷாயாஸ்துல்யமாஹுர்மநீஷிண꞉ ॥

அர்ச்சாவதாரோபாதாந-அர்ச்சாவதாரத்தின் மூலகாரணத்தினுடையவும், வைஷ்ணவோத்பத்தி-வைஷ்ணவர்களுடைய உத்பத்

---

284. பர்த்ருஹரி-மு-ப-1-2. 285. பார-ஆச்வமேதிகபர்வம். 286. வராஹபுராணம்,

தியினுடையவும், சிந்தநம்-விசாரிப்பது, மனீஷிண:-பெரியோர்கள், மாத்ருயோனி பரீக்ஷாயா: துல்யம் ஆஹு:-தன்னுடைய ஜன்ம ஸ்தானத்தை பரீக்ஷிப்பதற்கொப்பாகுமென்கிறார்கள்.

## 198 ஸூத்திரம்.

287. தேஷாம் தத் வசநம் ஶ்ருத்வா க்ரோத பர்யாகுலாக்ஷரம் ।
ஸ ராஜா புநரேவைதாநிதம் வசநமப்ர (ப்ரு) வீத் ॥ ப்ரத்
யாக்யா (க்யா) தோ ஹகவதா குருபுத்ரைஸ்ததைவச ।
அந்யாம் கதிம் கமிஷ்யாமி ஸ்வஸ்தி வோ஽ஸ்து தபோ
தநா: ॥

தேஷாம்-அந்த குருபுத்ரர்களுடைய க்ரோதபர்யா குலாக்ஷரம்-கோபத்தாலே துடித்த சொற்களையுடைய, தத் வசநம்-அந்த வார்த்தையை, ச்ருத்வா-கேட்டு, ஸ ராஜா-அந்த த்ரிசங்கு மஹாராஜன், ஏதாந்-இந்த குருபுத்ரர்களை நோக்கி, புநரேவ-மறுபடியும், இதம் வசநம் அப்ரவீத்-இந்த வார்த்தையைச் சொன்னான், (அதாவது) பகவதா-ஆசாரியராலும், ததைவ ச-அப்படியே, குரு புத்ரை:-குரு புத்ரர்களான உங்களாலும், ப்ரத்யாக்யாத:-அவமானப் படுத்தப்பட்டேன். (ஆகையால்) அந்யாம் கதிம் கமிஷ்யாமி-வேறொரு ஆசாரியனிடத்திற்குப்போகிறேன். தபோதநா:-தவத்தைத் தனமாகவுடையவர்களே! வ:-உங்களுக்கு, ஸ்வஸ்தி அஸ்து-ஸௌக்கியமுண்டாகட்டும்.

288. ருஷிபுத்ராஸ்து தத் ஶ்ருத்வா வாக்யம் வோராபி ஸம்
ஹிதம் । ஶேபு: பரம ஸங்க்ருத்தா: (க்ருத்தா:) சண்டா
ளத்வம் கமிஷ்யஸி ॥

ருஷிபுத்ரா: து-அந்த வஸிஷ்ட புத்ரர்கள், கோராபிஸம்ஹிதம்-கோர எண்ணங்கொண்ட, தத் வாக்யம் ச்ருத்வா-அந்த வாக்கியத்தைக் கேட்டு, பரம ஸம்க்ருத்தா:-மிகக் கோபமுடையவர்களாய், சண்டாளத்வம் கமிஷ்யஸி-சண்டாளத்தன்மையை யடைவாயாக, (என்று) சேபு:-சபித்தார்கள்.

---

287. ரா-பால-58-9. 288. ரா-பால-58-9.

**289.** அதராத்ர்யாம் வ்யதீதாயாம் ராஜா சண்டாலதாம் கத:।
நீலவஸ்த்ர தரோ நீல: பருஷோ த்வ (த்த) ஸ்தமூர்த்த
(ஜ) ஜ: ॥ சித்யமால்யாங்கராகஸ்சாயஸாபரணோऽபவத் ॥

அத—அப்படி சபித்தவுடன், ராத்ர்யாம் வ்தீதாயாம்—அந்த் ராத்ரி கடந்தவுடன், ராஜா—த்ரிசங்குமஹாராஜன், சண்டாளதாம் கத:—சண்டாளத்தன்மையையடைந்தவராய், நீலவஸ்த்ரதர:—கருத் தவஸ்த்ரத்தையுடையவனய், நீல:—கருத்த சரீரத்தையுடையவ ஞய், பருஷ:—கடினமான பேச்சையுடையவனுய், த்வஸ்தமூர்த்த ஜ:—மயிர்குறைந்தவனய், சித்யமால்யாங்கராக:—சவத்திற்கு அலங் கரித்தமாலைகளாலும் சந்தனம் முதலியவற்ருலும் அலங்கரித்த் தேஹமுடையனுய், ஆயஸாபரண: ச—இறும்பு நகையையுடையவ ஞகவும், அபவத்—ஆனுன்.

**290.** அநாவாராந்—75—வது இலக்கம் பார்க்க

**291.** பத்மகோடி—45—வது இலக்கம் பார்க்க.

## 203 ஸூத்திரம்.

**229.** கிஞ்சிதாகத ஸம்ரம்போ விஸ்வாமித்ரோऽப்ர(ப்ர)வீதி
தம்। ஏகத: ஸ்யாமகர்ணாநாம் ஸதாந்யஷ்டௌ து தேஹி
மே॥ ஹயாநாம் வந்த்ர (ச) ஸுப்ரா (ஹ்ரா) ணாம் மச்ச
(வ) காலவ மா சிரம் ॥

கிஞ்சித் ஆகதஸம்ரம்ப:—கொஞ்சம் கோபமடைந்தவரான, வி ச்வாமித்ர:—விச்வாமித்ரன், இதம் அப்ரவீத்—இப்படிச்சொன்னுன்; ஏகத: ச்யாமகர்ணாநாம்—ஒருகாது கருத்திருக்கிறதும், சந்த்ரசுப் ராணும்—சந்திரன்போல் வெண்ணிறமுள்ள, ஹயாநாம்—குதிரைக ளுடைய, சதாநி அஷ்டௌ ச—எண்ணூறு, மே தேஹி—எனக்குக் கொடு, காலவகச்ச—ஏகாலவனே! போ, மாசிரம்—தாமதம்வேண்டாம்.

**293.** கிம் நு தே மனஸா த்யா(த்யா)தமஸுகம் பதிதாம்வர।
ந ஹ்யயம் ஭வத: ஸ்வல்போ வ்யபிசாரோ ஭விஷ்யதி ॥

289. ரா—பால—58—10. 292. பாரதம்—உத. 293. பார—உத்.

ஹேபததாம் வர-ஹே பக்ஷிராஜ! தே மனஸா-உமதுமனதால், அசுபம்-தீங்கானது, கிம நுத்யாதம்-ஏதாவது நினைத்ததுண்டா? பவதஃ-தேவரீருக்கு, ஸ்வல்பஃ-அல்பமாகிலும், அயம் வ்யபிசாரஃ-இப்படிப்பட்ட தோஷம், நபவிஷ்ய தி ஹி-வருவதற்கு ஹேது இல்லை.

## 204 ஸூத்திரம்.

**294.** உபாப்யா(ஹ்யா) மேவ பக்ஷாப்யாம் (ஹ்யாം)ஆகாசே பக்ஷிணாம் கதிஃ। ததைவஜ்ஞான கர்மாப்யா(ஹ்யா)ம் ப்ராப்யதே ஹபவான் ஹரிஃ ॥

உபாப்யாம் பக்ஷாப்யாம் ஏவ-இரண்டு சிறகுகளாலேயே, பக்ஷிணாம்-பக்ஷிகளுக்கு, ஆகாசே-ஆகாசத்தில், கதிஃ-எப்படி ஸஞ்சாரமோ, ததைவ-அப்படியே, ஜ்ஞானகர்மப்யாம்-ஜ்ஞாநாநுஷ்டாநங்களாலே, பகவான் ஹரிஃ-எம்பெருமான், ப்ராப்யதே-அடையப்படுகிறான்.

**295.** பசுர்மநுஷ்யஃ பக்ஷீவா யேச வைஷ்ணவ ஸம்ச்ரயாஃ। தேநைவ தே ப்ரயாஸ்யந்தி தத்விஷ்ணோஃ பரமம்பதம் ॥

பசுஃ மநுஷ்யஃ பக்ஷீவா-பசுவாகிலும், மனுஷ்யனாகிலும் பக்ஷியாகிலும், யேச- (இவர்களுக்குள்) எவர்கள், வைஷ்ணவ ஸம்ச்ரயாஃ-வைஷ்ணவரை ஆச்ரயித்திருக்கிறார்களோ, தே-அவர்கள், தேநைவ-அந்தவைஷ்ணவ ஸம்பந்தத்தாலே, விஷ்ணோஃ தத் பரமம்பதம்-விஷ்ணுவின் அந்த பரமபதத்தை, ப்ரயாஸ்யந்தி-அடைகிறார்கள்.

**296.** யம் யம் ஸ்ப்ருசதி பாணிப்யாம்(ஹ்யாം) யம் யம் பச்யதி சக்ஷுஷா। ஸ்தாவராண்யபி முச்யந்தே கிம் புநர் பாந்தவா ஜநாஃ ॥

யம் யம்-எதையெதை, பாணிப்யாம் ஸ்ப்ருசதி-திருக்கைகளால் தொடுகிறானோ, யம் யம்-எதையெதை, சக்ஷுஷா பச்யதி-திரு

---

295. பாரத்வாஜஸ்ம்ருதி. 296. பார-ஸ்மி.

க்கண்களாலே பார்க்கிருனே, ஸ்தாவராணி அபி_அவைகள் ஸ்தாவ ரங்களானபோதிலும், முச்யந்தே_மோக்ஷத்தையடைகின்றன, பா ந்தவாஃ ஜநாஃ கிம்புநஃ_பந்துஜனங்கள் விஷயத்தில் சொல்லவேண் டியதென்ன.

## 206 ஸூத்திரம்.

297. மத்ஸக்தம்.—45_வது இலக்கம் பார்க்க.

298. த்வம் வை கீதப்ரஸாவேந நிஸ்தாரயிதுமர்ஹஸி ।
ஏவமுக்த்வாத சண்டாலம் ராக்ஷஸஶ்ஶரணம் கதஃ ॥

த்வம்_தேவரீரே, கீதப்ரபாவேந_கானப்ரபாவத்தாலே, நிஸ்தா ரயிதும் அர்ஹஸி_இந்த பாபஸமுத்திரத்திலிருந்து தாண்டுவைப்ப தற்கு தகுந்தவராகிறீர். ஏவம் உக்த்வா அத_இப்படிச் சொல்லிய வுடன், ராக்ஷஸஃ_ப்ரஹ்மராக்ஷஸனானவன், சண்டாளம் சரணம் கதஃ_நம்பாடுவானைச் சரணமடைந்தான்.

299. யந்மயா பஶ்சிமம் கீதம் ஸ்வரம் கைஶிகமுத்தமம் ।

மயா_என்னாலே, கைசிகம்_கைசிகமென்று பெயரையுடைய தும், உத்தமம் ஸ்வரம்_உயர்ந்ததான ஸ்வரமானது, பச்சிமம்கீதம கடைசியாகப்பாடப்பட்டதோ, (அதினாலே உன்னைக்கரையேற்று விக்கிறேனென்று நம்பாடுவான் சொன்னான்.)

300. மார்காகதோ ந்ருபஶ்ரேஷ்டஸ் தம் தேஶம் ப்ராப்தவான் வஸுஃ। அந்தரிக்ஷசரஃ ஸ்ரீமான் ஸமக்ர(க்ரு)பலவாஹநஃ॥
தம் த்ரு(த்ரூ)ஷ்ட்வா ஸஹஸா யாந்தம் வஸும் தேதவந்தரி க்ஷகம் । ஊர்த்வர்த்விஜாதயோ தேவா ஏஷஃ ஹேத்ஸ்யதி ஸம்ஶயம் ॥

ஸமக்ரபலவாஹநஃ_நிறைந்த ஸைந்யங்களோடும் வாஹனங்க ளோடுங்கூடினவனாய், அந்தரிக்ஷசரஃ_ஆகாசத்தில் ஸஞ்சரிப்பவரா ய், ஸ்ரீமான்_ஸர்வவித ஸம்பத்தையுடையவனாய், மார்க்காகதஃ_மர் க்கவசாத் போகிறவனாய், ந்ருபஶ்ரேஷ்டஃ வஸுஃ_ராஜஶ்ரேஷ்டரா

---

298. 299. கைசிகமாஹாத்ம்யம்.

ன உபரிசரவஸுவானவன், தம் தேசம் ப்ராப்தவான்-விவாதம் நடக்கும் அந்தவிடத்திற்கு வந்தான். தே து-அவர்களோ, அந்தரிக்ஷகம்-ஆகாசத்திலிருப்பவரும், ஸஹஸாயாந்தம்-வேகமாய்ப் போகிறவருமான, தம் வஸும் த்ருஷ்ட்வா-அந்த உபரிசரவஸுவைப் பார்த்து, த்விஜாதய:-ருஷிகளென்ன, தேவா:-தேவதைகளென்ன, இவர்கள், ஏஷ:-ஸம்சயம் சேத்ஸ்யதி- இவன் இந்தஸம்சயத்தைப்போக்க வல்லனென்று, ஊசு:-சொன்னார்கள்.

301. யாந்யைர்யஷ்டவ்யமித்யேஷ பக்ஷோऽஸ்மாகம் நராதிப ।
தேவதாநாம் ஹி பஸுபி:பக்ஷோ ராஜன் வதஸ்வ ந: ॥

ஹே நராதிப-ஓ ராஜாவே, தாந்யை:-தான்யங்களால், (மாவுனால்)யஷ்டவ்யம்-யாகஞ்செய்யவேண்டியது, அஸ்மாகம் ஏஷபக்ஷ:-என்பது எங்களுடைய அபிப்ராயம். பசுபி:-ஸாக்ஷாத் பசுவைக் கொண்டு யஜிக்கவேண்டுமென்பது, தேவாநாம் ஹிபக்ஷ:--தேவதைகளுடைய அபிப்ராயம். ஹே ராஜன் ஓ அரசனே! ந: வதஸ்வ-எங்களுக்கு ந்யாயம் சொல்லு.

302. தேவதாநாம் மதம்ஶ்ருத்வா வஸுநா பக்ஷஸம்ஶ்ரயாத்।
சாகேநாஜேந யஷ்டவ்ய மேவமுக்தம் வசஸ்ததா ॥

வஸுநா-உபரிசரவஸுவினால், தேவதாநாம் மதம் ச்ருத்வா து-தேவதைகளுடைய அபிப்பிராயத்தைக்கேட்டு, பக்ஷ ஸம்ச்ரயாத்-அவர்களின் பக்ஷத்தையவலம்பித்து, அஜேந சாகேந-ஆட்டினால், யஷ்டவ்யம்-யஜிக்கவேணுமென்று, ஏவம ததா வச: உக்தம்-இவ்விதமாய் அப்பொழுது வார்த்தை சொல்லப்பட்டது.

303. குபிதாஸ்தே ததா ஸர்வே முநய: ஸூர்யவர்சஸ: । ஊசுர்வஸும் விமாநஸ்தம் தேவபக்ஷார்த்தவாதிநம் ॥ ஸுரபக்ஷோ க்ரு (ஹ) ஹீதஸ்தே யஸ்மாத் தஸ்மாத்திவ:பத। அத்ய (ப்ர) ப்ரப்ரு (ஹ்ரு) திதே ராஜந்நாகாஶே விஹதா கதி: ॥ அஸ்மத் ஶாபாபிகாதேந மஹீம் பித்த்வா ப்ரவேக்ஷ்யஸி । விருத்தம் வேதஸூத்ராணாமுக்தம் யதி பவேந்ந்ருப ॥ வயம் விருத்தவசநா யதி தத்ர பதாமஹே ॥

ததா-அப்பொழுது, ஸர்வே முனய:-ஸமஸ்தமான ருஷிகளும், குபிதா:-கோபமடைந்தவர்களாய், ஸூர்யவர்ச்சஸ:-ஸூர்யனைப் போன்ற காந்தியையுடையவர்களாய், விமானஸ்தம்-விமானத்திலிருக்கிறவனும், தேவபக்ஷார்த்தவாதிநம்-தேவபக்ஷபாதியாய் பேசினவனுமான, வஸும்-உபரிசரவஸுவைப்பார்த்து, ஊசு:-சொன்னார்கள், யஸ்மாத்-எந்த காரணத்தால், தே-உன்னால், ஸுரபக்ஷோக்ருஹீத:-தேவதைகளின் பக்ஷமானது அங்கீகரிக்கப்பட்டதோ, தஸ்மாத்-அந்தக் காரணத்தினால், திவ:பத-ஆகாசத்தினின்றும் விழக்கடவாய், அத்யப்ரப்ருதி-இன்று முதல், ராஜந்-ஓ அரசனே! தே-உனக்கு, ஆகாசேகதி: விஹதா-ஆகாசத்தில் ஸஞ்சரிப்பது போய்விட்டது. வேதஸூத்ராணும்-வேத ஸூத்திரங்களுக்கு, விருத்தம்-விருத்தமாக, உக்தம் பவேத்யதி-சொல்லப்பட்டதேயானால், அஸ்மத் சாபாபிகாதேந-எங்கள் சாபத்தின் அடியினால், மஹீம் பித்வா-பூமியைப் பிளந்துகொண்டு, ப்ரவேக்ஷ்யஸி-விழக்கடவாய், வயம் விருத்தவசநா: யதி-நாங்கள் விருத்தமான வார்த்தையையுடையவர்களானால், தத்ர பதாமஹே-அப்படியே நாங்களும் அங்கு விழக்கடவோம்.

**304**. ததஸ்தஸ்மிந் முஹூர்த்தேது ராஜோபரிவஸுஸ்தயா।
அதோவைஸம்பபூவாஸு ஹூமேர்விவரகோநருப:॥

தத:-பிறகு, தஸ்மிந் முஹூர்த்தேது-அப்படி சபித்த அந்தகாலத்திலேயே, உபரிவஸு: ராஜா-அந்த உபரிசரவஸு மஹாராஜன், ததா-அப்படியே, அதோவை-தலைகீழாய், ந்ருப:-அந்த அரசன், ஆசுபூமே: விவரக:-சீக்கிரமாய் பூமியின் ரந்த்ரத்தில் ப்ரவேசித்தவனாய், ஸம்பபூவ-ஆனான்.

## 207 ஸூத்திரம்.

**305**. ஸர்வே வேதா யத்பதமாமநந்தி தபாம்ஸி ஸர்வாணிச யத்வதந்தி। யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தி தத்தேபதம் ஸங்க்ர (ஹே)ஹேண ப்ர (ப்ரு) வீம்யோமித்யேதத்॥

---

300—முதல் 304. வரையில் பாரதம்-மோக்ஷதர்மம்.
305. கடோபநிஷத்-15.

யத்பதம்_யாதொரு ப்ராப்யஸ்வரூபத்தை, ஸர்வேவேதா:_ எல்லாவேதங்களும், ஆமநந்தி_சொல்லுகின்றனவோ, யத்_யாதொன்றை, ஸர்வாணி தபாம்ஸி ச_எல்லா தவங்களும், வதந்தி_சொல்லுகின்றனவோ, யத் இச்சந்த:_யாதொன்றை விரும்பினவர்களாய், ப்ரஹ்மசர்யம் சரந்தி_ப்ரஹ்மசரியத்தைச் செய்கிறார்களோ, தே_உனக்கு, தத்பதம்_அந்தப் ப்ராப்யஸ்வரூபத்தை, ஸங்க்ரஹேண_சுருக்கமாய், ப்ரவீமி_சொல்லுகிறேன். ஏதத்_இதுவானது, ஓமிதி_ஓம என்பது.

**306.** ஸர்வஸ்ய—96_வது இலக்கம் பார்க்க.

**307.** ஸ்வாத்யா (ஶ்ரா)யோzதயே (ஶ்ர) தவ்ய: ॥

ஸ்வாத்யாய:_வேதங்கள், அத்யேதவ்ய:_அத்யயநம்பண்ணத்தகுந்தன.

**308.** மத்ஸக்தாந் ஶ்ரோத்ரியோ நிந்தந் ஸத்ய: (ஶ்ர:) வண்டாளதாம் வ்ரஜேத் ।

ச்ரோத்ரிய:_வேதாத்யயநம்பண்ணினவன், மத்பக்தாந் நிந்தந்_என் பக்தர்களை நிந்தித்தானேயாகில், ஸத்ய:_உடனே, சண்டாளதாம் வ்ரஜேத்_சண்டாளத்தன்மையையடைவான்.

## 212 ஸூத்திரம்.

**309.** காலேஷு—229_வது இலக்கம்பார்க்க.

## 217 ஸூத்திரம்.

**310.** ஶ்வபசோzபி_149_வது இலக்கம்பார்க்க.

## 220 ஸூத்திரம்.

**311.** ஸக்திரஷ்டவிதா ஹ்யேஷா யஸ்மிந் ம்லேச்சேzபி வர்த்ததே । தஸ்மைதேயம் ததோக் ரா (ஶ்ரா) ஹ்யம் ஸ ச பூஜ்யோ யதா ஹ்யஹம் ॥

அஷ்டவிதா_எட்டு விதமான, ஏஷாபக்தி: ஹி_இந்த பக்தியானது, யஸ்மின் ம்லேச்சேzபி வர்த்ததே_எந்த மிலேச்சரிடத்திலுமிருக்கிறதோ, தஸ்மைதேயம்_அவன் பொருட்டு அபேக்ஷிதார்

த்தங்களைச் சொல்லவேணும், தத: க்ராஹ்யம்-அப்படியே அவரிடத்தில் விசேஷார்த்தங்களிருந்தால் க்ரஹிக்கத்தகுந்தது, ஸச-அப்படிப்பட்டவர், அஹம் யதாஹி-நான் எப்படியோ, (அப்படி) பூஜய:-பூஜிக்கத்தகுந்தவனாவான்.

## 223 ஸூத்திரம்.

312. குருரேவ பரம் ப்ரஹ்மா குருரேவபராகதி: । குரு
ரேவ பராவித்யா குருரேவ பராயணம் ॥ குருரேவபர:
காம: குருரேவ பரம் தநம் ॥

குருரேவ பரம் ப்ரஹ்மா-ஆசார்யனே பெரிய ப்ரஹ்மம், குருரேவ பராகதி:-ஆசார்யனே உயர்ந்த உபாயம், குருரேவ பராவித்யா-ஆசார்யனே உயர்ந்த வித்யை, குருரேவ பராயணம்-ஆசார்யனே ப்ராப்யம், குருரேவபர: காம:-ஆசார்யனே மிகவும் விரும்பத்தக்கவன், குருரேவ பரம் தனம்-ஆசார்யனே உயர்ந்ததனம்.

## 226 ஸூத்திரம்.

313. மத்பக்தம் சூத்ர (ஸூ) ஸாமாந்யா உவமந்யந்தி யே
நரா: । நரகேஷ்வவதிஷ்டந்தி வர்ஷகோடீர் நராதமா: ॥
சண்டாளமபி மத்பக்தம் நாவமந்யேத புத்திமான் ।
அவமானாத் பதத்யேவ ரௌரவே நரகே வ ஸ: ॥

யே நரா:-எந்த மனிதர்கள், மத்பக்தம்-என் பக்தனை, சூத்ர ஸாமான்யாத்-மற்ற சூத்ரஸமானமாக, அவமன்யந்தி-அவமானிக்கிறார்களோ, நராதமா:-அந்த கீழ்ப்பட்டமனிதர்கள், நரகேஷு-நரகங்களிலே, வர்ஷகோடீ:-அவதிஷ்டந்தி அநேக கோடிவர்ஷங்கள் இருக்கிறார்கள். மத்பக்தம்-என்பக்தனை, சண்டாளமபி-சண்டாளனானபோதிலும், புத்திமான்-ஜ்ஞானமுள்ளவன், நாவமன்யேத-அவமானிக்கக்கூடாது. அவமானாத்-அப்படித் தெரியாமல் அவமதிசெய்தால், ஸ:-அவன், ரௌரவே நரகே பததி ஏவ-ரௌரவம்முதலிய நரகங்களில் அவசியமாய் விழுகிறான்.

315. ந சூத்ரா (ஸூ) பகவத்பக்தா விப்ரா பாகவதா: ஸ்ம்
ருதா: । ஸர்வவர்ணேஷு தேசூத்ரா யேஹ்ய பக்தா
ஜனார்தனே ॥

பகவத்பக்தா:-பகவானிடத்தில் பக்தியுள்ளவர்கள், ந சூத்ரா:-சூத்ரர்களல்ல, விப்ரா: பாகவதா: ஸ்ம்ருதா:-பாகவதரான ப்ராஹ்மணர்களென்று ஸ்ம்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறார்கள். ஜநார்தநே-கண்ணனிடத்தில், யே அபக்தா: ஹி-எவர்கள் பக்தர்களல்லரோ, தே-அவர்கள், ஸர்வவர்ணேஷு-எல்லா வர்ணங்களிலும், சூத்ரா:-சூத்ரர்கள்.

316. மத்பக்தஜன வாத்ஸல்யம் பூஜாயாம் சாநுமோதநம்। ஸ்வயமப்யர்ச (ஹ்யுவ-டு) நம் சைவ மதர்த்தே டம்பவர்ஜநம் ॥
மத்கதாச்ரவணே பக்தி: ஸ்வரநேத்ராங்க (ஜு-ம) விக்ரியா।
மமாநுஸ்மரணம் நித்யம் யச்ச மாம் நோபஜீவதி ॥ பக்திரஷ்டவிதா ஹ்யேஷா யஸ்மிந் ம்லேச்சே஽பி வர்த்ததே।
ஸவிப்ரேந்த்ர: (ஸூர:)முனி: ஸ்ரீமான் ஸயதிஸ்ஸச பண்டித:। நமே பூஜ்யச்சதுர்வேதீ பூஜயந் பக்திவர்ஜித: ॥
ஸமே பூஜ்ய: ஸதாவாஸௌ மத்பக்த: ச்வபசோ஽பிய: ॥
தஸ்மைதேயம் ததோக்ராஹ்யம் ஸ ச பூஜ்யோயதாஹ்யஹம்॥

மத்பக்தஜனவாத்ஸல்யம்-என்னடியார்களிடத்தில் அன்பும், பூஜாயாம் அநுமோதநம் ச-என் பூஜையில் ஸந்தோஷிப்பதும், ஸ்வயம் அப்யர்ச்சநே யத்ந:-தான் பூஜைசெய்வதில் யத்நமும், மதர்த்தே டம்பவர்ஜநம்-எனக்கான விஷயத்தில் டம்பமின்மையும், மத்கதாச்ரவணே பக்தி:-என் திவ்யசரிதங்களைக் கேட்பதில் பக்தியும், ஸ்வரநேத்ராங்கவிக்ரியா-(அதினாலுண்டான) குரல் தழுதழுத்தலும், கண்ணீர் பெருக்குவதும், மயிர்க்கூச்சலடைவதும், மம நித்யம் அநுஸ்மரணம்-என்னை எப்போதும நினைப்பதும, ய: ச மாம் நோபஜீவதி-என்னை வைத்துக்கொண்டு ஜீவிக்காமையும், அஷ்டவிதா ஏஷாபக்தி: ஹி-(இவையாகிற) எட்டுவிதமான இந்த பக்தியானது, யஸ்மிந் ம்லேச்சே஽பி வர்த்ததே-எந்த மலேச்சனிடமுமிருக்கிறதோ, ஸ:-அவன், விப்ரேந்த்ர:-ப்ராஹ்மணோத்தமன், முனி:-ருஷி, ஸ்ரீமாந்-ஸம்பத்தையுடையவன், ஸ: யதி:-அவன் ஸந்யாஸி, ஸ ச பண்டித:-அவனே பண்டிதன், சதுர்வேதீ-நான்கு வேதமறிந்தவனும், பக்திவர்ஜித: பூஜயந்-பக்தியில்லாமல் என்னை

பூஜிக்கிறவன், மே ந பூஜ்ய:-எனக்கு பூஜிக்கத்தகுந்தவனல்லன், ய:-எவன் ச்வபச: அபி-ச்வபசனுயிருந்தாலும், மத்பக்த:-என்பக்தனுயிருக்கிருனே, ஸ: அபிஸள-அந்த இந்த ச்வபசன், ஸதாமே பூஜ்ய:-எப்பொழுதும் பூஜிக்கத்தகுந்தவன். தஸ்மை தேயம் ததோக்ராஹ்யம்-அவனுக்கு ஜ்ஞானப்ரதாநம் பண்ணவேணும், அவனிடத்திலிருந்து ஜ்ஞானம் பெற்றுக்கொள்ளவேணும், அஹம் யதாஹி ஸ ச பூஜ்ய:-என்னைப்போல் அவனும் பூஜிக்கத் தகுந்தவனுகிருன்.

**317.** ஶூத்ரம் வா ஹைவத்ஹக்தம் நிஷாதம் ஶ்வபசம் தயா ।
வீக்ஷதே ஜாதிஸாமாந்யாத் ஸ யாதி நரகம் நர:॥

பகவத்பக்தம்-பகவத் பக்தனுகிய, சூத்ரம் வா-சூத்ரனையும், நிஷாதம்-வேடனையும், ச்வபசம் ததா-நாய் மாம்ஸம் புஜிக்கிறவனையும், ய: ஜாதிஸாமாந்யாத் வீக்ஷதே-எவன் அந்தந்தஜாதியின்படி பொதுவாகப்பார்க்கிருனே, ஸ நர: நரகம் யாதி-அந்த மனிதன் நரகத்தையடைவான்.

**318.** மத்பகதம்—45-வது இல்க்கம்பார்க்க.

**318.** ஶ்வபச:—149-வது இலக்கம்பார்க்க.

**319.** விப்ராத் தவிஷட்குண யுதாஉரவிநஉநாஹ பாஉாரவிந்த
விமுவாத் ஶ்வபவம் வரிஷடம்। மந்யே தஉர்ப்பித மனோ
வவநேஹிதார்யப்ராண: புநாதி ஸகலம் நது ஹூரிமாந: ॥

அரவிந்தநாப பாதாரவிநத விமுகாத்-பத்மநாபனுடைய பாதாரவிந்தங்களில் விமுகனுன, த்விஷட்குணயுதாத்-பன்னிரண்டு குணங்களோடுகூடிய, விப்ராத்-ப்ராஹ்மணனைக்காட்டிலும், ச்வபசம் வரிஷ்டம்-ச்வபசன் ச்ரேஷ்டன், (என்று) மன்யே-எண்ணுகிறேன், ததர்ப்பித மனோவசநே ஹிதார்த்தப்ராண:-பகவத் திருவடிகளில் வைக்கப்பட்ட மனது, வாக், காயம, த்ரவ்யம, ப்ராணன், இவைகளுடையவன், ஸகலம் புநாதி-எல்லாவற்றையும் பரிசுத்தி செய்கிருன்; நது பூரிமானஃ-அதிக அஹங்காரமுள்ளவன் அப்படி பரிசுத்தி செய்யமாட்டான்.

**320.** வைஷ்ணவாநாம் விஶேஷோऽஸ்தி விஷ்ணோராயதநம் ம
ஹத் । ஜங்கமஶ்ரீவிமாநாநி ஹ்ருதயாநி மநீஷிணாம் ॥
யஃ பஶ்யதி ஶுபாசாரம் வைஷ்ணவம் வீதகல்மஷம் ।
யஸ்மிங்கஸ்மிந் குலேஜாதம ப்ரணமேத்தண்டவத்புவி ॥

வைஷ்ணவாநாம் விசேஷஃ அஸ்தி-வைஷ்ணவர்களுக்கு ஒரு விசேஷமுண்டு. (என்னென்னில்) விஷ்ணோராயதநம் மஹத்-அவர்களுடைய திருமேனியானது பகவானின் பெரிய திருக்கோயில், மநீஷிணாம் ஹ்ருதயாநி-வித்வான்களுடைய ஹ்ருதயங்கள், ஜங்கம ஶ்ரீவிமாநாநி-ஸம்பத்கரமாய் ஸஞ்சரிக்கின்ற விமானங்களாயிருக்கின்றன, சுபாசாரம்-மங்களகரமான ஆசாரத்தை யுடையவனையும், வீதகல்மஷம்-தோஷமற்றவனையும், யஸ்மிங்கஸ்மிந் குலேஜாதம்-எப்படிப்பட்ட நீசகுலத்திற் பிறந்தவனையுமிருக்கிற, வைஷ்ணவம் யஃ பஶ்யதி-வைஷ்ணவனை எவன் பார்க்கிறானோ, (உடனே) புவி-தண்டவத் ப்ரணமேத்-பூமியில் ஒரு தடிபோல் விழுந்து ஸேவிக்கவேணும்.

## 223 ஸூத்திரம்.

**321.** தர்மஜ்ஞ ஸமயஃ ப்ரமாணம் வேதாஶ்ச ।

தர்மஜ்ஞ ஸமயஃ-பெரியோர்களுடைய அநுஷ்டானமும், வேதாஃச-வேதங்களும், ப்ரமாணம்-ப்ரமாணம்.

**322.** யாவந்ந க்ருஹ்ணந்தி ஶிராம்ஸி பாணா ரா
மேரிதா ராக்ஷஸபுங்கவாநாம் । வஜ்ரோபமா வாயு ஸமான
வேகாஃ ப்ரதீயதாம் தாஶரதாய மைதிலீ ॥

வஜ்ரோபமாஃ-வஜ்ரத்திற்கு ஒப்பானதும், வாயு ஸமானவேகாஃ-காற்றுக்கு நிகரான வேகமுடையனவுமான, பாணாஃ-பாணங்கள், ராமேரிதாஃ-பெருமாளால் ஏவப்பட்டனவாய், ராக்ஷஸ புங்கவாநாம்-ராக்ஷஸ ச்ரேஷ்டர்களுடைய, சிராம்ஸி-தலைகளை, யாவத் ந க்ருஹ்ணந்தி-எதற்குள் க்ரஹிக்கவில்லையோ, (அதற்குள்) மைதிலீ-ஸீதாப்பிராட்டி, தாசரதாய-பெருமாள்பொருட்டு, ப்ரதீயதாம்-கொடுக்கப்படட்டும்.

---

321. ஆபஸ்தம்பதர்மஸூத்ரம். 322. ரா-யு-14-4.

**323.** அந்யஸ்தவேவம் வியம்ப்ரூ (ஞ்ர) யாத் வாக்ய மேத
ந்நிஶாசர । அஸ்மிந் முஹூர்த்தே நபவேத் த்வாம் து
யிக் குலபாம்ஸநம் ॥

நிசாசர_ஓ ராக்ஷஸ! அந்ய: து-வேறொருவன், ஏவம்விதம் இவ்வண்ணம், ஏதத் வாக்யம் ப்ரூயாத்_இந்த வாக்யத்தைச்சொல்வானேயாகில், அஸ்மிந் முஹூர்த்தே ந பவேத்_இந்த முஹூர்த்தத்தில் இரான் (ஒழித்துவிடுவேனென்றபடி.) குலபாம்ஸநம் த்வாம் து திக்_இராக்கத குலத்தில் தள்ளுண்ட உனக்கு நிந்தையுண்டாகுக.

**324.** வசஸா ஸாந்த்வயித்வைநம் லோசநாப்யாம் (ஞ்ரா) பிபந்
நிவ । ஆக்யா (வ்யா) ஹி மம தத்த்வேந ராக்ஷஸாநாம்
பலாபலம் ॥

(பெருமாள்) ஏநம்_சரணாகதனை ஸ்ரீவிபீஷணாழ்வானை, வசஸா ஸாந்த்வயித்வா_நல் வார்த்தை சொல்லி, லோசநாப்யாம்_திருக்கண்களாலே, பிபந்நிவ_குளிரக் கடாக்ஷித்து, ராக்ஷஸாநாம் பலாபலம்_ராக்ஷஸர்களுடைய பலாபலத்தை, மம தத்த்வேந ஆக்யாஹி_எனக்கு உண்மையாய் சொல்லவேணும் (என்றார்.)

## 229 ஸூத்திரம்.

**325.** மர்யாதாநாம்—217_வது இலக்கம்பார்க்க.

## 230 ஸூத்திரம்.

**326.** தர்மராஜஸ்து தத்ரைநம் ஸஞ்ஜஸ்காரயிஷுஸ்ததா। உக்
தாகாமோऽவத்வித்வாநதாகாலே வசோऽப்ர(ஞ்ர)
வீத் ॥ ஹோ ஹோ ராஜந் ந உக்த(ஞு) வ்யமேதத் விதுர
ஸம்ஜ்ஞிகம்। களேபரமிஹைதத்தே நைஷதர்ம: ஸநாதந:॥
லோகவைலக்ஷண்யே நாம ஹவிஷ்யத்யஸ்ய பார்த்திவ।
யதிதர்மமவாப்தோऽஸௌ ந ஶோச்ய ஹரதர்ஷண॥

தர்மராஜ: து_தர்மபுத்ரரானவர், தத்ர_அந்தவிடத்தில், ஏநம்_இந்த விதுரரை, வித்வாந்_(ஜ்ஞானத்தையும் வர்ணத்தையும்)

---

323. ரா_யு-16_15. 354. ரா_யு-19_7. 326. பாரதம்.

அறிந்தவராய், ஸஞ்சஸ்காரயிஷூ:- (ஜ்ஞானத்தைப்பார்த்து) ஸம்ஸ்கரிக்கவேணுமென்று, விரும்பினவராய், ததா-அப்படியே, தக்துகாம: ச- (வர்ணத்தைப்பார்த்து) மந்த்ரமில்லாமல் தஹநம்பண்ணவேணுமென்று இச்சையுடையவராய், அபவத்-ஆனார். அத-பிறகு, ஆகாசே-ஆகாசத்தில், வச:-ஒரு வார்த்தையை அப்ரவீத்-(ஒருதேவதை) சொல்லிற்று. போ போ ராஜன்-ஓ ராஜாவே! ஏதத் விதுரஸம்ஜ்ஞிகம் கலேபரம்-விதுரரென்று பெயருள்ள இந்த சரீரமானது, ந தக்தவ்யம்-மந்த்ரமில்லாமல் கொளுத்தத்தக்கதல்ல, இஹ-இந்த விஷயத்தில், அஸ்ய-இந்த விதுரருக்கு, ஏஷ: தர்ம: ஸநாதந:-இந்த ஸநாதந தர்மமானது, (அதாவது-மந்த்ரபூர்வகமாக ஸம்ஸ்காரஞ்செய்வதென்கிற அநாதி தர்மமானது,) தே லோகவைலக்ஷண: நபவிஷ்யதிநாம-உனக்கு சாஸ்த்ரவிருத்தமாக ஆகாது, பார்த்திவ-ஓ அரசனே! அஸௌ-இந்த விதுரர், யதிதர்மம் அவாப்த:-யதி தர்மத்தையடைந்தவர், பரதர்ஷப-ஓ தர்மராஜனே! ந சோச-ஸந்தேஹத்தாலுண்டான, சோகத்தையடையாதே.

## 231 ஸூத்திரம்.

327. கஸ்சித் த்விஜாதிப்ரவரோ வேதாத்யா (ய்யா) யீதபோ
யந: । தபஸ்வீ தர்மசீலஸ்ச கௌசிகோநாம பாரத ॥
ஸாங்கோபநிஷதாந் வேதாநதீதே த்விஜஸத்தம: । ஸ வ்
ருக்ஷமூலே கஸ்மிம்ஸ்சித் வேதாநுச்சாரயந் ஸ்தித: ॥
உபரிஷ்டாச்ச வ்ருக்ஷஸ்ய பலாகா ஸம்ந்யலீயத । தயா பு
ரீஷமுத் ஸ்ருஷ்டம் ப்ராஹ்மணஸ்ய ததோபரி ॥

ஹே பாரத-ஓ பரதனே! க: சித்-ஒரு, த்விஜாதிப்ரவர:-(கோத்திரத்தினுலுயர்ந்த) ப்ராஹ்மணச்ரேஷ்டனும், வேதாத்யாயீ-வேதத்தை அத்யயநம்பண்ணினவனும், தபோதந:-தபஸ்ஸைத் தனமாகவுடையவனும், தபஸ்வீ-தபஸ் செய்கிறவனும், தர்மசீல: ச-தர்மஸ்வபாவனும், கௌசிக: நாம-கௌசிகனென்று பெயரையுடையவனுன, த்விஜஸத்தம:- (ஸூத்ர சரணத்தாலுயர்ந்த) ப்ரா

327-முதல் 331-வரையில் பாரதம் தர்மவ்யாதோபாக்யாநம்.

ஹ்மணோத்தமன், ஸாங்கோபநிஷதாந் வேதாந் அதீதே-அங்கங்களோடுகூடிய வேதவேதாந்தங்களை அத்யயநம்பண்ணிக்கொண்டிருந்தான், ஸ:-அவன், கஸ்மிம்சித் வ்ருக்ஷமூலே-ஒரு மரத்தின் அடியிலுட்கார்ந்துகொண்டு, வேதாநி உச்சாரயந் ஸ்திதஃ-வேதங்களைச்சொல்லிக்கொண்டிருந்தான் வ்ருக்ஷஸ்ய உபரிஷ்டாத்-மரத்தின் மேல், பலாகா-கொக்கானது, ஸம்ஙலீயத மறைந்திருந்தது, தயா-அந்த கொக்கினல், ப்ராஹ்மணஸ்ய உரஸி-ப்ராஹ்மணனுடைய மார்பில். ததா-அப்போது, புரீஷம் உத்ஸ்ருஷ்டம்-மலமானது விடப்பட்டது.

**328.** க்ரோத: ஶத்ரு: ஶரீரஸ்தோ மநுஷ்யாணாம த்விஜோத்தம। ய: க்ரோதமோஹௌ த்யஜதி தம் தேவா ப்ராஹ்மணம் விது:॥

த்விஜோத்தம-ப்ராஹ்மணோத்தமனே! மநுஷ்யாணாம் மனிதர்களுக்கு, க்ரோத:-கோபமானது, சரீரஸ்த: சத்ரு:-சரீரத்திலிருக்கிற சத்ரு, ய:-எவன், க்ரோதமோஹௌ த்யஜதி-கோபத்தையும் மோஹத்தையும் விடுகிறானே, தம்-அவனை, தேவா:-தேவர்கள், ப்ராஹ்மணம் விது:-ப்ராஹ்மணனென்று சொல்லுகிறார்கள்.

**329.** பவாநபி ச தர்மஜ்ஞ: ஸ்வாத்யாயநிரத: ஶுசி:। நது தத்த்வேந பகவந் தர்மாந் வேத்ஸீதி மே மதி:॥ மாதாபித்ருப்யாம் ஶுஶ்ரூஷு: ஸத்யவாதீ ஜிதேந்த்ரிய:। மிதிலாயாம் வஸந் வ்யாத: ஸ தே தர்மாந் ப்ரவக்ஷ்யதி॥ தத்ர கச்சஸ்வ பத்ரம் தே யதாகாமம் த்விஜோத்தம। வ்யாத: பரம தர்மாத்மா ஸ தே சேத்ஸ்யதி ஸம்ஶயாந்॥

பவாநபிச-தேவரீரும், தர்மஜ்ஞ:-தர்மம் தெரிந்தவராய், ஸ்வாத்யாய நிரத:-வேதாத்யயன நிரதராய், சுசி:-மிகவும் பரிசுத்தராயிருக்கிறீர். (ஆனாலும்) பகவந்-ஓ பிராமணரே! தர்மாந்-தர்மங்களை, தத்த்வேந-உண்மையாய், நவேத்ஸீதிமே மதி:-அறியவில்லையென்று என்னெண்ணம். (ஆகையால்) மாதா பித்ருப்யாம் சுச்ரூஷு:-மாதா பிதாக்களுடைய சுச்ரூஷாபரராய், ஸத்யவாதீ-

எப்போதும் ஸத்யத்தையே பேசுமவனாய், ஜிதேந்த்ரியஃ-இந்த்ரியங்களை ஜயித்தவரராயிருக்கிற, மிதிலாயாம் வஸந்-மிதிலா பட்டணத்தில் வஸித்துக்கொண்டிருக்கிற, ஸஃவ்யாதஃ-அந்த தர்மவ்யாதன், தே தர்மாந் ப்ரவக்ஷ்யதி-உமக்கு தர்மங்களைச் சொல்லக்கடவன். தத்ர கச்சஸ்வ-அங்கே போகக்கடவாய், த்விஜோத்தம-ஓ பிராமணரே! பத்ரம் தே-உமக்கு நன்மையுண்டாகுக, பரம தர்மாத்மா ஸஃ வ்யாதஃ-பரம தர்மவானான அந்த வேடன் யதாகாமம்-வேண்டினபடி, தே-உம்முடைய, ஸம்சயாந்-ஸந்தேஹங்களை, சேத்ஸ்யதி-கண்டிக்கக்கடவன்.

**330.** பஞ்சகாநி பவித்ராணி ஶிஷ்டாசாரேஷு நித்யதா। ஏதந்மஹாமதே வ்யாத ப்ரப்ர (ஹூ) வீஹி யதாதயம் ॥

நித்யதா-எப்போதும், சிஷ்டாசாரேஷு-பெரியோர்களின் ஆசாரங்களில், பவித்ராணி-பரிசுத்தங்களான, பஞ்ச-ஐந்தானவை, காநி-எவை, ஏதத்-இவற்றை, மஹாமதே வ்யாத-மஹா புத்தியையுடைய வ்யாதனே! யதாததம்-இருக்கிறபடி, ப்ரப்ரவீஹி-சொல்லு.

**331.** யஜ்ஞோ தாநம் தபோ வேதாஸ் ஸத்யம் ச த்விஜஸத்தம। பஞ்சைதாநி பவித்ராணி ஶிஷ்டாசாரேஷு நித்யதா ॥

ஹே த்விஜஸத்தம-ஓ ப்ராஹ்மண ச்ரேஷ்டனே! யஜ்ஞஃ-யஜ்ஞமும், தாநம்-தானமும், தபஃ-தபஸ்ஸும், வேதாஃ-வேதங்களும், ஸத்யம் ச-ஸத்யமும், பவித்ராணி-பவித்ரங்களான, பஞ்ச ஏதாநி-இவைகளைந்தும், சிஷ்டாசாரேஷு நித்யதா-சிஷ்டாசாரங்களிலேயெப்போதுமுளவாயிருக்கும்.

## 232 ஸூத்திரம்.

**332.** யத் யதாசரதி ஶ்ரேஷ்டஸ்தத்ததேவேதரோ ஜநஃ। ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ்ததநுவர்த்ததே ॥

ச்ரேஷ்டஃ-நன்றாய் கலைகளை அறிந்தவன், யத்யத்-ஏதேதை கருமத்தை, ஆசரதி-அநுஷ்டிக்கிறானோ, இதரஃ ஜநஃ-மற்ற ஜன

---

332. ஸ்ரீகீதை-3-21.

ங்களுக்கும், தத் ததேவ-அந்த கர்மத்தையே யநுஷ்டிக்கிறார்கள், ஸ:-அந்த ச்ரேஷ்டன், யத்ப்ரமாணம் குருதே-எதைப்ரமாணமாக ச்செய்கிறானோ, லோக:-ஜனங்கள், தத் அநுவர்த்ததே-அதையநு ஸரிக்கிறார்கள்.

**333.** கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய: ।
லோக ஸங்க்ர (ஹ) -ஹமேவாபிஸம்பஶ்யந்கர்த்துமர்ஹஸி ॥

ஜநகாதய:-ஜனகமஹாராஜன் முதலானவர்கள், கர்மணா ஏவ ஹி-கர்மாநுஷ்டானத்தினாலேயே, ஸம்ஸித்திம்-ஸித்தியை, ஆஸ்திதா:-அடைந்தார்கள். லோகஸங்க்ரஹம் ஏவ அபி-லோகத்தாரை ஸங்க்ரஹிப்பதையாவது, ஸம்பஶ்யந்-நன்றாய் பார்த்து, கர்த்தும் அர்ஹஸி-கர்மங்களை யநுஷ்டிக்கக் கடவாய்.

**334.** யதி ஹ்யஹம ந வர்த்தேயம் ஜாது கர்மண்யதந்த்ரித: ।
மம வர்த்மாநு வர்த்தந்தே மநுஷ்யா: பார்த்த (ஸ) ஸர் வஶ: ॥

ஹே பார்த்த-ஓ அர்ஜுனா! அஹம்-நான், ஜாது-ஒரு வேளையிலும், அதந்த்ரித:-சோம்பலில்லாதவனாய், கர்மணி ந வர்த்தேயம் யதி-கர்மாநுஷ்டானத்தி லில்லாமலிருந்தேனேயாகில், மநுஷ்யா:-மனிதர்கள்- ஸர்வஶ:-எவ்விதத்தாலும், மம வர்த்ம-என்வழியை, அநுவர்த்தந்தே-அநுஸரிப்பார்களன்றோ?

**335.** பீஷ்மத்ரோ (ணௌ) ணாவதிக்ரம்ய மாம் சைவ மயா ஸுதந। கிமர்த்தம் புண்டரீகாக்ஷ புக்தம் வ்ருஷல போஜநம் ॥

ஹே மதுஸூதந-ஓ கிருஷ்ணனே! பீஷ்மத்ரோணௌ-பீஷ்மாசாரியரையும் த்ரோணாசாரியரையும், மாம் ச-என்னையும், அதிக்ரம்ய-உபேக்ஷித்து, புண்டரீகாக்ஷ-எல்லாவற்றையும் குளிர்ந்த பார்வையாலே பார்க்கும் நீ, கிமர்த்தம்-எதற்காக, வ்ருஷளபோஜநம்-சூத்திரனுடைய போஜனத்தை, புக்தம்-புஜிக்கப்பட்டது?

334. ஸ்ரீகீதை 3-21. 335. ஸ்ரீகீதை 3-22. 336. ஸ்ரீகீதை 3-23.

**336.** ஸம்ப்ர (ஹ்ரு) மைஃ துஷ்ய மோவிந்த ஏதந்நஃ பரமம்ப்ரநம்॥

ஹே கோவிந்த-ஏ கிருஷ்ண! ஏதத்-தேவரீருடைய இந்த வரவானது, நஃ-எங்களுக்கு, பரமம் தநம்-உத்க்ருஷ்டமான தன மென்று, ஸம்ப்ரமைஃ-அதி ஸந்தோஷங்களாலுண்டான பரபரப்பி ஞல், துஷ்ய-ஸந்தோஷித்து,

**337.** ஸுக்தவத்ஸு த்விஜாக்ரேஷு நிஷண்ணஃ பரமாஸநே।
விதுராந்நாநி புபுஜே ஸுசீநி குணவந்தி ச॥

த்வி ஜாக்ரேஷு புக்தவத்ஸு-பிராஹ்மண ச்ரேஷ்டர்கள் அமுதுசெய்தபிறகு, பரமாஸநே-உயர்ந்த ஆஸநத்தில், நிஷண்ணஃ-உடகார்ந்த க்ருஷ்ணன், சுசீநி-பாவனமானதும, குணவந்திச-நற் சுவையுள்ளதுமான, விதுராந்நாநி-விதுரருடைய ப்ரஸாதத்தை புபுஜே-நன்ருக அமுது செய்தார்.

## 233 ஸூத்திரம்.

**338.** ஸோ(அ)ப்ய (ஹ்ரு) மச்சந் மஹா தேஜாஃ ஸபரீம் ஸத்ரு ஸூதநஃ। ஸபர்யா பூஜிதஸ்ஸம்யக் ராமோ தஸரதாத்மஜஃ॥

மஹா தேஜாஃ-மஹா தேஜஸ்ஸைப்பெற்றவரும், சத்ருஸூதநஃ-பகைவரைக் கொல்லுமவருமான, ஸஃ-அந்த பெருமாள், சபரீம் அப்யகச்சத்-சபரியை யடைந்தார். தசரதாத்மஜஃ ராமஃ-சக்ரவர்த்தித்திருமகன், சபர்யா-சபரியினல், ஸம்யக்பூஜிதஃ-நன்ருய் பூஜிக்கப்பட்டார்.

## 235 ஸூத்திரம்.

**339.** ப்ராதுர்பாவைஃ ஸுரநரஸமோதேவதேவஸ் ததீயாஜாத்யா வ்ருத்தைரபிச குணதஸ்தாத்ரு (ஹ்ரு) ஸோ நாத்ர ஸர்ஹா। கிம்து ஸ்ரீமத் பவநபவநத்ராணதோ(அ)ந்யே ஷு வித்யாவ்ருத்தப்ராயோ பவதி விபவாகல்பகல்பஃ ப்ரகர்ஷஃ॥

---

336, 337. பாரதம்-உத்யோகபர்வம 338. ரா-பா-1-57.

தேவ தேவ:-ஸர்வேச்வரன், ப்ராதுர் பாவை:-அவதாரங்களால், ஸுரநரஸம:-தேவ மநுஷ்ய ஸமானனுகிருன். ததீயா:-பாகவதர்கள், ஜாத்யா-ஜாதியினுலும, வ்ருத்தை:-வ்ருததங்களாலும், குணத: அபிச-குணங்களாலும், தாத்ருச:-அப்படியே யாகுகிருர்கள், அத்ர ந கர்ஹா-இதில் ஒரு நிந்தையில்லை. கிம் து-ஆனுல், (இருவரும் இப்படி அவதரிப்பது) ஸ்ரீமத்-ஸர்வோத் க்ருஷ்டம், (எப்படியென்ருல்) புவந பவநத்ராணத:-இந்த லோக ரக்ஷணத்திற்காக அவதரிப்பதனுல் உயர்ந்தது, அந்யேஷு-அபாகவதர்களிடத்தில், வித்யாவ்ருத்த ப்ராய:-வித்யா வ்ருத்தபாஹுள்யரூபமான, ப்ரகர்ஷ:-மேன்மையானது, விதவாகல்பகல்ப:-விதவாலங்காரம்போலே நிந்த்யமாகாநின்றது.

## 236 ஸுத்திரம்.

340. சதுர்வேதயரோவிப்ரோ வாஸுதேவம் நவிந்ததி ।
வேதபார பராக்ராந்தஸ்ஸ வை ப்ராஹ்ம (ப்ராஹ்ம) ணகர்தப: ॥

விப்ர:-எந்த ப்ராஹ்மணன், சதுர்வேததர:-நான்கு வேதங்களை யறிந்தவனுயினும், வாஸுதேவம் ந விந்ததி-ஸர்வ வியாபகனுன எம்பெருமானை யறியாமலிருக்கிருனே, ஸ:வை-அவன், வேத பாரபராக்ராந்த:-வேதபாரத்தை யெல்லாம் சுமந்துகொண்டிருக்கிற, ப்ராஹ்மண கர்தப:-பிராஹ்மணக்கழுதையே.

## 237 ஸுத்திரம்.

341. சரீரஜை: கர்மதோஷைர்யாதிஸ்தாவரதாம் நர: ।
வாசிகை: பக்ஷிம்ருகதாம் ॥

சரீரஜை:-சரீரத்தாலுண்டான, கர்மதோஷை:-கர்மதோஷங்களாலே, நர:-மனிதன், ஸ்தாவரதாம் யாதி-ஸ்தாவரத்தன்மையை யடைகிருன். வாசிகை:-வாக்கினுலுண்டான கர்மதோஷத்தாலே, பக்ஷிம்ருகதாம் யாதி-பக்ஷிகளாகவும் ம்ருகங்களாகவும், பிறக்கிருன்.

## 23) ஸூத்திரம்.

**342.** ஸர்வலக்ஷணஸம்பந்நா நாரீணாமுத்தமா வதூ: ।
ஸீதாப்யநுகதா ராமம் ஶஶிநம் ரோஹிணீம் யதா ॥

ஸர்வலக்ஷணஸம்பந்நா—ஸாமுத்திரிகசாஸ்த்திரத்தில் சொல்லப்பட்ட ஸகல சுபலக்ஷணங்களால் நிறைந்தவளாய், நாரீணாம் உத்தமாவதூ:-பெண்களிற் சிறந்தவளாயுமிருக்கிற, ஸீதாபி-ஸீதாப்பிராட்டியும், ரோஹிணீ சசிநம் யதா-ரோஹிணீதேவி சந்த்ரனைப் போல, ராமம் அநுகதா-பெருமானைப் பின்தொடர்ந்தாள்.

## 242 ஸூத்திரம்.

**343.** த்விபரார்த்தாவஸாநே மாம் ப்ராப்துமர்ஹஸி பத்மஜ ॥

ஹே பத்மஜ-ஏ சதுர்முகனே! த்விபரார்த்தாவஸாநே-இரண்டாம் பரார்த்தத்தின் முடிவில், மாம்-என்னை, ப்ராப்தும் அர்ஹஸி-அடைவதற்கு தகுந்தவனாவாய்.

**344.** முக்திம்மதாங்யா-210-வது இலக்கம் பார்க்க.

## 243 ஸூத்திரம்.

**345.** அஸங்நேவ-277-வது இலக்கம் பார்க்க.

**346.** த்விதா ஹஜ்யேயமப்யேவம் ந நமேயந்து கஸ்யசித் ।
ஏஷமே ஸஹஜோ தோஷ: ஸ்வபாவோ துரதிக்ரம: ॥

த்விதாப்ஜ்யேயம் எவமபி-இரண்டுதுண்டாக வெட்டப்பட்டபோதிலும், கஸ்யசித்-ஒருவருக்கும், ந நமேயம்-வணங்கமாட்டேன், ஏஷ:-இது, மே-எனக்கு, ஸஹஜ: தோஷ:-ஸ்வபாவஸித்தமான தோஷம், ஸ்வபாவ: துரதிக்ரம:-ஸ்வபாவமானது ஒருவராலும் தாண்டத்தக்கதன்று.

**347.** யஸ்யாநுக்ரஹமிச்சாமி தஸ்ய வித்தம் ஹராம்யஹம் ।

யஸ்ய-யாதொருவனுக்கு, அநுக்ரஹம் இச்சாமி-அநுக்ஹம் செய்ய இச்சிக்கிறேனோ, தஸ்ய-அவனுடைய, வித்தம்-த்ரவ்யத்தை, அஹம்-நான், ஹராமி-அபஹரிக்கிறேன்.

### இரண்டாவது ப்ரகரணம் முற்றிற்று.

---

342. ரா-பா-1-27. 347. ரா-யு-36-11.

## 246 ஸூத்திரம்.

348. க்ஷத்ரரோஷாத்ப்ரஶாந்தஸ்த்வம் ப்ராம்ஹ (ப்ராஹ்ம) ணஶ்வ மஹாயஶா: । பாலாநாம் மம புத்ராணா மபயம் தாதுமர்ஹஸி ॥

த்வம்-நீர், க்ஷத்ரரோஷாத்-க்ஷத்திரியர்களிடத்திலிருந்தகோபத்திலிருந்து, ப்ரசாந்த:-மிகவும் சாந்தராயும், ப்ராஹ்மண: ச-ப்ராம்ஹணனும், மஹாயசா:-மிகவும யசஸ்ஸையும் அடைந்திருக்கிறீர். (ஆகையால்) பாலாநாம்-அதிபாலர்களான, மம புத்ராணாம்-என் புத்ரர்களான இவர்களுக்கு, அபயம் தாதுமர்ஹஸி-அபயம் கொடுக்கக் கடவாய்.

349. ஶதோராமஇதிஶ்ருத்வா ஹ்ருஷ்ட: ப்ரமுதிதோ ந்ருப: । புனர்ஜாதம் ததா மேநே ஸுதாநாத்மாநமேவ ச ॥

ராம:-பரசுராமன், கதஇதி ச்ருத்வா-பராஜிதனாய்ப்போனான் என்கிற வார்த்தையைக் கேட்டு, ந்ருப:-சக்ரவர்த்தி, ஹ்ருஷ்ட:-ஸந்தோஷமடைந்தவனாய், ப்ரமுதித:-அத்யாநந்தத்தையடைந்தான். ததா-அப்போது, ஸுதாந்-பிள்ளைகளையும், ஆத்மாநம் ஏவ ச-தன்னையும், புனர்ஜாதம் மேநே-மறுபடியும் பிறந்தவனாக எண்ணினான்.

350. பதிஸம்மானிதா ஸீதா பர்த்தாரமஸிதேக்ஷணா । ஆத்வாரமநுவவ்ராஜ மங்களாந்யபிதத்நு (யுஷீ) ஷீ ॥

அஸிதேக்ஷணா-மைபோன்ற கண்ணையுடைய, ஸீதா-பிராட்டி, பதிஸம்மாநிதா-பெருமாளால் கௌரவிக்கப்பட்டு, பர்த்தாரம்-ஸ்வாமியை, மங்களாநி அபிதத்நுஷீ-மங்களாசாஸநம் செய்துகொண்டு, ஆத்வாரம் அநுவவ்ராஜ-வாசல்பரியந்தம் கூடப்போனாள்.

351. பூர்வாம் திஶம் வஜ்ரதரோ தக்ஷிணாம் பாதுதே யம: । வருண: பஶ்சிமாமாஶாம் தநேஶஸ்தூத்தராம் திஶம் ॥

---

348. ரா-பா-75-6. 349. ரா-பா-77-6. 350. ரா-அ-19-20. 351. ரா-அ-16-24.

வஜ்ரதர: பூர்வாம் திசம்_இந்த்ரன் கிழக்குதிக்கிலும், யம: த க்ஷிணம்_யமன் தென்றிசையிலும், வருண: பச்சிமாம் ஆசாம்_வருணன் மேற்குதிக்கிலும், தநேச: து உத்தராம் திசம்_குபேரன் வடக்கு திக்கிலும், தே பாது_உன்னை காப்பாற்றவேண்டும் (என்று மங்களமுண்டாக ப்ரார்த்தித்துக்கொண்டு வாசற்படிவரையில் தொடர்ந்துவந்தாள்.)

352. இயம் ஸீதா மம ஸுதா ஸஹயர்மசரீ தவ ।
ப்ரதீச்ச (வு) சைநாம் பத்ரம் (உரு) தே பாணிம் க்ரஹ
ணீ (ஹ்ரு) ஷ்வ பாணிநா ॥

மம ஸுதா_என் பெண்ணான, இயம் ஸீதா_இந்த ஸீதையானவள், தவ ஸஹதர்மசரீ_நீர் செய்கிற தர்மங்களையெல்லாம் உம்மைப்போலவே செய்வாள், ஏநாம் ப்ரதிச்ச ச_இப்படிப்பட்டவளை திருவுள்ளம்பற்று; பாணிநா_தேவரீருடைய திருக்கையால், பாணிம் க்ருஹ்ணீஷ்வ_இவள் திருக்கையை பிடித்துக்கொள்ளும், தே பத்ரம்_உமக்கு மங்களமுண்டாகுக.

353. அஹம் வேத்மி மஹாத்மாநம் ராமம் ஸத்யபராக்ரமம் ।
வஸிஷ்டோபி மஹாதேஜா யே சேமே தபஸி ஸ்திதா: ॥

மஹாத்மாநம்_மஹாத்மாவாய், ஸத்யபராக்ரமம்_ஸத்யமான பராக்ரமமுடையவனுமுள்ள, ராமம்_பெருமாளை, அஹம் வேத்மி_நானறிவேன். மஹாதேஜா: வஸிஷ்ட: அபி_மிக்க தேஜஸ்ஸையுடைய வஸிஷ்டரும் அறிவார், யேசேமே தபஸி ஸ்திதா:_மற்றும் தவத்திலுள்ள இம்மஹர்ஷிகளும் அறிவார்கள்.

354. விச்வாமித்ரஸ்து ப்ரஹ்ம (ஹ்ம) ர்ஷிர்ஹுங்காரேண
ஹிஹர்த்ஸ்ய தாம் । ஸ்வஸ்தி ராகவயோரஸ்து ஜயம் சை
வாப்ய (ஹ்யு) ஹாஷத ॥

ப்ரஹ்மர்ஷி: விச்வாமித்ர: து_பிருமருஷியான விச்வாமித்ரரும், ஹுங்காரேண_ஹும் என்று, தாம்_அந்தத்தாடகையை,

352. ரா_பா_73_27. 353. ரா_பா_29_14. 354. ரா_பா_26_14.

அபிபர்த்ஸ்ய-மிரட்டிவிட்டு, ராகவயோ:-ரகுகுலத்திலுதித்த பிள்ளைகளிருவருக்கும், ஸ்வஸ்தி ஜயம் ச அஸ்து-மங்களமும் ஜயமும் உண்டாகட்டும், (என்று) அப்யபாஷத-சொன்னார்.

**355.** தே தம் ஸோமமிவோத்ய (உ) ந்தம் த்ரு (உ) ஷ்ட்வா
வை யர்மசாரிண: । மங்களாநி ப்ரயுஞ்ஜாநா: ப்ரத்யக்ரு
ஹ்ண (ஹ்ண) ந் த்ரு (உ) டவ்ரதா: ॥

தர்மசாரிண:-தர்மத்தை யநுஷ்டிப்பவர்களாயும், த்ருடவ்ரதா:-பெருமாளே ரக்ஷகரென்றநிலையான ஸங்கல்பத்தையுடையவர்களாயுமான, தே-அந்த ருஷிகள், உத்யந்தம் ஸோமமிவ-உதயமாகிற சந்தரன் போன்றவரான, தம் த்ருஷ்ட்வா-அந்த பெருமாளைப் பார்த்து, மங்களாநி ப்ரயுஞ்ஜாநா:-மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டு, ப்ரத்யக்ருஹ்ணந்-உபசரித்தார்கள்.

**356.** ஆயதாஸ்ச ஸுவ்ருத்தாஸ்ச பாஹவ: பரிகோபமா: ।
ஸர்வபூஷணபூஷார்ஹா: கிமர்த்தம் ந விபூஷிதா: ॥

ஆயதா: ச-நீண்டவைகளும, ஸுவ்ருத்தா: ச-அழகாய் திரண்டவைகளும், பரிகோபமா:-உழற்றடிக்கொப்பானவைகளும், ஸர்வபூஷணபூஷார்ஹா:-எல்லா பூஷணங்களும் அணியத் தகுந்தவைகளுமான, பாஹவ:-திருக்கைகள், கிமர்த்தம் ந விபூஷிதா:-ஏன் அலங்கரிக்கப்படவில்லை.

**357.** ஏஷ ஸர்வாயுதோபேதஸ்சதுர்பிஸ்ஸஹ ராக்ஷஸை: ।
ராக்ஷஸோப்(அ)யே (ஹ்ய) தி பஶ்யத்வம் (ஷ்வம்) அஸ்மாந்
ஹந்தும் ந ஸம்ஶய: ॥

சதுர்பி: ராக்ஷஸை: ஸஹ-நான்கு ராக்ஷஸர்களோடு கூடினவனாய், ஸர்வாயுதோபேத:-எல்லா ஆயுதங்களோடு கூடினவனாய், ஏஷ: ராக்ஷஸ:-இந்த ராக்ஷஸன், அஸ்மாந் ஹந்தும்-நம்மைக்கொல்லுவதற்கு, அப்யேதி-கிட்டிவருகிறான், ந ஸம்ஶய:-இதிலொரு ஐயமில்லை, பச்யத்வம்-பாருங்கள்.

355. ரா-ஆ-1-11. 356. ரா-கி-3-14. 357. ரா-யு-17-7

**358.** ராவவம் ஶரணம்.—158-வது இலக்கம்பார்க்க.

**359.** நிவேதயத—267-வது இலக்கம்பார்க்க.

**360.** வத்ய (ய்ய) தாமேஷ உண்டேந தீவ்ரேண ஸசிவை: ஸ

ஹ। ராவணஸ்ய ந்ருஶம்ஸஸ்ய ப்ரா(ஆ)தா ஹ்யேஷ

விபீஷண: ॥

ஹி-எக்காரணத்தால், ஏஷ: விபீஷண:-இந்த விபீஷணன், ந்ருசம்ஸஸ்ய-க்ரூரனுன, ராவணஸ்ய-இராவணனுடைய, ப்ராதா தம்பியோ, (அக்காரணத்தால்) இவன், தீவ்ரேண தண்டேந-குரூரமான தண்டத்தால், ஸசிவை: ஸஹ-மந்த்ரிகளோடுகூட, வத்யதாம்-கொல்லப்படட்டும்.

**361.** ராவணேந ப்ரணிஹிதம் தமவைஹி நிஶாசரம்।

தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே க்ஷமம் க்ஷமவதாம் வர ॥

க்ஷமவதாம் வர-பொருமையுள்ளோர்களில் ச்ரேஷ்டரான பெருமாளே! தம் நிசாசரம்-அந்த ராக்ஷஸனே, ராவணேந-இராவணனல், ப்ரணிஹிதம்-ரஹஸ்யமாய் அனுப்பப்பட்டவனுக, அவேஹி-அறியவேணும், (ஆகையால்) அஹம்-நான், தஸ்ய நிக்ரஹம்-அவனுக்கு தண்டனையை, க்ஷமம் மன்யே-தகுந்ததென்று எண்ணுகிறேன்.

**362.** பிஶாசாந் தாநவாந் யக்ஷாந் ப்ருதிவ்யாம்சைவ ராக்ஷஸாந்।

அங்குள்யக்ரேண தாந் ஹந்யா மிச்சந் ஹரிகணேஶ்வர ॥

ஹரிகணேச்வர-குரங்குக் கூட்டங்களுக்கு மஹாராஜரே! பிசாசாந்-பிசாசங்களாயும், தாநவாந்-அஸுரர்களாயும், யக்ஷாந்-யக்ஷர்களாயும், ப்ருதிவ்யாம்-பூமியில், ராக்ஷஸாந் ச ஏவ-ராக்ஷஸர்களாயுமிருக்கின்ற, தாந்-அவர்களே, அங்குள்யக்ரேண-விரல் நுனியாலே, இச்சந்-விரும்பினவனுப், (நான் இஷ்டப்பட்டால்) ஹந்யாம்-கொல்லுவேன்.

**363.** ஆநயைநம்—263-வது இலக்கம் பார்க்க.

---

360. ரா-யு-17-27. 361. ரா-யு-17-24. 362. ரா-யு-18-23, 24.

364. யாமோஷயிமிவாயுஷ்மந்நந்வேஷஸி மஹாவநே ।
ஸா தேவீ மம ச ப்ராணா ராவணேநோபயம் ஹ்ருதம் ॥

ஆயுஷ்மந்-தீர்க்காயுஸ்ஸுள்ளவரே! மஹாவனே-இந்த மஹாரண்யத்தில், ஓஷதிம இவ-மூலிகையைத் தேடுவதுபோல், யாம்-எந்த பிராட்டியை, அந்வேஷஸி-தேடுகிறீரோ, ஸா தேவீ-அந்தப் பிராட்டியும், மம ச ப்ராணா:-என் ப்ராணனும்-உபயம்-இரண்டும், ராவணேந ஹ்ருதம்-ராவணனுல் அபஹரிக்கப்பட்டது.

365. ரக்ஷது த்வாமசேஷாணாம் பூதாநாம் ப்ரபவோ ஹரி: ।
யஸ்ய நாபிஸமுத்பூத பங்கஜா துபவத் ஜகத் ॥

அசேஷாணும் பூதாநாம்-ஸமஸ்தசராசரங்களுக்கும், ப்ரபவ: ஸ்ருஷ்டிகாரணபூதனை, ஹரி:-ஆச்ரிதவிரோதிநிரஸனசீலனை எம்பெருமான், த்வாம் ரக்ஷது-உம்மை ரக்ஷிப்பாராக. யஸ்ய-எவனுடைய, நாபி-திருநாபியிலே, ஸமுத்பூத-பிறந்த, பங்கஜாத்-தாமரைப்பூவினின்றும், ஜகத் அபவத்-ஜகத்துக்கள் ஸ்ருஷ்டிக்கப்பட்டனவோ.

366. ஸம்ஸ்ப்ருஶந்நாஸநம ஶௌரேர் விதுரஸ்ஸமஹாமதி: ।

ஸ: மஹாமதி:-அந்த ஜ்ஞாநாதிகனை, விதுர:-விதுரர், ஶௌரே: ஆஸநம்-கண்ணனுக்காக இடப்பட்ட ஆஸநத்தை, ஸம்ஸ்ப்ருசத்-நன்றாய் தொட்டுப்பார்த்தார்.

367. ஸ்த்ரியோ வ்ருத்தா: (ஶ்சா:) தருண்யஶ்ச ஸாயம் ப்ராத ஸ்ஸமாஹிதா: । ஸர்வாந் தேவாந் நமஸ்யந்தி ராமஸ்யார்த்தே யஶஸ்விந: ॥

வ்ருத்தா: ஸ்த்ரிய:-முதிர்ந்தவயதுள்ள ஸ்த்ரீகளும், தருண்ய: ச-யௌவநவயதுள்ள ஸ்த்ரீகளும், ஸாயம் ப்ராத: ஸமாஹிதா:-மாலையிலும் காலையிலும் ஜாக்ரதையோடு கூடிக்கொண்டு, ராமஸ்ய அர்த்தே-பெருமாளுக்காக, யசஸ்விந:-ஸம்ருத்தியை வேண்டினவர்களாய், ஸர்வான்தேவான்-எல்லா தேவதைகளையும், நமஸ்யந்தி-வணங்குகிறார்கள்.

---

364. ரா-ஆ-67-15. 365. பாரதம். 366. பா-உத. 367. ரா-அ-2-52

**368.** யந்மங்க³ளம் ஸுபர்ணஸ்ய விநதாऽகல்பயத் புரா ।
அம்ருதம் ப்ரார்த²யாநஸ்ய தத்தே ப⁴வது மங்க³ளம் ॥

புரா-முன்பு, அம்ருதம் ப்ரார்த்தயானஸ்ய-அம்ருதங்கொண்டுவரவேண்டுமென்று ப்ரார்த்திக்கப் பட்டவரான, ஸுபர்ணஸ்ய-பெரிய திருவடிக்கு, யத்மங்களம்-எந்த மங்களத்தை, விநதா அகல்பயத்-விநதா தேவியானவள் பண்ணிறைளோ, தத்மங்களம் தே பவது-அந்த மங்களம் உனக்கு உண்டாகுக.

**369.** ஜாதோऽஸி தே³வதே³வேஶ ஶங்க²சக்ரக³தா³த⁴ர ।
தி³வ்யரூபமித³ம் தே³வ ப்ரஸாதே³நோப ஸம்ஹர ॥

தேவதேவேச-நித்யஸூரிநிர்வாஹகனே! சங்கசக்ரகதாதர-திருவாழி திருச்சங்குகதையிவைகளை யேந்திக்கொண்டிருக்குமவரே! ஜாதஃ அஸி-அவதரிததாய், தேவ-ஓ ஸ்வாமிந் ! ப்ரஸாதேந-க்ருபையினுல், இதம் திவ்யரூபம்-இந்த திவ்யரூபத்தை, உபஸம்ஹர-மறைக்கவேண்டும்.

**370.** உபஸம்ஹர ஸர்வாத்மந் ரூபமேதத் சதுர்பு⁴ஜம் ।
ஜாநாது மாऽவதாரம் தே கம்ஸோऽயம் தி³திஜந்மஜஃ ॥

ஸர்வாத்மந்-ஏ ஸர்வஸ்வாமிந் ! திதி ஜந்மஜஃ-அஸுரஜந்மாவான, அயம் கம்ஸஃ-இந்த கம்ஸன், தே அவதாரம் மாஜாநாது-தேவரீர் அவதாரத்தை யறியவேண்டாம். ஏதத் சதுர்புஜம் ரூபம்-இந்த நான்கு புஜங்களோடு கூடிய திருமேனியை, உபஸம்ஹர-மறைத்துக்கொள்.

## 247 ஸூத்திரம்.

**371.** நியம்ய ப்ருஷ்டே² து தலாங்கு³லித்ரவாந் ஶரைஸ்ஸுபூர்ணாவிஷுதீ⁴ பரந்தபஃ । மஹத்³ய நுஸ்ஸஜ்யமபோஹ்ய லக்ஷ்மணோ நிஶாம்ய திஷ்ட²த் பரிதோऽஸ்ய கேவலம் ॥ ததஸ்த்வஹம் சோத்தம பா³ணசாபத்⁴ருத் (ஸ்ய) த்³ஸ்தி²தோऽப⁴வம் தத்ர ஸ யத்ர லக்ஷ்மணஃ । அதந்த்³ரி (தை) ர்ஜ்ஞாதிபி⁴ராத்தகார்முகைர்மஹேந்த்³ரகல்பம் பரிபாலயம்ஸ்தத³ா ॥

---

368. ரா-அ-52-33. 369. வி-பு-5-3-10. 370. வி-பு-5-3-13.
371. ரா-அ-87-22-23.

பரந்தப:-சத்ருக்களையடக்கவல்ல, லக்ஷ்மண:-இளையபெருமாள், சரை: ஸம்பூர்ணௌ-பாணங்கள் நிறைந்த,இஷுதீ-இரண்டு அம்ப ராத்தூணிகளை, ப்ருஷ்டே நியம்ய து-முதுகில் கட்டிக்கொண்டு, தலாங்குளித்ரவாந்-தலமென்ன (தலமாவது-நாண் கயிற்றாலுண்டா ன அடியைத்தடுக்கும் ஒருவிதமானதோல்) விரல் சரடென்ன, இ வைகளை யுடையவராய், மஹத்ஸஜ்யம தநு: அபோஹ்ய-பெரிய வில்லை நாணேற்றி தரித்துக்கொண்டு,நிசாம்-இராத்திரிமுழுவதும் அஸ்ய பரித: கேவலம அதிஷ்டத்-அந்த பெருமாளுக்கு நான்குபு ரமும் காவலாய் நின்றுகொண்டிருந்தார். தத: து-அதற்குப் பிற கு, அஹம் ச-நானும், உத்தமசாபபாண ப்ருத்-உயர்ந்த பாணங்க ளுடன் கூடிய வில்லைத் தரித்து, அதந்த்ரிபி:-ஜாக்கிரதையுள்ளவ ர்களாய், ஆத்தகார்முகை:-வில்லோடுகூடினவர்களாயிருக்கிற, ஜ்ஞா திபி:-எனது இனத்தார்களுடன், மஹேந்த்ரகல்பம்-இந்திரனுக் கொப்பான பெருமாளை, ததா-அப்போது, பரிபாலயந்-காற்றுக்கொ ண்டு, யத்ர ஸ: லக்ஷ்மண:-எந்தவிடத்தில் இளையபெருமாள் சுற் றிக்கொண்டிருந்தாரோ, தத்ர ஸ்தித: அபவம்-அங்கெல்லாம் சுற் றிக்கொண்டிருந்தேன்.

## 254 ஸூத்திரம்.

372. தஸ்யாம் வ த்வத்க்ருபாவந் நிரவயிஜநதா விஸ்ரமார்ஹா
வகாஸும் ஸங்கீர்ணம் தாஸ்யத்ருஷ்ணா கலிதபரிகரை:
பும்ஸிராநந்த நிக்நை: (வெநு:) ॥ ஸ்நேஹாஉஸ்யாநரக்ஷா
வ்யஸநிஸிரஹயம் ஸார்ங்ஸவக்ராஸி முக்யை ராநந்தைகா
ர்ணவம் ஸ்ரீர்ஹஸவதி யுவயோ ராஹஸாஸ்யாநரத்நம் ॥

ஹே ஸ்ரீ: பகவதி-ஸர்வஸ்வாமியாகிய ஸ்ரீதேவியே! தஸ்யாம் ச-அந்த ஸ்ரீவைகுண்டத்தில், த்வத்க்ருபாவத்-தேவரீர் க்ருபை யைப்போல், நிரவதி ஜநதா-எல்லையில்லாத ஜநஸமுஹங்களுக்கு, விச்ரமார்ஹ-இளைப்பாறுவதற்குத் தகுந்த, அவகாசம்-இடத்தை யுடையதும், தாஸ்யத்ருஷ்ணா கலிதபரிகரை:-கைங்கரியத்தில் ஆ சையினால் க்ரஹிக்கப்பட்ட துளஸீமுதலிய வஸ்துக்களையுடையவர்

372. ஸ்ரீகுணரத்நகோசம்-24.

ளாயும், ஆநந்தநிக்நை:-ஆநந்த பூர்ணர்களான,. பும்பி:-நித்ய ஸூரிகளால, ஸங்கீர்ணம்-சூழப்பட்டதும், ஸ்நேஹாத்-தேவரீர், எம்பெருமான், அந்த தேசம்முதலானதில் ஸ்நேஹத்தாலே, அஸ்தாந ரக்ஷாவ்யஸநிபி:-காரணமில்லாமல் ரக்ஷிப்பதில் ஆஸக்தர்களான, சாரங்கசக்ராஸிமுக்யை:-திருவாழி திருச்சங்கு, நந்தகம் முதலிய ஐந்து திவ்யாயுதாழ்வார்களால், அபயம்-பயமில்லாததும், ஆநந்தைகார்ணவம்-பரமாநந்தங்களுக்கு பெரிய ஸமுத்திரம்போன்றதுமான, ஆஸ்தாந ரத்நம்-மிகவுமுயர்ந்த திவ்யாஸ்தாநமண்டபமானது, யுவயோ:-தேவரீர்களிருவருக்கும், ஆஹு:-சொல்லுகிறார்கள்,

## 259 ஸூத்திரம்.

**373.** நமோऽசிந்த்யாத்புதாக்லிஷ்டஜ்ஞான வைராக்யராஸயே । நாதாய முநயேऽகாதபகவத்பக்தி ஸிந்தவே ॥

அசிந்த்ய-மனத்தால் அளவிடக்கூடாதவைகளாயும், அத்புத-ஆச்சரியங்களாயும், அக்லிஷ்ட-வருத்தமற்றிருப் பவைகளாயுமுள்ள, ஜ்ஞான-ஜ்ஞானமும், வைராக்ய-வைராக்யமும், (இவற்றினுடைய) ராசயே-கூட்டமாயிருப்பவரும், முனயே-அவனென்றே கிடக்கும் நெஞ்சையுடையவரும், அகாதபகவத்பக்திஸிந்தவே-பகவத்பக்திக்கு நிலைக்கவொண்ணாத கடல்போன்றவருமான, நாதாய்-ஸ்ரீமந்நாதமுனிகள் பொருட்டு, நம:-நமஸ்காரத்தைச்செய்கிறேன்.

**374.** ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்காமோயஜேத ।

ஸ்வர்க்ககாம:-ஸ்வர்க்கத்தையடைய விரும்புகிறவன், ஜ்யோதிஷ்டோமேந-ஜ்யோதிஷ்டோமம் என்கிற யாகத்தாலே, யஜேத-யாகம் செய்யக்கடவன்.

**375.** ஸாயுஜ்யமுபயோரத்ர போக்தவ்யஸ்யா விஸிஷ்டதா ।
ஸார்ஷ்டிதா தத்ர போகஸ்ய தாரதம்ய விஹீநதா ॥

அத்ர-இவ்விடத்தில், உபயோ:-ஸ்வாமிக்கும் தாஸனுக்கும், போக்தவ்யஸ்ய அவிசிஷ்டிதா-அநுபவிக்கும் வஸ்து ஸாமானமாயி

---

373. ஸ்தோ-ர-1. 375. ரஹஸ்யத்ரயஸாரம்-22-அதி.

ருக்குமென்பது, ஸாயுஜ்யம்_ஸாயுஜ்யமென்று சொல்லப்படும், த த்ர_அந்த அநுபவிக்கிற வஸ்துவில், போகஸ்ய_அநுபவத்திற்கு, தாரதம்யவிஹீநதா_ஏற்றக்குறைத்தலில்லாமலிருப்பது, ஸார்ஷ்டி தா_ஸார்ஷ்டிதையென்று சொல்லப்படுகிறது.

**376**. ஜ்ஞாநஸக்த்யந்விதம் கர்ம ஜநகாதிஷு த்ரு(ஷ்ய)ஸ்ய தே। கர்மஸக்த்யந்விதம் ஜ்ஞாநம் ப்ராயேண பரதாதிஷு॥ கர்மஜ்ஞாநாந்விதா ஸக்தி: ப்ரஹ்லாதப்ரமுகாஸ்ரயா॥

ஜ்ஞானபக்த்யந்விதம்_ஜ்ஞானம் பக்தி, இவைகள் அங்கங்களாய் கூடின, கர்ம_கர்மயோகம், ஜநகாதிஷு த்ருஸ்யதே_ஜநகசக்ரவர்த்தி முதலானோர்களிடத்தில் காணப்படுகிறது, கர்மபக்த்யந்விதம் ஜ்ஞாநம்_கர்ம பக்திகளையங்கமாயுடைய ஜ்ஞானயோகம், ப்ராயேண_பெரும்பாலும், பரதாதிஷு_பரதன் முதலானோர்களிடத்தில் காணப்படுகிறது, கர்மஜ்ஞாநாந்விதா பக்தி:_கர்ம ஜ்ஞானங்களையங்கங்களாயுடைய பக்தியோகம், ப்ரஹ்லாதப்ரமுகாச்ரயா_ப்ரஹ்லாதாழ்வான் முதலானோரைப் பற்றியிருக்கிறது.

**377**. ஸோ஽ஸ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா (விபஸ்சிதா)।

ஸ:_அந்த முக்தன், ஸர்வாந்காமாந்_தான் அபேக்ஷித்த ஸகல கோரிக்கைகளையும், விபச்சிதா_ஸர்வஜ்ஞனான, ப்ரஹ்மணா ஸஹ_ப்ரஹ்மத்தோடு கூட, அஸ்நுதே_அநுபவிக்கிறான்.

**378**. நிரஸ்தாதிஸயாஹ்லாத ஸுகபாவைகலக்ஷணா। பேஷஜம் பகவத்ப்ராப்திரேகாந்தாத்யந்திகீ மதா॥

பகவத்ப்ராப்தி:_பகவதநுபவமானது, நிரஸ்தாதிசய_இதற்மேற்பட்டதில்லை யென்னலாம்படியான, ஆஹ்லாத_ஸந்தோஷமென்ன, இவைகளின் தன்மையையே, ஏகலக்ஷணா_முக்கிய லக்ஷணமாகவுடையதாகவும், பேஷஜம்_ஸம்ஸாரதுக்க விரோதியாகவும், ஏகாந்தாத்யந்திகீ_துக்கஸங்கலசாததாகவும் நித்யமாகவும் மதா_சொல்லப்பட்டிருக்கிறது.

377. தை_உப. 2_ப்ர. 378. வி_பு_6_5_59.

## 266 ஸூத்திரம்.

379. தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம் ।
ததாமி புத்தி (த்தி) யோகம் தம் யேந மாமுபயாந்தி தே ॥

யேந-எதனால், தே-முன்சொன்னவர்கள், மாம் உபயாந்தி-என்னையடைவார்களோ, தம் புத்தியோகம்-அந்த புத்தியோகத்தை, ஸததயுக்தாநாம்-எப்போதும் என்னிடத்தில்வைத்த மனதையுடையவர்களாயும், ப்ரீதிபூர்வகம் பஜதாம்-ப்ரீதியோடு பஜிக்கிறவர்களாயுமிருக்கிற, தேஷாம்-அவர்களுக்கு, ததாமி-கொடுக்கிறேன்.

380. மோக்ஷயிஷ்யாமி 112-வது இலக்கம் பார்க்க.

## 267 ஸூத்திரம்.

381. அவஶ்யமநுபோக்தவ்யம் க்ருதம் கர்ம ஶுபாஶுபம் ।
நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடிஶதைரபி ॥

க்ருதம் சுபாசுபம் கர்ம-முன்செய்த புண்யபாபரூபகர்மங்கள், அவச்யம் அநுபோக்தவ்யம்-அவசியம் அநுபவிக்கவேண்டும், கல்பகோடிசதைः அபி-அநேககோடிகல்பங்களானாலும், அபுக்தம் கர்ம ந க்ஷீயதே-அநுபவியாமல் நசியாது.

## 273 ஸூத்திரம்.

382 தவாம்ருதஸ்யந்திநி பாதபங்கஜே நிவேஶிதாத்மா கதமந்யதிச்சதி (ஹி) ।
ஸ்திதேऽரவிந்தே மகரந்தநிர்பரே மதுவ்ரதோ நேக்ஷுரகம் ஹி வீக்ஷதே ॥

தவ-தேவரீருடைய: அம்ருதஸ்யந்திநி பாதபங்கஜே-தேனே மலரும் திருவடித்தாமரைகளில், நிவேசிதாத்மா-போக்யதையில் அழுந்தின நெஞ்சு, அந்யத் கதம் இச்சதி-மற்றொரு க்ஷுத்ரவிஷயத்தை எப்படி விரும்பும், விரும்பாது (அதென்போலவெனில்) மதுவ்ரதः-தேனையே ஜீவநமான வண்டு, மகரந்தநிர்பரே அரவிந்தே ஸ்திதே ஸதி-தேன்நிறைந்த தாமரைப்பூவானது நில்லா நிற்கச்செ

379. ஸ்ரீகீதை-10-10. 382. ஸ்தோ-ர-27.

ய்தே, இக்ஷுஸாரகம்-கிட்டுகையேயரிதாய் கிட்டினலும் நாக்குநனைக்கப் போராதேயிருக்கிற முள்ளிப்பூவை, ந வீக்ஷதே ஹி-கண்ணுலும் பாராதன்ருே!

## 274 ஸூத்திரம்.

**383.** மத்பக்தைஸ்ஸஹஸம்வாஸஸ் ததஸித்தெள (ஸெள)மயாऽபி வா ॥

மத்பக்தைஃ ஸஹஸம்வாஸஃ-என்னடியார்களோடு கூடி வாசம் பண்ணு, ததஸித்தெள-அது கிடைக்காதபக்ஷத்தில், மயா அபிவா-என்னேடாவது வாஸம் பண்ணு.

**384.** ராமாநுஜாங்க்ரி (ஶ்ரீவு) ஶரணோऽஸ்மி குலப்ரதீபஸ்த்வா

ஸீத்ஸயாமுநமுநேஸ்ஸது நாதவம்ஶ்யஃ । வம்ஶ்யஃ பராங்குஶமுநேஸ்ஸது ஸோऽபி தேவ்யாஃ தாஸஸ்தவேதி வரதாஸ்மி தவேக்ஷணீயஃ॥

ஹே வரத-ஏ தேவப்பெருமாளே! ராமாநுஜாங்க்ரிசரணஃ அஸ்மி-இராமாநுஜருடைய திருவடிகளையே உபாயமாகவுடைத்தாயிருக்கிறேன், ஸஃ து-அவரோ, யாமுனமுனேஃ-ஶ்ரீ ஆளவந்தாருடைய, குலப்ரதீபஃ ஆஸீத்-வம்சத்தை ப்ரகாசிப்பித்தவராக இருந்தார். ஸ ச-அந்த ஶ்ரீ ஆளவந்தாரும், நாதவம்ச்யஃ-ஶ்ரீமந்நாதமுனிகள் வம்சத்தில் பிறந்தவர், ஸஃ ச-அந்த நாதமுனிகளும், பராங்குசமுனேஃ வம்ச்யஃ-ஆழ்வாருடைய வித்யாவம்சத்தில் பிறந்தவர், ஸோபி அந்த ஆழ்வாரும், தவ தேவ்யாஃ தாஸஃ-தேவரீருடைய பிராட்டிக்கு தாஸபூதர், இதி ஆகையினல், தவ ஈக்ஷணீயஃ அஸ்மி-தேவரீருடைய கடாக்ஷபாத்திரனுயிருக்கிறேன்.

**385.** ஸவாவார்யவம்ஶோ ஜ்ஞேயஃ ஆசார்யாணமஸாவஸாவித்யா ஹ்ரவத்தஃ ॥

ஸச ஆசார்யவம்சஃ ஜ்ஞேயஃ-ஆசாரியனுடைய அந்த வம்சமானது தெரிந்துகொள்ளவேண்டும், அசார்யாணம் அஸௌ அ

---

383. பகவச்சாஸ்த்திரம். 384- வரதராஜஸ்தவம்-102. 385, ரஹஸ்யாம்நாய ப்ராஹ்மணம்.

ஸௌ இதி-ஆசார்யர்கள் நடுவில் ஒன்றின்றொன்று, ஆபகவத்தஃ-இவ்விதமாய் எம்பெருமானளவும் அநுஸந்திக்கவேண்டும்.

386. த்வ (அ) யமர்யாநுஸந்தாநேந ஸஹ ஸதைவம் வக்தா ।

அர்த்தாநுஸந்தாநத்தோடு கூட எப்போதும் மந்த்ரரத்நத்தை அநுஸந்தித்துக் கொண்டிருக்கவேண்டும்.

387. ஸூவ்யாஹ்ருதாநி மஹதாம் ஸூக்ருதாநி ததஸ்தத: ।
ஸஞ்சிந்வந் தீர ஆஸீத ஶிலஹாரீ ஶிலம் யதா ॥

ஶிலஹாரீ ஶிலம் யதா-உதிரி நெல்லைப் பொருக்கி சாப்பிடுகிறவன் உதிரி நெல்லைப்பொருக்குவதுபோல, மஹதாம்-ஜ்ஞானிகளுடைய, ஸூவ்யாஹ்ருதாநி-குற்றமற்ற வசநங்களையும், ஸூக்ருதாநி-அபபடிப்பட்ட அநுஷ்டாநங்களையும், தீர:-க்ரஹிக்க சக்தியுள்ள ஜ்ஞானி, தத: தத:-அததிலிருந்து, ஸஞ்சிந்வந் ஆஸீத-ஸங்க்ரஹித்துக்கொண்டு இருக்கவேண்டும்.

## 236 ஸூத்திரம்.

388. ஶ்ருதி: 115-வது இலக்கம் பார்க்க.

389. அவிப்லவாய தர்மாணாம் பாலநாய குலஸ்ய ச । ஸங்க்ரஹாய ச லோகஸ்ய மர்யாதாஸ்தாபநாய ச ॥ ப்ரியாய மம விஷ்ணோஶ்ச தேவதேவஸ்ய ஶார்ங்கி (ஞி) ண: । மநீஷீ வைதிகாசாரம் மநஸாऽபி ந லங்கயேத் ॥ யதா ஹி வல்லபோ ராஜ்ஞோ நதீம் ராஜ்ஞா ப்ரவர்த்திதாம் । லோகோபயோகிநீம் ரம்யாம் பஹுஸஸ்ய விவர்த்தி (நி) நீம் ॥ லங்கயந் ஶூலமாரோஹேத் அநபேக்ஷாऽபி தாம் ப்ரதி । ஏவம் விலங்கயந் மர்த்யோ மர்யாதாம் வேதநிர்மிதாம் ॥ ப்ரியோऽபி ந ப்ரியோऽஸௌ மே மதாஜ்ஞா வ்யதிவர்த்தநாத் । உபாயத்வக்ரஹம் தத்ர வர்ஜயேந் மநஸா ஸுதீ: ॥

தர்மாணாம்-வேதத்தில் விதிக்கப்பட்ட தர்மங்களுடைய, அ

386. சரணாகதிகத்யம். 389. லக்ஷ்மீதந்த்ரம்.

விப்லவாய-லோபித்துப் போகாமலிருப்பதற்கும், குலஸ்ய-குலதர் மங்களுடைய, பாலநாயச-பரிக்ரஹார்த்தமாகவும், மர்யாதாஸ்தா பநாய ச-கட்டுப்பட்டை ஸ்தாபிப்பதற்கும், தேவதேவஸ்ய-தேவ தேவனான, சார்ங்கிண:-திருக்கையில், சார்ங்கமென்னும் வில்லையு டையவனுமான, விஷ்ணோ: மம-எம்பெருமானுக்கும எனக்கும், ப்ரியாய ச-ப்ரீதியின் பொருட்டும், மநீஷீ-ஜ்ஞாநர்திகன், வைதிகா சாரம்-வேதத்தில் சொன்ன தர்மாநுஷ்டானத்தை, மநஸா அபி ந லங்கயேத்-மனதாலுங்கூட அதிக்ரமிக்கக்கூடாது, (ஏனென்றால்) லோகோப யோகிநீம்-உலகத்திற்கு உபயோகமானதும், ரம்யாம்-நிர்மலமாயும், குஸஸ்ய விவர்த்திநீம்-அநேகம் பயிர்களை விளையு ம்படிச்செய்வதாயும், ராஜ்ஞா ப்ரவர்த்திதாம்-அரசனால் செய்யப்ப ட்டிருக்கிற, நதீம்-கால்வாயை, ராஜ்ஞ: வல்லப:-ராஜாவுக்கு ப்ரிய னான ஒருவன், (மந்திரி முதலானோர்கள்) தாம் ப்ரதி அநபேக்ஷ: அபி-அக்கால்வாயைத் தான் அபேக்ஷியாதவனாகிலும், லங்கயந்-துற்பது முதலியவற்றைச்செய்தால், யதா சூலம் ஆரோஹேத்-எப் படி கழுவிலே யேற்றுவானோ, ஏவம்-அப்படியே, வேத நிர்மிதாம்-வேதத்தில் சொல்லப்பட்ட, மர்யாதாம்-தர்மங்களின் வ்யவஸ்தை களை, விலங்கயந்-அதிக்ரமித்த, மர்த்ய:-மனிதன், மதாஜ்ஞா வ்யதிவர்த்தநாத்-என்னுடைய ஆஜ்ஞையைத் தாண்டினபடியாலே, மே ப்ரியோऽபி-எனக்கு இஷ்டனானபோதிலும், அப்ரிய:-அவன் எனக்கிஷ்டனல்லன், (ஆனால்) ஸூரீ:-பெரியோர்கள், தத்ர-அத் தர்மாநுஷ்டான விஷயத்தில், உபாயத்வக்ரஹம்-உபாயமென்கிற புத்தியை, மனஸா-மனதாலும், வர்ஜயேத்-விடவேண்டும்.

## 280 ஸூத்திரம்.

**390.** ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பர மம ஸாம்யமுபைதி ।

ததா-அப்போது, வித்வான்-உபாஸகன், புண்யபாபே விதூய

---

390. முண்-உப-3-1.

புண்ய பாபங்களை உதிர்த்துக்கொண்டு, நிரஞ்ஜநம்-அழுக்கற்ற, பரமம் ஸாம்யம்-அநந்த ஈச்வரனோடு ஸாம்யத்தை, உபைதி-அடைகிறான்.

## 231 ஸூத்திரம்.

391. அகிஞ்சித்கரஸ்ய சேஷத்வாநுபபத்திः ।

அகிஞ்சித்க்ரஸ்ய-கிஞ்சித்காரமில்லாதவனுக்கு, சேஷத்வாநுபபத்திः-சேஷத்வம் ஸித்தியாது.

## 234 ஸூத்திரம்.

392. யாः க்ரியாः ஸம்ப்ரயுக்தாः ஸ்யுரேகாந்தகதபுத்திபிः ।
தாஸ்ஸர்வாஸ்ஸிரஸா தேவः ப்ரதிக்ருஹ்ணு (ஹ்ணா) தி
வை ஸ்வயம் ॥

ஏகாந்தகத புத்திபிः-பரமைகாந்திகளால், யாः க்ரியாः-எந்த கைங்கரியங்கள், ஸம்ப்ரயுக்தாः ஸ்யுः-செய்யப்பட்டனவோ, தாः ஸர்வாः-அக் கைங்கரியங்களெல்லாவற்றையும், தேவः ஸ்வயம்-எம்பெருமான்தானே, சிரஸா ப்ரதி க்ருஹ்ணுதி-தலையால் அங்கீகரிக்கிறான்.

## 233 ஸூத்திரம்.

393. ஹஸ்தவத்ஸூ-287-வது இலக்கம்பார்க்க.

394. ப்ரஸாதபரமௌ நாதௌ மம கேஹமுபாகதௌ ।
தந்யோऽஹ மர்ச்சயிஷ்யாமீத்யாஹ மால்யோப ஜீவநः ॥

ப்ரஸாதபரமௌ-அதிகமாக க்ருபையையுடையவர்களான, நாதௌ-ஸர்வேச்வரர்களான, கண்ணன் நம்பிமூத்தபிரானும்; மம கேஹம் உபாகதௌ-அதி நீசனுன என்னுடைய குடிசையைத்தேடிக்கொண்டு வந்தார்கள். தந்யः அஹம்-அத்தால் தன்னியனுன அடியேன், அர்ச்சயிஷ்யாமி-பூஜிக்கப்போகிறேன், இதி மால்யோப ஜீவநः ஆஹ-இப்படியாக புஷ்பம் வித்து ஜீவிக்கும் மாலாகாரன் சொன்னுன்.

---

392. பாரதம். 394. வி-பு-5-9-20.

395. ஸுகந்தமேதத் ராஜார்ஹம் ருசிரம் ருசிராநநே।
ஆவயோர்காத்ர ஸத்ரு (ஜ்ரு) சம் தீயதாமநுலேபநம்॥

ஹே ருசிராநநே-அழகு பொருந்திய முகமுடையவளே! ஸுகந்தம்-நல்ல வாஸனையுடையதும், ராஜார்ஹம்-அரசர்களுக்குத் தகுந்ததும், ருசிரம்-உயர்ந்ததும், ஆவயோ: காத்ர ஸத்ருசம்-எங்களிருவர் திருமேனிக்குத் தகுந்ததுமான, ஏதத் அநுலேபநம்-இந்த சந்தனமானது, தீயதாம்-கொடுக்கப்படட்டும்.

## 291 ஸாத்திரம்.

396. ந தர்மநிஷ்டோஸ்மி நசாத்மவேதீ ந பக்திமான் த்வச்சரணாரவிந்தே। அகிஞ்சநோ நந்யகதிஶ்ஶரண்ய த்வத் பாதமூலம் ஶரணம் ப்ரபத்யே (த்யே)॥

ந தர்மநிஷ்ட: அஸ்மி-கர்மயோகத்தில் நிஷ்டையுடையவனல்லேன், நச ஆத்மவேதீ-ஜ்ஞானயோக முடையவனல்லேன். தவச்சரணாரவிந்தே-தேவரீர் திருவடித்தாமரைகளில், ந பக்திமான்-அநவரதபக்தியுடையவனல்லேன். அகிஞ்சந:-கைமுதலற்றவன், அநந்யகதி:-வேறு ரக்ஷகனில்லாதவன், சரண்ய-ஓ ரக்ஷகனே! த்வத்பாதமூலம்-தேவரீர் திருவடிகளை, சரணம் ப்ரபத்யே-உபாயமாக அத்யவஸிக்கிறேன்.

397. ஸத்கர்ம நைவ கில கிஞ்சந ஸஞ்சிநோமி வித்யா(ஜ்யா)ப்யவத்ய (த்ய) ரஹிதா நது வித்ய(த்ய)தே மே। கிஞ்ச த்வ தஞ்சித பதாம்புஜ பக்திஹீந: பாத்ரம் பவாமி பக பவந் பவதோ தயாயா:॥

ஹே பகவந்-ஷாட்குண்ய பரிபூர்ண! கிம்சந ஸத்கர்ம-யஜ்ஞம் தானம் முதலிய நல்ல கர்மங்களில் கொஞ்சமேனும், நைவ ஸஞ்சிநோமி கில-ஸம்பாதிக்கிறேனில்லை, மே-எனக்கு, வித்யா அபி-ஜ்ஞானமும், அவத்யரஹிதா-ஸம்சயம் முதலான தோஷங்களில்லாததாய், நது வித்யதே-இல்லை. கிம் ச-பின்னும், த்வதஞ்சி

---

395. வி-பு-5-20-3. 396. ஸ்தோ-ர-22. 997. வைகுண்டஸ்வம்-88.

த பதாம்புஜ பக்திஹீந:-தேவரீருடைய பூஜ்யமான திருவடித்தாமரைகளில் பக்தியில்லாத நான், பவ்த: தயயா:-தேவரீர் தயைக்கு, பாத்ரம் பவாமி-பாத்திரனாக ஆகிறேன்-

398. ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித் ।

ய:-எவர், ஸர்வஜ்ஞ:-ஸர்வ வித்-எல்லாவற்றையும் ஸ்வரூபத்தாலும் ப்ரகாரத்தாலும அறிந்தவரோ.

399. அவிஜ்ஞாதா ஸஹஸ்ராம்ஶு: ।

அவிஜ்ஞாதா-ஆச்ரிதர்களுடைய தோஷங்களை தெரிந்துகொள்ளாதவன், ஸஹஸ்ராம்சு:-அபரிமிதமான ஜ்ஞானத்தையுடையவன்.

400. அவிஜ்ஞாதாஹி ஹமவான் ஆமஸ்ஸு கமலேக்ஷண: ।
ஸதாஜகத் ஸமஸ்தம்ச பஶ்யந்நபி ஹ்ருதிஸ்யித:॥

கமலேக்ஷண:-தாமரைக் கண்ணனான எம்பெருமான், ஸதா எப்பொழுதும், ஸமஸ்தம் ஜகத் ச-எல்லா ஜகத்துக்களையும், ஹ்ருதிஸ்தித:-மனத்திலிருந்து, பச்யந் அபி-பார்த்துக்கொண்டிருக்கச் செய்தே, பக்தாநாம் ஹி-பக்தர்களுடைய, ஆகஸ்ஸு-பாபங்களில், அவிஜ்ஞாதாஹி-அறியாதவனன்றோ!

401. பராஸ்ய ஶக்திர்விவிதைவ ஶ்ரூயதே ।

அஸ்ய-இந்த ஈச்வரனுடைய, பராசக்தி:-உயர்ந்த ஸாமர்த்தியமானது, விவிதைவ-அநேகவிதமாக, ச்ரூயதே-வேதங்களில் சொல்லப்படுகிறது.

402. ந ஹிம்ஸ்யாத் ஸர்வா பூதாநி ।

ஸமஸ்த ஜந்துக்களையும் ஹிம்ஸிக்கக்கூடாது.

403. பரத்ர (ரு) வ்யேஷ்வ பித்யா (த்யா) நம மநஸாऽநிஷ்ட
விந்தநம் । விதயாऽபிநிவேஶஶ்ச த்ரிவிதம் கர்மமானஸம்॥

---

398. மு-உ-1-1. 399. ஸஹஸ்ரநாமம. 401. ச்வேதா-உப,
403. மநுஸ்-12-5.

பாருஷ்ய மந்ருதம் சைவ பைசுநஞ்சைவ ஸர்வசஃ ।
அநிபத்த(ஃ) ப்ரலாபஸ்ச வாங்மயம் ஸ்யாச்சதுர்விதம்॥
அதத்தாநாமுபாதாநம் ஹிம்ஸா சைவாவிதாநதஃ ।
பரதாரோபஸேவாச ஶாரீரம் த்ரிவிதம் ஸ்ம்ருதம் ॥

பரத்ரவ்யேஷு அபித்யாநம்_பரத்ரவ்யத்தை யபேக்ஷிப்பதும், மநஸா அநிஷ்ட சிந்தநம்_மனத்தால் இதரர்களுக்கு இஷ்டமில்லாததைச் சிந்திக்கிறதும், விததாபிநிவேசஃ ச_வேதவிருத்தமான அக்கிரமங்களை இச்சிப்பதும், த்ரிவிதம் மாநஸம் கர்ம_என்கிற மூன்று விதமான கர்மம் மனஸ்ஸால் செய்யப்படுமவை, பாருஷ்யம்_கொடிய வாக்கியங்களும், அந்ருதம் சைவ_பொய்யும், ஸர்வசஃ பைசுநம்ச_எல்லா விதத்தாலும் கோள் சொல்லுவதும், அநிபத்த ப்ரலாபஃ ச_சாஸ்திரத்திற்குக் கட்டுப்படாதே வார்த்தை சொல்வதும், வாங்மயம் சதுர்விதம் ஸ்யாத்_(என்று) வாக்கினால் செய்யப்பட்ட பாபங்கள் நான்கு விதம், அதத்தாநாம் உபாதாநம்_ஒருவன் இஷ்டப்பட்டுக்கொடுக்காத த்ரவ்யத்தை எடுப்பதும், அவிதாநதஃ ஹிம்ஸாச_சாஸ்திரத்தில் விதியாத ஹிம்ஸை பண்ணுவதும், பரதாரோபஸேவாச_பிறர் மனைவியோடு கலப்பதும், சாரீரம் த்ரிவிதம் ஸ்மிருதம்-சரீரத்தாலே செய்யப்பட்ட பாபங்கள் மூன்றுவிதமென்று நினைக்கவேண்டும்.

## 303 ஸூத்திரம்.

404. யேது ஸாமாந்யபாவேந மந்யந்தே புருஷோத்தமம் ।
தே வை பாஷண்டிநோஜ்ஞேயாஃ ஸர்வகர்மபஹிஷ்க்ருதாஃ ॥ யஸ்து நாராயணம் தேவம் ஸாமாந்யேநாபிமந்யதே । ஸ யாதி நரகம் கோரம் யாவச்சந்த்ரதிவாகரம் ॥

யேது_எவர்கள், புருஷோத்தமம்_ஸர்வேச்வரனை, ஸாமாந்யபாவேந_தேவதாந்தரங்களோடு ஒக்க ஸமானன் என்கிற புத்தியால், மந்யந்தே_நினைக்கின்றார்களோ, தே வை_அவர்கள், பாஷண்டிநஃ ஜ்ஞேயாஃ_பாஷண்டிகளென்று நினைக்கத்தக்கவர்கள். ஸர்வ

கர்ம பஹிஷ்க்ருதா:-அவர்களையெல்லாக் கர்மங்களினின்றும் வெளிப்படுத்தவேண்டும். ய: து நாராயணம் தேவம்-எவன் ஸர்வஸ்வாமியான எம்பெருமானை, ஸாமாந்யேந அபிமந்யதே-தேவதாந்தரங்களோடு ஸமானனென்று நினைக்கின்றானோ, ஸ:-அவன், யாவச்சந்த்ர திவாகரம்-ஸூரியன் சந்திரனிருக்கும் வரையில், கோரம் நரகம் யாதி-கொடிய நரகத்தை அடைகின்றான்.

**405**. அந்த: ப்ரவிஷ்டஶ்ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா ।

ஸர்வாத்மா-எல்லாவற்றையும் சரீரங்களாகவுடைய பகவான், ஜநாநாம்-ஜநங்களுடைய, அந்த: ப்ரவிஷ்ட:-அந்தர்யாமியாய் இருந்துகொண்டு, சாஸ்தா-நியமித்துக்கொண்டிருக்கிறான்.

**406**. தமீஶ்வராணாம் பரமம் மஹேஶ்வரம் ।

ஈச்வராணாம்-ஈச்வரரென்று பெயருடையவர்களுக்கு எல்லாம், பரமம்-ச்ரேஷ்டராயும், மஹேச்வரம்-பெரிய ஈச்வரனாயிருக்கிற, தம்-அந்த பகவானை,

**407**. ந தத்ஸமஶ்சாப்யதிகஶ்ச த்ரு (ஊ) ஶ்யதே ।

தத் ஸம:-அவனுக்கு ஒப்பானவனும், அதிக: ச-அதிகனானவனும், ந த்ருச்யதே-காணப்படவில்லை.

**408**. அங்காநி- 12-வது இலக்கம்பார்க்க.

**409**. அஜோऽபி ஸந்நவ்யயாத்மா பூதாநா மீஶ்வரோபி ஸந் ।

ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்மமாயயா ॥

அஜ: அபி ஸந்-பிறப்பில்லாதவனாயிருந்தபோதிலும், அவ்யயாத்மா அபிஸந்-அழிவில்லாதவனாயிருந்தபோதிலும், பூதாநாம்-ஜந்துக்களுக்கு, ஈஶ்வர: அபி ஸந்-நாயகனாயிருந்த போதிலும், ஸ்வாம்-தன்னுடையதான, ப்ரகிருதிம்-பிரகிருதியை, அதிஷ்டாய-அடைந்து, ஆத்மமாயயா-என்னுடைய ஸங்கல்பத்தினால், ஸம்பவாமி-அவதரிக்கின்றேன்.

---

405. ஆரணம்-3-20. 406. ஶ்வேதாஶ். 407. ஶ்வேதாஶ். 6.
409. ஸ்ரீகீதை-4-6.

**410.** யோऽந்யதா ஸந்தமாத்மாநம் அந்யதா ப்ரதிபத்யதே ।
கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா ॥

யஃ-எவனாகிலும், (வர்ணாச்ரம நியமமில்லை.) அந்யதாஸந்தம் ஆத்மாநம்-பகவச்சேஷமாயிருக்கிற ஆத்மவஸ்துவை, அந்யதா-ஸ்வதந்த்ரமாக, ப்ரதிபத்யதே-நினைக்கின்றானோ, ஆத்மாபஹாரிணா தேந-ஆத்மாவை அபஹரித்த அத்திருடனால், கிம் பாபம்-என்னபாபம் தான், ந க்ருதம்-செய்யப்படவில்லை. (அதாவது எல்லா பாபங்களும் செய்தவனாகின்றான்.

## 306. ஸூத்ரம்.

**411.** ஸநவஃஸஹநீயாஸி-121-வது இலக்கம்பார்க்க.

## 307. ஸூத்ரம்.

**412.** உதாராஃ ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீத்வாத்மைவ மேமதம் ।
ஆஸ்திதஃ ஸஹி யுக்தாத்மா மாமேவாநுத்தமாம் கதிம் ॥

ஸர்வே ஏதே-ஸமஸ்தர்களான இந்த நால்வரும், உதாராஃ ஏவ-உதாரர்களே. ஜ்ஞாநீ து-ஜ்ஞானமுடையவனோ வென்றால், மே ஆத்மா ஏவ-எனக்கு ஆத்மாவென்றே, மதம்-என் எண்ணம், ஹி-ஏனென்றால், ஸஃ-அந்த ஜ்ஞாநி, யுக்தாத்மா-என்னையே த்யானஞ்செய்பவன், மாமேவ-என்னையே, அநுத்தமாம்-ச்ரேஷ்டமான, கதிம்-கதியாக, ஆஸ்திதஃ-நினைத்திருக்கின்றான்.

## 315. ஸூத்ரம்.

**413.** ஐஹலௌகிகமைஶ்வர்யம் ஸ்வர்காத்ய (ந்து) ம் பாரலௌகிகம் । கைவல்யம் ஸநவந்தம் ச மந்த்ரோऽயம் ஸாதயிஷ்யதி ॥

ஐஹ லௌகிகம் ஐச்வர்யம்-புசு புத்ர தநாதி ரூபமான இஹலோக ஐச்வர்யத்தையும், ஸ்வர்க்காத்யம் பாரலௌகிகம்-ஸ்வர்க்காநுபவம் முதலான பரலோகைச்வர்யத்தையும், கைவல்யம்-கை

---

410. பார்ஹஸ்பத்யஸ்ம்ருதி. 412. ஸ்ரீகீதை-7-18.
413. ஸ்ரீபாஞ்சராத்ரம்.

வல்லியத்தையும், பகவந்தம் ச-பகவததநுபவத்தையும், ஸாதயிஷ்யதி-ஸாதித்துக்கொடுக்கும்.

**414**. ஸர்வவேதாந்த ஸாரார்த்த: ஸம்ஸாரார்ணவதாரக: ।
கதிரஷ்டாக்ஷரோந்ரூணும அபுநர்பவகாங்க்ஷிணும் ॥

ஸர்வவேதாந்த ஸாரார்த்த:-ஸமஸ்த வேதாந்தங்களின் ஸாரார்த்தமாயும், ஸம்ஸாரார்ணவதாரக:-ஸம்ஸாரமாகிற கடலைக்கடக்கவைப்பதுமான, அஷ்டாக்ஷர:-திருவஷ்டாக்ஷர மந்தரமானது அபுநர்பவகாங்க்ஷிணும்-மீண்டும் பிறக்கவிருப்பமில்லாத, ந்ரூணும்-மனிதர்களுக்கு, கதி:-புகலிடம்.

**415**. மந்த்ராணும் பரமோ மந்த்ர: குஹ்யாநாம் குஹ்யமுத்தமம் । பவித்ரம வு பவித்ராணும் மூலமந்த்ர: ஸநாதந: ॥

ஸநாதந: மூலமந்த்ர:-அநாதியான மூலமந்த்ரமானது, மந்த்ராணும் பரம: மந்த்ர:-மந்திரங்களுக்குள் மிக உயர்ந்த மந்த்ரம், குஹ்யாநாம் உத்தமம் குஹ்யம்-ரஹஸ்யங்களுக்குள் உயர்ந்த ரஹஸ்யம், பவித்ராணும் பவித்ரம் ச-பரிசுத்தமானவைகளுக்குள் மஹாபரிசுத்தமானது.

## 321 ஸூத்திரம்.

**416**. குருஶுஶ்ரூஷயா வித்யா (ஓ) புஷ்கலேந யநேநவா।
அதவா வித்ய(ஓ) யா வித்யா சதுர்த்தம் நோபலப்யதே ॥

வித்யா-வித்யையானது, குருசுச்ரூஷயா-ஆசாரியகைங்கரியத்திலாவது, புஷ்கலேந தநேந வா-அதிக தநத்திலாவது, அத வா-இல்லாவிட்டால், வித்யயா வித்யா-ஒரு வித்யைச்சொல்லி வேறு வித்யையைப்பெறலாம். சதுர்த்தம் ந உபலப்யதே-இவைகளைத் தவிர நான்காவது வழியில்லை.

**417**. இதம் து தே குஹ்யதமம் ப்ரவக்ஷ்யாம்யநஸூயவே।
ஜ்ஞானம் விஜ்ஞான ஸஹிதம் யத் ஜ்ஞாத்வா மோக்ஷ்யஸேऽஶுபாத் ॥

---

415. விஷ்வக்ஸேன ஸம்ஹிதா. 416. கச்யபஸம்ஹிதை. 417. ஸ்ரீகீதை-9-1.

யத் ஜ்ஞாத்வா_எதையறிந்து, அசுபாத்_ஸம்ஸாரத்திலிருந்து, மோக்ஷ்யஸே_விடப்படுவாயோ, குஹ்யதமம்_அதிரஹஸ்யமான, விஜ்ஞான ஸஹிதம்_உபாஸனையுடன் கூடிய, இதம் ஜ்ஞானம்_இந்த ப்ரஹ்மஜ்ஞானத்தை, அநஸூயவே தே_அஸூயையில்லாத உனக்கு, ப்ரவக்ஷ்யாமி_சொல்லுகின்றேன்.

**418.** அஸூயா ப்ரஸவபூமி:. 119-வது இலககம் பார்க்க.

## 322 ஸூத்திரம்.

**419.** குருரேவ பரம் ப்ரஹ்ம (ஙு ஹூ) குருரேவ பராகதி: । குருரேவ பராவித்யா குருரேவ பராயணம் ॥
குருரேவபர: காம: குருரேவ பரம் தநம் । யஸ்மாத் தது பதேஷ்டாஸௌ தஸ்மாத் குருதரோகுரு: ॥

குருரேவ_ஆசார்யனே, பரம ப்ரஹ்ம_பரமாத்மா (அவ்வண்ணம் பக்தியுடன் பூஜை செய்யத்தக்கவன்). குருரேவ_ஆசார்யனே. பரா கதி:_நற்கதி (அவ்வண்ணம் சென்றடையத்தக்கவன்) குருரேவ_ஆசார்யனே, பராவித்யா_ப்ரஹ்ம வித்தை (அவ்வண்ணம் உபாஸனை செய்யத்தக்கவன்) குருரேவ பராயணம_ஆசார்யனே புகலிடம், குருரேவ_ஆசார்யனே, பர:காம:_சிறநத காமம் (அவ்வண்ணம் விரும்பத்தக்கவன்). குருரேவ_ஆசார்யனே, பரம தநம்_சிறந்த பொருள் (அவ்வண்ணம் பாதுகாக்கததக்கவன்). அஸௌ_இந்த ஆசாரியன், யஸ்மாத்_யாதொரு காரணத்தாலே, தது பதேஷ்டா_அந்தத் திருமந்திரத்தை உபதேசித்தானோ, தஸ்மாத்_அந்த காரணத்தாலே, குரு:_அந்த ஆசார்யனே, குருதர:_ஆசாரியர்களெல்லோரிலும் சிறந்தவன்.

**420.** ஐஹிகாமுஷ்மிகம் ஸர்வம் ஸவாஷ்டாக்ஷரதோகுரு: ।
இத்யேவம் யே ந மந்யந்தே த்யக்தவ்யாஸ்தேமநீஷிபி:॥

ஐஹிகாமுஷ்மிகம் ஸர்வம_இஹலோக பரலோக ஐஶ்வர்யங்களெல்லாம், அஷ்டாக்ஷரத:_அஷ்டாக்ஷர மந்திரத்தை உபதேசித்த, ஸசுரு:_அந்த ஆசாரியனே, இதி ஏவம்_இந்த ப்ரகாரம

419. கச்யபஸம்ஹிதை.

க, யே-எவர்கள், நமங்யந்தே-நினைக்கவில்லையோ, தே-அவர்கள், மநீஷிபிஃ-பெரியோர்களாலே, த்யக்தவ்யாஃ-விடத்தகுந்தவர்கள்.

### 323 ஸூத்திரம்.

421. மாதாபிதா யுவதயஸ்தநயா விபூதிஸ்ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் । ஆத்ய (ஸ்ய) ஸ்ய நஃ குலப தேர்வகுளாபிராமம் ஸ்ரீமத் ததங்க்ரி (த்வ) யுகளம் ப்ர ணமாமி மூர்த்நா (ஆ-ரா) ॥

மதந்வயாநாம்-வித்யையாலும், ஜன்மத்தாலும் என் வம்ச ஸம்பந்திகளுக்கு, யதேவ-எந்த ஸ்ரீபாதயுகளமே, நியமேன-எக்காலத்திலும், மாதா-ப்ரியத்தையே வேண்டியிருக்கும் மாதாவும், பிதா-ஹிதத்தை வேண்டியிருக்கும் தந்தையும், யுவதயஃ-மனதிற்கு இனியரான ஸ்திரீகளும், தநயாஃ-பக்குவதசையில் பாதுகாக்கும் புத்ரர்களும், விபூதிஃ-இவ்வெல்லாவற்றையும் நன்றாக்கும் செல்வமும், ஸர்வம்-மற்றெல்லா நலமும் ஆக ஆகின்றனவோ, ஆத்யஸ்ய-ப்ரதமாசார்யரும், நஃ குலபதேஃ-ஸ்திரீகளுக்கு பர்த்ரு குலமே குலமாகிறாப்போல ஸ்ரீமந்நாதமுனி ஸம்ப்ரதாயஸ்தர்களான நம்முடைய குலத்திற்கு கோத்ர முனிவருமான நம்மாழ்வாருடையனவாயும், வகுளாபிராமம்-திருமகிழ் மாலையாலே அழகுள்ளனவாயும், ஸ்ரீமத்-ஸ்ரீவைஷ்ணவ தேஜஸ்ஸோடு நித்யமும் கூடினவையாயும, தத்-பேசி முடிக்க வொண்ணாத மஹிமையுள்ளனவாயும விளங்குகின்றனவோ அப்படிப்பட்ட, அங்கிரியுகளம்-திருவடியிணையை, மூர்த்நா-சிரஸினாலே, ப்ரணமாமி-தண்டம் ஸமர்ப்பிக்கின்றேன்.

### 334 ஸூத்திரம்.

422. அஹமந்நமஹந்நமஹந்நம் । அஹமந்நாதோ3ஹமந்நாதோ3ஹமந்நாதஃ ॥

---

421. ஸ்தோ-ர-5.

அஹம்-நான், அந்நம்-சாப்பிடத்தக்க வஸ்து, அஹம்-நான், அந்நாதஃ-அந்த அன்னத்தைச் சாப்பிடுகிறவன். (அதாவது) நான் பரமாத்மாவுக்கு போக்யபூதன், நான் பரமாத்மாவாகிற போக்யத்தை அநுபவிக்கிறவன்.

## 337. ஸூத்திரம்.

423. ஶரீரமர்த்தம் ப்ராணஞ்ச ஸத்குருப்யோ(ஹ்யோ) நிவேதயேத் ।

ஸத்குருப்யஃ-ஸதாசாரியன்பொருட்டு, சரீரம்-உடலையும், அர்த்தம்-பொருளையும், ப்ராணம் ச-ஆவியையும், நிவேதயேத்-ஸமர்ப்பிக்கக்கடவது.

## 347 ஸூத்திரம்.

424. கிம் தேந—410-வது இலக்கம்பார்க்க.

## 348. ஸூத்திரம்.

425. விசித்ராதேஹ —234-வது இலக்கம்பார்க்க.

426. மந்த்ரே தத் தேவதாயாஞ்ச ததா மந்த்ரப்ரதே குரௌ ।
த்ரிஷு பக்திஸ்ஸதா கார்யாஸாஹி ப்ரதமஸாதநம் ॥

மந்த்ரே-மந்த்ரத்திணிடத்திலும், தத் தேவதாயாம் ச-அதினுடைய தைவத்தினிடத்திலும், ததா-அப்படியே, மந்த்ரப்ரதே-மந்த்ரத்தை உபதேசித்த, குரௌ-ஆசாரியனிடத்திலும், த்ரிஷு-இம் மூன்றினிடத்திலும், பக்திஃ-பக்தியானது, ஸதா-எப்போதும், கார்யா- (ஒவ்வொன்றைக்காட்டிலும் மேன்மேல் அதிசயித்து) செய்யத்தக்கது. ஸாஹி-அந்தபக்தியல்லவா, ப்ரதமஸாதனம்-முதலான ஸாதனம் (முக்கிய உபாயம்)

427. மந்த்ரநாதம் குரும் மந்த்ரம் ஸமத்வேநாநுபாவயேத் ।

மந்த்ரநாதம்-மந்தரதேவதையும், குரும்-ஆசாரியனையும், மந்த்ரம்-மந்த்ரத்தையும், ஸமத்வேந அனுபாவயேத்-ஸமமாக அறியவேணும்,

---

422. தை-உப-10-6. 426. விஷ்ணுதத்வம்.

**428.** யதிமே ப்ரஹ்ம (ஸூ-ஹூ) சர்யம ஸ்யாத்

ப்ரஹ்மசர்யம்_பிரஹ்மசரிய விருதம், யதிமேஸ்யாத்_இருக்கும்பக்ஷத்தில்.

**429.** காமாத் கோப்யோ பயாத் கம்ஸ: த்வேஷாச் சைத்யா (த்யா) தயோ ந்ருபா: । ஸம்பந்தாத் வ்ருஷ்ணய: ஸ்நேஹாத் யூயம் பக்த்யா வயம் ந்ருப ॥

ஹே ந்ருப-ஓ வேந்தனே! கோப்ய:-கோபஸ்திரீகள், காமாத்_காமத்தினலும், கம்ஸ:-கஞ்சன், பயாத்_அச்சத்தினலும், சைத்யாதய: ந்ருபா:-சிசுபாலன் முதலான வேந்தர்கள், த்வேஷாத்_பகையினலும, வ்ருஷ்ணய:_யாதவர்கள், ஸம்பந்தாத்_உறவினலும், யூயம்_நீங்கள், ஸ்நேஹாத்_நட்பினலும், வயம்_நாங்கள், பக்த்யா_பக்தியினலும், (புனிதர்களாயினேம்)

## 358. ஸூத்திரம்.

**430.** அமர்யாத:-119-வது இலக்கம்பார்க்க.

**431.** வித்வேஷமாநமதராக விலோபமோஹாத்யா (த்யா) ஜாநபூமிரஹமத்ர பவே நிமஜ்ஜந்। நிர்த்வந்தவநித்ய நிரவத்ய மஹாகுண த்வாம் ஹஸ்தீச கர்ஹிசயிது மீக்ஷிது மீப்ஸிதும் வா ॥

வித்வேஷ_வியாஜமில்லாத வைரமென்ன, மாந-குலாதிகளாலுண்டான கர்வமென்ன, மத_மதமென்ன, ராக_விஷயங்களில் ஆசையென்ன, விலோப-அதிக லோபமென்ன, மோகம்_விஷயாதி மோகமென்ன, ஆதி-இவை முதலானவைகளுக்கு, ஆஜானபூமி:_ஜென்மபூமியாயும், அத்ரபவே_இந்த ஸம்ஸாரத்தில், நிமஜ்ஜன்_முழுகிக்கொண்டிருக்கிற, அஹம்-நான், நிர்த்வந்தவ-ஸத்ருசமில்லாததாயும், நித்ய_நித்யமாயும், நிரவத்ய-தோஷமில்லாததாயுமிருக்கிற, மஹாகுண-அபரிச்சின்னமான குணங்களையுடைய, ஹேஹஸ்தீச-ஹே வரதனே, த்வாம்-தேவரீரை, ஈக்ஷிதும்-சேவிப்ப

---

429. பாகவதம். 431. வர-ஸ்தவ-76.

தற்கும், ஈப்ஸிதும் வா-இச்சைப்படுதற்கும், கஃ-எவன், (ஒன்றுக்கும் அதிகாரியல்லன்.)

**432.** அதிக்ராமங்-121-வது இலக்கம்பார்க்க.

**433.** ஸ்ரீரங்கேஶ த்வத்கு³ணாநாமிவாஸ்மத்³தோ³ஷாணாம் கஃ
பாரத்ரு(த்³ரு)ஶ்வா யதோஹம் ஓகே மோகோதந்யவத்
த்வத்கு³ணாநாம் த்ருஷ்ணபூரம் வர்ஷதாம் நாஸ்மி பாத்ரம் ॥

ஹேரங்கேச-ஏ நம்பெருமாளே! த்வத்குணாநாம் இவ-தேவரீருடைய குணங்களுக்குப்போல, அஸ்மத் தோஷாணாம்-எங்களுடைய தோஷங்களுக்கும், பாரத்ருச்வா_கரையறிந்தவன், கஃ-எவன், யதஃ-யாதொன்றுலே, அஹம்_நான், ஓகே-ப்ரவாஹத்தில், மோகோதந்யவத்-வியர்த்தமான தாஹம்போல, த்ருஷ்ணபூரம்_மநோரதித்தார் மநோரதத்தளவும், வர்ஷதாம்-வர்ஷிக்கிற, த்வத்குணாநாம்-தேவர் குணங்களுக்கு, பாத்ரம்-பாத்திரமாக, நாஸ்மி-ஆகிறேனல்லேன்.

**434.** மச்சித்தா மத்³க³தப்ராணா போ³த⁴யந்தஃ பரஸ்பரம் ।
கத²யந்தஶ்சமாம் நித்யம் துஷ்யந்தி ச ரமந்தி ச ॥

மச்சித்தாஃ-என்மீதே மனமுடையவர்களாகியும், மத்கதப்ராணாஃ-என்னைவிட்ட கலாதவுயிருடையவர்களாகியும், பரஸ்பரம்-ஒருவருக்கொருவர், போதயந்தஃ-என்னுடைய குணங்களையே புகழ்ந்து மகிழ்ந்துரைப்பவர்களாகியும், மாம் நித்யம் கதயந்தஃ ச-என்னையே எப்பொழுதும் கீர்த்தனம்பண்ணுபவர்களாகியும், துஷ்யந்தி ச-உரைப்பவர்களுடனும் மகிழ்கின்றனர்கள், ரமந்தி ச-கேட்பவர்களுடன் மகிழ்கின்றனர்கள்.

**435.** வஶீவதா³ந்யோ கு³ணவான் ருஜுஃ ஶுசிஃ ம்ருது³ர்த³யா
ளுர் மது⁴ரஃ ஸ்தி²ரஸ்ஸமஃ । க்ருதீ க்ருதஜ்ஞஸ்த்வமஸி
ஸ்வபா⁴வதஃ ஸமஸ்தகல்யாண கு³ணாம்ருதோத³தி⁴ஃ ॥

---

433. ஸ்ரீரங்-ஸ்த-உத்-94, 434. ஸ்ரீகீதை. 435. ஸ்தோ-18,

வசீ-ஆச்ரிதர்கள் விஷயத்தில் தாழநிற்கிறவனாய், வதாந்ய:-பரமோதாரனாய், குணவாந்-ஸௌசீல்யமுள்ளவனாய், ருஜு:-வக்ரரூபனாய், சுசி:-பாவ சுத்தியுள்ளவனாய், ம்ருது:-மார்த்தவமுள்ளவனாய், தயாளு:-தயையுள்ளவனாய், மதுர:-இனியனாய், ஸ்திர:-அப்ரகம்ப்யனாய், ஸம:-ஸர்வஸமனாய், க்ருதீ-ஆச்ரிதர் கார்யமெல்லாம் செய்யுமவனாய், க்ருதஜ்ஞ:-க்ருதஜ்ஞனாய், த்வம்-தேவரீர், அஸி-இருக்கிறீர், ஸ்வபாவத:-ஒருவித காரணமன்னியில் இயற்கையாய், ஸமஸ்தகல்யாண குணாம்ருதோததி:-ஸமஸ்த கல்யாண குணங்களுக்குக் கடல்போலேயிருக்கிறீர்.

**436.** அஸங்க்யேய(ஜ்ஞேய)ய கல்யாணகுணகணௌகமஹார்ணவ॥

கணக்கற்ற திருக்கல்யாணகுண ஸமூஹங்களாகிற பிரவாஹத்திற்கு பெரிய கடல்போன்றவரே!

**437.** யதாரத்நாநி ஜலதேரஸங்க்யே (ஜ்ஞேய) யாநிபுத்ரக।
ததாகுணாஹ்ய நந்தஸ்ய அஸங்க்யேயா மஹாத்மந:॥

புத்ரக-ஏ பிள்ளாய்! ஜலதே:-ஸமுத்திரத்தினுடைய, ரத்நாநி-ரத்னங்கள், யதா அஸங்க்யேயாநி-எப்படிக்கணக்கிடமுடியாதோ, ததா-அப்படியே, மஹாத்மந: அனந்தஸ்ய-அநாதியான பெருமாளுடைய, குணா:-குணங்கள், அஸங்க்யேயா:-கணக்கில்லை.

**438.** நாஹம் ஸமர்த்தோ ஹமவத் ப்ரியாணாம் வக்தும் குணாந்
பத்மபவோऽப்யகம்யாந்।

பத்மபுவ: அபி-ப்ரஹ்மாவிற்கும், அகம்யான்-கோசரமல்லா, த, பகவத் ப்ரியாணாம்-பாகவதர்களுடைய, குணான்-குணங்களை, வக்தும்-சொல்லுவதற்கு, அஹம்-நானும், ந ஸமர்த்த:-ஸமர்த்தனல்லன்.

## 366. ஸூத்திரம்.

**439.** உதாரந்தஸ்யாநாதேரபரிஹரணீயஸ்ய மஹதோ நிஹீநாசாரோऽஹம் ந்ருபசுரசுபஸ்யாஸ்பதமபி। உயா

---

436. சரணா-கத்யம். 439. ஸ்தோ-ர-58.

ஸிந்யோ பந்யோ நிரவயிகவாத்ஸல்யஜலயே தவ ஸ்மா
ரம் ஸ்மாரம் குணகணமிதீச்சா (ஹா)மி கதபீ: ॥

துரந்தஸ்ய-முடிவன்றிக்கே யிருப்பதாய், அநாதே:-ஆதியற்றதாய், அபரிஹரணீயஸ்ய-ஸர்வ சக்தனுன உனக்கும் பிற்காலிச்கும்படியிருப்பதாய், மஹத:-முடிவுகாண வொண்ணுததாயுமுள்ள, அசுபஸ்ய-பாபத்திற்கு, ஆஸ்பதம்-இருப்பிடமாய், நிஹீநாசார:-ஆசாரத்திஞலே குறைந்தவனுய், ந்ருபசு:-மனுஷ்யப் பசு என்னும்படியான, அஹம்-அடியேன், தயாஸிந்தோ-ஓ தயாநிதியே! பந்தோ-ஓ நிருபாதிக பந்துவே! நிரவதிக வாத்ஸல்யஜலதே-கரையில்லாத வாத்ஸல்ய ஸாகரமே! தவ-நின்னுடைய, குணகணம்-கல்யாணகுண ஸமூஹத்தை, ஸ்மாரம் ஸ்மாரம்-நினைத்துநினைத்து, கதபீ:-என்னுடைய பாபத்திற்கு பயப்படாதவனுகி, இதி-கீழ்ச்சொன்னபடி, இச்சாமி-பரமபுருஷார்த்தத்தை இச்சிக்கிறேன்.

### 380 ஸூத்திரம்.

ஸதம்-76-வது இலக்கம் பார்க்க.

440. நிராஸகஸ்யாபி ந தாவது த்ஸஹே மஹேஶ ஹாதும்
தவ பாதபங்கஜம் । ருஷா நிரஸ்தோऽபி ஶிஶு: ஸ்தநந்தயோ
யோ ந ஜாது மாதுஶ்சரணௌ ஜிஹாஸதி ॥

நிராஸகஸ்யாபி-ரக்ஷகரான தேவரீர் அடியேனை விடப்பார்த்தாலும், தவ-தேவரீருடைய, பாதபங்கஜம்-திருவடிகளை, ஹாதும்-விட்டு ஜீவிக்க, நோத்ஸஹே-ஸமர்த்தனல்லேன்; தாவத்-அஃதென்போலவெனில், மஹேச-ஓ நிருபாதிக நிர்வாஹகனே! ஸ்தநந்தய:- ஸ்தந்யத்தையே தாரகமாகவுடைய, ஶிசு:-சிசுவானது, ருஷா-கோபத்தினுல், நிரஸ்தோபி-தள்ளப்பட்டாலும், ஜாது-கோபித்தபோதோடு ஆதரித்தபோதோடு வாசியற, மாது:-தாயாருடைய, சரணௌ-கால்களை, ஜிஹாஸதி-கட்டிக்கொள்ளுமத்தனையொழிய விடஸம்மதிப்பதில்லை.

மூன்றும் ப்ரகரணம் முற்றிற்று.

---

440. ஸ்தோ-ர-26.

## நான்காவது ப்ரகரணம்.

### 381. ஸூத்திரம்.

**441.** பாதோऽஸ்ய விஶ்வாபூதாநி । த்ரிபாதஸ்யாம்ருதம்திவி ॥

அஸ்ய-பகவானுக்கு, விஶ்வாபூதாநி-ஜெகத்திலிருக்கப்பட்ட சேதநாசேதனங்கள், பாத:-ஒரு பாகம், அம்ருதம் திவி-பரமபதத்தில், திரிபாத்-மூன்று பாகம். (இந்த லீலாவிபூதி ஒரு பாகம், நித்யவிபூதி மூன்று பாகம் என்றபடி.)

**442.** ஸ ஏகாகீ ந ரமேத ।

ஸ:-அவன், ஏகாகீ-ஒருவனுயிருந்துகொண்டு, ந ரமேத-ஆனந்தமடைகிறதில்லை.

**443.** த்வம் மேऽஹம்மே குதஸ்தத் ததபி குத இதம் வேதமூல ப்ரமாணாதேதச்சா (ஹா) நாதிஸித்தாதநுபவவிபவாத் ஸோऽபி ஸாக்ரோஶ ஏவ । க்வாக்ரோஶ: கஸ்ய கீதாதிஷு மம விதித: கோऽத்ர ஸாக்ஷீ ஸுதீஸ்ஸ்யாத் ஹந்த த்வத்பக்ஷபாதீ ஸ இதி ந்ருகலஹே ம்ருக்ய(ம)மத்யஸ்தவத் த்வம் ॥

த்வம் மே-நீ என்க்கு சேஷபூதனென்று ஜீவனைக்குறித்து ஈச்வரன் அருளிச்செய்ய, அஹம் மே-நான் எனக்கு சேஷபூதன் என்று ஜீவன் சொல்ல, தத் குத:-அது எப்படி ருஜுவாகிறது என்ன, ததபிகுத:-தேவரீர் அருளிச்செய்தது தான் எப்படி ருஜுவாகிறதென்ன, இதம்-என்னுடைய கக்ஷியானது, வேதமூலப்ரமாணாத்-அபௌருஷேயமான, வேதரூப லிகிதமுண்டாயிருக்கையாலே என்ன, ஏதத் ச-என்னுடைய கக்ஷியும், அநாதிஸித்தாத்-அநாத்யநுபவம் என்னுடையதன்றோ என்ன, ஸோபிஸாக்ரோச: ஏவ-ஆனால் அதற்கு ஆக்ஷேபமுண்டுகாணென்றார். க்வாக்ரோச: கஸ்ய-யார் எங்கே ஆக்ஷேபணைபண்ணினாரென்ன, கீதாதிஷு ம

441. புருஷஸூக்தம். 443. ஸ்ரீபட்டர் முக்தகம்.

மவிதிதஃ-கீதாதிகளில் ஆக்ஷேபணபண்ணினேமென்ன, கோத்ர ஸாக்ஷீ-அதுக்கு ஸாக்ஷியாரென்ன, ஸுதீஃ ஸ்யாத்-வியாஸர் முத லான ஞானிகளே ஸாக்ஷி என்றான். ஹந்த த்வத்பக்ஷபாதீ ஸஃ-ஆ ச்சரியம் தேவரீருடைய பக்ஷபாதிகள் அவர்களென்ன, இதி ந்ரு கலஹே-இப்படி தேவரீரோடே சேதனனானவன் விவாதம் பண் ணுகிறவளவில், ம்ருக்ய மத்யஸ்தவத்த்வம்-மத்யஸ்தரில்லாமையால் தேவரீர் சபதம்பண்ண விருக்கிறாப்போலே யிராநின்றது என்று பெருமாள் திருமஞ்சனம் கண்டருளி ஈரவாடையுடுத்து துளபமா லையணிந்துகொண்டிருக்கிற ஸேவையைக்கண்ட பட்டர் உலகவழக் கத்தை அனுஸரித்து இவ்வண்ணம் கற்பனை செய்தருளினர்.

**444.** ந சக்ஷுஷா பஶ்யதி கஶ்சனைநம் ।

ஏனம்-ஈஶ்வரனை, சக்ஷுஷா-கண்களினல் ந பஶ்யதி கஶ்சித்-ஒருவனும் பார்க்கிறதில்லை.

**445.** ய ஆத்மநி திஷ்஠ந் ।

யஃ-எவன், ஆத்மநி திஷ்டன்-ஆத்மாக்களிடத்திலிருந்துகொண்டு.

**446.** ஆதாவீஶ்வரதத்தயைவ புருஷஸ்ஸ்வாதந்த்ரிய ஶக்த்யா
ஸ்வயம் தத்தத்ஜ்ஞான சிகீர்ஷண ப்ரயத்நாந் யுத்பாதயந்
வர்த்ததே ॥

ஆதௌ-ஆதியிலே, புருஷஃ-சேதனன், ஈஶ்வர தத்தயைவ-ஈஶ் வரனாலே கொடுக்கப்பட்டதான, ஸ்வாதந்த்ரியஶக்த்யா-ஸ்வாதந்த்ரி யமாகிற சக்தியாலே, ஸ்வயம்-தானே, தத்தத்-அந்தந்த, ஜ்ஞாந-ஞாநத்தையும், சிகீர்ஷண-செய்ய இச்சையையும், ப்ரயத்நாநி-ப்ரய த்னங்களையும், உத்பாதயன்-ஜனிப்பித்து, வர்த்ததே-இருக்கிறான்.

## 382. ஸூத்திரம்.

**447.** தவைஷாஸ்யயாம்யேதத்யத்வ்ருத்தம்மமஶோபநாஃ ।

ஶோபநாஃ-ஸௌபாக்கியவதிகாள்! ஏஷா-இந்த நான், மம-

444. தை-உப-உ-ப்ர. 445. ப்ருஹ-5-3. 446. தத்த்வஸா ரம். 447. முதல் 451-வரையில் விஷ்ணுதர்மம்.

எனக்கு, ஏதத்யத்வ்ருத்தம்-நீங்கள் கேட்ட அந்த விருத்தாந்தத்தை, கதயாமி-சொல்லுகிறேன்.

**448.** ஸௌவீரராஜஸ்ய புரா மைத்ரேயோऽபூத் புரோஹிதஃ। தேந வாயதநம் விஷ்ணோః காரிதம் தேவிகாதடே ॥ அஹந்யஹநி ஶுஶ்ருஷா புஷ்பதூபாம்புலேபனைః। தீபாதாநாதி பிஶ்சைவ சக்ரே தத்ர வஸந் த்விஜః ॥

புரா-பூர்வகாலத்திலே, ஸௌவீர ராஜஸ்ய-ஸௌவீர ராஜாவினுடைய, புரோஹிதஃ-புரோகிதனான, மைத்ரேயஃ-மைத்ரேயன் என்பவர் ஒருவர், அபூத்-இருந்தார். தேந-அவராலே, தேவிகாதடே-தேவியாற்றங்கரையிலே, விஷ்ணோః ஆயதநம் காரிதம்-விஷ்ணுவாலயம் கட்டிவைக்கப்பட்டது, தத்ர-அங்கே, த்விஜஃ-வஸன் அந்த ப்ராஹ்மணன் வஸித்துக்கொண்டு, அஹந்யஹநி-தினந்தோறும், புஷ்பதூபாம்புலேபனைః-புஷ்பம், தூபம், தீர்த்தம், சாத்துப்படி இவைகளாலேயும், தீபாதாநாதிபிః சைவ-தீபஸமர்ப்பணம் முதலியவைகளாலும், சுச்ரூஷாம்-கைங்கரியங்களை, சக்ரே-பண்ணிக்கொண்டிருந்தார்.

**449.** கார்த்திகே தீபிதோதீப உபாத்தஸ்தேநவைகதா। ஆஸீந் நிர்வாண பூயிஷ்டோ தேவஸ்ய புரதோநிஶி। தேவதாயதநேவாஸம் தத்ராஹமபி மூஷிகா ॥ ப்ரதீபவர்த்திக்ர(ஹ)ஹணேக்ருத புத்தி(நி)ர்வராநநா ॥ க்ரு(ஹ)ஹீதாவ மயாவர்த்திః ப்ருஷதம்ஶோ ரராவவ । நஷ்டாவாஹம் ததஸ்தஸ்ய மார்ஜாலஸ்ய பயாதுரா ॥ வக்த்ரப்ராந்தே நஶ்யந்த்யா ஸ தீபః ப்ரேரிதோமயா। ஜஜ்வால பூர்வவத் தீ(தீ)ப்த்யா தஸ்மிந்நாயதநே புநః ॥

ஏகதா-ஒரு, கார்த்திகே-கார்த்திகை மாஸத்திலே, நிசி-இராக்காலத்தில், தேவஸ்ய புரதః-எம்பெருமான் முன்னே, தேநஉபாத்தஃ-அவராலே ஏற்றப்பட்ட, தீபிதః தீபஃ-ப்ரகாசித்துக்கொண்டிருக்கிற விளக்கானது, நிர்வாண பூயிஷ்டః ஆஸீத்-அவியும்படியானதாயிருந்தது. தத்ர தேவதாயதநேச-அந்த தேவாலயத்திலே,

மூஷிகா-ஒரு பெண் எலியாய், அஹமபி-நானும், ஆஸம்-இருந்தேன். வராநநா:-ஹே நல்லமுகத்தை உடையவர்களே! ப்ரதீப் வர்த்திக்ர்ஹணே-எரிந்துகொண்டிருக்கிற திரியை அபஹரிக்க வேணுமென்று, க்ருதபுத்தி:-புத்தியுடையளாக ஆனேன், மயா-என்னாலே, வர்த்தி:-திரியானது, க்ருஹீதாச-வாயாலே கவ்விக்கொள்ளப்பட்டது. (அந்த ஸமயத்தில்) ப்ருஷதம்ச:ராராவச-பூனைகூவிற்று, தஸ்யமார்ஜாலஸ்ய-அந்த பூனையினுடைய, பயாநுகா-பயத்தாலே நடுங்கி, தத:-பிறகு, அஹம்-நான், நஷ்டாச-மரணமடைந்தேன். நச்யந்த்யாமயா-மரணமடைந்துகொண்டிருக்கிற என்னாலே வக்த்ரப்ராந்தேந-வாயின் நுனியாலே, ப்ரேரித:-தூண்டப்பட்ட, ஸ:-அந்த விளக்கானது, புந:-மறுபடியும், தஸ்மின் ஆயதனே-அந்த ஆலயததிலே, பூர்வவத்-முன்புபோலே, தீப்த்யா ஜஜ்வால-ப்ரகாசித்துக்கொண்டிருந்தது.

450. ம்ருதாசாஹம் ததோ ஜாதாவைதர்பீ ராஜகந்யகா।
ஜாதிஸ்மரா காந்திமதீ பவதீநாம் பராகுணை:॥

ம்ருதாசாஹம்-மரணமடைந்த நான், தத:-அனந்தரம், வைதர்பீராஜ கந்யகா ஜாதா-விதர்ப்பராஜன் புத்ரியாய்ப் பிறந்தேன். ஜாதிஸ்மரா-பூர்வஜென்ம ஜ்ஞானத்தை யறிபவளாயும், காந்திமதீ-ஸௌந்தரிய முடையவளாயும், பவதீநாம்-உங்களுடைய, குணை:-குணங்களாலே, பரா-ச்ரேஷ்டமானவளாயும், ஜாதா-பிறந்தேன்.

451. ஏஷப்ரபாவோ தீபஸ்ய கார்த்திகே மாஸிசோபநா:। உத்தஸ்யவிஷ்ண்வாயதநே யஸ்யேயம் வ்யுஷ்டிருத்தமா। அஸங்கல்பித மப்யஸ்ய ப்ரேரணம் யத்க்ருதம்மயா॥ விஷ்ண்வாயதநதீபஸ்ய தஸ்யை தத்பு (ஞ்ஞ) ஜ்யதே பலம்॥ ததோ ஜாதிஸ்ம்ருதிர்ஜந்ம மாநுஷ்யம் சோபநம் வபு:। வச்ய:பதிர்மே ஸர்வாஸாம் கிம்புநர்தீப தாயிநாம்॥

சோபநா:-ஹே பாக்கியவதிகாள்! கார்த்திகேமாஸி-கார்த்திகைமாஸத்தில், தீபஸ்ய ஏஷப்ரபாவ:-தீபத்திற்கு இப்படிப்பட்ட ப்ராபாவமுண்டு, இயம் உத்தமா வ்யுஷ்டி:-இந்த பெரிய ஏற்றங்க

ளெல்லாம், விஷ்ண்வாயதநே-பகவத் ஸந்நிதானத்திலே. தத்தஸ்ய-ஸமர்ப்பிக்கப்பட்ட, யஸ்ய-யாதொரு தீபத்தினுடையதோ, மயா-என்னாலே, அஸ்ய விஷ்ண்வாயதந தீபஸ்ய-பகவத் ஸந்நிதானத்திலே ஏற்றப்பட்ட இந்த விளக்கினுடைய, அஸங்கல்பிதம் அபி-ஒரு ஸங்கல்பம் இல்லாமலிருக்கச்செய்தே. ப்ரேரணம்-தூண்டுதல், க்ருதம் இதியத்-செய்யப்பட்டது என்பது ஒன்றுண்டோ, தஸ்ய-அதினுடைய, ஏதத்பலம்-இந்த பலமானது, புஜ்யதே-புஜிக்கப்படுகிறது. ததஃ-அப்படியே, ஜாதிஸ்ம்ருதிஃ-பூர்வஜன்ம ஜ்ஞானமும், மானுஷ்யம் ஜன்ம-மனுஷ்ய ஜன்மமும், சோபனம் வபுஃ-அழகுள்ள தேஹமும், ஸர்வாஸாம்-எல்லாரைப் பார்க்கிலும், மே-எனக்கு, வஶ்யஃ பதிஃ-பர்த்ருவச்ய முண்டானபின்பு, தீபதாயிநாம்-திருவிளக்கேற்றுகிறவர்களுடைய, கிம்புநஃ- (பலத்தை) கேட்கவேண்டியதென்ன.

**452.** யேந ஸம்வர்யிதா பாலா யேநாஸ்மி பரிரக்ஷிதா । தேந
பித்ராவியுக்தாஹம் நஜீவேயம் கதஞ்சந ॥ நத்யா(ஞ்யா)
ம்வா நிபதிஷ்யாமி ஸமித்தே (ஜ) வாஹுதாஶநே ।
பர்வதாத் வா பதிஷ்யாமி பித்ருஹீநா நிராஶ்ரயா ॥

பாலா-பாலையான நான், யேந ஸம்வர்திதா-எவராலே வளர்க்கப்பட்டேனோ, யேந பரிரக்ஷிதா அஸ்மி-எவராலே ரக்ஷிக்கப்பட்டேனோ, தேந பித்ரா-அந்த பிதாவினால், வியுக்தா-விடுபட்ட, அஹம்-நான், கதம்சந ந ஜீவேயம்-ஒரு நிமிஷமும் ஜீவியேன், பித்ருஹீநா-பிதா இல்லாதவளாயும், நிராஶ்ரயா-வேறு கதியில்லாதவளாயுமிருக்கிற நான், நத்யாம் வா-ஆற்றிலாகிலும், நிபதிஷ்யாமி-விழப்போகிறேன், ஸமித்தேவா-நன்ருய் ஜ்வலிக்கிற, ஹுதாசநே-அக்கினியிலாவது விழுகிறேன், பர்வதாத்வா பதிஷ்யாமி-மலைமேலிருந்தாவது கீழே விழுகிறேன்.

**453.** ஆமத்ய கருணா விஷ்டோ யமஸ்ஸர்வஹிதோ ததஃ । ஸ்யவிர
ப்ராஹ்ம(வ்ராஹ்)ணோஹ-த்வாப்ரோவாவேஷம்வவஸ்தஷா ॥

---

• 452-முதல் 457-வரையில் இதிஹாஸஸமுச்சயம்.

ஸர்வஹிதே ரத:-எல்லாருக்கும் ஹிதபரனான, யம:-யமன்; கருணாவிஷ்ட:-க்ருபையோடுகூடின, ஸ்தவிரப்ராஹ்மண: பூத்வா-வ்ருத்தனான ப்ராஹ்மண வேஷத்தைப்பூண்டு, ஆகத்ய-வந்து, ததா-அந்த ஸமயத்திலே, இதம்வச:-இப்படிப்பட்ட வார்த்தையை, ப்ரோவாச-சொன்னான்.

454· அலம் பாலே விஶாலாக்ஷி ரோதநேநாதிவிஹ்வலே ।
ந ஹி பூய: ப்ராப்யதே தாதஸ்தஸ்மாந் நார்ஹஸி ஶோசிதும்॥

விசாலாக்ஷி-விசாலமாகிய கண்களையுடையவளே! அதிவிஹ்வலே-மிகவும் மனது சலித்துக்கொண்டிருக்கிற, பாலே-குழந்தாய், ரோதநேந-அழுகையினால், அலம்-போரும், தேதாத:-உம்முடைய பிதாவானவர், பூய: ந ப்ராப்யதே-மறுபடியும் லபிக்கப்படமாட்டார், தஸ்மாத்-அதனாலே, சோசிதும்-துக்கிப்பதற்கு, நார்ஹஸி-தகுந்ததில்லை.

455· தஸ்மாத் த்வம்து:கமுத்ஸ்ருஜ்யஶ்ரோதுமர்ஹஸி ஸாம்ப்ரதே । பித்ருப்யா(ஹ்யா)ம் விப்ரயோகோऽயம் யேநாபூத் கர்மணா தவ ॥

தஸ்மாத்-அதனாலே, தவம்-நீ, துக்கம் உத்ஸ்ருஜ்ய-துக்கத்தைவிட்டு, பித்ருப்யாம்-மாதாபிதாக்களோடு, அயம் விப்ரயோக:-இந்த வியோகம், தவ-உன்னுடைய, யேந கர்மணா அபூத்-எந்த கர்மத்தாலே உண்டாயிற்றோ அத்தை, ஶ்ரோதும் அர்ஹஸி-கேட்கக் கடவாய்.

456· புரா த்வம்ஸுந்தரீநாம வேஶ்யா பரமஸுந்தரீ ।
ந்ருத்தகீதாதிநிபுணாவீணா வேணுவிசக்ஷணா ॥

புரா-முன் ஜென்மத்தில், த்வம்-நீ, ந்ருத்தகீதாதி நிபுணா-நாட்டியம் பாட்டு முதலானவைகளில் ஸமர்த்தையாயும், வீணா வேணு விசக்ஷணா-வீணை வேணு இவைகளை வாசிப்பதில் ஸமர்த்தையாயும், பரமஸுந்தரீ-அதிக அழகுள்ளவளாயுமுள்ள, ஸுந்தரீநாம வேஶ்யா-ஸுந்தரீ என்று பெயருடையதாஸியாயிருந்தாய்.

**457.** ஶ்ருணு தஸ்ய மஹாப்ராஜ்ஞே நிமித்தம் ஶதோ மம ।
யேந த்வம் ப்ரா (ப்ரா) ஹ்மணஸ்யாஸ்ய குலே ஜாதா ம
ஹாத்மநஃ ॥

மஹா ப்ராஜ்ஞே-ஹே மஹா ஜ்ஞாநாதிகையே! யேநத்வம்-எதனாலே நீ, மஹாத்மநஃ-மஹா ப்ரபாவத்தையுடைய, அஸ்யப்ராஹ்மணஸ்ய குலே-இந்த ப்ராஹ்மண குலத்தில், ஜாதா-பிறந்தாயோ, கததஃ மம-சொல்லுகிற என்னிடத்திலிருந்தும், தஸ்யநிமித்தம்-அதனுடைய காரணத்தை, ஶ்ருணு-கேள்.

**458.** பிதேவ யர்மராஜோஸௌ த்தஸ்யாஸ்தத் ப்ரியதர்ஶநஃ ।
ஸாந்த்வயந் ஸ மஹாதேஜா வ்யாஜஹார வ தாம் ப்ரதி ॥

தர்மராஜஃ-தர்மராஜன், தஸ்யாஃ-அவளுக்கு, பிதேவ-பிதாவைப்போல, தத்ப்ரியதர்சநஃ-அவளுக்கு பிரியமான பார்வையையுடையவராக அபூத்-ஆனர். ஸமஹாதேஜாஃ-அந்த மஹா தேஜஸ்ஸையுடைய யமன், ஸாந்த்வயந்-ஸமாதான வார்த்தைகளைச்சொல்லி, தாம்ப்ரதி-அவளைக்குறித்து, வியாஜஹார-சொன்னான்.

**459.** ஸத்ரே த்வயா ஸுக்ருதம் ந கிஞ்சிதிஹ வித்யதே ।
இதோ த்வாதஶஜந்மாந்தே த்வாம் கஶ்சித் ஸித்த (ஸ) ஆ
விஶத் । விஷ்ணுபக்தோ நிவாஸார்த்தம் ராத்ரியாம்து தவ
வேஶ்மநி ॥ தத்ஸந்நியாந ப்ரஸவஸ்தவ ஸாயுஸமாக
மஃ । ஸாஹிவை ப்ரஹ்ம (ப்ர ஹ) விஷுஷீ ஸ்ரீமத்ரங்
கமுபாஶ்ரிதா । தத்ர தீர்த்தோ த்தமம் ஸ்ரீமசுஶ்வத்யம்
நாம ஸம்ஶ்ரிதா । யர்மஜ்ஞா யர்மபரமா யஸ்யாஸ்தே ஸங்
கமோஸவத் ॥

ஸத்ரே-க்ஷேமங்களுடையவளே! த்வயா-உன்னாலே, இஹ கிஞ்சித் ஸுஷ்டு ந க்ருதம்-இந்த ஜென்மத்தில் கொஞ்சமாகிலும் ஸுக்ருதம், நவித்யதே-பண்ணப்படவில்லை. இதஃ த்வாதஶஜந்மாந்தே-இதற்கு பன்னிரண்டாவது ஜென்மத்தினுடைய முடிவி

---

458, 459. காருடபுராணம்-கோயில் மாஹாத்மியம்.

லே, த்வாம்-உன்னை, கஃ சித்விஷ்ணுபக்தஃ-ஒரு விஷ்ணுபக்தனு ன, ஸித்தஃ-ஸித்தன், ராத்ரியாம்-ஒரு ராத்ரியிலே, தவ வேஶ்மநி நிவாஸார்த்தம் ஆவிசத்-உன்னுடைய க்ருஹத்திலே தங்கிபோகைக் காக உட்கார்ந்தான், தவ-உனக்கு, ஸாதுஸமாகமஃ-ஸாதுஸங்கமா னது, தத்ஸந்நிதாநப்ரபவஃ-அவனுடைய ஸந்நிதானத்தாலே உண் டாயிற்று. யஸ்யாஃ தே-எந்த உனக்கு, ஸங்கமஃ அபவத்-ஸாதுஸ மாகமமானது உண்டாயிற்றே. (அதனால்) ஸாஹி வைப்ரஹ்ம விதுஷீ-அப்படிப்பட்ட நீ ப்ரஹ்மஞான முடையவளாய், ஸ்ரீமத் ரங்கம் உபாச்ரிதா-ஸ்ரீரெங்கத்தை ஆஶ்ரயித்தாய். தத்ர-அந்தவி டத்தில், ஸ்ரீமத் அஶ்வத்தம் நாம-அஶ்வத்தம் என்று பெயரு டைய, தீர்த்தோத்தமம்-உத்தம தீர்த்தத்தை, ஸமாஶ்ரிதா-அடைந் தாய், தர்மஜ்ஞா தர்மபரமா-நல்ல ஜ்ஞானனுஷ்டானங்களை உடை யவளாயிருக்கிறாய்.

## 384 ஸூத்திரம்.

460. ஸோऽபிகம்ய மஹாத்மாநம் க்ருத்வா ராமம் ப்ரதக்ஷி
ணம் । ந்யவேதயதமேயாத்மா த்ரு(ஷ்)ஷ்டா ஸீதேதி
தத்த்வதஃ ॥

ஸஃ அமேயாத்மா-அளவிட முடியாத தைர்யமுடைய அத்தி ருவடி, மஹாத்மாநம் ராமம்-மஹாத்மாவான ராமரை, அபிகம்ய-அடைந்து, ப்ரதக்ஷிணம் க்ருத்வா-ப்ரதக்ஷிணஞ்செய்து, த்ருஷ்டா ஸீதா இதி-கண்டேன் பிராட்டியை என்று, தத்வதஃ-உண்மை யை, ந்யவேதயத்-அறிவித்தார்.

## 392. ஸூத்திரம்.

461. பஞ்சராத்ரஸ்ய க்ருத்ஸ்நஸ்ய வக்தா நாராயணஃஸ்வயம் ।

க்ருத்ஸ்னஸ்ய பாஞ்சராத்ரஸ்ய-ஸமஸ்தபாஞ்சராத்ரமென்கிற சாஸ்த்ரங்களுக்கும், ஸ்வயம் நாராணஃ வக்தா-நாராயணன்தான் அருளிச்செய்தவன்.

---

460. ரா-பால-1-78. 461. ஸ்ரீ பாஞ்சராத்ரம்.

**462.** திரோதாநகரீ ஶக்திஸ்ஸா நிக்ரஹ ஸமாஹ்வயா ।
புமாம்ஸம் ஜீவஸம்ஜ்ஞம் ஸா திரோபாவயதி ஸ்வயம் ॥

நிக்ரஹஸமாஹ்வயா-நிக்ரஹமென்கிற பெயருடைய, திரோதானகரீ-ஞானத்தை மறைக்கும்படியான, ஸா சக்திஃ-அந்த சக்தி, ஸ்வயம்-தானாகவே, ஜீவஸம்ஜ்ஞம்-ஜீவனென்றுபெயருடைய, புமாம்ஸம்-சேதனனை, திரோபாவயதி-ஸ்வஸ்வரூபங்களை மறைக்கிறது.

**463.** ஏவம் ஸம்ஸ்ருதி சக்ரஸ்தே ப்ராம்யமாணேஸ்வ கர்மபிஃ । ஜீவே து:காகுலே விஷ்ணோஃ க்ருபா காப்யுபஜாயதே ॥ ஸமீக்ஷிதஸ்து தாஸோऽயம் கருணாவர்ஷரூபயா । கர்மஸாம்யம் பஜத்யேவ ஜீவோவிஷ்ணு ஸமீக்ஷயா॥ ஶக்திபாவஸ்ஸவைஜீவ முத்தாரயதி ஸம்ஸ்ருதேஃ । கர்மணீச ஸமே தத்ர தூஷ்ணீம்பாவமுபாகதே ॥

ஏவம்-இவ்விதமாக, ஸம்ஸ்ருதி சக்ரஸ்தே-ஸம்ஸாரமாகிற சக்ரத்திலிருந்து கொண்டும், ஸ்வகர்மபிஃ-தன்னுடைய கர்மங்களாலே, ப்ராம்யமாணே-சுழன்றுகொண்டும், துக்காகுலே-துக்கத்தினால் கலங்கினவனுமான, ஜீவே-ஜீவனைக்குறித்து விஷ்ணோஃ-விஷ்ணுவினுடைய, காபி-அநிர்வசநீயமான, க்ருபா-நிர்ஹேதுக க்ருபையானது, உபஜாயதே-உண்டாகிறது. அயம் தாஸஃ ஜீவஃ-தாஸனான இந்த ஜீவன், கருணாவர்ஷரூபயா-காருண்யவர்ஷ ரூபமான, விஷ்ணு ஸமீக்ஷயா-விஷ்ணு கடாக்ஷத்தாலே, ஸமீக்ஷிதஃ-பார்க்கப்பட்டவனாய், கர்மஸாம்யம்-உபய கர்மத்தினுடைய ஸாம்யத்தையும், பஜதி ஏவ-அடைகிறான், ஸவை-அந்த, சக்திபாவஃ-அநுக்ரஹ ரூபமான சக்தியினுடைய ஸத்பாவமானது, ஜீவம்-ஆத்மாவை, தத்ர-அப்போது, ஸமேகர்மணிச-ஸமமான கர்மங்கள், தூஷ்ணீம் பாவம் உபாகதே-சாந்தபாவத்தை அடைந்திருக்கும் போது, (அதாவது அதனுடைய பலங்களை கொடுக்காமலிருக்கும் போது), ஸம்ஸ்ருதேஃ உத்தாரயதி-ஸம்ஸாரத்தினின்றும தாண்டுவிக்கிறது.

---

462, 463. அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை.

464. யதாஹி மோஷகா: பாந்தே பரிபர்ஹ முபேயுஷி । நிவ்
ருத்த மோக்ஷேச்ச யோகாஸ்தஸ்தா ஸந்த உதாஸதே ॥
அநுக்ரஹாத்மிகாயாஸ்து ஶக்தே: பாதக்ஷணே ததா ।
உதாஸாதே ஸமீபூய கர்மணீதே ஶுபாஶுபே ॥
தத்பாதாநந்தரம் ஜந்துர்யுக்தோ மோக்ஷஸமீக்ஷயா ॥ ப்ர
வ்ருத்தமாந வைராக்யோ விஶேஷேऽபிநிவேஶவாந் । ஆக
மாநநுஸஞ்சிந்த்ய குரூநப்யுபஸர்ப்யச ॥ லப்த (ப்ரு)
ஸத்த: ப்ரகாரைஸ்தை:ப்ரபுத்தோ(ஷ)போயபாலந:॥

யதா-எப்படி, பாந்தே-வழிப்போகிறவன், பரிபர்ஹம்-ஸா மான்களை உபேயுஷி-அடைந்திருக்கும்போது, மோஷகா:-திருடர் கள், நிவ்ருத்த மோக்ஷேச்ச யோகா: ஸந்த:-திருடுவதினின்றும் விலகினவர்களாய்க்கொண்டு, உதாஸதே-உதாஸீநர்களா யிருப்பார் களோ, ததா-அப்படி, அநுக்ரஹாத்மிகாயா: ஶக்தே: து-அநுக்ர ஹாத்மகமானசக்தியுடைய, பாதக்ஷணே-விழுந்தக்ஷணத்தில், ஸமீபூய தே சுபாசுபே கர்மணி-ஒன்றான புண்ய பாபகர்மங்களிரண் டும், உதாஸாதே-உதாஸீனித்திருக்கும், தத்பாதாநந்தரம்-அந்த அனுக்ரஹசக்தி மேல் விழுந்த பிறகு, ஜந்து:-இச்சேதனன், மோக்ஷஸமீக்ஷயா யுக்த:-மோக்ஷ விஷயமான நல்ல ஞானத்தோடு கூடினவனாய், ப்ரவ்ருத்தமாந வைராக்ய:-விருத்தியடைந்த வைரா க்கிய முடையவனாய், விசேஷே அபிநிவேசவாந்-விவேகத்தில் ஆசையுள்ளவனாய், ஆகமாந் அநுஸஞ்சிந்த்ய-வேத சாஸ்த்ரங்களை விசாரித்து, குரூநப்யுப ஸர்ப்யச-ஆசார்யர்களையடைந்து, தை:ப்ர காரை: லப்த ஸத்த:-அந்த வைராக்கியாதிகளால் ஸத்தையடைந் தவனாய், ப்ரபுத்த:-அதிக ஞானமுடையவனாய், போதபாலந:-உபா யபரிக்ரஹணம் பண்ணிக்கொண்டு மோக்ஷத்தை யடைகிறான்.

### 397. ஸூத்திரம்.

465. ஏவம்—உபஜாயதே । 462-வது இலக்கம்பார்க்க.

---

464. ஸ்ரீ பாஞ்சராத்ரம்.

**466.** நிர்ஹேதுக கடாக்ஷேணமதீயேந மஹாமதே। ஆசார்ய விஷயீகாராத் ப்ராப்நுவந்தி பராம் கதிம்॥ நாலௌபுருஷகாரேண ந சாப்யந்யேந ஹேதுநா। கேவலம் ஸ்வேச்சயைவாஹம் ப்ரேக்ஷே கம் சித் கதா சந॥

மஹாமதே-மஹா புத்திசாலியே! (ஜீவன்கள்) மதீயேந-என்னுடையதான, நிர்ஹேதுககடாக்ஷேண-நிர்ஹேதுக கடாக்ஷத்தினால், ஆசார்ய விஷயீகாராத்-ஆசாரியனுடைய விஷயீகாரத்தால், பராம் கதிம் ப்ராப்நுவந்தி-மேலான கதியை யடைகின்றார்கள், அலௌ ந புருஷகாரேண-இது புருஷகாரத்தால் கிடைக்காது. அந்யேந ச ஹேதுநா ந-வேறு காரணத்தாலும் கிடைப்பது அரிது. கதா சந-ஒருக்கால், கம் சித்-ஒருவனை கேவலம், ஸ்வேச்சயைவ-என் ஸங்கல்பத்தினால் மாத்திரம், அஹம் ப்ரேக்ஷே-நான் பார்க்கின்றேன்.

## 406 ஸூத்திரம்.

**467.** ஸர்வபாபேப்ய:-112வது இலக்கம்பார்க்க.

## 407 ஸூத்திரம்.

**468.** ஸாக்ஷாந் நாராயணோதேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும்। மக்நா (ந்) நுத்த (ர) ரதேலோகாந் காருண்யாத் சாஸ்த்ர பாணிநா॥

ஸாக்ஷாத் நாராயண: தேவ:-ஸ்ரீமந்நாராயணனே, மர்த்யமயீம் தநும் க்ருத்வா-மனிதன் உருவங்கொண்டு, காருண்யாத்-தயையால், சாஸ்த்ர பாணிநா-சாஸ்திரமாகிற திருக்கையால், மக்நாந் லோகாந்-ஸம்ஸாரக்கடலில் மூழ்கிருக்கிற ஜனங்களை, உத்தரதே-கரையேற்றுவிக்கின்றான்.

## 411 ஸூத்திரம்.

**469.** யோ நித்யமச்யுதபதாம்புஜ யுக்மருக்ம வ்யாமோஹ

466. ஸ்ரீ பாஞ்சராத்ரம். 468. நாரதீயம். 469. கூரத்தாழ்வான் அருளிச்செய்தது.

தஸ்தஷிதராண்ி த்ருணய மேநே । அஸ்மத்குரோர் ஹம
வதோஉஸ்ய உயைகஸிந்யோ ராமாநுஜஸ்ய வரணௌ ஶ
ரணம் ப்ரபத்யே ॥

யஃ-எவர், நித்யம்-எப்போதும், அச்யுத-எம்பெருமானுடை
ய, பதாம்புஜயுக்ம-திருவடித் தாமரையிணைகளாகிற, ருக்ம-ஸ்வர்
ணத்தில், வ்யாமோஹதஃ-மையல்கொண்டிருப்பதால், ததிராணி-
அதைக்காட்டிலும் புறம்பான விஷயங்களை, த்ருணயமேநே-த்ரு
ணமென்று எண்ணினாரோ, அஸ்மத்குரோஃ-எனது ஆசார்யரும்,
தயைகஸிந்தோஃ-கருணைக்கடலுமான, அஸ்ய பகவதஃ ராமாநுஜ
ஸ்ய-அந்த பகவத் ராமாநுஜருடைய, சரணௌ-திருவடிகளை, ச
ரணம் ப்ரபத்யே-சரணமடைகின்றேன்.

470. விஜ்ஞாபநம் வநகிரீஸ்வர ஸத்யரூபாமங்கீகுருஷ்வ கரு
ணார்ணவ மாமகீநாம் । ஸ்ரீரங்கதாமநி யதாபுரமேஷ
ஸோஹம் ராமாநுஜார்ய வஶகஃ பரிவர்த்திஷீய ॥

கருணார்ணவ வநகிரீச்வர-கருணைக்கடலாகிய வநகிரிநாதனே,
மாமகீநாம்-என்னுடையதான, ஸத்யரூபாம்-மெய்யான, விஜ்ஞா
பநாம்-விண்ணப்பத்தை, அங்கீகுருஷ்வ-திருவுள்ளம்பற்றவேண்
டும். (அது என்னவென்றால்) ஏஷஃ ஸஃ அஹம்-அந்த இந்த அடி
யேன், யதாபுரம்-முன்போல, ஸ்ரீரங்கதாமநி-ஸ்ரீரங்கத்தில், ரா
மாநுஜார்ய வசகஃ-உடையவர் வசமாயிருந்துகொண்டு, பரிவர்த்தி
ஷீய-கைங்கரியஞ்செய்யவேண்டும்.

## 413 ஸூத்திரம்.

471. பரம் ஜ்யோதி ருபஸம்பத்ய (உ)ஸ்வேந ரூபேணாபிஸம்
பத்ய (உ)தே ॥

பரம் ஜ்யோதிஃ உபஸம்பத்ய-பரமாத்மாவை யடைந்து, ஸ்
வேந ரூபேண-தனக்கு அஸாதாரணமான ஆகாரத்தினால், அபிநி
ஷ்பத்யதே-ஆவிர்பவிக்கிறான்.

470. ஸுந்தரபாஹுஸ்தவம்-129. 471. சா-உப-8-12-2.

## 416 ஸூத்திரம்.

472. ஸங்க்யா (ஜ வ ்ா) தும் நைவ ஶக்யந்தே கு³ணதோ³ஷா
ஶ்ச ஶார்ங்கி (ஜி டு) ண: । ஆநந்த்யாத் ப்ரதமோராஶிர
ஸாவதோ³ஷவ பஶ்சிம: ॥

சார்ங்கிண:-திருச்சார்ங்கத்தையுடைய எம்பெருமானுடைய, குண:-திருக்கல்யாண குணங்களும், தோஷா: ச-தோஷங்களும், ஸங்க்யாதும் நைவ சக்யந்தே-என்ண முடியாது, ப்ரதம: ராசி:-முதலாவதான குணக் கூட்டமானது, ஆநந்த்யாத்-எல்லையற்றனவாயிருப்பதால் (எண்ணமுடியாது) பச்சிம:-பின்புள்ள தோஷங்கள், அபாவாதேவ-இல்லாமையாலே எண்ண முடியாது.

## 422 ஸூத்திரம்.

473. க்யா (வ ்ா) த: ப்ராஜ்ஞ: க்ருதஜ்ஞஶ்ச ஸாநுக்ரோஶ
ஶ்ச ராவவ: । ஸத் வ்ருத்தோ நிரநுக்ரோஶ: ஶங்கே
மத்பாக்ய (ஞ ்) ஸங்க்ஷயாத் ॥

ப்ராஜ்ஞ:-புத்திமானாகவும், க்ருதஜ்ஞ: ச-நன்றியறிவுள்ளவராகவும், ஸாநுக்ரோச: ச-தயையுள்ளவராகவும், க்யாத:-பிரஸித்திபெற்ற, ராகவ:-ராமன், மத்பாக்ய ஸங்க்ஷயாத்-எனது பாக்கியக் குறைவினால், நிரநுக்ரோச:-கிருபை யில்லாதவராக (இருக்கிருரென்று) சங்கே-ஸந்தேஹிக்கின்றேன்.

## 424 ஸூத்திரம்.

474. கச்ஹதா மாதுலகுலம் ஹரதேந தஹாநவ: । ஶத்ருக்நோ
(வெ ந ா) நித்ய ஶத்ருக்நோ நீத: ப்ரீதிபுரஸ்க்ருத: ॥

மாதுலகுலம்-மாமாவின் கிரஹத்தைக் குறித்து, கச்சதா-செல்கின்ற, பரதேந-பரதாழ்வானல், ததா-அப்பொழுது, அநக:-பயமில்லாதவனும், நித்ய சத்ருக்ந:-எப்போதும் சத்ருக்களான ஐம்புலன்களையும் அடக்கியிருப்பவனுமான, சத்ருக்ந:-சத்ருக்நாழ்

---

473. ரா-ஸு-26-13. 474. ரா-அ-1-1.

வான், ப்ரீதி புரஸ்க்ருதஃ-ப்ரீதியினால் தூண்டப்பட்டவனாயிருக்க, நீதஃ-அழைத்துக்கொண்டு போகப்பட்டான்.

## 431 ஸூத்திரம்.

475. ஸவாவார்யவம்ஸஃ-385-வது இலக்கம் பார்க்க.

476. ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி வ யாவதே। அபயம்
ஸர்வபூதேப்யோ (ஹ்யா) ததாம்யேதத் வ்ரதம் மம॥

ஸக்ருதேவ ப்ரபந்நாய-ஒரு தடவை ப்ரபத்தி பண்ணினவனும், தவாஸ்மி இதியாசதே ச-உமக்கு தாஸனென்று யாசிக்கிறவன்பொருட்டு, ஸர்வ பூதேப்யஃ அபயம்-எல்லா ப்ராணிகளினின்றும் அபயத்தை, ததாமி-கொடுக்கிறேன். மம-எனக்கு, ஏதத் வ்ரதம்-இது வ்ரதம்.

## 432 ஸூத்திரம்.

477. யோ தத்யா (த்யா) த் பகவத் ஜ்ஞாநம் குர்யாத் தர்மோ
பதேஸநம்। க்ருத்ஸ்நாம் வா ப்ருதிவீம் தத்யாந்ந தத்து
ல்யம் கதஞ்சந॥

யஃ-எவர், பகவத் ஜ்ஞாநம் தத்யாத்-பகவத்ஜ்ஞானத்தை யுபதேசித்தாரோ, (எவர்) தர்மோப ஸேவநம் குர்யாத-தர்மோப தேசங்களையும் செய்தாரோ, (அவருக்கு) க்ருத்ஸ்நாம் ப்ருதிவீம்வா தத்யாத்-பூமியடங்கலும் கொடுக்கவேண்டும். தத்துல்யம் கதஞ்சந, அது இதற்கு ஒருபோதும ஸமானமாகாது.

## 435 ஸூத்திரம்.

478. ஈஸ்வரஸ்ய வ ஸௌஹார்தம் யத்ரு (த்ரு) ச்சா ஸுக்ரு
தம் ததா। விஷ்ணோஃ கடாக்ஷமத்வேஷ மாபிமுக்யம்
(வ்யம்) வ ஸாத்விகைஃ। ஸம்பாஷணம் ஷடேதாநி ஹ்யா
சார்ய ப்ராப்திஹேதவஃ।

ஈச்வரஸ்ய ஸௌஹார்தம்-ஈச்வரனுடைய ஸுஹ்ருத்தன்மையும், ததா-அப்படியே, யத்ருச்சா ஸுக்ருதம்-யாத்ருச்சிக ஸுக்ருதமும்; விஷ்ணோஃ கடாக்ஷம்-எம்பெருமானுடைய ஜாயமாந

476. ரா-19-20.

கடாக்ஷமும், அத்வேஷம்-எம்பெருமானிடத்தில் த்வேஷமின்மையும், ஆபிமுக்யம் ச-பகவானோடு ஆபிமுக்யமும், ஸாத்விகை: ஸம்பாஷணம்--பெரியோர்களுடனே பேசுவதும், ஏதாநி ஷட்--இந்த ஆறும், ஆசார்யப்ராப்தி ஹேதவ:-ஆசார்யனைலபிக்கக்காரணங்கள்.

## 437 ஸூத்திரம்.

479. நமோ஽விந்த்ய—373-வது இலக்கம்பார்க்க.

## 439 ஸூத்திரம்.

480. நாராயணோ஽பி விக்ருதிம்யாதி குரோ: ப்ரச்யுதஸ்ய து-
ர்புத்தே: (ப்ரஹ்மஸை:) । கமலம் ஜலாதபேதம் ஶோஷய
தி ரவிர் ந தோஷயதி ॥

குரோ: ப்ரச்யுதஸ்ய-ஆசார்ய ஸம்பந்தத்தைக்குலைத்துக்கொண்ட, துர்புத்தே:-துஷ்டபுத்தியுள்ளவன் விஷயத்தில், நாராயண: அபி-ஸ்ரீமந்நாராயணனும், விக்ருதிம் யாதி-விகாரத்தையடைகிறான், (ஸ்வரூபத்தைக் குலைப்பான்) ஜலாத் அபேதம் கமலம்-நீரைப்பிரிந்த தாமரையை, ரவி:-சூரியன், சோஷயதி-உலர்த்துகிறான், ந தோஷயதி-அலர்த்தமாட்டுகிறிலன்.

481. ஸாத்விகை:-474-வது இலக்கம்பார்க்க.

482. ஈஶ்வரஸ்ய—474-வது இலக்கம்பார்க்க.

## 448 ஸூத்திரம்.

483. ஸுலபம் ஸ்வகுரும் த்யக்த்வா துர்லபம் ய உபாஸதே।
லப்தம் (ஸூ) த்யக்த்வா தநம்மூடோ குப்தமந்வேஷதி
க்ஷிதௌ ॥

ஸுலபம் ஸ்வகுரும் த்யக்த்வா-அதி ஸுலபனான தன்னுடைய ஆசாரியனைவிட்டு, ய:-எவன், துர்லபம் உபாஸதே-துர்லபமான பகவத்விஷயத்தை உபாஸிக்கிறானோ, மூட:- (அந்த) மூடன், லப்தம் தநம்த்யக்த்வா-கைப்பட்டபொருளை கைவிட்டு, க்ஷிதௌ குப்தம் அந்வேஷதே-பூமியில் புதைக்கப்பட்ட பொருளைத்தேடுகிறான்.

---

483. குருபரம்.

## 449 ஸூத்திரம்.

484. வக்ஷூர்மம்யம் குரும் த்யக்த்வா ஶாஸ்த்ரமம்யம் து யஃ ஸ்மரேத் । கரஸ்தமுதகம் த்யக்த்வா கநஸ்தமபி வாஞ்சதி ॥

வக்ஷூர்கம்யம் குரும் த்யக்த்வா கண்ணுக்கிலக்கான ஆசார்யனைவிட்டு, யஃ து-எவன், சாஸ்த்ரகம்யம் ஸ்மரேத்-சாஸ்த்ரங்கொண்டறிய வேண்டிய பகவானை நினைக்கிறானோ, (அவன்) கரஸ்தமுதகம் த்யக்த்வா-கையிலிருக்கும் தண்ணீரைவிட்டு, கநஸ்தம் அபி வாஞ்சதி-மேக ஜலத்தை விரும்புகின்றான்.

485. ஏதத்ஸூத்ர-253-வது இலக்கம்பார்க்க.

## 450 ஸூத்திரம்.

486. ஏஷநாராயணஃ ஸ்ரீமான் க்ஷீரார்ணவ நிகேதநஃ ।
நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம்புரீம் ॥

ஸ்ரீமான்-பெரிய பிராட்டியாரோடு கூடிய, க்ஷீரார்ணவநிகேதநஃ-திருப்பாற்கடலில் கண்வளர்ந்துகொண்டிருக்கிற, ஏஷஃ நாராயணஃ-இந்த நாராயணன், நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய-திருவனந்தாழ்வானாகிற திருப்பள்ளி மெத்தையை விட்டு (பலராமனை முந்தி அனுப்பி) மதுராம்புரீம் ஆகதஃஹி-மதுராபட்டணத்திற்கு வந்திருக்கிறானன்றோ.

487. லாபஸ்தேஷாம் ஜயஸ்தேஷாம் குதஸ்தேஷாம் பராபவஃ।
யேஷாமிந்தீவரஶ்யாமோ ஹ்ருதயே ஸுப்ரதிஷ்டிதஃ ॥

யேஷாம்-எவர்களுடைய, ஹ்ருதயே-மனத்துள், இந்தீவரச்யாமஃ ஸுப்ரதிஷ்டிதஃ-கரு நெய்தல்போன்ற திருமேனியுள்ள பகவான் நன்றாய் அமர்ந்திருக்கிறாரோ, தேஷாம் லாபஃ-அவர்களுக்கு லாபமுண்டாகும். தேஷாம் ஜயஃ-அவர்களுக்கு ஜெயமுண்டாகும், தேஷாம் குதஃ பராபவஃ-அவர்களுக்கு அவமானம் எங்கிருந்து வரும்.

---

484. குருபரம். 486. ஹரிவம்-113-62.

**488.** யேனைவ குருணா யஸ்ய ந்யாஸவித்யா (ப்ர) ப்ரதீயதே।
தஸ்ய வைகுண்ட துக்தாப்தி (த்வா) த்வா(ர)ரகாஸ்
ஸர்வ ஏவ ஸ: ॥

யஸ்ய_எவனுக்கு, யேனைவ குருணா_எந்த ஆசாரியனால், ந்யாஸவித்யா ப்ரதீயதே_ப்ரபத்தி வித்யையானது உபதேசிக்கப்படுகிறதோ, தஸ்ய_அவனுக்கு, ஸ: ஏவ_அந்த ஆசாரியனே, வைகுண்டதுக்தாப்தி த்வாரகா: ஸர்வ:_வைகுண்டமும், திருப்பாற் கடலும் திருத்துவாரகையும் எல்லாம் ஆகிறான்.

## 454 ஸூத்திரம்.

**489.** அபிசேத் ஸுதுராசாரோ பஜதேமாமநந்யபாக் ।
ஸாதுரேவ ஸமந்தவ்ய: ஸம்யக் வ்யவஸிதோஹி ஸ: ॥

(எவன்) ஸுதுராசார: அபிசேத்_அத்யந்தநிஷித்தாநுஷ்டானத்தையுடையவனாயிருந்தாலும், மாம்_என்னை, அநந்யபாக்_அநந்ய ப்ரயோஜநராய், பஜதே_பஜிக்கிறானோ, ஸ:_அவன், ஸாதுரேவமந்தவ்ய:_ஜ்ஞாநாதிகனென்று எண்ணத்தகுந்தவன். ஸ: ஸம்யக் வ்யவஸித:ஹி_அதையே நல்ல ஆசாரமுடையவன்.

## 455. ஸூத்திரம்.

**490.** ஶாந்தோதாந்த உபரதஸ்திதிக்ஷுஸ்ஸமாஹிதோ பூத்வா ஆத்மந் யேவாத்மாநம் பஶ்யேத் ।

சாந்த:-பஹிரிந்திரிய நிக்ரஹமுள்ளவனும், தாந்த:-மநோ நிக்ரஹமுள்ளவனும், உபரத:-இவைகளிரண்டும் தனக்குண்டென்கிற கர்வமில்லாமல் இந்திரியங்களுக்கு ஆத்மாவை விஷயமாக்கினவனும், ஸமாஹித: பூத்வா-நிர் வ்யாபாரனாகியும் ஆகி, ஆத்மநி ஏவ-ஆத்மாவுக்குள்ளிருக்கிற, ஆத்மாநம்-பரமாத்மாவை, பச்யேத்-பார்க்கவேண்டும்.

## 457. ஸூத்திரம்.

**491.** க்ஷேத்ராணி மித்ராணி தநாநி நாதபுத்ராஶ்ச தாரா:ப

488. குருபரம் 490. ப்ரு-9_4. 491. ஹஸ்திகிரிமாஹாத்மியம்

ஶவோ க்ரு (ம ரு) ஹாணி। த்வத்பாத பத்ம ப்ரவணாத்
மவ்ருத்தேர் ஹவந்தி ஸர்வே ப்ரதிகூல ரூபா: ॥

ஹேநாத-ஓஸ்வாமின்! க்ஷேத்ராணி-நிலங்களும், மித்ராணி-தோழன்களும், தநாநி-தநங்களும், புத்ராணி-பிள்ளைகளும், க்ருஹாணி-வீடுகளும், த்வத்பாதபத்ம ப்ரவணாத்ம வ்ருத்தே:-தேவரீரது திருவடித்தாமரைகளிலே ப்ரேமயுக்தரானவர்களுக்கு, ஸர்வே-இவையெல்லாம், ப்ரதிகூல ரூபா: பவந்தி-விரோதங்களாக ஆகின்றன.

## 458 ஸூத்திரம்.

**492.** வரம் ஹுதவஹஜ்வாலா பஞ்ஜராந்தர்வ்யவஸ்திதி: ।
ந ஶௌரிசிந்தா விமுகஜந ஸம்வாஸவைஶஸம் ॥

ஹுதவஹ-அக்னியின், ஜ்வாலா-ஜ்வாலைகளாகிற, பஞ்ஜர-கூட்டின், அந்த:-நடுவில், வ்யவஸ்திதி:-அடங்கியிருப்பதானது, வரம்-சிறந்தது. ஶௌரி-கண்ணனுடைய, சிந்தா-தியானத்தில், விமுக-ஆவலற்ற, ஜந-ஜனங்களுடன், ஸம்வாஸ-ஸஹவாஸம் செய்வதாகிற, வைசஸம்-பெருந்துன்பமானது, ந(வரம்) சிறந்ததன்று.

## 459 ஸூத்திரம்.

**493.** குருணா யோऽபிமந்யேத குரும் வா யோऽபிமந்யதே ।
தாவுபௌ பரமாம் ஸித்திம் (ஸிம்) நியமாதுப கச்ச(ஞ்ஞ)த: ॥

குருண-ஆசாரியனால், ய:-எவன், அபிமந்யதே-அபிமானிக்கப்படுகிறானோ, குரும்-ஆசாரியனை, ய:-எவன், அபிமந்யதே வா-அபிமானிக்கிறானோ, தாவுபௌ-அவ்விருவரும், பரமாம் ஸித்திம்-பரமபதத்தை, நியமாத்-க்ரமமாக, உபகச்சத:-அடைகிறார்கள்.

## 460 ஸூத்திரம்.

**494.** மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதம் சந ।
தோஷோயத்ய(து)பிதஸ்ய ஸ்யாத்ஸதாமேதத்விகர்ஹிதம் ॥

---

492. ஶௌநகஸம்ஹிதை. 493. பரத்வாஜஸம்ஹிதை

494 ஸ்ரீரா-யு-18-3

மித்ரபாவேந-மித்திரன் என்கிற பாவனையால், ஸம்ப்ராப்தம்-வந்தவனை, கதம் சந த்ய ஜேயம்-எவ்விதத்திலும் கைவிடமாட்டேன். தஸ்ய-அவனுக்கு, தோஷ: யத்யபிஸ்யாத்-தோஷமிருந்தாலுமிருக்கட்டும். ஸதாம் ஏதத் அஹர்ஹிதம்-பெரியோர்களுக்கு இகழத்தக்கதன்று. (கொண்டாடத்தகுந்தது)

495. ஆசார்யதேவோபவ ।

ஆசாரியனை தெய்வமாயுள்ளவனாய் ஆகக்கடவாய்.

496 பரமர்மநுஷ்ய:-296-வது இலக்கம்பார்க்க.

497. தமேவஹாத்யம்—109-வது இலக்கம்பார்க்க.

498. தமேவஶரணம்...109-வது இலக்கம்பார்க்க.

499. மாமேகம்...112-வது இலக்கம்பார்க்க.

461. ஸூத்திரம்.

500. அநாசார்யோ பலப்தா(ஸ்யா) ஹி வித்யே (ஜ்ஞ) யம் நஶ்யதி த்ரு (யு) வம் ।

அநாசார்யோ பலப்தா-ஆசாரியனால் உபதேசிக்கப்படாத, இயம் வித்யா-இந்த வித்யையானது, த்ருவம் நச்யதி ஹி-நிச்சயமாய் நசித்துவிடுகிறது.

501. ஶாஸ்த்ராதிஷு ஸுத்ரு ( ஜ ) ஷ்டாபி ஸாங்கா ஸஹபலோதயா । ந ப்ரஸித்ய (யு) தி வைவித்யா (ஜ்ஞா) விநா ஸதுபதேஶத: ॥

சாஸ்த்ராதிஷு-சாஸ்த்ராதிகளில், ஸுத்ருஷ்டா அபி-நன்றாய் பார்த்திருந்தாலும், வித்யா-வித்யையானது, ஸதுபதேசத: விநா-ஸதாசார்யோபதேசமில்லாதபோது, ஸாங்கா-அங்கங்களோடுகூடினதாயும், ஸஹபலோதயா-பல ஸித்தியோடுகூடினதாயும், ந ப்ரஸித்யதி-நன்றாய் ஸித்திக்கிறதில்லை.

502. அநந்யஸாத்யே (ஜ்ஞ) ஸ்வாபீஷ்டே மஹாவிஶ்வாஸ பூர்வகம் । ததேகோபாயதாயாச்ஞா ப்ரபத்தி: ஶரணாகதி:॥

495 தை-உப-11 அநுவாகம். 501. பாரத்-ஸம்-1-3

அநந்யஸாத்யே-அந்யோபாயங்களால் ஸித்திக்கக்கூடாததா ன, ஸ்வாபீஷ்டே-தன் விருப்பத்தில், மஹாவிஸ்வாஸ பூர்வகம்-மஹாவிச்வாஸத்தை முன்னிட்டு, ததேகோபாயதா யாச்நா-அவ னொருவனையே உபாயமாயிருக்கவேணுமென்கிற யாசநையானது, ப்ரபத்தி:-ப்ரபத்தி, சரணாகதி:-அதுவே சரணாகதி.

**503**. பாலமூக ஜடாந்தாஸ்ச பங்கவோ பதிராஸ்ததா। ஸதா
சார்யேண ஸம்த்ரு(ஷ்ட்)ஷ்டா: ப்ராப்நுவந்தி பராம் கதிம்॥

பால-குழந்தைகளும், மூக-ஊமையர்களும், ஜட-மந்தமதிக ளும், அந்தாஸ்ச-குருடர்களும், பங்கவ:-நொண்டிகளும், ததா ப திரா:-அப்படியே செவிடர்களும், ஸதாசார்யேண ஸம்த்ருஷ்டா: ஸதாசாரியன் க்ருபாகடாக்ஷத்தினால் பார்க்கப்பட்டவர்களாய், ப ராம்கதிம் ப்ராப்நுவந்தி-பரமபதமடைகின்றார்கள்.

**504**. உபயபரிகர்மித...185-வது இலக்கம்பார்க்க.

நான்காம் ப்ரகரணம் முற்றிற்று.

---

பிள்ளைலோகாசாரியர் திருவடிகளே சரணம்.

பெரிய ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீவசனபூஷண ப்ராமணத்திரட்டு முற்றிற்று.

---

503-பாரத்-ஸம்-1-35.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

## ஸ்ரீவசநபூஷண வ்யாக்யானத்தின்

# அரும்பத விளக்கம்.

### அவதாரிகை.

ஆகாரத்ரயம்:— அநந்யார்ஹ ஶேஷத்வம், அநந்ய ஶரணத்வம்.
அநந்ய போக்யத்வம். நிரதிசயாநந்தம்-எல்லையில்லாத வானந்தம்,
திலதைலவத்-எள்ளுள் எண்ணெய் போலவும். தாருவஹ்நிவத்-
கட்டையில் நெருப்புப்போலவும். துர்விவேச-பிறிக்கக்கூடாத. துர
த்யய-ஈஶ்வரன் தவிர மற்றவர்களால் நிவர்த்திக்க முடியாத. திரோ
ஹித-மறைக்கப்பட்ட. அவித்யா;— அஜ்ஞானம், அந்யதா ஜ்ஞா
னம், விபரீத ஜ்ஞானம். "யாதானும்பற்றி நீங்கும் விரதத்தை":—
ஏதோ ஒன்றைப்பற்றி அத்தால் எம்பெருமானை கிட்டாமைக்கு
ஹேதுவான விரதத்தை. அத்யந்த விமுகராய்:— அன்னிய சேஷ
த்வத்தால் வைமுக்யம், ஸ்வாதந்திரியத்தால் அதிவைமுக்யம்,
தேஹாத்மாபிமானத்தால் அத்யந்த வைமுக்யம். விதத-விஸ்தார
மான. விவித-அநேக விதமான. தத்த்வம்-பகவத்சேஷத்வ ஸ்வரூ
பம். ஹிதம்-ஸித்தோபாயம். புருஷார்த்தம்-கைங்கர்யம். ஜாயமா
னகாலம்—ஜெனனகாலம். அறிகை-ததீய சேஷத்வ பர்யந்தம் அறி
கை. பாரகராய்—கரை கண்டவராய். வேதோபப்ர்ம்ஹணங்களான-
வேதங்களுக்கு வியாக்யானங்களான. கூடார்த்தங்களை—துர்ஜ்ஞே
யமான வர்த்தங்களை. கரதலா மலகமாக-கையிலங்கு நெல்லிக்கனி
போல. ஆகஸ்மிகம்—அகஸ்மாத் ஸம்பவம், நிர்ஹேதுக மென்ற
படி. கடாக்ஷ விஶேஷமாவது—பலபர்யந்தமான கடாக்ஷம். திராவி
டவேதமாவது:— நம்மாழ்வாரருளிச்செய்த நாலு ப்ரபந்தங்கள்.
ததங்கமாவது:—திருமங்கையாழ்வார் அருளிச்செய்த ஆறு ப்ரபந்
தங்கள். உபாங்கமாவது:— மற்றையாழ்வார்கள் அருளிச்செய்த

பதினாலு ப்ரபந்தங்கள். அளவிலிகள்-மந்தமதிகள். ஸத்ஸம்ப்ர... இத்யாதி:— ஸத்—ஸத்புருஷர்களுடைய, ஸம்—ஸமீசீநமான (அதாவது) தாங்களறிந்தபடியே செய்த, ப்ரதாய—உபதேசத்தில் (விஸ்தராய் என்றபடி). ஸமீசீந: ப்ரதாய: ஸம்ப்ரதாய:. ஸமீசீநத்வமாவது-உபதேச ஸமயத்தில் உபதேஷ்டாக்கள் யதா ப்ரதிபத்தியுக்தராயுபதேசிக்கை. அருமை—அதிகாரிதுர்லபத்வம். பெருமை-அர்த்த கௌரவம். நம்பியார்-ஜ்ஞானபூர்ணர். விஸ்தராய்-ஈடுபட்டு.

ரத்ந பூஷணமாவது:— தனி ரத்நத்திற்கு ரத்நபூஷணமென்கிற பெயர் கிடையாது; ரத்னமும் தங்கமும் சேர்ந்த ஓர் வஸ்துவுக்கு ரத்ந பூஷணமென்று சொல்லுவது. ஆனால் இதில் தங்கம் சேர்ந்திருக்கிறபடியால் ஸ்வர்ணபூஷணம் என்று ஏன் பெயரிடக்கூடாதென்றால்; எந்த வஸ்து அதிகமாகயிருக்கிறதோ அத்தையே நிரூபகமாகச்சொல்லுவது ஓர் நியாயமுண்டு. அதைப்போல் ரத்நம் (மதிப்பு) அதிகமாயும் தங்கம் கொஞ்சமாயுமிருக்கிற ஆபரணத்திற்கு ரத்நபூஷணம் என்றபேர் ஆகக்கடவது. கீழ்ச்சொன்ன நியாயப்படி இங்கு வசநபூஷணம் என்கிற சப்தத்திற்கு வசநங்கள் அதிகமாயும் அர்த்தம் குறைவாயுமுள்ளது எதுவோ; அது வசந பூஷணமென்று தோற்றும். அப்போது இந்த க்ரந்தம் வெறும் சப்தஜாலமே யொழிய அர்த்த புஷ்டி கிடையாதென்று சொல்லவேண்டியதாய்வரும். ஆனால் அதுதான் பொருள் என்றாலோ? அதுவல்ல, பின்னை எங்ஙனே யென்னில்; பூர்வாசார்யர்கள் வசனங்கள் அதிகமாயும் தன்னுடையவசனம் குறைவாயுமுள்ளதால் வசந பூஷணமென்கிற திருநாமம் இக் க்ரந்தத்திற்கு உண்டாயிற்று.

## ஸூத்ரம் 1.

ப்ரமாதா—ப்ரமாணத்தைக்கொண்டு அர்த்த நிஶ்சயம் பண்ணுமவர்கள். ப்ரமாணம்-ஶாஸ்த்ரம். ப்ரமேயம்-அர்த்தம். கதிபய—சில. பரோக்ஷார்த்தம்—மறைந்திருக்கும்பொருள். வேதம்:— வகாரம் அமிர்தவாசி, ஈகாரம்-ஐஶ்வர்யவாசி; வஶ்ச ஈஶ்ச வயா, வயா ததாதி வேத:. அவற்றில் ப்ரத்யக்ஷ...நிஷ்கரிஷித்து:— அதாவது ப்ரத்யக்ஷத்தை ப்ரமாணமாகக்கொள்ளும்போது சக்ஷுஸ்ஸு முதலிய இந்திரியங்களைக்கொண்டே அறியவேண்டியதாயும், அநுமானம் ப்ரமாணமாக ஆகும்போது இதற்கு முன்பு தான் ப்ரத்யக்ஷமாய் விஷயங்களைக்கண்டுவைத்த அந்த ஜ்ஞானத்தாலே வேறு சில தூரத்திலுள்ள பதார்த்தங்களை யறியவேண்டியதாயும், இப்ப

டி ப்ரத்தியக்ஷத்திற்கும் அநுமானத்திற்கும் எட்டாத விஷயங்களை சாஸ்த்ரங்களைக்கொண்டே நிஷ்கர்ஷிப்பதில் வேதமே முக்ய ப்ரமாணமாக நிற்கிறது. பௌருஷேய சாஸ்த்ரம்-ருஷிகளால் சொல்லப்பட்ட சாஸ்த்ரம். ப்ரமம்-அந்நியதா ஜ்ஞானம். அதாவது ஒன்றை வேறொன்றாக நினைக்கிறது. விப்ரலம்பம்-வஞ்சனை, ப்ரமாதம்-அநவதாநம், அதாவது அலக்ஷியமாகச்சொல்லுகிறது. அசக்தி—கரணாபாடவம், அதாவது இந்திரியங்கள் வசப்படாமை. அபியுக்தர்—தாங்களிழிந்த விஷயங்களில் குண தோஷங்களையறிய வல்லவர்கள். புபுக்ஷுக்கள்—ஐச்வரிய போகத்தில் இச்சையுடையவர்கள். ஸாமாந்யவாசி-பொதுப்பெயர். ஸாகல்யேந—ஸகலத்தையும். ஆப்தரான-விஷயங்களை யுள்ளபடி பார்க்கிறவர்களாய் பார்த்தபடிச் சொல்லுகிறவர்களான. அபிஹிதங்களான-சொல்லப்பட்டதான.

ஸர்காதி பஞ்சலக்ஷணமாவது:— "ஸர்கஶ்ச ப்ரதிஸர்கஶ்ச வம்ஶமந்வந்தராணிச-வம்ஶாநு சரிதஞ்சைவ புராணம் பஞ்சலக்ஷணம்" ஸர்க:ச--ஸ்ருஷ்டியும், பிரதிஸர்க:ச-பிரளயமும், வம்ச:-வம்சங்கள்; மந்வந்தராணி-மந்வந்தரங்கள், வம்சாநுசரிதம் சைவ—அந்தந்த வம்சங்களுடைய சரித்திரமும், புராணம் பஞ்சலக்ஷணம்-புராணம் ஐந்து லக்ஷணங்களோடு கூடியிருக்கிறது.

வேதம் 4— இருக்கு, யஜுர், ஸாமம், அதர்வணம்.

வேதாங்கம் 6—சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், சோதிடம், கற்பம்.

உபாங்கம் 4— மீமாம்ஸை, நியாயம், புராணம், ஸ்ம்ருதி.

நியாயம் 2— கௌதம ஸூத்திரம், கணாத ஸூத்திரம்.

புராணம் 18— ப்ரஹ்ம புராணம், பதும புராணம், விஷ்ணு புராணம், சைவ புராணம், பாகவத புராணம், பவிஷ்ய புராணம், நாரதீய புராணம், மார்க்கண்டேய புராணம், ஆக்கினேய புராணம், பிரமகைவர்த்த புராணம், இலிங்க புராணம், வராக புராணம், காந்த புராணம், வாமன புராணம், கூர்ம புராணம், மச்ச புராணம், காருட புராணம், பிரமாண்ட புராணம்.

ஸ்ம்ருதி 18— மநுஸ்ம்ருதி, பிரகஸ்பதிஸ்ம்ருதி, தக்ஷஸ்ம்ருதி, யமஸ்ம்ருதி, கௌதமஸ்ம்ருதி, அங்கிரஸ்ம்ருதி, யாஞ்ஞவல்கியஸ்ம்ருதி, பிரசேதஸ்ம்ருதி, சாதாதபஸ்ம்ருதி, பராசரஸ்ம்ருதி, ஸம்வர்த்தஸ்ம்ருதி, உசனஸ்ம்ருதி, சங்கஸ்ம்ருதி, லிகிதஸ்ம்ருதி, அத்திரிஸ்ம்ருதி, விஷ்ணுஸ்ம்ருதி, ஆபஸ்தம்பஸ்மிருதி, ஹாரீதஸ்ம்ருதி.

இதிஹாஸம் 2— ஸ்ரீராமாயணம், மஹாபாரதம்.

ஆகமம் 2— பாஞ்சராத்திரம், வைகானஸம்.

## வேதாங்கம்:—

சீக்ஷையாவது— வர்ணஸ்வர மாத்ராதி நிரூபணம் பண்ணும் சாஸ்த்ரம்.

வியாகரணமாவது— ப்ரக்ருதி ப்ரத்யயாதி முகத்தாலே அர்த்தாபிதாயகமான பதங்களை நிரூபிக்கும் சாஸ்த்ரம்.

சந்தஸ்ஸாவது—காயத்திரி, உஷ்ணிக், அநுஷ்டுப், த்ரிஷ்டுப், ப்ரஹதீ, பங்க்தி, ஜகதி, என்கிற இவை முதலிய சந்தஸ்ஸுக்களை நிரூபிக்கும் சாஸ்த்ரம்.

நிருக்தமாவது— அக்ஷர ஸாம்யமாத்திரத்தாலே பதங்களில் அர்த்தத்தை நிரூபிக்கும் சாஸ்த்ரம்.

ஜோதிஷமாவது— அத்தியயநாநுஷ்டானங்களுடைய கால நியமம் பண்ணும் சாஸ்த்ரம்.

கல்பமாவது— வேதார்த்தானுஷ்டான ப்கார நிரூபணம் பண்ணும் சாஸ்த்ரம்.

## உபாங்கம்:—

மீமாம்ஸை—வேத வேதாந்தார்த்தங்களுடைய அர்த்த கமகத்வத்துக்கு உபயுக்தமான பூர்வபக்ஷ ஸித்தாந்த ரூபேண உண்டான விசாரம்.

நியாய சாஸ்த்ரம்— அங்கத்தோடுகூடின வேதங்களினுடைய அர்த்த ஔசித்தியத்தை ப்ரமாணாதி நிரூபணங்களாலும் தர்க்க மரியாதையாலும் ப்ரதிபாதிக்கக்கடவதாயிருக்கும்.

புராணமாவது—ஸ்ருஷ்டி, ஸம்ஹாரங்களும், வம்சங்களும், மந்வந்தரங்களும், வம்சாநு சரிதங்களும் ஆகிற பஞ்சலக்ஷணத்தை யுடையத்தாயிருக்கும்.

## பூர்வ மீமாம்ஸையாவது:—

வேதத்தினுடைய பூர்வபாகத்தில் (அதாவது கர்மபாகத்தில்) பசு புத்ர வ்ருஷ்டி அன்ன ஸ்வர்காதி ஐஹிக ஆமுஷ்மிகங்களுக்கு ஸாதனங்களான கர்மங்களை விதிக்கப்பட்டிருக்கிறது, அத்தை அநுஷ்டிக்குமிடத்தில் பூர்வோத்தர விரோதங்களும் சில விடங்களில் அபார்த்தங்களும்மந்தமதிகளுக்குத் தோற்றுமாகையாலே அவைகளின் யதார்த்தத்தை யறியும் வண்ணம் மஹருஷிகள் நியாய ஸஞ்சாரஞ்செய்து அர்த்த நிர்ணயம் பண்ணினவை. இது ப்ராயேண பகவதாராதநரூப கர்ம்ம ப்ரதிபாதகமாயிருக்கும். எங்ஙனே யென்

னில்; ஸகல தேவதைகளும் அவனுக்கு "ஸ ஆத்மா, அங்கான்யா யா தேவதா:" என்கிற நியாயத்தாலே.

உத்தர மீமாம்ஸையாவது:— வேதாந்தம் என்று சொல்லப்பட்ட உபநிஷத்துகளில், கர்ம பாகத்தில் சொல்லப்பட்ட கர்மங்களால் ஆராத்ய வஸ்துவான ப்ரஹ்மத்தின் ஸ்வரூபரூப குண சேஷ்டிதங்களைச் சொல்லி, அவனே உபாஸ்ய வஸ்துவென்று, நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்த உபநிஷத்துக்களிற் சொன்ன அர்த்தங்கள் நியாயஸஞ்சாரமில்லாமல் அறிந்து கொள்ளுவது ஸாத்தியமல்லாமையாலே, பகவதம்ச பூதரான வ்யாஸர், ஸுலபமாய் அறியும்படி அவைகளை ஸூத்ரங்களாகச்செய்தார்; இவைதான், ப்ர்ஹ்மமீமாம்ஸை என்றும், ப்ர்ஹ்ம ஸூத்ரமென்றும், வ்யாஸ ஸூத்ரமென்றும், வழங்கப்படும். இதில் ஸ்ரீமன் நாராயணனே ஜகத்காரணவஸ்துவென்று சொல்லி, அதற்கு விரோதமான அபிப்பிராயங்களையும் மதங்களையும் கண்டித்து, தத்த்வங்களின் வகைகளையும் அவனை யடையும் உபாயங்களையுஞ்சொல்லி, கடைசியாக அர்ச்சிராதிமார்க்கத்தையும் ஸ்ரீ வைகுண்டத்தையும் வர்ணித்திருக்கிறது. அர்த்த ஸ்திதியிதுவாயிருக்க, பின்புள்ளோர் சிலர் தங்கள் அபிப்ராயத்துக்கு இணங்க அர்த்தங்களை மாற்றியதில் பல மதங்கள் உண்டாயிற்று. இப்போது முக்கியமாய் வழங்கிவரும் வைதிக மதங்கள் மூன்று, அவையாவன:—அத்வைதம், த்வைதம், விசிஷ்டாத்வைதம்.

## அத்வைதம்.

இந்த மதம் "இரண்டாவது வஸ்து இல்லை" என்பது. அதாவது, சித் என்றும், அசித் என்றும், சொல்லப்படும் வஸ்துக்கள், தோற்றமே ஒழிய வாஸ்த்தவத்தில் கிடையாது. ஆனால் உண்மையாயுள்ளது ப்ரஹ்மம் ஒன்றுதான். இதற்கு ரூபம், குணம், விகாரங்கள் கிடையாது. இது எங்கும் வியாபித்து ஜ்ஞான ஸ்வரூபமாயுள்ளது. நாம் பார்க்கும் ஸகல பதார்த்தங்களும் ப்ரஹ்மஸ்வரூபமே. ஜீவனை ப்ரஹ்மத்தின் சாயை யென்றும், ஒவ்வொருவனுக்குண்டான ஸுகதுக்கங்கள் வெவ்வேறு வகைகளாகையால், அவற்றுக்குக் காரணங்களாகிய அஜ்ஞானங்கள் புருஷ பேதத்தினால் வேறுபட்டு, அநந்தமாயிருக்குமென்றும், மாயையினாலாவரிக்கப்பட்டவன் ஈப்வரன், அவித்யையினாலாவரிக்கப்பட்டவன் ஜீவனென்றும்; சொல்லுவர்கள். இந்த மாயைக்கு வஸ்துக்களின் ஸ்வபாவத்தை மறைப்பிக்கிற குணமும், ப்ரகாசிப்பிக்கிற குணமுமுண்டு. அதாவது—ப்ரஹ்மஸ்வரூபத்தை மறைத்தல் உலகத்தைக் காண்பித்தலென்பது, இந்த அஜ்ஞானம் "தத்த்வமஸி" இத்

யாதி வேதாந்த வாக்யஜந்ய ஜீவ ப்ரஹ்மா பேதஜ்ஞானத்தினல் நசிக்கிறது. அந்த அபேத ஜ்ஞாநமும், கலங்கின நீரிலுரைத்த தேத்தான் கொட்டை அந்நீரிலுள்ள அழுக்கையும் போக்கின பின்பு தானும் நசிப்பதுபோல், இவ்விதமான ப்ராந்திக்குக் காரணமாகிய அநாதி மாயையையும் போக்கித் தானும் உடனே நசித்துவிடுகிறது குயவன் சக்கரத்தைத் திருப்பிவிட்ட பிறகுங்கூட அந்த வேகத்தினல் அந்தச் சக்கரம் சிறிது நேரம் சுற்றிக்கொண்டிருப்பதுபோல் தத்த்வஜ்ஞாநம் பிறந்து அவித்யை நசித்தாலும், பூர்வ வாஸனையினல் ஸம்ஸாரம் சிறிது காலம் அநுவர்த்தித்துக் கொண்டிருக்கும். அவ்வாஸனை நிவ்ருத்தமான பிறகு அந்த ஸ்வரூபம் ப்ரஹ்ம ஸ்வரூபத்தில் லயித்து நிர்குணமாய் ஜ்ஞாநாநந்த ஸ்வரூபமாய் விளங்கும். இந்த மோக்ஷத்தையே பரம புருஷார்த்தமென்று சாஸ்த்ரங்கள் முறையிடுகின்றனவென்று, அத்வைதிகள் பக்ஷம்.

## த்வைத மதம்.

இந்த மதம் "இரண்டாவது வஸ்து உண்டு" என்பது. வஸ்துக்கள் நித்யமாயும், வாஸ்தவமாயும், வெவ்வேறு ஸ்வரூபத்தையுடையதாயுமிருக்கின்றன. இவைகள் ஐந்து வித பேதங்களுடன் இருக்கின்றன. அவையாவன:— 1. ஜீவேசுவர பேதம், 2. ஜீவ பரஸ்பர பேதம். 3. ஜீவஜட பேதம். 4. ஜட பரஸ்பர பேதம். 5. ஜடேசுவர பேதம். இவைகளை பேதங்களாக வறிந்தால் தான், ஜ்ஞானமென்றும், மற்றைப்படி ஒன்றை வேறென்ருக வறிந்தால் விபரீத ஜ்ஞானமென்றும் சொல்லப்படும். அதாவது கல்லை கல்லாகவும், மண்ணை மண்ணுகவும் அறிவது ஜ்ஞானம், மற்றப்படி அறிவது விபரீத ஜ்ஞானம். அதைப்போலவே ஜீவன்களுடைய பேதத்தை அறியவேணும். ஜீவாத்மாக்கள் எல்லாம் ஒரே ஸ்வரூபத்தையுடையதல்ல. மோக்ஷத்தை யடையும்படியான சில ஆத்மாக்களும், நரகத்தை யடையும்படியான சில ஆத்மாக்களும், ஸம்ஸாரத்தை அனுபவிக்கும்படியான சில ஆத்மாக்களாகவுமிருக்கின்றன. அதாவது மோக்ஷத்தை அடையும்படியான ஜீவாத்மா மோக்ஷத்தையே யடைவதன்றி வேறு பதவியை யடையாது. அப்படியே மற்றவைகளும். இத்தால் ஆத்மாக்கள் எல்லாம் ஜ்ஞானம் பிறந்து பகவத் ப்ராப்தியையடையலாமென்கிற நியாயமில்லை. இன்னமும் முக்திக்கு யோக்கியமாயுள்ள ஜீவாத்மாக்கள் எல்லாம் முக்தி தசையில் ஏக ரூபங்களான சரீரத்தை அடைகிறதென்கிற விந்தாந்தமுமில்லை. அதாவது இங்கு பசு, பக்ஷி மநுஷியன் எந்தெந்த ரூபத்துடன் இருக்கிறதோ, அந்தந்த ரூபத்தையே அங்குபோயும் அடைகிறது. தவிர முக்தி தசையிலும் அவரவர்கள் செதய்

ஸுக்ருதத்தின்படி ஆனந்தத்தில் தாரதம்யமுண்டு. இந்த முக்திய டைவதற்கு முக்ய சாதனம்—கீழ்ச்சொன்ன ஐந்து விதமான பேத ஞ்ஜானமே என்பது த்வைதி பக்ஷம்.

## விசிஷ்டாத்வைத மதம்.

'விசிஷ்டாத்வைதம்' இது 'விசிஷ்ட' 'அத்வைத' என்று இரண்டு பதத்தோடு கூடிய ஒரு சொல். அத்வைதம் என்றால் இரண்டல்ல ஒன்றென்பது; விசிஷ்டம் என்றால் விசேஷணத்தோடு கூடியது. அதாவது சித்தையும், அசித்தையும் சரீரமாகவுடையது. ஆக விசிஷ்டாத்வைதம் என்றால் சித்தையும், அசித்தையும் சரீரமாகவுடைத்தாய், இரண்டல்லாததாய், ஒன்றாயிருக்கிற ப்ரம்ஹமத்தைச் சொல்லுவது. ஸூக்ஷ்மசிதசித் விசிஷ்டனான (சரீரியான) ஈச்வரனுக்கும், ஸ்தூலசிதசித் விசிஷ்டனான (சரீரியான) ஈச்வரனுக்கும் அபேதமர்த்த மாகையால் விசிஷ்டாத்துவைதமென்று பெயர். இந்த ஸித்தாந்தத்தில், சித்து, அசித்து, ஈச்வரன் என்று தத்வம் மூன்று.

**சித்தாவது:—** ஜீவாத்மா. அது ஜ்ஞாநாநந்த ஸ்வரூபமாய் ஸ்வயம் ப்ரகாசமாய் அணுவாய் பரமாத்மாவுக்கு சேஷ பூதமாய் நித்யமாய் ப்ரதிசரீரம் பிந்நமாயிருக்கும். இது அணுவாய் சரீரத்தில் ஒரு பாகத்திலிருந்த போதிலும் ஓரிடத்தில் தீபமிருக்க அதின் தேஜஸ்ஸு மற்ற விடங்களில் வ்யாபித்து அங்குள்ள வஸ்துக்களுக்கு ப்ரகாசகமாயிருக்குமாப்போல், தீபத்திற்கு ப்ரபைபோல் ஜீவனிடத்திலுள்ள ஜ்ஞானமானது சரீரமெங்கும் வ்யாபித்து அந்தந்த அவயவங்களில் ஸ்பர்சாதிகளாலுண்டாகும் ஸுகதுக்கங்களை க்ரஹிக்கிறது. பீஜாங்குர ந்யாயத்தினால் இந்த ஜீவனுக்கு அநாதியாயுள்ள புண்ய பாபரூப கர்மத்தினால் இந்த ஸம்ஸாரத்தில் ஜீவன் ஜன்மாதிகளை யடைகிறான். இவை நிவ்ருத்தித்தால் மோக்ஷம்.

**அசித்தாவது:—** கீழ்ச்சொன்ன ஜீவாத்மாக்கள் செய்த புண்யபாபரூப கர்மங்களின் பலமான ஸுகதுக்கங்களை அவர்களநுபவிக்கைக்கு உபகரணமாய், சரீர வஸந ஸ்ரக் சந்தந க்ருஹ க்ஷேத்ரா ராம ஸ்வர்க்க நரகாதி ரூபமாய்ப் பரிணமித்துக் காண்கின்ற ஜடமான வஸ்து. இது ப்ரக்ருதி முதலிய இருபத்துநாலு விதமாயிருக்கும்.

**ஈச்வரனாவான்:—** ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனாய், விபுவாய், ஸகல ஜகத்துக்கும் காரணனாய், ஸர்வ வஸ்துக்களுக்கும் அந்தர்யாமியாய், ஸகல பதார்த்தங்களுக்கும் அந்தராத்மாவாய், ஸகல ஜகத் ரக்ஷகனாய், ஸர்வ ஸ்வாமியாய், ஹேய ப்ரத்ய நீகனாய், அனந்த கல்யாண

குணகாரணயிருக்கிற ப்ரிய:பதியான ஸ்ரீமந்நாராயணன். ஜீவனான வன் இந்த துக்க ரூபமான ஸம்ஸாரத்தைக் கடந்து ஸ்ரீவைகுண்ட திவ்ய நகரத்திற்கு அர்ச்சிராதி மார்க்கமாய்ப்போய் அங்கு திருமா மணி மண்டபத்தில் ஸ்ரீ பூமிநீளா ஸமேதனாய், அநந்தகருட விஷ்வக்ஸேநாதி பரிஜனங்களால் அநவரதம் ஸேவ்யனாயிருந்துள்ள ஸ்ரீமந்நாராயணனைக்கிட்டி, ஆவிர்பூத ஸ்வகீய ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனாய்க்கொண்டு, பரமபுருஷ பரிசரண நிரதனாகுகையே பரம புருஷார்த்தம். முமுக்ஷுவானவன், ஸம்ஸாரத்தில் விரக்தனாய், ஸதாசாரியனை யடைந்து, அர்த்த பஞ்சக ஜ்ஞாநத்தால், ப்ரபத்திமார்க்கத்தைக்கொண்டு "மா மணி மண்டபத்து, அந்தமில் பேரின்பத் தடியரோடிருந்தமை" என்கிறபடியே, புருஷார்த்தத்தை யடைவான் என்பது நம்முடைய ஸித்தாந்தம்.

## 2 ஸூத்திரம்.

நிர்மிதங்கள்:— உண்டாக்கப்பட்டவைகள். அத்தைப் பற்ற-அப்படி நிர்மிதங்களாயிருக்கையாலே. தர்ம சாஸ்த்ரங்கள்-ஸ்ம்ருதிகள். ஆசாரம்-குலாசாரம். சௌச ஸ்நாநாதி முதலியவைகள். வ்யவகாரம்-கடன் கொடுத்தல் வாங்குதல் முதலிய விவகாரங்கள். அதீ(யீ)த-அத்யனம் பண்ணின: பாடம் பண்ணின. ப்ராயேண-அநேகமாய்.

## 3 ஸூத்திரம்.

ஏகபாகம்:— முக்கிய பாகம்: உத்தரபாகம். புராண விசேஷங்களிலே-விசேஷ புராணங்களிலே. அதி(யி)க்ருதங்கள்-சொல்லப்பட்டவைகள்.

## 4 ஸூத்திரம்.

ஸமாஸம்:— பதயோகம்:—எழுத்து முதலியவற்றின் ஸந்தி; கலத்தல். அல்பாச்தரம்-த்வந்த்வ ஸமாஸத்திலுள்ள பதங்களில் எந்த பதத்தில் அச் (உயிரெழுத்து) குறைந்திருக்கிறதோ, அது தன்னைக்காட்டிலும் அதிக அச்சுக்களுள்ள பதத்தைக்காட்டிலும் முன்னே வந்து நிற்கும். (உதாரணம்-கோப்ராஹ்ம ணேப்ய:). அப்யர்ஹிதம்-சிரேஷ்டம்; கௌரவம்.

## 5 ஸூத்திரம்.

பாகம்:—பூர்வோத்ர பாகம். விப(ஹ)ாகம்—பூர்வார்த்தம், உத்தரார்த்தம். வேத்யம்-அறியத்தக்கது. ஸம்பாவிதனன-கௌரவிக்கப்பட்ட. ஸம்ப்ரதிபந்நம்-ஸுஸ்பஷ்டம். விளப்பற்ற—ப்ரஸித்தி

பெற்ற. தனிச்சிறை-அதிக் க்ரூரமான சிறை. வாயோலையிட்டு-வாய்சொல்லாய்; இந்த ப்ரமாண வாக்யத்தை ஓலையிலே எழுதி வைத்து.

புருஷகார வைபவம்:— புருஷகார பூதையான பிராட்டியினுடைய வைபவம். புருஷகார:— புருஷௌ-ஜீவாத்ம பரமாத்மானௌ, கரோதி-பரஸ்பரலாபேந ஸந்தவந்தௌ இதி புருஷகார:—புரு ஸநோதீதி புருஷ:, புருஷம் கரோதீதி புருஷகார: என்கிற வ்யுத்பத்தியினால் எவன் புரு-அதிகமாக, ஸநோதி-கொடுக்கிறானோ, அவன் புருஷனாகிறான், ஸர்வேச்வரனை, புருஷம்-புருஷனாக கரோதி-பண்ணுகிறாள். இதி, என்று பிராட்டி புருஷகார பதத்தினால் சொல்லப்படுகிறாள். அபரிமிதமான ப்ரஹ்மானந்தத்தை கொடுக்கிறவனாகப் பண்ணுகிறாளென்று அர்த்தம். அன்றியே "பூர்ணத்வாத் புருஷ:" என்கிற நிருக்திப்படியே, புருஷன் என்றால் பூர்ணன் என்று அர்த்தமாகையால், ஸர்வேச்வரனை க்ஷமாதி குணங்களினால் பூர்ணனாகப் பண்ணுகிறாளென்றுமாம். அன்றிக்கே "ப்ரு-பாலன பூரணயோ:", என்று பாலனார்த்தகமான தாதுவினால் நிஷ்பன்னமான புருஷ சப்தம், ரக்ஷக வாசகமாய், ரக்ஷகனாகப் பண்ணுகிறாளென்றுமாம். அன்றியே "புரு அக்ர கமநே" என்று அக்ர கமந வாசகமான புருதாதுவினால் நிஷ்பன்னமாய், புருஷபதம் அக்ரகந்தாவைச் சொல்லுகிறதாய், பகவத் விமுகரான சேதனரை உபதேசாதிகளினால் அபிமுகராகப் பண்ணுகிறாளென்றுமாம். மாந்த்யம்-மந்தமானது, அதாவது அல்பம். தத்பரமாகையாலே-தாத்பரியமாகையாலே.

6 ஸூத்திரம்.

சிதை துறைத்தல்:— குற்றம் சொல்லுகை. உப ப்ரும்ஹணம்-வேதம். ஜீயர்-வாதிகேஸரி அழகிய மணவாள ஜீயர். காடின்யம்-ஹித புத்தியாலே தூக்கிப்பிக்கை. கண்குழிவு-துக்க ஸூசகமான கண்மலர்த்தி. பத்தும்பத்தாக-பத்தில் ஒரு எண்ணிக்கை குறையாமல். குடல் கரிக்கும்படி-அத்யந்தம் பயப்படும்படி.

## பிராட்டி ஸ்வரூபம்.

ஈஸ்வரியான பிராட்டிஸ்வரூபம் அசித்கோடியிலேயோ, ஆத்மகோடியிலேயோ, ஈஸ்வரகோடியிலேயோ, என்று நிரூபித்தால்; அறிவுண்டாகையால் அசித் கோடியிலன்று. ஐஸ்வரியத்தாலே ஆத்மகோடியிலன்று. நித்ய பாரதந்த்ரியத்தாலே ஈஸ்வரகோடியிலன்று. ஆனால் தத்வம் நாலாகிறதோ வென்னில்;—அதற்கு ப்ர

மாத்ரேபபத்தியில்லை. ஆனால் இவளுடைய ஸ்வரூபம் அறுதியிடும்படி யென்னென்னில்; நிரூபக விசேஷணம், நிரூபித விசேஷணம் என்று இரண்டாய், சேதனன் நிரூபித விசேஷணமாய் இவள் நிரூபக விசேஷணமாயிருக்கும். ஆனால் "அஸ்யே சா நா ஜகத:" என்றும் "ஈஸ்வரீம் ஸர்வ பூதானும்" என்றும் ஶ்ருதிகளாலே ஈஸ்வரியாக வோதிப்போருகையாலே ஈஸ்வர கோடியிலேயாகக்குறை யென்னென்னில்; அப்போது நாட்டுக்கிரண்டு ஈஸ்வரர்கள் கூடாமையாலும்; "பதிம் விஸ்வஸ்யாத்மேஸ்வரம்" என்றும், "க்ஷராத்மநா வீஸதே தேவ ஏக:" என்று துடங்கியுண்டான ப்ரமாண பரம்பரைகளுக்கு விரோதம் பிறக்கையாலும், யுக்தியில்லாமையாலும், ஈஸ்வரத்வம் கூடாது. அங்கு ஓதிப்போருகிற ஈஸ்வரத்வம் பத்நீத்வ நிபந்தனமாகக்கடவது. ராஜ மஹிஷியை ஸோபசாரமாகச் சொல்லாதபோது, அவனுடைய ரோஷத்திற்கு இலக்காமித்தனையிறே. "பும்ப்ரதானேஸ்வரேஸ்வரீம்" என்று துடங்கி இவளுடைய வைபவங்களை ப்ரதிபாதிக்கிற ப்ரதேசங்களில் அவளுடைய போக்யதாதிசயத்தைச் சொல்லுகிறதித்தனை.

ஆனால் ஈச்வராபேதி இவளுக்கும் ஜகத்காரணத்வமுண்டாகைக்குக்குறை யென்னென்னில்; ஒருவனுக்கு காரணத்வம் உண்டாம்போது க்ராஹக ஸாமர்த்தியத்தாலும் அந்வய வ்யதிரேகத்தாலும் அர்த்தாபத்தியாலும் ஶ்ருத்யாதி ப்ரமாணங்களாலுமிறே யுண்டாகக்கடவது. இவளுக்கு காரணத்வ சக்தியுண்டாகையாலே தர்மிக்ராஹகத்வமுண்டு, 1. ப்ரபஞ்சம் இவள் பார்த்தபோது உண்டாய், ததபாவத்தால் இல்லாமையாலே அந்வய வ்யதிரேக முண்டு. 2. இது தன்னலே அர்த்தாபத்தியுண்டு 3. பகவத் சாஸ்த்திரங்களிலே காரணத்வ ஸூசகங்களான ப்ரமாணங்களுண்டு. 4. ஆகையாலே காரணத்வ முண்டாகக் குறை என்னென்னில்; சக்தித்வம் குணத்தாலல்ல, பத்நீத்வ நிபந்தநம். வீக்ஷணதீன விருத்திமத்வமாகக்கடவது. அந்வய வ்யதிரேகத்தாலே ஜகத்ஸ்த்தியில் இவளை யொழிய உபபத்தியுண்டு. ஶ்ருத்யாதி ப்ரமாணங்களும் ப்ரஹ்மாத்மகமான ஜகத்தினுடைய விலோகனபரங்களாயிருக்கும். ஆகையாலே இவளுக்கு காரண விஷயத்தில் அன்வயமில்லை.

ஈஸ்வரன் லக்ஷ்மீவிசிஷ்டனுயன்றோ காரணபூதனுகிறது, ஆகையாலே இவளுக்கும் காரணத்வத்தில் அந்வயமுண்டாகக்குறை என்னென்னில்; இவன் லீலா விபூதியை ஸ்ருஷ்டிக்கும்போது நித்ய விபூதி விசிஷ்டனுயன்றோ விருப்பது;— அப்போது நித்ய

விபூதிக்கும் காரணத்வ முண்டாகிறதோ? அவ்வோபாதி இவளுக்கும் காரணத்வமில்லை. ஆனால் இவளுக்கு ஜகத் ஸ்ருஷ்டியாதி காரண த்வத்தில் ஓரன்வய மில்லையோவென்னில்; அநுமோதனத்தால்வரும் அன்வயமுண்டு. காரண வஸ்துவே உபாஸ்யமாய் சரண்யமுமாகையாலே இவளுக்கு உபாய பாவத்தில் அன்வய மில்லை.

இவளுக்கு உபாய பாவத்தில் அன்வயமுண்டாக ப்ரமாணங்களுண்டென்னில், அது பாரண்யேச்சானு விதாயித்வமாகக்கடவது. "யதா ஸர்வகதோ விஷ்ணு: ததைவேயம் த்விஜோத்தம" என்று தொடங்கி இவளுடைய வ்யாப்தி சொல்லா நின்றதே யென்ன; ருஷிதானே விபாகம் பண்ணுகையாலே ஸ்வ விபூதி சரீரங்களிலுண்டான வியாப்தி யொழிய ஸர்வத்ர வ்யாப்தியில்லை. இந்த வியாப்திதான் வருவதொன்றிறே ஸௌபரியைப்போலே.

ஆனால் இவள் சேதன ஸமானையோவென்னில்; அப்படியன்று, பத்தரைக்காட்டில் முக்தர் வியாவ்ருத்தர், முக்தரைக்காட்டில் நித்யர் வியாவ்ருத்தர். நித்தியரைக்காட்டில் அனந்த கருடாதிகள் வியாவ்ருத்தர். அவர்களிற் காட்டில் தேவி ஜனங்கள் வியாவ்ருத்தர். தேவி ஜனங்களிற் காட்டில் பூ நீளைகள் வியாவ்ருத்தர். பூ நீளைகளிற் காட்டில் இவள் வியாவ்ருத்தை. ஆகையாலே உபய விபூதிக்கும் ஈஶ்வரையாய்ப்போருகிறது.

இவளுக்கு ஸ்வரூபத்தாலே சேதனஸாம்யமுண்டு. ஸ்வபாவத்தாலே ஈஶ்வர ஸாம்மியமுண்டு, இது நித்யருக்கும் முக்தருக்கும் உண்டோவென்னில்; இவர்களுக்கும் இன்றியிலே தேவி ஜனங்களுக்கும் இன்றியிலேயிருப்பன சில குண விசேஷங்களுண்டு. இவை எவை யென்னில்:— நிரூபகத்வமென்றும், ஆநுரூப்பியமென்றும், அபிமதத்வமென்றும், அசேஷ சேஷித்வமென்றும், ப்ராப்ய பூரகத்வமென்றும். இவ்வர்த்தத்தை அபியுக்தரும் வெளியிட்டார்கள்— "திருவினுக்கரசே," "திருமாலே" என்று நிரூபகத்வத்தையும், "உனக்கேற்கும் கோலமலர்பாவை" என்று ஆநுரூப்யத்தையும், "அல்லி மலர்மகள்போக மயக்குக்கள்" என்று போக்யதையையும், "பூவின் மிசைநங்கைக்கு மின்பன்" என்று அபிமதத்வத்தையும், "திருமாலா லருள்ப்பட்ட சடகோபன்" என்று அசேஷ சேஷித்வ ஸம்பந்த த்வாரபாவத்தையும், "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்று ஆஶ்ரயண வித்தியையும், "திருமாலடியார்களைப்பூசிக்க நோற்றார்கள்" என்று ததீயபர்யந்தமான ப்ராப்ய பூரகத்வத்தையும், வெளியிட்டார்கள்.

ஆக-இந்த குணங்களாலேயிறே இவள் ஸர்வாதிசயகாரியாயிருக்கிறது.

## தத்த்வ பூஷணம்.

"வேரிமாறாத பூமேலிருப்பாள் வினை தீர்க்கும்" என்கிற பாட்டிலும் இத்திருவாய்மொழி கற்றார்க்கு பலம் கொடுப்பாள் பெரிய பிராட்டியாரென்று ஸ்வாமி நம்பிள்ளை தாமே அருளிச்செய்திருக்க; "நாந்யதா லக்ஷணம் பவேத்" என்னுமதத்தாலே உபாயத்வம் இல்லை என்று கழிக்கக்கூடுமோ வென்னில்; கூடும்; எங்ஙனே யென்னில்— அந்த "வினை தீர்க்கும்" என்கிற பாட்டின் வியாக்யானத்திலே "தனக்கு முன்பே தான் காட்டிக்கொடுத்த ஸம்ஸாரியை விரும்பும் சீல குணமாயிற்று இதில் சொல்லிற்று" என்கிற வாக்யத்தை உட்கொண்டு விசாரிக்கும்போது "தான் காட்டிக்கொடுத்த ஸம்ஸாரியை" என்னுமதத்தாலே, பெரிய பிராட்டியார் இவர்களுக்கு புருஷகாரபூதையாய் முன்னின்று ஸௌசீல்யைகஸாகரமான ஸர்வேச்வரனைக்கொண்டு அநிஷ்ட நிவாரணாதிகளைப் பண்ணுவிப்பள் என்னுமிதுவே ஸ்வாமி நம்பிள்ளை அருளிச்செய்த தத்வ்யாக்யானங்களுக்குத் தாத்பரியம்.

இன்னமும், ரஹஸ்யத்ரயஸாரத்தில் "சரணௌ" என்று த்விவசன ப்ரயோகம் பண்ணுவானென்னென்னில், ஏகவசந ப்ரயோகம் பண்ணினால் ஜாத்யேக வசநமாய்க்கொண்டு லக்ஷ்மீவிசிஷ்டோபாயத்தைக் காட்டவுங்கூடுமாகையாலே அத்தை வியாவர்த்திக்கிறது த்விவசந ப்ரயோகம், என்றும், "லக்ஷ்மீகுண விக்ரஹங்கள் விசேஷணமாய் அவன் விசேஷ்யமாகையால் விசேஷ்யாம்ச பூதனை அவனுக்கே ப்ராதாந்யேந கார்ய காரத்வம், விசேஷணாம்சமான இவற்றுக்கு தததநுவிதாயித்வ மாத்ரமேயாயிருக்குமாகையாலே விக்ரஹத்துக்கு சுபாச்ரயத்வம், வாத்ஸல்யாதிகளுக்கு ஆச்ரயணஸௌகர்யா பாதகத்வம், ஜ்ஞாந சக்த்யாதிகளுக்கு ஆச்ரித கார்யபாதகத்வம், இதர குணங்களுக்குத் தனித்தனியே காரிய பேதமெப்படியோ, அப்படியே லக்ஷ்மீக்கு புருஷகாரத்வமே நிலமாயிருக்கும் என்று அழகர் புரோஹிதரான யாமுந தேசிகர் அருளிச்செய்தார்.

சதுச்லோகி மூன்றும் ச்லோகவியாக்யானத்திலே "பிராட்டிக்கு உபாயத்வமில்லை, புருஷகாரத்வமேயுள்ளது" என்று பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்தார்.

அப்படியானல் ஆசார்யனுக்கும் உபாயத்வம் கூடாதோவென்னில்; கூடும். அது ஶ்ரிய:பதி யடியாக உண்டாயிருப்பதொன்ருகையாலே புருஷகாரத்வமும் உபாயத்வமும் அங்குண்டாகக் குறையில்லை. பரத்வாதி பஞ்சகத்தோடொக்க ஆசாரியனையும் அரூமவதாரமாக ஸஹபடித்து வைக்கையாலும், "ஆசார்ய: ஸஹரிஸ் ஸாக்ஷாத்" "குருரேவ பரம் ப்ரஹ்ம" இத்யாதிகளாலும் விலக்ஷணத்ம விசிஷ்ட பகவத் ஸ்வரூபம் ஆசார்யனென்கிற ஸதுபதேசத்தாலும் அவையிரண்டுமாசார்யனுக்குண்டாகத் தட்டில்லை. இன்னமும், மந்த்ரரத்னத்தில் பூர்வகண்டத்தில் 'சரணௌ' என்கிற த்விவசநத்தாலே ஈஶ்வரனுக்கே உபாயத்வமுள்ளது, பிராட்டிக்கு உபாயத்வமில்லை, உண்டாகில் "சரணு:" என்கிற பஹுவசனம் (பன்மை) இருக்கவேணும். அப்படி யிராமையாலே அவளுக்கு உபாயத்வமில்லை.

இன்னமும், 'அஹம் மத்ப்ராப்த்யுபாயோ வை ஸாக்ஷால்லக்ஷ்மீபதிஸ்ஸ்வயம்' என்று உபாயத்வம் தத்விசிஷ்டத்துக்காயிருக்க அது அகலும்படி எங்ஙனே யென்னில்; "ஸாக்ஷால்லக்ஷ்மீபதிஸ்ஸ்வயம்" என்னுமிடத்தில் விஶேஷணத்தாலே அத்திருவுக்கும் உபாயத்வம் ப்ரஸக்தமாம்போது லக்ஷ்மீபதித்வத்துக்கும் உபாயத்வம் ப்ரஸங்கிக்கும். அப்போது 'ஜகந்நாதம் ப்ரபத்யதே' என்னுமிடத்திலும், தத்விசேஷணமான ஜகத்துக்கும் உபாயத்வம் சொல்லவேண்டியிருக்கும். இப்படி அதிப்ரஸங்க பஹூத்வம் ப்ராப்தமாம்.

## ஸ்ரீவைஷ்ணவ ஸமயாசார நிஷ்கர்ஷம்.

இன்னமும் தீர்க்க ஶரணாகதியான திருவாய்மொழியில், "சிந்தையாலும் சொல்லாலும் செய்கையாலும் தேவ பிரானையே தந்தை தாயென்றடைந்த வண்குருகூரவர் சடகோபன் முந்தையாயிரத்துளிவை தொலை வில்லி மங்கலத்தைச் சொன்ன செந்தமிழ் பத்தும் வல்லார் அடிமை செய்வார் திருமாலுக்கே." என்கிற பாசுரத்தில் 'தேவ பிரானையே' என்கிற ஏவகாரத்தால் ஈஶ்வரனையே உபாயமாக ஆழ்வார் சரண மடைந்தாரென்றும், 'அடிமை செய்வார் திருமாலுக்கே' என்றத்தால் இருவருமான சேர்த்தியிலே கைங்கர்யம் ப்ராப்தம் என்று 'த்வயத்தின்' அர்த்தம் ப்ரகாசிக்கிறது. இத்தால் பிராட்டிக்கு உபாயத்வமில்லையென்றூவித்தம்.

## 7 ஸூத்திரம்.

அபிபவம்-தடை, அப்ரகாசம். இப்படியிருக்கையாலே-மோக்ஷிக்கு ஸ்வரூப நிரூபகையாயிருக்கையாலே. அல்லாதார்-பூமிநீளாதேவி முதலானவர்கள். அவ்யவதானே உண்டான ஸம்பந்தம்-நித்யஸம்பந்தம், ஸாக்ஷாத் ஸம்பந்தம். நிஷ்பன்னமான-உண்டான. கர்மணி வ்யுத்பத்தியில் ச்ரீயதே என்று ரூபம், அதற்கு, சேவிக்கப்படுகிறாள் என்று அர்த்தம். கர்த்தரி வ்யுத்பத்தியில் ச்ரயதே என்று ரூபம், அதற்கு சேவிக்கிறாள். நிறுத்து— திராசு நிறையாக இவ்வளவென்று கணக்கிட்டு. அறுத்து-இப்போது அநுபாவ்யம் இவ்வளவென்று பாகம் செய்து. நீத்துமவள்—புஜிப்பிக்குமவள். மதுப்பிலே-ஸ்வரூபத்தினுடைய நித்ய யோகத்தையும், திருமார்பில் நித்திய யோகத்தைச் சொல்லுகிறதாகையாலும் ஸ்ரீராமாயணத்தில் அவதாரத்தில் பிரிவு சொல்லுகிறதாகையாலும் விரோதமில்லை.

எம்பெருமானுக்கும் ஆத்மாவுக்கும் ப்ராப்தி அவிநாபூதமாயிருக்க, புருஷகாரம் வேண்டுவானென்னென்னில்; இருக்கிற ஸம்ஸாரமும் எடுத்தவுடம்பும் இந்த ப்ராப்திக்கு இடைச்சுவரான அந்ய சேஷத்வ ஸ்வஸ்வாதந்த்ரிய தேஹாபிமாநாதிகளை விளைப்பித்துத் தன்னை மறந்து உருமாயப் பண்ணுமதாகையாலே ஸாபராதனை தன்படியையும், அபராதத்தை யறிகைக்கு ஸர்வஜ்ஞனுமாய். அறிந்தபடி அநுபவிப்பைக்கு ஸர்வ சக்தியுமாய்த் தான் ஸ்வதந்த்ரனுமாயிருக்கையாலே இவன் அபராதத்தைக் கண்டழியச் செய்யாமைக்குப் புருஷகாரம் வேணும்.

மாணிக்கமாலை.

## 8 ஸூத்திரம்.

தத்குண ஸாரத்வத்தாலே-அந்த க்ருபாகுணத்தை ஸ்வரூப நிரூபக தர்மமாக உடைத்தாகையாலே. பரம க்ருபை-புருஷகாரம் வேண்டாமல் எப்போதும் தலையெடுத்திருக்கும் க்ருபை. தர்ஜனம்-சாரீர வியாபாரத்தினால் வெருட்டுகை. பர்த்ஸநம்-வாக்கினால் வெருட்டுகை. சித்ரவதம்-உயிரைப்போக்காதபடி நானாவித ஹிம்சை பண்ணுகிறது. அருவித்தின்ன-பிராணனோடேயிருக்கையில் மாம்சத்தை அருத்து தின்பவர்கள். ஆர்த்ராபராதைகள்-அப்பொழுது பண்ணப்பட்ட குற்றங்களை யுடையவர்கள். திருவயிறு வாய்த்திருக்கிற-கர்பிணியாயிருக்கிற. முடிந்து பிழைக்கை-

ப்ராணனை விடுகிறதையே பிழைக்கையாலுண்டாகும் சந்தோஷத்தை யடைகிறது. தேட்டமாயிருக்க-வேண்டியதாயிருக்க. பூடாற்றி-பொருத்து. பிராட்டி ப்ராணனை நோக்கிக்கொண்டதற்கு மூன்று காரணம்:— பிராணனைவிட்டால் அபராதம் த்ருடமாய் விடும். அல்லது, 'வல்வினையேன் பெண் பிறந்தேன்' என்கிறபடி ப்ராணனை விட தனக்கு ஸ்வதந்தரமில்லை. அல்லது, ரகுவம்சம் ஸந்ததியில்லாமல் நசித்துப்போம். ப்ரத்யயம்-சுத்தி. பரிஷத்-திரள். தனக்கேற-ஆத்ம ஸாக்ஷியாக. ஸ்வாகதம்-வரவை விரும்புதல்.

## 9 ஸூத்திரம்

விக்ருதராய்-பயந்து. அநுஸாரத்தாலே—நல்வார்த்தையாலே.

## 10 ஸூத்திரம்.

ப்ராகரணிகமான வர்த்தம்-இந்த ப்ரகரணத்தில் ப்ரதிபாதிக்கவேண்டும் அர்த்தம். ஶ்ரு என்கிற தாதுவால் ஹிம்ஸாயாம்' என்று அர்த்தம். இத்தால் சேதனனுடைய அபராதங்களை போக்குகிறாள். ஶ்ரு என்கிற தாதுவால் விஸ்தாரே என்று அர்த்தம். இத்தால் எம்பெருமானுடைய குணங்களை விஸ்தாரப்படுத்துகிறாள்.

## 11 ஸூத்திரம்.

குட நீர் வழித்தாலும்-ஸம்பந்தத்தை யறுக்கைக்காக நீர் நிறைந்த குடத்தை யுடைக்கையாலும். கண்ணழிவு-ப்ரதிபந்தகம். கால்பாவி நின்று-கால் ஊன்றி நின்று.

## 13 ஸூத்திரம்.

அபிஸந்தி-எண்ணம். ராவணனை அருளாலே திருத்தா தொழிந்தது, தேவதைகளுக்கு ராவணவத ப்ரதிஜ்ஞை பண்ணினபடியாலே, பெருமாள் அபிப்ராயத்தைப் பின்பற்றி நின்றாள். ஆனால் "மித்ர மௌபயிகம் கர்த்தும்" இத்யாதியால் உபதேசிப்பானென்னென்னில்; பிறர் அனர்த்தம் கண்டால் ஸர்வஜ்ஞையாயிருந்தாலும் அடிமண்டியோடே கலங்கும் சீலத்தையுடையவளாகையாலே ஒரு நாடடங்க அனர்த்தப்படுகிற படியைக்கண்டு "அந்யத் உபக்ராந்தம் அந்யத் ஆபதிதம்" என்னுப்போலே தன்னை மறந்து உபதேசித்தாளித்தனை.

## 14 ஸூத்திரம்.

அஸ்தானே ஸ்நேஹம்-அநுசித ஸ்நேஹம். லிங்கத்வம்-ஸ்வரூப

நிரூபகத்வம். உபய லிங்கத்வம்:— அகிலஹேய ப்ரத்யநீகத்வம், ஸமஸ்த கல்யாண குணத்மகத்வம். ஆய்வியாக்யானத்தில் "(உபா யோபேயத்வே ததிஹ தவ தத்த்வம் ந து குணௌ) என்று உபே யத்வம்போலே உபாயத்வமும் ஸ்வதஸ்ஸித்தமாய் தத்கர்த்யமும் ஸ்வக்ருத்யமாயிருந்ததேயாகிலும், உபாயாந்தரங்களுபாயமாக தா னுபேயமானுப்போலன்றியே, கருமுகைமாலையை சும்மாடாக்கு வாரைப்போலே, சயலறுதியாலே உபேயமானதானேயுபாயமாய், ஆகந்துக தத்க்ருத்யமும் செய்யவேண்டினமையைப்பற்ற ஏறிட் டுக்கொண்டானென்னலாமிறே" என்றத்தை யுட்கொண்டு "அன் றிக்கே உபேயமானதன்னை......என்பாருமுண்டு" என்று அரு ளிச்செய்தது. ஸ்வக்ருத்யம்-ப்ரார்த்தித்தவனை ரக்ஷிக்கை.

## 15 ஸூத்திரம்.

தந்த்ரேண-சேர்த்து. பச்சை-உபஹாரம். சுவடு-கோமூத்ராதி கள். கடை—வால்புரம்: யோனிப்ரதேசம். வழம்பு-ஹேயமான த்ரவ திரவ்யம்.

## 17 ஸூத்திரம்.

'நீசனேன்' என்று தோஷமும், 'நிறைவொன்று மிலேன்' என்று குணஹாநியும், 'எங்கண்பாசம் வைத்த' என்று இவையே ஹேது வாக தம்மை யங்கீகரித்ததென்று ஆழ்வார் தம்மை அநுஸந்தித் தார். 'அமர்யாத:' என்று குணஹானியையும், 'க்ஷுத்ர:' என்று தொடங்கி தோஷத்தையும் ஆளவந்தார் அருளிச்செய்தார்.

## 19 ஸூத்திரம்.

குணப்ரதை-குணதிக்கியம். பஸ்வாலம்பநத்தில்-யாகத்தில் பண் ணும் பசு ஹிம்சையில், அநுவதித்துக்கொண்டு-தானே சங்கித்துக் கொண்டு. அநுவாதம்-ஒருவன் சொன்னத்தை மற்றொருவன் பிறரறியச்சொல்லுகை. (இது ஶப்தாநுவாதமென்றும் அர்த்தா நுவாதமென்றும் இரண்டுவிதம். ஶப்தாநுவாதமாவது-ஒருவன் சொன்ன ஶப்தாநுபூர்வியையே சொல்லுகை. அர்த்தாநுவாத மாவது-ஶப்தாந்தரங்களைக் கொண்டு ஒருவன் சொன்ன வார்த் தையைச் சொல்லுகை.)

## 20 ஸூத்திரம்.

பந்து ஸ்நேஹாதிகள் மூன்றும் ஸ்வவர்ணதோஷம். த்ரௌபதீ பரியவம் கண்டிருந்தது ஸ்வரூபதோஷம், அது ப்ராயச்சித்தவி நாஶ்யம், இது அவிநாஶ்யம், அது ஸ்தூல தர்ஶிகள் காணும்

தோஷம், இது ஸூக்ஷ்மதர்ஸிகள் காணும் தோஷம். ஆகையா லிதுவே ப்ரதாநதோஷம்.

ஆய் வ்யாக்யானம்

21 ஸூத்திரம்.

ப்ரகடிதமாயிற்று-ப்ரவிஷ்டமாயிற்று.

22 ஸூத்திரம்.

அறியாதவர்த்தங்களிலே வாத்ஸல்யாதிகள் ஸூசிதமானபடி:— விஸ்வரூபத்தை காட்டுகையாலே ஸ்வாமித்வமும், தத்வவிவேகம் சொல்லுகிறவிடத்தில், ஸௌலப்யமும் சொல்லிற்று.

23 ஸூத்திரம்.

ஸாத்குண்யம்-உத்கர்ஷம். வைகுண்யம்-அபகர்ஷம்.

24 ஸூத்திரம்.

விஷய நியமமேயுள்ளது :— அதாவது ஸுலபவஸ்துவே தனக்கு விஷயமாக வாவது. ஶாஸ்த்ரவிதி கர்மத்திற்கு ப்ரேரகம். ராகம், கைங்கரியத்துக்கு ப்ரேரகம். கர்மத்திற்கு விஷயம் தேவதாந்தர் யாமியாய் நின்றவிடம், கைங்கர்யத்துக்கு விஷயம் அர்ச்சாவதாரம்.

25 ஸூத்திரம்.

அபிஹிதங்களான—சொல்லப்பட்டதான. பூர்வாஹ்நமாவது-உதய காலம். அபராஹ்நமாவது-அந்திப்போது. க்ருஹமேதீ-இல்லறத் தில் உள்ளவன். உபலக்ஷணம்-ஸூசிதம், அடையாளம்.

27 ஸூத்திரம்.

சுழுவளிக்காற்று-சுழல்காற்று. தளமாக-க்ஷேத்ரமாக.

31 ஸூத்திரம்.

ப்ராங்முகமாய்—கிழக்கு முகமாய்.

32 ஸூத்திரம்.

உத்தம வர்ணரான ப்ராஹ்மணரைப்பற்ற ஒருபடி தாழ்ந்த க்ஷத்ரியரான தர்மபுத்திராதிகளும், மந்த்ராதிகாரமற்ற த்ரௌ பதியும், ஶாஸ்த்ர வஶ்ய ஜந்மமன்றியே ப்ரதிகூலனான காகாஸுர னும், தம:ப்ரசுர ஜந்மமான காளியனும், திர்யக் ஜந்மாவாய் அநு கூலனான ஸ்ரீ கஜேந்த்ராழ்வானும், ராஜஸ ஜந்மாவாய் ப்ரதிகூல ஸம்பந்தமுமுடைய ஸ்ரீ விபீஷணாழ்வானும், ஸ்வரூபக பாதந்த்ர

வஸ்துவைத்தேடிப் பின் செல்லும் ஸ்வதந்த்ர ஶரண்யரான பெருமாளும், நிரூபித ஸ்வதந்த்ர வஸ்துவைப் பின்சொல்லும் பாரதந்த்ரரான இளைய பெருமாளும், சரணம் புகுருகையால் அதிகாரிநியதியில்லை.

ஆய்படி.

காதலாமலகம்போல்-உள்ளங்கை நெல்லிக்கனிபோல் 'ஆறெனக்கு......தாய்' ஆறு-வழி, உபாயம். சாணுக-க்ராஹமாக-ப்ராப்ய ப்ராபகமென்றபடி. ஸமுச்சயிக்கிறது-சேர்த்துச்சொல்லுகிறது.

33 ஸூத்திரம்.

இவ்விடத்தில் அநுஸந்தேயமாவது— கூரத்தாழ்வான் ஸ்ரீபாதத்தில் முதலியாண்டான் தண்டம் ஸமர்ப்பித்து விண்ணப்பம் செய்தபடி:—ஸ்ரீவிபீஷணாழ்வான் ஸ்வயார்த்தியோ, அநந்யப்ரயோஜநரோ, என்ன, ஆழ்வான் அருளிச்செய்தபடி:–விபீஷணாழ்வான் அநந்ய ப்ரயோஜநரென்ன ; அதெங்ஙனே யென்ன ; அஸ்மதாதிகள் ப்ரபந்நராயிருக்கச்செய்தே இவ்விடத்திலே ஶரீராவஸாநத்தளவும் ஸ்த்ரீ யந்ந பாநாதிகளோடேயிருக்கிறுப்போலே ஸ்ரீவிபீஷணாழ்வானும் அநந்ய ப்ரயோஜநர். அதிகாரா வஸாநத்தளவும் அநந்ய ப்ரயோஜநராயே யெழுந்தருளியிருப்பரென்ன ; ஐஶ்வர்யமநுபவியா நிற்க அநந்ய ப்ரயோஜநனனபடி யென்னென்ன; ஸ்ரீ விபீஷணாழ்வான் 'ஸர்வ ஸங்க பரித்யாகம் பண்ணி வந்தவர் தலையிலே முடியை வைத்து ராஜ்யாபிஷேகம் பண்ணி, "மின்னிலங்கு பூண் விபீடண நம்பிக்கு என்னிலங்கு நாமத்தளவுமரசென்ற மின்னலங்காரர்" என்று பெரியாழ்வாரருளிச்செய்தருளினர். அவாந்தர பலமான ஐஶ்வர்யம் புஜிக்கும்படி சக்ரவர்த்தித் திருமகன் நியமித்து வைத்தாராகையாலே, அவாந்தரபலம் புஜிக்கக் குறையில்லை காணுமென்று அருளிச்செய்தார்.

உடையவர் வார்த்தாமாலை.

39 ஸூத்திரம்.

நாடிழியாநிற்கு மேல் நீலமாகிற நீணிலா முற்றத்திலே யினியசந்தனகுஸுமதாம்பூலாதிகளாலே அலங்கரித்து சத்ர சாமராதிகள் பணிமாற அத்தேசவாஸிகளுக்கு முகம்கொடுத்து திரிபுவன சக்ரவர்த்தியென்று விருது பிடிக்குமாப்போலவும், பயிருலாநிற்க கடலிலே வர்ஷிக்கும் காளமேகம்போலவும், த்ருஷார்த்தன் நாக்குவற்றிச் சாவாநிற்க மத்ஸ்யத்திற்கு தண்ணீர் வார்க்கும் தார்மிகனைப்போலவும் பரத்வத்திலிருப்பு.

பரமோதாரனுயிருப்பானொரு தார்மிகன் ஒரு கிராமத்திற்கு கொடுத்த த்ரவ்யத்தை நாலு கிராமணிகள்வாங்கி விபஜித்துக்கொள்ளுமோபாதி க்ஷீரவ்யூகமான க்ஷீராப்தி.

குணஹீன ப்ரஜைகளைத்தள்ளி குணவான்களை கைக்கொள்ளும் பிதா வோபாதியும், மண்டலவர்ஷம் போலவும் அவதாராதிகள்.

நாம் அழிக்க நினைத்தாலும் அழியாதபடி நம்மையும் தன்னையும் நோக்கிக்கொண்டு, நாமாக நினைத்தவன்று அதுக்கான விடத்திலே முகம் காட்டியும், பித்தர்கழுத்திலே சுறுக்கிட்டுக்கொண்டால் பின்னே நின்று அறுத்துவிடும் மாதாவைப்போலவும், மதம்பட்ட யானை கொல்லப்புக்கால் அதின் கழுத்திலே இருந்த பாகன் அதன் செவியையிட்டு அதன் கண்ணை மறைக்குமாப்போலவும், இராமடம் ஊட்டுவாரைப்போலவும், உணரில் கையைக்கடிக்குமென்று உறக்கத்தில் பாலும் சோறும் புஜிப்பிக்கும் மாதாவைப் போலவும் அந்தர்யாமித்வம்.

ராஜ மஹிஷி தன் பர்த்தாவினுடைய பூம்படுக்கையிற் காட்டில் ப்ரஜையினுடைய தொட்டில் காற்கடை போக்கியமாக வந்து கிடக்குமாப்போலவும், கோயில் திருமலை பெருமாள் கோயில் துடக்கமான அர்ச்சா ஸ்தலங்கள்.

முத்துத் துறையிலே குடில் கட்டிக்கிடக்கிற கர்ஷகனைப்போலவும் க்ராமாதி தேவதைகளும் க்ரஹார்ச்சனையுமென்று திருக்குருகைப்பிள்ளான்பணிப்பர். ப்ரமேயரத்னம்.

ஆவரண ஜலம்-அண்டத்திற்கு புறம்பான ஜலம். அதி விப்ரக்ருஷ்டம்-அதிக தூரம். ப்ரத்யாஸந்நம்-சமீபம். பாஸ்சாத்யனனவனுக்கு-பிற்பட்டவனுக்கு.

## அர்ச்சாவதார வைபவம்.

அர்ச்சாவதாரமாவது:— எங்கும் வியாபித்து மறைந்திருக்கும் எம்பெருமான் சேதனர்கள் உய்யும்பொருட்டு, கோவில், க்ரஹம் முதலிய விடங்களில் ஸாந்நித்தியஞ்செய்தவராய், தன்னைத்தாழ யிட்டுக்கொண்டு அர்ச்சையாக எழுந்தருளியிருக்கும் இருப்பைச் சொல்லுவது. ஈஸ்வரன் பரமபதம் முதலிய விடங்களில் எப்படி ஸேவை ஸாதிக்கிருனே அவ்வண்ணம் கோவில் முதலிய விடங்களில் பூர்ணனுக ஸேவைஸாதிக்கிருன். பரத்வம்முதலிய நான்கு அவஸ்த்தைகளிலும் அர்ச்சாவதாரமே பூர்த்தியுள்ளதென்றும், சேதனர்களுடைய உஜ்ஜீவனத்திற்கு இதுவே முக்கியம் வேண்டி

யதென்று சொல்லப்படுகிறது. இது நான்கு விதமாயிருக்கும்:— ஸ்வயம்வ்யக்தம், தைவம், ஸைத்தம், மாநுஷம்.

(1) ஸ்வயம் வ்யக்தமாவது:— ஒருவருடைய ப்ரதிஷ்டையின்றிக்கே தானே ஆவிர்பவித்ததாக புராணாதிகளில் ப்ரஸித்தமான ஸ்ரீ ரெங்க விமானாதிகள்.

(2) தைவமாவது:— ப்ரஹ்மாதிகளினால் ப்ரதிஷ்ட்டிக்கப்பட்டு காஞ்சீ முதலான திவ்ய தேசங்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்கள்.

(3) ஸைத்தமாவது:— தபஸ்ஸித்தியடைந்த ருஷிகள் ப்ரதிஷ்டிப்பித்த திவ்ய தேசத்தெம்பெருமான்கள்.

(4) மாநுஷமாவது:— நவீன ஜனங்களினால் ப்ரதிஷ்டிக்கப்பட்டு க்ராமங்களிலும் க்ரஹங்களிலும் ஸேவை ஸாதிக்கும் எம்பெருமான்கள்.

இவர்களையே எல்லோரும் விரும்பியதற்குக்காரணம்:— ஆஶ்ரிதர்கள் உகந்தத்ரவ்யத்தை தனக்குதிருமேனியாகக்கொண்டு அதில் ஆவிர்பவித்தும், அவர்களிட்ட திருநாமத்தையே தனக்குப் பெயராகப்பெற்றும், அவர்களாதாத்துடனிடும் ஸ்நாந பானாதிகளையே தனக்கு ஆராதனமாகவும், அவர்கள் தெரிந்து செய்யும் உபசாரங்களில் ஆயிரம் கண்ணுடையவனாயும், அறியாமல் செய்யும் அபசாரங்களைக்காணக் கண்ணில்லாதவனாயும், அநாஶ்ரிதர்கள் விஷயத்தில் தன் திருமேனியின் ஸௌலப்யாதிகளைக்காட்டி ருசி பிறப்பித்து பக்தியைப் பெருக்கிப் பலபர்யந்தம் செய்யுமத்தாலே.

மோக்ஷத்தில் இச்சையுடையவன் அர்ச்சாவதாரமன்றி ஈஶ்வரனை வேறு அவதாரங்களில் அடையக்கூடுமோ என்றால் முடியாது; மோக்ஷத்திற்கு பக்தியோ, ப்ரபத்தியோ, உபாயமாகும் போது, அவைகளின் உற்பத்திக்கும் அனுபவத்திற்கும் அர்ச்சாவதாரம் அவசியம் வேண்டியது. எனெனில் பக்தி உபாயமாகுமிடத்தில் பக்திக்கு காரணம் ஜ்ஞானம், ஜ்ஞானத்திறகுகாரணம் ஸாக்ஷாத்காரம் இந்த ஸாக்ஷாத்காரம் ஒரு வஸ்துவைப்பற்றி வருவதாகையாலே, பக்திக்கு முதலில் ஸ்தூல ரூபத்தின் தர்ஶனம் அவசியம் வேணும். அப்படியே ப்ரபத்தி உபாயமாகுமிடத்தில்கண்டு பற்றுகைக்கு ஓர் ஆலம்பநம் வேணுமென்பது ஸித்தம். இத்தால் ஸ்தூல ரூபத்தைக்கொண்டே ஸூக்ஷ்மரூபத்தை யறியவேணும். எப்படி காற்றானது கண்ணுக்குப் புலப்படாமல் எங்கும் வியாபித்திருந்தாலும், மரம் இலை முதலியவைகளின் சலனத்தால் காற்

றின் இருப்பை அறிகிறோமோ, அப்படியே ஈச்வரன் எங்கும் வியாபித்து 'கட்கிலீ' என்று கண்ணுக்குத் தோற்றாதவனை அறியவேண்டுமானால் ஒரு ஸ்தூல ரூபத்தைக்கொண்டே அறியவேணும். ஆக எந்த விதத்திலும் ஸ்தூல ரூபமான ஓர் பற்றுக்கோடில்லாமல் ஜ்ஞானம் பற்றாதாகையால், அந்த ஜ்ஞானத்திற்கு விஷயம் அந்தந்த புருஷார்த்தத்திற்கு அநுரூபமான ரூபம் ஏற்படவேணும். அது அவரவர்கள் விதிவழி யடையத்தகுந்தது.

அர்ச்சாவதாரம் ப்ராப்திக்கு முக்கிய ஸாதனமாவதுடன், ஆஶ்ரிதர் இருக்கும் நாள் வரையில் "ஒன்று சொல்லி ஒருத்தினில் நிற்கிலாத ஓரைவர்வன் கயவரை" என்றும், 'குலமுத லடுந்தீவினைக் கொடுவன் குழியினில் வீழ்க்குமைவரை' என்றும், 'அறந்திறம்பிப் பாதகரோரைவர்' என்று மனத்தினால் நினைக்கவும் வாயினால்ப் பேசவும் கூசும்படியான இவ்வைம்புலன்கள் திருந்துவதற்கு விஷயமாயிருக்கிறது. ஆலயங்களை ப்ரதட்சணம் செய்வதாலும், வேத கீதங்களைக் கேட்பதாலும், அவன்திருநாமங்களை வாயாரப் போற்றுவதாலும், அவனுடைய ஸௌந்தரியாதிகளை கண் குளிரக் காண்பதாலும், ஸர்வகந்தமயனுடைய மணத்தாலும் இக்கொடிய பஞ்சேந்திரியங்கள் சமதமமடையும். இப்படி இது சமதமாதிகளை யடையச்செய்வது மாத்திரமல்லாமல், 'போவதரிதானாலும் போய் தொழுவோம்' என்று பெரியோர்கள் மங்களாஶாஸன பரராய் எப்போதும் திவ்ய தேசங்களுக்கு எழுந்தருளுகிறபடியால் அவர்களுடைய ஸேவையாலும் ஸல்லாபத்தாலும் அபிமானத்தாலும்,ஶாஸ்த்ரங்களால் திருத்தவொண்ணாதவர்களும், திருந்துவதற்கு கண்ணழிவற்ற ஸாதநமாயிருக்கிறது.

ஈச்வரன் தன்னாலும் சொல்லி முடியாதென்ற இவ்வர்ச்சாவதார வைபவத்தை இல்லை செய்வாரும், அலட்சியம் செய்வாருமாயுளர் சிலர்.

சிறு பிள்ளைகள் விளையாடும் பொம்மைகள் போலுள்ள விக்ரகங்களிடத்தில் விச்வாசம் எப்படி பிறக்கக்கூடுமென்று ஐயப்படுகிறார்கள் பலர். அதற்கு சமாதானம்:— ரூபங்கள் ஒத்திருந்தாலும் ஸ்தான பேதத்தால் பாவங்கள் வித்யாஸப்படும் என்பதை, மனவியினிடத்திலுண்டான மையல் அதே ரூபமான மாதாவினிடத்திலுண்டாகாமையைக் கொண்டறியலாம். இன்னமும், தன்னிடத்தில் அடிமை செய்வான் ஒருவன் ஒரு கால விஶேஷத்தால், "பட்டத்திற்குரிய யானையும் அரசும் போலே" அபிஷேகம் சூடினால், முன்பு அவனிடத்திலிருந்த அநாதரம் அகன்று, ஆத

ரம் பெருகி, பீதியும் பக்தியும் பிறக்கும்போது, ஒரு காலத்தில் லீலோபகரணங்களாயிருந்து, அவைகளே ஆலயங்களில் அர்ச்சாவஸ்த்தை யடைந்தால், ஆராதனம் கொள்ளுவதில் ஐயுறவென். இவைகளின் ஆராதனத்திற்கு ஆதாரம் அவைகளின் சக்தியே. ஆகமாதிகளில் விதித்தபடி விக்ரகங்களை வேதோக்தமான மந்த்ரங்களைக்கொண்டு கோவில்களில் ப்ராண ப்ரதிஷ்டை செய்வார்கள். இப்படிச் செய்வதால் பூதசக்தி, லோகசக்தி, ஜீவசக்தி, மானிடசக்தி முதலியவைகள் அந்த விக்ரஹத்தில் சேர்க்கப்படும். அதனல் ப்ராணஶக்தி யுண்டாகிறது. அதன்பின் ஆராதனத்திற்ஹேதுவாகிறது. இவ்விதமான விக்ரஹத்திற்கும் ப்ராணனில்லா மற்ற பிம்பத்திற்கும் பேதம் போதித்தல் வேணுமோ! மந்தாத்திற்குள்ள ஶக்தியை, ப்ரத்யக்ஷத்தில் விஷக்கல்லிடத்தில் காணும்போது, இதனிடத்திலும் காணலாம். ஆனல் சக்தியும் ஸௌந்தரியமும் அதிசயமாகயிருந்தால், சேவிப்பவர்களுடைய பாவம் பலவிதமாக விருப்பானேன்? சிலர் ஸந்நிதிக்குப் போவதில்லை. போனலும் சிலர் கூட்டத்திற்கும் புழுக்கத்திற்கும் பயந்து உடனே திரும்புகிருர்கள். சற்று நேரமிருந்தாலும் அபிமத விஷயத்தைக் கண்டால் பெருமாளை மறந்துவிடுகிருர்கள் சிலர். இவைகளுக்குக் காரணம் ஸௌந்தரியாதிகளாலுண்டான குறையாலல்ல. ஸேவிக்கிறவர்களுடைய தோஷத்தால் ஏற்பட்டது. எனெனில்; அவனுடைய ஆயுதங்கள் ஏக காலத்தில் ஒருவனுக்கு ஆபரணஸ்தானமாயும் அவைகளே மற்றவனுக்கு ஆயுத ஸ்தானமாகும்போது, இவர்கள் பாவ பந்தம், கர்மானு ரூபமாக வேறுபட்டேயிருக்கும். எங்ஙனேவென்னில்; "வாழ்குமரன் மேற்கனக வஞ்சன் மேலோர் முகத்தே—சூழ் கருணையும் முனிவுந் தோன்றியவால்" என்கிற ப்ரமாணத்தால் அழகிய சிங்கர் ஒரே ரூபத்தை ப்ரஹ்லாதாழ்வானுக்கு க்ருபா ரூபமாகவும், அதே க்ஷணத்தில் ஹிரண்யனுக்கு கோரரூபமாகவும் தோற்றிவித்தாரென்ருல், அது அவரவர்களுடைய குண தோஷங்களால் வந்ததித்தனையல்லது, அவன் வேறு வேறு முகமாய் ஸேவை ஸாதித்தான் என்று சொல்லவொண்ணுது. இன்னமும் இவ்விடத்தில் நம்மாழ்வார் ஆராவமுதே! என்று ஆழங்கால் பட்டு கரைந்து நைந்தார். நம்மனம் அப்படிக்கரையாமல் கல் நெஞ்சாயிருப்பதற்குக் காரணம், அஜ்ஞானமேயாகும். மலையடியில் மாடுமேய்த்த ஒருவன் ஒரு சிவப்பு கல்லைக் கண்டெடுத்து, மற்ற பிள்ளைகளுடன் அதைக்கொண்டு கோலிவிளையாட்டு ஆடிவந்தான். அத்தை, ஒருவியாபாரி கண்டு அவனிடத்தில் சில தின்பண்டங்களைக் கொடுத்து திராசு படிக்கல்

கள் ஸ்தானத்தில் உபயோகித்து வந்தான். இத்தைக்கண்ட ஒரு பணக்காரன் சில திரவ்யங்களைக்கொடுத்து தன் நாயின் கழுத்தில் அத்தைக் கட்டி தொங்கவிட்டான். இவ்வண்ணம் அதிக விலைபெற்றுமாறிக்கொண்டிருக்கையில்தேசாந்தரத்திலிருந்துவந்த ஒரு வியாபாரி அதைஆயிரம் பொன் கொடுத்து ஸந்தோஷத்தோடுபெற்றுப்போனுன் என்கிற கதை நடந்திராதென்பதில்லை. இரத்தினபரீக்ஷையறிந்தவனுக்கு மேலான இரத்தனமாக தோற்றிற்று. அந்த ஜ்ஞானமில்லாதவனுக்கு வெறும் கல்லாகத் தோற்றி அநாதரத்துக்குக் காரணமாயிற்று. அப்படியே நமக்கும் ஆழ்வார்களுக்குமுண்டான ஈச்வரஜ்ஞானம். ஸ்ரீ ஆளவந்தாருக்கு மணற்கால் நம்பியும், பிள்ளையுறங்காவல்லி தாசருக்கு எம்பெருமானரும் காட்டிக்கொடுத்தாப்போல் நம்மாசார்யர்கள் காட்டினுல் மாத்திரம் நாமும் "கண்ணாரக்கண்டு கழிவதோர் காதலுற்றார்க்குமுண்டோ கண்கள் துஞ்சுதலே" என்கிறபடியே ஸதாஸேவித்துக் கொண்டிருக்கலாம்.

மற்றும் சிலர், ஸர்வத்திலும் வஸிக்கும்படியான வாஸுதேவனை ஒரு குறிப்பிட்ட விடத்தில் வணங்குவது வீண், என்று வாதிக்கிறார்கள். அவர்கள் சொல்லும் தத்வம் உண்மையானுலும் ருஷிகளுக்குத் தவிர மற்றவர்களுக்குப் பயன்படாது. இவர்களுக்கு இந்த வியாப்தியினிடத்தில் ஈஶ்வரனுடைய தோற்றம் வெளிப்படையானுல், இவர்கள் அடியிட்டு எங்கும் ஸஞ்சரிக்க மாட்டார்கள். ஆகையால் இவர்கள் வார்த்தைகள் வெறும்வாதமே.

பசுவின் மடியில் பால் எங்கும் சுரந்திருந்தாலும் அதனுடைய முலைக்காம்புவழியல்லாமல் வேறு துவாரங்களால் கன்றுக்கு பால் கொடாதாப் போல், ஈஶ்வரன் வியாப்தி நிறைந்திருந்தாலும், விக்ரஹத்தின் வழியல்லது வேறு இடங்களில் பிரகாசியான்.

அன்றியும் ஸூரிய கிரணங்கள் எங்கும் வியாபித்திருந்தாலும், அவைகளினுடைய நெருப்புக்கு ஸமானமான உஷ்ணம், ஸூரியகாந்தக்கல் வழியாய் ப்ரகாசிப்பதல்லாமல், மற்றப் பாஷாணங்களில் தோற்றாதாப்போல், அர்ச்சா விக்ரஹத்தில் தான் அவனுடைய சக்தியைக் காணலாம். ஆகையால், அர்ச்சையில் அவனுடைய ஸாந்நித்யம் தயிரில் நெய் போல் விளங்கும் அந்தர்யாமியில் பாலில் நெய்போல் விளங்காது.

விக்ரஹாராதனம் முக்திக்கு அவசியம் வேணுமென்பதை மற்றுமோர் அநுபவ நிதர்சனத்தால் காணலாம். அநேகர் தங்கள் திருமாளிகைகளில் பெற்றோர், பெரியோர் மற்றும் சிலருடைய

பாவ படங்களை வைத்திருப்பதை காணலாம். இவைகளைப் பார்க்கும்போதெல்லாம் பாவனு ப்ரகர்ஷத்தாலே ஜீவனுடனிருப்பதாகத் தோற்றுவதுண்டு. அப்போது அவர்கள் குணங்கள் செய்கைகள் மனதில் பதிந்து பயனடைவதுண்டு. அப்படியே அர்ச்சாவதாரமும். இவ்விதமான சின்னங்களில்லாதபோது அஜ்ஞராகிய நாம், காலக்கிரமத்தில் அவர்கள் ரூபத்தை மறப்பதுபோல் அவனுடைய ஸ்வரூப ரூபகுண சேஷ்டிதங்களில் மறதியுண்டாய் மறப்பிலியையும் மறந்து மறம் சுமத்தி நாஸ்திகனுய் நமன் கையில் சிக்கி நசித்தலே பலமாகும்.

### 40 ஸூத்திரம்.

பராமர்சிக்கிறார்—சொல்லுகிறார். சிலம்பு-காற்சிலம்பு நூபுரம். புலம்-ஐம்புலன். சுரிகுழல்-முறுக்கோடின அளகம். போதரே என்று-வாரும் என்று.

### 41 ஸூத்திரம்.

ப்ரபதன ஹேது-ப்ரபத்திக்கு ஹேது.

### 44 ஸூத்திரம்.

அநுஸந்தானபராமக்கி-நைச்யாநுஸ்தாநபரமாக்கி.

### 48 ஸூத்திரம்.

கண்ணழிவு, பலவிளம்பம் இல்லாமையாலே அதுவே முக்யம்.

### 49 ஸூத்திரம்.

"ஜிதந்தையாவது-ருக்வேத கிலம், தத்வப்ரதிபாதன பரமான ஸ்ரீபுருஷஸூக்தம் ஸர்வஸ்ருதிகளிலு மோதிப்போருமாப்போலே இதுவும் ஸ்ரீ பாஸ்த்திரத்திலும் இதிஹாஸ புராணங்களிலும், "மஹா மந்தரம்." என்று திருமந்தரத்தோபாதி பரம ரகசியமாகச் சொல்லிப் போருமதொன்று. வேதாக்ஷர ராஸியாகில் பௌருஷேயமான இதி ஹாஸ புராணங்களிலே எழுதிப் படித்துப் போருவானென்னென்னில் ;— கிலமாகிறது-அப்ராஹதம் ஸ்தானம், ஸூத்ரக்காரர்கள் கில ஸஹிதமாக தாங்களத்யநம் பண்ணிப்போந்தவர்களாகையாலே, ஸ்மார்த்த விதானங்களிலே மந்த்ரமாக விநியோகித்துப் போரானின்றார்களிறே. இப்படி இதிஹாஸ புராணங்களிலே ஸ்ரீ பாஸ்த்திரத்திலே "ஜிதந்த இதி மந்த்ரேண" என்று மந்த்ரமாக விநியோகித்துப் போருவதொன்று.

ப்வேதத்வீபவாசிகள் க்ஷீராப்தி நாதனுடைய ஸௌந்தரியாதி

களிலே தோற்றீடுபட்டுச் சொல்லும் மந்த்ரம், இதுக்கு ஸ்த்தோத்ரத்வமும், ஸ்தவப்ரியனுக்கு ப்ரியதமமாகை"

ஜிதந்தா ஸ்தோத்ர வ்யாக்யான அவதாரிகை.

இந்த ஸூத்திரத்தாலறியத்தக்கதாவது:—

ஸ்ரீசௌநக பகவான் ஜிதந்தா ஸ்தோத்ரத்தின் கருத்தை "அஜ்ஞ-ஸர்வஜ்ஞ-பக்தாநாம் கதிர்கய்யோபவேத்ஹரி:" என்கிற ஶ்லோகத்தால் வெளியிட்டார். அத்தையே பட்டர் "அவித்யாத:" என்கிற ஶ்லோகத்தால் தெளிவாக எடுத்துக்காட்டியும், சௌநக முனிவர் இப்படி யருளிச்செய்வதே! என்றும் கொண்டாடினர். பிறகு ஜிதந்தா ஸ்தோத்திரத்தின் வ்யாக்யான பீடிகையில் "அவித்யாத:" என்கிற ஶ்லோகத்தை அருளிச்செய்து; "ப்ரபத்திக்கதிகாரிகள்.....வ்யாக்யானம் பண்ணப் பெறுவதே!" என்று பட்டரை விசேஷித்து ஆச்சான் பிள்ளை ஈடுபட்டதை ஸ்வாமி மணவாள மாமுனிகள் திருவாய் மலர்ந்தருளினர்.

52 ஸூத்திரம்.

மடலெடுக்கை—மடலூர்தல், அதிப்ரவர்த்திபண்ணுதல்.

53 ஸூத்திரம்.

தீங்குழல்-மதுரமான குழல். ஈரும்—ஹிம்ஸியா நின்றது. ஆலே-ஆச்சரியம். பராஜித-ஜெயிக்கப்பட்ட, தோற்றுப்போன.

54 ஸூத்திரம்.

ஸத்தாகாரணபூதனாய்-ஆத்மாதாரபூதனாய்.

55 ஸூத்திரம்.

"பற்றிற்றெல்லாம்பற்றி அவனையும் பற்றுகை பக்தி. விடுவதெல்லாம் விட்டுத் தன்னையும் விடுகை ப்ரபத்தி.

வார்த்தாமாலை.

ஆபாதப்ரதீதி—பெரும்பார்வை. அதாவது ப்ரமாணங்களைக் கொண்டறியாமல் இந்திரியங்களைக் கொண்டு மேலெழுந்தவாரியாய் அறியும் ஜ்ஞானம். அநத்யாஹாரேண-இல்லாதத்தை ஏறிட்டுக்கொண்டு.

இவ்விடத்தில், பிராட்டியைக்கூட உபாயமாகப் பொருத வித்தோபயம் சேதனனுடைய ப்ரவ்ருத்தியை எங்ஙனே ஸஹிக்கும் என்று கண்டுகொள்வது.

57 ஸூத்திரம்.

அவகாத ஸ்வேதம்-நெல் முதலியவற்றை குத்துவதினால், உண்டாகும் வேர்வை. தனக்காக ஓர் ப்ரயத்னமின்றிக்கே, மற்றொன்றைச் செய்யவே அதினாலே அவசமாக உண்டான வேர்வை. அவகாதம்-நெல் முதலானவை குத்துகை. ஸ்வேதம்-வேர்வை— இங்கு அவகாதாநந்தரம் அவசமாக உண்டான ஸ்வேதம் போலே ப்ரபதநாநந்தரம் ஆநுகூல்ய ஸங்கல்பாதிகள் தன்னடையே உண்டாகுமென்று அங்குத்தைக்கு இதை திருஷ்டாந்தமாகச்சொல்லுகிறது. இவ்விடத்தில் சில அபிப்ராயபேதங்களுண்டு; அதாவது— ஸித்தோபாயத்தை வரிக்கும்போது அங்கத்தோடு அநுஷ்டிக்கவேண்டுமென்று சிலர் சொல்லுவார்கள். இந்த அங்கமாவது "ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப:" இத்யாதியாக ஆறு வகையாயிருக்கும். இந்த அங்கத்தில் சொல்லும்படியான அநுஷ்டானங்கள் எல்லா அதிகாரிகளுக்கும் அவசியம் வேண்டியதாயிருந்தபோதிலும், அது எந்த ஸமயத்தில் வேண்டியது என்று அறிவதில் தான், அபிப்ராய பேதங்கள் ஏற்பட்டது. பரந்யாசத்திற்கு பூர்வம், கீழ் அங்கமாகச்சொன்ன ஆறும் அநுஷ்டிக்க வேண்டியதென்றும், ந்யாசத்திற்கு பிறகு இந்த ஆறு அநுஷ்டானங்களும் தன்னடையே ஸித்திக்குமென்றுஞ் சொல்லுவதுதான் அபிப்ராய பேதங்கள். "ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப:" இத்யாதி ப்ரமாணத்தைப் பார்த்தால் ப்ரபத்திக்கு முந்தி அங்கங்கள் அநுஷ்டேயமென்று ஏற்படுகிறது. நம்முடைய ஸித்தாந்தத்தில் ப்ரபத்திக்கு ஆகிஞ்சன்யமும் அநன்யகதித்வமும் லக்ஷணமாக விதித்திருக்கிறது. அப்போது ப்ரபத்திக்குப் பூர்வம் சொல்லுகிற ஆறு அங்கங்கள் பொருந்தாது. பொருந்தினாலும் அது ஆர்த்தரூப ப்ரபன்னனுக்குக் கூடும். திருப்தரூப ப்ரபன்னனுக்கு, அவகாத ஸ்வேதம்போல் ப்ரபத்திக்கு அனந்தரம் தன்னடையே விளையும், உபாயாந்தரங்களுக்கு எப்படி அங்கத்தை அவசியம் அநுஷ்டிக்கவேண்டியதோ அப்படியே ப்ரபத்திக்கு அங்கத்யாகம் அவசியம் வேண்டியது. ஏனெனில் பக்தியாதிகள் தன் ஸ்வரூப ஸித்திக்கும், விருத்திக்கும் பலத்திற்கும், ஒருவன் கையை யெதிர்பார்க்கவேண்டியதாயிருக்கிறது. அவை அசேதனமாகையாலே. இது அதற்கு எதிர்த் தட்டாயிருக்கிறபடியால் அங்கங்கள் நிஷ்ப்ரயோஜனத்தோடு கால்கட்டாய்விடும். ஆகையால் "உபாயம் தன்னைப்பொறுக்கும்" என்பதே சாஸ்த்திர ஸித்தம்.

61 ஸூத்திரம்.

இவ்விடத்தில் ஆச்சான்பிள்ளை வார்த்தை அநுஸந்தேயம். அதாவது— "ஒரு ஸ்ரீவைஷ்ணவர், விடுகை உபாயமோ பற்றுகை உபாயமோவென்று கேட்க; விடுகையுமுபாயமன்று பற்றுகையும் உபாயமன்று, விடுவித்துப் பற்றுவிக்கிறவனே உபாயம் என்றருளிச்செய்தார்.

வார்த்தாமாலை.

63 ஸூத்திரம்.

இவ்வளவன்றிக்கே-ஆத்ம ஜ்ஞாநாதிகளொழிய யென்றபடி.

64 ஸூத்திரம்.

த்யோதகம்-ஸூசகம்.

அதிகாரி விசேஷணம்-அதிகாரி ஸ்வரூபம். இதினுடைய-அநுமதியினுடைய.

66 ஸூத்திரம்.

இவ்விடத்தில் சோமாசியாண்டான் வார்த்தை அநுஸந்தேயம்:- "பகவத் ப்ரவ்ருத்தி விரோதி ஸ்வப்ரவ்ருத்தி, நிவர்த்தி: ப்ரபத்தி:. பக்தியுமுபாயமன்று ப்ரபத்தியுமுபாயமன்று, ப்ரபத்தவ்யனே உபாயம்."

அவன் க்ருபையே உபாயம் என்னுமத்தை வெளியிடுகிறார்.

வடியாத பவக்கடலும் வடிந்து மூலமாயை கடந்தப்பாற்போய் வைகுந்தஞ்சேர்ந்து, அடியார்கள் குழாங்கூடியுனதடிக் கீழடிமை செயு மக்கால மெக்காலந்தான், கொடியாடு மணிமாட வயோத்தி மூதூர் குடிதுறந்து திருவரங்கங் கோயில் கொண்ட, நெடியோனே யடியேனுன் முயற்சியின்றி நின்னருளே பார்த்திருப்பனீசனேனே.

திருவரங்கக்கலம்பகம்.

(இதன் கருத்து.)

அயோத்தியை விட்டு திருவரங்கத்தை இருப்பிடமாகக்கொண்ட பெரிய பெருமாளே! கர்மஜ்ஞான பக்திகளைக்கொண்டு தன் முயற்சியால் தாண்டமுடியாத ஸம்சாரமாகிற பெருங்கடலைத் தாண்டினாலும் தாண்டலாம்; மற்றும் கடக்க முடியாத மூல ப்ரக்ருதியை கடந்தாலும் கடக்கலாம், பரம பதத்தைப்ராபித்து பாகவத குழாங்களுடன் கூடி உனது திருவடிகளுக்கு குற்றேவல்செய்யுமது யாவதாத்ம பாவி கிடைப்பதல்ல. பின்னைலபிக்கும் உபாயம் எங்

ஙனே யென்னில் ; அநர்ஹனாய், உன்னுடைய நிர்ஹேதுக க்ருபையே பற்றாசாகக்கொண்டு (சாதகம்போல்) செயல் மாண்டு இருந்தலே. "இந்த பரம ரகஸ்யத்தைவெளியிட வன்றோ தேவர் இங்கு எழுந்தருளியதென்று" தன் ஆர்த்தி தோற்ற ஸ்ரீ பராசர பட்டர் திருவடிகளில் பழுக்க ஸேவித்த திவ்யகவி பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் அருளிச்செய்தது.

68 ஸூத்திரம்.

இப்படி நினைவின்றிக்கே பலித்த விடம் உண்டோவென்னில்:—
"கோஸல கோகுல சராசரம், செய்யும் குணமொன்றின்றியே, அற்புத மென்னக்கண்டோம்."

ஆசாரிய ஹ்ருதயம்.

(அயோத்யையிலும்,ப்ருந்தாவனத்திலுமுள்ள,சேதநா சேதநங்கள், (பகவத் ப்ராப்திக்குறுபபாக) அநுஷ்டித்தது, ஒன்று மின்றிக்கே யிருக்க, விசேஷஜ்ஞர் வித்தராய்ச் சொல்லும்படியாக நிர்ஹேதுக க்ருபை பலிக்கக்கண்டோம்) என்று இதன் பொருள்.

69 ஸூத்திரம்.

இவ்விடத்தில் ஸ்ரீவைஷ்ணவரா வார்:—அழகிய மணவாளப்பெருமாள் பட்டர்.

70 ஸூத்திரம்.

இந்த வாக்யத்தால் தோஷ பூயிஷ்டனாயும் க்ஷுத்ரனாயுமிருக்கிற இச்சேதனனை, அகில ஹேய ப்ரத்யநீகனாய், அவாப்த ஸமஸ்த காமனான ஈஸ்வரன், லபிக்கைக்காக ஸாதநானுஷ்டானம் பண்ணுகையும் அவனை லபித்தல் தனக்கு ப்ராப்யன் என்று நினைக்கவும் கூடுமோ வென்னில்:—தோஷ பூதரான ஆஸ்ரிதர்களை அங்கீகரியா விட்டால் அவனுடைய வாத்ஸல்யாதி குணங்கள் அஸத்கல்பமாய் விடும். அவன் அவாப்த ஸமஸ்த காமனாயிருந்தாலும், தான் ஸர்வேஸ்வரன் என்கிற ஈசிதவ்ய ஸம்பந்தத்தால் சேதனனைப்பெற க்ருஷிசெய்ய வேண்டி அவதாரங்கள் பண்ணியும், கோயிலில் நித்யவாஸம் செய்தும் கௌஸ்தவாபரண ஸ்தாநீயமான அவர்களை பெறாவிடில் "ஸ ஏகாகீ நரமேத" என்று த்ரிபாத் விபூதியிலிருக்கச் செய்தேயும், உண்டது உருக்காட்டாதே அவனைக் குறைவாளனாகப் பண்ணுவதாலும், "பக்திக்ரீதோ ஜநார்தந:" என்றும் "பத்ரம் புஷ்பம்" இத்யாதியால் ஸுலபனாகையால் தானே உபாயமாய் நின்று சேதநனை லபிக்கையாலே விரோதமில்லை.

73 ஸூத்திரம்.

ப்ரத்யக்த்வம்-தனக்குத் தானே தோன்றுமதாயிருக்கை. அஹம் புத்தி வ்யவஹாரார்ஹமான-'நான்' என்கிற ஜ்ஞானத்திற்கும் 'நான்' என்கிற வ்யவஹாரத்திற்கும். வஸ்துவை—ஆத்மவஸ்துவை. புறவிதழ்-வெளி இதழ். ஆத்மாவை புஷ்பஸ்தானமாக நிரூபித்தது:— "நாடாதமலர்நாடி" இத்யாதிப்படி. உள் இதழ்-ஶேஷத்வஸ்தானமாக சொன்னது:— நாற்றம், செவ்வி, முதலான குணங்களோடு கூட சூடும் அவர்களுக்கு மிகவும் ஆதரணீயமானவத்தாலே. புற இதழ் ஞானஸ்தானமாக வுரைத்தது.— சூடுமவர்களுடைய த்யாஜ்யதா புத்தியாலே. அந்தரங்க நிரூபகம்-அஸாதாரண தர்மம்; அதாவது ப்ரதம நிரூபகதர்மம். 'என்னுள்ளான்' என்னாதே 'அடியேனுள்ளான்' என்றது, ஆத்ம ஸ்வரூபத்தை சேஷத்வத்வத்தையிட்டே நிரூபிக்கவேணுமென்று நிர்தேசிக்கிறது. ஆகையால் இவ்விடத்தில் தத்வத்ரயங்களுக்கு ஸ்வரூப நிரூபகமாகக் கொள்ளும் தர்மமாவது:— "ஈஶ்வரனுக்கு சேஷித்வம், ஆத்மாவுக்கு சேஷத்வத்தோடு கூடின ஜ்ஞாத்ருத்வம் அசித்துக்கு ஜ்ஞாந ஶூந்யத்வம்" என்றுமாம்.

இவ்விடத்தில் தத்வத்ரயங்களினுடைய ஸ்வரூப நிரூபக தர்மங்களை அறியவேணும். முதலில் ஸ்வரூப நிரூபக தர்மமாவது— ஒரு வஸ்துவினுடைய அஸாதாரண லக்ஷணம். அதாவது எந்த தர்மம் ஒரு வஸ்துவுக்கு முக்ய லக்ஷணமாயிருக்கிறதோ, அந்த லக்ஷணம் மற்றொரு வஸ்துவினிடத்தில் காணக்கூடாது. அப்போது ஈஶ்வரனுக்கு ஸ்வரூப நிரூபக தர்மம் சொல்லும்போது "ஶ்ரிய:பதித்வம்" நிரூபகமாயிருந்தபோதிலும் ப்ரக்ருதத்தில் 'சேஷித்வம்' சொல்லவேண்டியதாயிருக்கிறது. அப்படியே நிரூபித்துச் சொல்லும்போது, ஆத்மாவுக்கு 'ஶேஷத்வத்தோடு கூடின ஜ்ஞாத்ருத்வம்' என்றும், அசித்துக்கு 'ஜ்ஞான ஶூன்னியத்வமும்' என்று ஏற்படுகிறது. அந்த தர்மங்கள் அந்தந்த வஸ்துவுக்கே அஸாதாரண மொழிய வேறு வஸ்துக்களிடத்தில் தோற்றாது. ஆனால் இந்த ஸூத்ரத்தில் 'தாஸ்யம்' நிரூபக தர்மமென்றும், ஜ்ஞாநாநந்தங்கள் 'நிரூபித ஸ்வரூப விசேஷணம்' என்றும் விதித்திருக்க, ஆத்மாவினுடைய நிரூபக தர்மம் 'ஶேஷத்வத்தோடுகூடின ஜ்ஞாத்ருத்வம்' என்று இரண்டையும் எங்ஙனே சொல்லக்கூடுமென்னில்; சேஷத்வத்திற்கும் தாஸத்வத்திற்கும் வாசியறியும்போது, ப்ரபஞ்சத்தில் ஈஶ்வரனைத்தவிர மற்றெல்லாப் பொருள்களுக்கும் சேஷத்வம் உண்டு என்றும், தாஸத்வம் சைத்

ன்னியமுடைய ஜீவன்களுக்கே ஏற்பட்டது என்று அறியவேணும் அப்போது ஆத்மாவுக்கு தாஸத்வம் அந்தரங்க நிரூபகம் என்று அருளிச்செய்தது கூடும். இப்போது இங்கு 'தாஸத்வம்' என்றருளிச்செய்தது கேவலம் 'அசித்வத் சேஷத்வத்தை'ச் சொன்னதல்ல: சேஷத்வத்தோடு கூடின ஜ்ஞாத்ருத்வம் சொல்லிற்று. எங்ஙனேயென்னில்; ஆத்மாவுக்கு ஶேஷத்வம் ஸ்வரூபமானாலும் அந்த ஶேஷத்வம் கிஞ்சித்காரமில்லாதபோது ஸ்வரூப மில்லை. கிஞ்சித்காரந்தான் அவன் உகந்ததாயிருக்கவேணும். அப்போது சேஷத்வத்தோடு கூடின ஜ்ஞாத்ருத்வம் வேண்டியதாயிருக்கிறபடியால் ஶேஷத்வத்தோடுகூடின ஜ்ஞாத்ருவத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம் என்னத் தட்டில்லை. ஆனால் இந்த இரண்டு தர்மத்தில் தாஸத்வத்தை அந்தரங்க நிரூபகமாகவும், ஜ்ஞானத்தை பகிர்தளமாகச்சொல்லவேணுமென்கிற நிர்பந்தம் ஏன்?. ஜ்ஞானத்தை அந்தரங்க நிரூபகமாகவும், தாஸத்வத்தை பஹிர்தளமாகச்சொல்லுவதினால் வரும் தோஷம் ஏன்? என்கிற சங்கைவுதிக்கலாம். அப்போது இந்த விடத்தில், ஆத்மாவுக்கு, அசித் வ்யாவருத்தியாயிருக்கிற 'ஜ்ஞானத்தை' லக்ஷணமாகச் சொல்லுகிறதா, அல்லது ஈஶ்வர வ்யாவ்ருத்தியான 'ஶேஷத்வத்தை' லக்ஷணமாகச் சொல்லுகிறதா வென்றால், ஈஶ்வர வ்யாவ்ருத்தியான "ஶேஷத்வத்தை" தர்மமாகச் சொல்லவேணும் அவனுக்கு சரீரமாயிருக்கிறபடியாலே.

இந்த ஸூத்ரத்தாலே புஷ்பத்தின் உள்தளம் செவ்வி நாற்றம் முதலிய குணங்களால் உபாதேயமாய், வெளிதளம் அவைகளில்லாமையாலே எப்படி த்யாஜ்ய மாகிறதோ, அப்படியே தாஸ்யத்தையுடைய ஜன்மமே ஶ்ரேஷ்டமென்றும், அது இல்லாத ஜ்ஞானானந்தங்களோடு வர்ணத்தை முக்யமாகவுடைய ஜன்மம் த்யாஜ்யம் என்னும் அபிப்ராயத்தை இவர் திருத்தம்பியார் வெளியிட்ட வாக்யமும் இவ்விடத்தில் அநுஸந்தேயம்.

**அதாவது:—** "ஶேஷத்வ பஹிர்ப்பூத ஜ்ஞானானந்தமயனையும் ஸஹியாதார் த்யாஜ்யோபாதியை ஆதரியார்களே".

ஆசாரிய ஹ்ருதயம்.

**இதன் பொருள்:—**

ப்ராப்த ஶேஷியுடைய ஶேஷத்வத்துக்குப் புறம்பான, ஜ்ஞானானந்த மயத்வத்தாலே, ஶ்லாக்யமாயிருக்கும் ஆத்மாவையும், ஸகியாதவர்கள், த்யாஜ்யமா யௌபாதிகமான வர்ணத்தை விரும்பமாட்டார்களே !.

ஏவம் விதமான தாஸ்ய ஜன்மத்தையே ஆதரித்து, அதற்குப் புறம்பான, ஜ்ஞாநத்தையும் வர்ணத்தையும் ஏற்றமாகவுடைய ஜன்மத்தை அநாதரித்து, வார்த்தை சொன்னவர்களை தர்சிப்பிக்கிறார்.

எங்ஙனே யென்னில்:—

அணைய வூரப்புனைய, அடியும் பொடியும் பட பர்வதபவநங்களிலே ஏதேனுமாக ஜநிக்கப் பெறுகிற திர்யக்ஸதாவர ஜங்மங்களை, பெருமக்களும் பெரியோரும் பரிக்ரஹித்து ப்ரார்த்திப்பர்கள்.

ஆசாரிய ஹ்ருதயம்.

(இதன் கருத்து.)

(நித்ய விபூதியில் ஸ்ரீய:பதி கண் வளர்ந்தருளுகைக்கு பாங்காயிருக்கும்) திருவரவணையாயும், (அவன் பலகாலும் மேற்கொண்டு) நடத்துகைக்கு (வாஹநமான கருளப்புள்ளாயும்), அவனுதரித்துச் சாத்துகைக்கு அர்ஹமான திருத்துழாயாயும், (ஸ்ரீ ப்ருந்தாவநத்தில் ப்ராப்த ஶேஷியானவன்) திருவடியும், (ததீயருடைய) ஸ்ரீபாத தூளியும், படும்படியும், அவனுகந்தருளி வர்த்திக்கும் திருமலையாழ்வாரிலும், ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமாளிகைகளிலேயும், ஏதேனுமொன்றாக திருவவதரிக்கப்பெறுகிற, திர்யக் ஸ்தாவர ஜங்மங்களை, நித்ய ஸூரிகளும், ஸ்ரீ ஶுகப்ரம்ஹர்ஷி உத்தவர் ஸ்ரீ குலசேகரப் பெருமாள் பெரிய முதலியார் முதலான முமுக்ஷுக்களும் லபித்து அபிலஷிப்பார்கள்.

.74 ஸூத்திரம்.

ஆகந்துகம்-வந்தேறி. பராமர்சிக்கிறது-சொல்லுகிறது.

•77 ஸூத்திரம்.

ஆர்ப்பு—முண்டுமுதலிய் முறிந்ததுகள்; மாலிந்யம்.

இவ்விடத்தில் அநுஸந்தேயமாவது:—

அழுக்கடைந்த மாணிக்கத்தை நேர் சாணையில் யேறிட்டுக்கடைந்தால் பளபளக்கை வடிவாயிருக்குமாப்போலே, அஜ்ஞனை சேதநனுக்கு, திரோதாந நிவர்த்தியிலே அடியே னென்கை வடிவாயிருக்கும் என்று முதலியாண்டான்.

வார்த்தாமாலை.

78 ஸூத்திரம்.

வ்யபதேசம்-பெயர், சொல்லுகை.

## 79 ஸூத்திரம்.

ஏகாந்திகள் லக்ஷணங்களாவன:—

வைஷ்ணவன்:—
1. அக்ருத்யத்தை பாபமென்று தவிரும்.
2. க்ருத்யத்தை அதிகாரிஸம்பத்திக்காகச்செய்யும்.
3. கைங்கர்யத்தை ஸாதநமென்று செய்யும்.

ஏகாந்தி:—
1. அக்ருத்யத்தை ஸ்வரூப ஹாநியென்று தவிரும்
2. க்ருத்யத்தைலோக ஸங்க்ரஹதயா கர்த்தவ்யமென்று செய்யும்.
3. கைங்கரியத்தை காலக்ஷேபமென்று செய்யும்.

பரமைகாந்தி:—
1. அக்ருத்யத்தை ருசியில்லாமையாலே தவிரும்.
2. க்ருத்யத்தை க்ருபையாலே செய்யும்.
3. கைங்கர்யத்தை ராகப்ராப்தமென்று செய்யும்.

வார்த்தாமாலை.

குடியும் குலமுமெல்லாம் கோகனகை கேள்வ
னடியார்க்கு அவனடியேயாகும்—படியின் மேல்
நீர் கெழுவு மாறுகளின் பேரும்நிறமுமெல்லாம்
ஆர்கலியைச் சேர்ந்திட மாய்ந்தற்று.

ஞான ஸாரம்.

## 82 ஸூத்திரம்.

கைப்புடை— கை-சிறிய, புடை-இடம். அதாவது கோபுரவாசலுள்ளிருக்கிற ஒட்டுத்திண்ணை.

திருக்கண்ணமங்கை யாண்டான் ஸ்வ வ்யாபாரத்தை விட்டபடி யாவது:— ஸ்வஜாதி ஸ்வவர்ணாநுரூபமான (ஸ்வவ்யாபாரத்தை) வாஸநா ருசியுடன் விட்டான். பரசக்தியைப்பற்றி ஸ்வசக்தியை விடுகையும், பரைக ரக்ஷகத்வத்தைப்பற்றி ஸ்வரக்ஷணாபிமானத்தை விடுகையும், பர வ்யாபாரத்தைப்பற்றி ஸ்வவ்யாபாரத்தை விடுகையும் உபாயாதிகாரிக்கு க்ருத்ய மென்றபடி.

ஆய் வ்யாக்யானம்.

## 83 ஸூத்திரம்.

ஒப்பூண்-ஸமானபோஜனம்; பங்க்தி போஜனம்

## 84 ஸூத்திரம்.

திருநாராயணபுரம், கோயிலுக்கு மேற்கே மலையடியிலே மூன்று காததூரத்திலிருக்கிற ஓர் ஊர்.

ப்ரக்ஷீண சேஷ புண்ய பாபையாய்-நன்றாகப் போக்கப்பட்ட புண்ய பாபையாய். திருக்குரவை-ராஸக்ரீடை.

85 ஸூத்திரம்.

நிதர்சந பூதர்-த்ருஷ்டாந்த பரர்.

87 ஸூத்திரம்.

இதுக்கு-இந்த தேஹ த்யாகத்திற்கு.

88 ஸூத்திரம்.

அதிஸக்தனாய்-ஆசையுடையவனாய்.

89 ஸூத்திரம்.

இவ்விடத்தில் அநுஸந்தேயமாவது:—

அமுதனார், சிறியாச்சானை, உம்முடைய வநுஷ்டாநமிருக்கும்படி யிது, நாங்கள் என் செய்யக்கடவோம் என்ன ; என்னனுஷ்டான த்துக்கு ஒரு பல முண்டாகிலன்றோ உம்முடைய அநநுஷ்டாந த்துக்கு ஒரு ப்ரத்யவாய முண்டாவது ; வெறும் புடவை தோயா மல் கெடும், பட்டுப்புடவை தோய்க்கக்கெடும் என்றருளிச்செய் தார். ஆசாரியர்களில் சிலர், உம்முடைய அநுஷ்டானமிருக்கும் படியிது, நாங்கள் என் செய்யக்கடவோ மென்ன ; என்படியும் உங்கள் படியுங்கொண்டு காரியமென் ? "ஏதத் வ்ரதம் மம" என்ற ருளிச்செய்தபடியே யன்றோ வென்றருளிச்செய்தார்.

வார்த்தாமாலை.

90 ஸூத்திரம்.

திருந்தவே நோக்கின்றேன்-நன்றாக உபாயாநுஷ்டானம் பண்ணு கின்றேன். குதிரியாய்-குத்ஸித ஸ்த்ரீயாய். ஓதி நாமம்-திருநா ம ஸங்கீர்த்தனம் பண்ணி. மடலூர்தல்-மடற் குதிரை யிவர்தல். பெண்ணை-பனைமரம்.

மடலூருகையாவது.

அபிமத விஷயத்தைப் பிரிந்த வாற்றாமையாலே அவ்விஷயத்தை ஒரு படத்திலே யெழுதி, வைத்தகண் வாங்காதே யத்தைப் பார் த்துக்கொண்டு, பனை மடலைக் குதிரையாகக்கொண்டு, பிரிந்த போது துடங்கி கண்ட போகோபகரணங்களெல்லாம் அக்நி கல்ப மாய்த் தோற்ற, ஊணுமுறக்கமு மின்றிக்கே, உடம்பில் துளி நீறி ட்டுக்கொள்ளாதே, மயிரை விரித்துக்கொண்டு திரிதல். இது போர் சுட்டுப் பொரி கொறிக்கை யோபாதி அதிஸாஹஸ ப்ர வ்ருத்தி.

ஈடு-மாசறு சோதி ப்ரவேசம்.

## 91 ஸூத்திரம்.

அடிக்கழஞ்சு பொருகை-ஒரு அடி மண் கழஞ்சுப் பொன்விலை. (கழஞ்சு-பன்னிரண்டு பணவிடை கொண்ட நிறை.)

## 92 ஸூத்திரம்.

முறுகுதலாலே-முதிர்ந்த தசையிலே. கண்ணுஞ் சுழலையிட்டு-கண் சுழலமிட்டு. அலமாப்பு—கலங்கல், துன்பம்.

பேரமர்காதல்:— 1. பேர்-பெரிய, அமர்-யுத்தத்தை விளைவித்த, [காதல்-காமம்.
2. பேர்-பெரியதான, அமர்காதல்-அமர்ந்த [காதல்.

கடல் புரைய-கடல் போலே.

## 93 ஸூத்திரம்.

ஜீவன் முக்தருக்கு ப்ராப்யாநுரூபமான ஸ்வரூபம் என்றத்தை இந்த ஸூத்ரத்தால் அருளிச்செய்கிறார்.

இவ்விடத்தில் அநுஸந்தேயமாவது:—

ஆச்சான் பிள்ளையை ஒரு ஸ்ரீவைஷ்ணவர், ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யமோ, ப்ராப்யாநுரூபமான ஸ்வரூபமோ வென்று கேட்க; "முமுக்ஷு தசையில் ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யம், முக்த தசையில் ப்ராப்யாநுரூபமான ஸ்வரூபம்" என்றருளிச்செய்தார் என்று திருநகரிப்பிள்ளையருளிச்செய்தார். வார்த்தா மாலை.

## 94 ஸூத்திரம்.

ஹேத்வந்தரங்களிற் காட்டில் அனந்தரம் 'ப்ராவண்யம்' என்றத்தை அந்வயிக்க.

## 95 ஸூத்திரம்.

நொய்திதாம்-ஸுலபமாம். தெரிவறிய-இந்திரிய அனுபவத்தைக்கொண்டு தெரிவறிய, அளவிலா-பகவத் அனுபவத்தைப்பற்ற ஆதிக்க மில்லாததாய், சிறு-ஆத்ம வஸ்துவைப்பற்ற வருமதாகையால் பரிச்சின்னமாயிருக்கிற, இன்பம்-ஸுகம். இத்தால் கைவல்யானுபவம் சொல்லிற்று. ஒழிந்தேன்-விட்டேன்.

## 97 ஸூத்திரம்.

ஆசரித்துக்காட்டுமவன் ஆசாரியன். விசேஷதர்மங்களைக்குறித்து உபதேசிக்கிறான் யாவனொருவன், அவன் ஆசாரியனாகிறான்.

அஜ்ஞாநத்தை யகலும்படி பண்ணி ஜ்ஞானத்தை குடி புகுரும்படிப்பண்ணி ருசியை கொழுந்தோடும்படி பண்ணுகை ஆசாரியக்ருத்யம்.

சிஷ்யாசாரிய க்ரமத்துக்கு ஸீமாபூமி கூரத்தாழ்வான். எங்ஙனே யென்னில்; தம்மளவிலே உடையவர் நிக்ரஹம் பண்ணினாரென்று கேட்டு இவ்வாத்மா அவருக்கே சேஷமாயிருந்ததாகில் வினியோக ப்ரகாரங்கொண்டு கார்யமென்னென்று அருளிச்செய்கையாலே சிஷ்யர்க்கு ஸீமாபூமி.

ஸாபராதனான நாலூரானை நான் பெற்ற லோகம் நாலூரானும் பெறவேணுமென்கையாலே ஆசாரியர்களுக்கு ஸீமாபூமி.

ஆசார்யத்வ பூர்த்தியுள்ளது பிராட்டிக்கு எங்கனே யென்னில், பகவத் விமுகனாய் ஸாபராதனுமான ராவணனுக்கு பகவதுபதேசம் பண்ணுகையாலே. விதித:——இத்யாதி ச்லோகம் ப்ரமாணம். இப்படி தோஷம் பாராமல் ஹித ப்ரவர்த்தகத்வ முள்ளது பிராட்டிக்கும் கூரத்தாழ்வானுக்குமிறே. ஆழ்வாருக்கும் ஆசாரியத்வ பூர்த்தி திருவாய் மொழியை வ்யாஜீகரித்து த்வயத்தையருளிச் செய்கையாலே. என்று இளையாழ்வார் திருமாலையாண்டானருளிச்செய்வர். ஆகையிறே திருவாய் மொழி தீர்க்க சரணாகதியென்று போராகிறது. சரணாகதியும் திருவாய் மொழியுமாக விரண்டுமிறே த்வயமென்று போருகிறதென்று பெரியாண்டான் அருளிச்செய்வர்.

ப்ரமேய ரத்நம்.

பரதார பரிக்ரஹம் இஹ பரங்களில் துன்பத்தையே விளைவிக்கின்றபடியால் நிஷித்த மென்றருளிச்செய்கிறார். இது, "பகைபாவமச்சம்பழியென நான்கு-மிகவாவா மில்லிறப்பன்கண்." (குறள்) என்று பகையும், பாவமும், அச்சமும், குடிப்பழியும், இந்த நான்கு குற்றங்களுக்கும் காரணமாயிருக்கிறபடியால் எவ்வுலகத்திலும் துன்பத்தையே யுண்டாக்கும். ஆதலால் பிறன் மனைவி எளிதிற் கிடைத்தாலும் விரும்பலாகாது. அவர்களால் பாரிக்கிற ஸுகம் ப்ராந்தியே வொழிய ஸுகம் எள்ளளவும் கிடையாது. பொரிபுறம் தடவிய வெல்லம்போல் க்ஷணப்போது ஸுகமிருந்தாலும் அது முடிவில் துர்வியாதிகளை விளைவித்து அகால மரணத்தை யடையச்செய்கிறது.

பெண்டிரால் வரும் ஸுகம்—அதிக பசியுடன் திரியும் நாய், வழியில் கிடந்ததோர் தசையற்ற எலும்பைக்கண்டு, ஆவலுடன் அத்தை கவ்விக் கடிக்கையில், அந்த எலும்பு சதையில்லாதபடியாலும்,

நாயின் வாயில் பல விடங்களிலும் குத்தப்பட்டு அத்தால் பெருகுகிற இரத்தத்தை அந்த நாய் தன்னுடைய இரத்தமென்றறியாமலும், வெகுநேரம் சுவைத்துக்கொண்டிருந்ததாலும், தன்னுடைய இரத்தம் வரவரக் குறைந்து பலஹானி யடைந்து கடைசியாக அடைந்த மரணத்திற்குச் சமானமாகும். பஞ்ஜகம்-விரோதம்; பங்கம்.

## 102 ஸூத்திரம்.

அளவிலிகள்-ஜ்ஞானமில்லாதவர்கள்.

## 104 ஸூத்திரம்.

ப்ராக்தந-பூர்வமான. முழுமடை செய்து-ஒருமடைசெய்து.

## 105 ஸூத்திரம்.

பரிஷ்வங்கிக்கிற-ஆலிங்கனம் பண்ணுகிற. யோஷித்தேஹம்-ஸ்த்ரீதேஹம். அஸ்ருக்-இரத்தம். பூயம்-துர்கந்தம். விண்-மலம். ஸ்நாயு-குடல், மஜ்ஜா-மூளை, அஸ்தி-எலும்பு. சர்மாவநத்தமாய்-தோலால் மூடப்பட்டதாய்.

இங்கே தேஹத்தின் ஹேயதையை ஆழ்ந்தவறிவுடைய அழகிய மணவாள தாஸர் அழகாய் அரங்கத்தந்தாதியில் அருளிச்செய்ததை ஆராயத்தகுந்தது.

பையிலத்தி மூளைநரம்பூனுதிரம் பரந்த குரம்.
பையிலத்தியுள் விளை பாண்டமென்னுமற் புன்பாவையர் தோல்
பையிலத்திசெய்து நாகெய்துவீருய்யப்பற்றுமினோ
பையிலத்தி மேவித்துயில் கூராங்கர் பொற்பாதத்தையே.

(பயில்—பொருந்தியிருக்கும், குரம்பை—தேஹத்தை, இலத்தி—மலம், தோல் பையில்-சரீரத்தில், அத்திசெய்து-இச்சைசெய்து. பயில்-படத்தையுடைய திருவனந்தாழ்வான்மேலும், அத்தி-க்ஷீராப்தி.)

## 110 ஸூத்திரம்.

அதிலோக க்ரூரமான-லோகத்திலில்லாதக் கொடுமையையுடைய.

## 112 ஸூத்திரம்.

ஸம்வாதமாக-ப்ரமாணமாக.

முதல் ப்ரகரணம் முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# இரண்டாவது ப்ரகரணம்.

## ஸூத்திரம்.

115 ப்ராபகாந்தர பரித்யாகத்துக்கும் என்கிற ‘உம்’ சப்தத்தால், கீழ் 43-வது ஸூத்ரத்தில் அஜ்ஞாநாசக்திகளால் உபாயாந்த்ரங்களை விடவேண்டியதாய்ச் சொல்லியிருந்தபோதிலும், இவ்விடத்தில் அவைகளை வ்யாவ்ருத்திக்கைக்காக, வேறு முக்யமான தோஷங்களைக்காட்டுகிறார். “ப்ராபகாந்தர” இத்யாதியால்:—

பாரதந்த்ரியந்தான் மூன்று விதம்:—

1. பராதீன பலத்வம். 2. பராதீன கர்த்ருத்வம். 3. ஸ்வரக்ஷணோபாய ப்ரவ்ருத்த்யனர்ஹத்வம்.

117 ப்ராபகாந்தரங்களை, அஜ்ஞர் உபாயமாக ப்ரமிக்கிறதையும், அவைகளையே ஜ்ஞாநிகள் அபாயமென்று கழிக்கிறதையும் நாயனார் அருளிச்செய்தது இவ்விடத்தில் அநுஸந்தேயம்.

“அஜ்ஞர் ப்ரமிக்கிற வர்ணாஸ்ரம வித்யாவ்ருத்தங்களை கர்த்தப ஜந்மம் ஸ்வபசாதமம் சில்பநைபுணம் பஸ்மாஹுதி ஸவவிதவாலங்காரமென்று கழிப்பர்கள்”

ஆசாரியஹ்ருதயம்.

119 நீக்குகையாவது—ஸ்வதந்த்ரனுக்கி உபாயாந்தரங்களை அநுஷ்டிக்கச் செய்யுமது.

120 “மாசுச:” என்கையாலே ஸோகஜநகம். இவ்விடத்தில் ஸோகம் பந்துவதத்தால் வந்த ஸோகம் என்னலாகாது. ஏனெனில்; விஸ்வரூப தர்ஸநத்தாலே பந்து வதத்தில் தனக்கு கர்த்ருத்வம் உண்டென்கிற ப்ரமம் தீர்ந்து விட்டது. இப்போது சரம ஸ்லோகத்தில் சொல்லும் ஸோகம், உபாயாந்தரங்களை அநுஷ்டிப்பதால் வரும் ஸ்வரூப ஹாநித்வ ஸோகம். ஸோகாப நோதம்-சோகத்தை தீர்க்கை.

121 புந: ப்ரயோகமன்று என்கிற விடத்தில் “பிள்ளை ஸன்னிதியிலே, ஒரு வைஷ்ணவர் புந: ப்ரபதனமாவது என்? என்று கேட்க; பிள்ளையும் அருளிச் செய்ததாவது— ஒரு குருடன் ஒரு நெடியனைப்பற்றிக்கொண்டு ஆற்றிலே போகாநின்றால், நரிப்பள்ளம் கண்

ஸூத்திரம்.

டவாறே, கையை இறுக்கிப் பிடிக்குமோபாதி தனக்குள்ள அத்ய வஸாயத்திலே ஊன்றுகையே புந: ப்ரபத்தி என்றருளிச்செய் தார்" என்கிற ஐதிஹ்யம் அநுஸந்தேயம்.

122 குடம்:—சரீரசுத்தி. ஜலம்:—ஜ்ஞாந சுத்தி. ஸுராபிந்து-ஸ்வயத்ந மூலமான அஹங்காரம். உபாதாநம்-பானைக்கு மண்போல் இவ்விட த்தில் ஸுவர்ணம் உபாதாநம்.

123 மஹார்க்கமான-அத்யந்த பெருவிலையனான.

125 கோதானத்தில்-சௌளத்தில், ராஜமஹேந்தரன்-என்கிற ராஜா ஸமர்ப்பித்த திருவபிஷேகம்:—கிரீடம். படி-ஆபரணம். அழகிய மணவாளனுக்கு கௌஸ்துபமணியோபாதி திருமார்பிலே சாற்றி க்கொள்ளும் பச்சைத் திருவாபரணம். ஓலக்கம்-ஸபை.

126 பர்த்ருபோகம்-பர்த்தாவுக்குண்டாகும் போகம்.

127 தஜ்ஜிஜ்ஞாஸு ப்ரஶ்நத்தை-அத்தை அறியவேணுமென்று இச்சித் தவனுடைய வினவை. அநுவதிக்கை-ஒருவன் சொன்னத்தை யநுஸரித்துதான் சொல்லுதல்.

128 ஔஷத ஸேவை-மருந்துண்ணல். ருக்ணராய்-ரோகிகளாய். நச் சுமா மருந்து:— நச்சு-ஆசையை பெருக்கும்படியான, மா-பெரு மையையுடைய. மருந்து-அமுதம். அவ்யவதாநே-வேறொன்று கலசாமல்; மதுர பதார்த்தம் கலசாமல். (மதுர பதார்த்தத்தில், ஔஷதத்தை கலசிக்கொடுத்தால் சீக்கிரத்தில் வியாதியை போக் காது)

129 பதிரன்—செவிடன். விகலகரணர்-கரணலோபர். படுகரணர்— நல்ல கை கால்களை யுடையவர். அபமார்க ப்ரவ்ருத்தர்-கெட்டமார் க்கத்தில் நடக்கிறவர்; வேத சாஸ்த்ர விருத்தமான ஆசாரமுள்ள வர்கள்.

ஶ்யேந விதியாவது:— பருந்து என்னும் பெயரையுடைய யா கம். அதாவது 'ஶ்யேநம்' என்றால் 'பருந்து' என்கிற பக்ஷிக்கு பெயர். அப்போது, பருந்துவைக்கொன்று செய்கிற யாகமாகி றது 'அஶ்வமேத சப்தம்போல்'. அதுவன்று இவ்விடத்தில், பின் னை என்னவென்றால்:— ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் பருந்தானது, பூமியில் சில பதார்த்தங்களை (ஆகாராதிகளை) க்கண்டால், எப்படி அதி வேகமாக இறுஞ்சி எல்லாவற்றையும் கொண்டுபோகுமோ, அப்படியே இந்த யாகமானது சத்ருக்களுடைய பொருள்கள் யா

வற்றையும் அபஹரித்துக்கொடுக்கும். இதற்கு ப்ரமாணம்:—"யதாவை ஸ்யேநோ நிபத்யாதத்தே ஏவமயம்த்விஷந்தம்ப்ராத்ருவ்யம் நிபத்யாதத்தேயமபிசரதி ஸ்யேநேந."

தது பரி-அதற்குமேல். விவக்ஷிதம்-சொல்லப்பட்டது.

உபாயாந்தரங்களை 'பாதகமாக' பாரதத்தில் சொன்னவிடம்:— பாரதத்தில், தர்மதேவதையான யமன், தன்னுடைய புத்ரன் க்ருஷ்ணன் ஸமீபத்திலே யிருக்கச்செய்தேயும், "அவனே தஞ்சம்" என்கிற விஸ்வாஸமின்றிக்கே, அடுத்து அடுத்து யாகம் பண்ணுகிறபடியைக்கண்டு, அத்தை நிவ்ருத்திப்பிக்கவேணுமென்கிற எண்ணத்துடன் தான் ஒரு சண்டாள வேஷத்தோடே அந்த யாகமத்தியத்திலே அத்யந்தம் பசியோடே விடாய் தோற்றவந்து, தர்மபுத்ரனை "இத்தனை சோறுவேணும்" என்று, கேட்க, அப்போது ப்ராஹ்மணர் புஜிப்பதர்க்கு முன்னே அவனுக்கு இடப்போகாமையாலும், இடாவிடில் 'அவன் பிழையான்'. என்று, தோற்றுகையாலும், "யாகத்தில் ப்ரவ்ருத்திக்க, பாதகமாய்த் தலைக்கட்டிற்றே! என் செய்வோம்!" என்று, அவன் நடுங்க, அப்போது சரமஸ்லோகத்தை "அதபாதக" இத்யாதியால் உபதேசித்ததிறே.

"அதபாதக பீதஸ்த்வம் ஸர்வபாவேந பாரத,

விமுக்தாந்ய ஸமாரம்போ நாராயண பரோபவ."

என்று, இந்த ஸ்லோகம், சரம ஸ்லோக பூர்வார்த்த விவரணம்.

## எ-அருப்பதம்.

இந்த உபாயாந்தரங்களை, 'பாதகங்கள்' என்று நம்மாழ்வார் அருளிச் செய்தபடி 'நிறைந்தவன் பழி' இத்யாதி பாசுரத்தாலே. இத்தை 'பழி' என்றும், 'வன்பழி' என்றும், 'நிறைந்தவன் பழி' என்று, வாயோலையிட்டு வைத்தார்.

இவ்விடத்தில் "பழி" என்று சொல்லுவது ஸ்வாதந்தரியத்தை. இதற்கு ஓர் ஐதிஹ்யம் அருளிச்செய்கிறார்.

ஆண்டாள் ஒரு நாள் பட்டரையும் சீராமப்பிள்ளையையும் காட்டி, "இவர்கள் விவாஹ ப்ராப்தரானார்கள், பேசாதே யிருக்கிறதென்" என்ன, ஆகில், "நாளை பெருமாள் பாடே போனவாறே வரக்காட்டு' என்ன, அவர்களையுங்கொண்டு திரு முன்பே நிற்கச்செய்தே, பெருமாள் அருளப் பாடிட்டு, 'ஒன்று சொல்லுவாய்போலே யிருந்தாய்!' என்று திருவுள்ளமாக, 'இவர்கள் விவாஹ ப்ராப்தரானார்கள் என்று சொல்லா நின்றார்கள்' என்ன, 'நாமே ஸ்த்

ஸூத்திரம்.

ருஷமான விடத்திலே ஸம்பந்தித்துத் தருகிறோம்' என்றருளிச செய்ய, பிற்றை நாள் மன்னிக்கொண்டுவந்து நீர் வார்த்தார்கள். ஆக 'அத்தலையாலே வருமதொழிய தந்தா மொன்றை யாசைப் படுகையுங்கூட பழி' என்றிருக்கும் குடிகாணும்.

'அதபாதக பீதஸ்த்வம்' தர்ம புத்ரன் ஒரு தடவற் பொய்சொல்லி அதுக்கு நரக தர்ஶநம் பண்ணினானித்தனைப்போக்கி, நிஷித்தாநுஷ்ட்டாநம் பண்ணினான் என்று ப்ரமாண ப்ரஸித்தியில்லை. 'அதபாதக பீதஸ்த்வம்' கீழே செய்து போந்தவை பாதகமென்று தோற்றி பீதபீதனானாகில். அஹங்கார மமகார கர்ப்பமான க்ரியா கலாபமடைய, 'க்ருஷ்ணனே நங்காரியத்துக்குக் கடவன் என்றறிந்த வநந்தரம் பாதக ஸமமாய்த் தோற்றிற்று."

ஈடு-5-5-7-திருவாய்மொழி.

(தடவற் பொய்-ஆபாஸமான பொய், கீழே செய்துபோந்தவை-ராஜ ஸூயாதிகள்.]

கீழே காட்டின ஐதிஹ்யத்தால் த்ருஷ்டார்த்தமாகவும் தானொருவாரு ப்ரவிருத்தி பண்ணுகை ஸ்வரூபவிருத்தமென்று தோற்றுகையால், அத்ருஷ்டார்த்தமான ஸ்வயத்நம் ஸ்வரூப விரோதித்வேந அவத்யாவஹ மென்பது கிம்புநர்ந்யாயஸித்தமென்றபடி.

ஈடு. அ. ஜீயர். அரும்பதம்.

130 காரீரியாவது:— வர்ஷார்த்தமாக விதிக்கப்பட்ட காம்யகர்மங்கள்.

132 விஶிஷ்ட வேஷம்-சரீரம். நிஷ்க்ருஷ்ட வேஷம்-ஆத்மா. அத்தால்-ப்யேநயாகத்தால்.

139 இந்த ஶ்லோகத்தில் "பத்ரம் புஷ்பம்" என்று அருளிச்செய்ததால் அல்பத்தில் ஸந்தோஷத்தை யடைவான் என்று தோற்றாநிற்க "அந்யத்" என்றும் "புரிவதும் புகை பூவே" என்று மறுபடியும் அருளிச்செய்வதற்கு நிபாமகம், முந்திய ப்ரமாணத்தாலே அதிகத்தில் இச்சை இல்லை என்று தோற்றாமையாலே. இந்த 'அந்யத்' என்கிற ஶ்லோகத்தால், கீழ்ச்சொன்ன ஶ்லோகத்தின்படி, அல்பத்திலேயே இச்சையுடையவன் என்று ஸ்த்திரப்படுத்துவதோடு, அநுஷ்டாந பர்யந்தம் காட்டப்படுகிறது.

பிரிவு-துக்கம், இத்தால் ஹேய ப்ரத்ய நீகத்வம் அபிப்பராயம். விரிவது-விஸ்தாரம்-மேவல்-பெறுகை. உருகை-இச்சை. அஸம்ஸ்க்ருதமான ஜலம்-ஏலப்பொடி முதலானது இல்லாத வெரும்ஜலம்.

ஸூத்திரம்.

"அல்பத்தில் இச்சை யுடையவன்" என்றதற்கு, ஓர் ஐதிஹ்யம்:—

ஸஞ்ஜயன், த்ருதராஷ்டானுக்கு கண்ணனுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களைச் சொல்லியிருந்தும், அவரவர்கள் வாசல் தோறு மலங்கரித்துத் திரளச்சிறப்புகள் வைத்தும், "பேராயிர முடையார் பெண்கண்டால் பித்தர்" என்று அநேக மாயிரங் கன்னிகைகளை யலங்கரித்து வைத்தும், அநேகமாயிரம் பசுக்களை அலங்கரித்து வைத்துமிருக்க, இவற்றை மதியாதே, அநந்ய ப்ரயோஜநன் இடும் சோற்றை விரும்பி ஸ்ரீ விதுரர் திருமாளிகைக் கெழுந்தருளி அங்கே யமுது செய்தார்.

உடையவர் வார்த்தாமாலை.

தோயம் யோ மே பக்த்யா:— இத்யாதியால், 'சேதனன் பக்தி பாரவஶ்யத்தாலே அடைவு கெட கொடுக்குமாப்போலே, நானும் ஸ்நேஹ பரவஶத்தாலே அடைவு கெட ஸ்வீகரிப்பன்' என்று அருளிச்செய்த வண்ணம் அநுஷ்டித்துக் காட்டியதற்கு அஸ்மத் ஆசாரியன் ஸந்நிதியில் பல தடவைகளில் செவியுற்ற வோர் ஐதிஹ்யமாவது:—

கண்ணன் தூது எழுந்தருளுகிறபோது, பீஷ்ம த்ரோணாதிகளின் க்ருஹங்களைப் புறக்கணித்து, ஸ்ரீ விதுரரிருக்கும் இருப்பிடத்தை நாடிச் சென்ற வளவில், ஸ்ரீ விதுரரைப் பார்த்து 'இது யாருடைய வீடு?' என்று வினவ, அவர் மற்றவர்களைப்போல் அபிமானத்தால் தன்னதென்று மறந்தும் சொல்லத் தெரியாத ஸ்வபாவத்தையுடையவராய்க்கொண்டு, 'இது தேவர் திருமாளிகை' என்று விண்ணப்பிக்க, இவ்வூரில் நமக்கும் ஓர் இருப்பிடம் கிடைக்கப் பெற்றோமே! என்று அகமகிழ்ந்து அவ்வகத்தின்கண் சடக்கெனப் புகுந்தான். "ஸ்ரீவைகுண்டநாதன், தனக்கு உபய விபூதியும் இருப்பிடம் என்பதை மறந்து, நீசனாகிய அடியேன் யிருந்த விடத்தை பரமபதம் பாற்கடல் மற்றும் திவ்ய தேசங்களைத்துறந்து வந்து இத்தை குவாலாக அபிமானித்தான். இன்னமும் நித்ய ஸூரிகளிடத்திலும் அநாதரத்தால் 'அவாகி' யாயிருக்கும் அப்பீடுடையான் 'நிறை வொன்று மில்லாத' அடியேன் பால், 'ஆதியஞ் சேதியுருவை அங்கு வைத்திங்குப் பிறந்த' அம்மாமணி வண்ணன் நேரில் வார்த்தையும் சொன்னான்" என்கிற ஸௌசீல்யாதிகளில் ஆழங்கால்பட்டு, "கண்ணன் வெண்ணெ களவுண்டு அடிவுண்ட அ— ஆராயப்புகு, ஆறு மாதம் ஆழ்வார் மோஹித்ததெல்லாம்,' இவர் ஒரே காலத்தில் அனுபவித்தார்.

ஸூத்திரம்.

பசியால் வருந்தி வந்தவனை, கிடைத்ததோர் பழத்தைக்கொண்டு ஆதரத்துடன் ஆராதனம் செய்யப்புக்கு அவ்வாயர்கோன் புடைமின்றுபழங்களை பரவசத்தால் கீழே நழுவவிட்டு உரித்த தோல்களையே அம்மஹாமதி அமுது செய்வித்தார். ஆய்ச்சியர்கள் வெண்ணெயுண்டு வளர்ந்த அருமை திருமேனியுடையவன் அமுதினும் இனிதாக அதை அருந்தினன்.

இப்பரிமாற்றத்தைக் கண்ணுற்றவர்கள், கண்ணனைப் பார்த்து 'ஸ்ரீ விதுரர் பக்தி பரவசத்தால் அடைவு கெட பூஜிப்பித்த அவ்வஸாரமானத் தோல்களை அருந்தாமல் இனிய கனியை யுண்ணவேண்டியிருக்க, ஸர்வஜ்ஞான தேவரீர் இப்படி செய்யலாமோ! என்று விண்ணப்பிக்க, ஆச்ரிதர் தோஷங்களைக் காணக்கண்ணில்லாத அக்கண்ணன் 'அவர் பக்தி பரவசத்தால் எப்படி க்ரமம் தப்பிக் கொடுத்தாரோ அவ்வண்ணமே நானும் ப்ரேம வசத்தால் அடைவு கெடவுண்டேன், இத்தனை போக்கி தெரிந்து செய்த காரியமல்ல'வென்று மறுமாற்ற மருளினன்.

பத்திரம் முதலியவற்றைப் பகவானுக்குச் சமர்ப்பித்துப் பேறு பெற்றவர் பலருளராயினும் நால்வரைக் குறிப்பிடுவது இவ்விடத்தில் மிக பொருத்தமாகும்.

பத்திரம் சமர்ப்பித்தவன், நீசஸ்திரீயைப் புணர்ந்து அவளோடு வாழ்ந்து மண்ணிற் புதைந்திருந்த ஒரு சாளக்கிராமத்தின் மேலே துளசிச் செடியோடு மண்ணை வெட்டிக் கொட்டிய ஒரு பிராமணன். இக்கதை ஆக்நேய புராணம் காவேரி மாகாத்மியத்திற் காண்க.

புஷ்பங்கொடுத்தவன், ஸ்ரீ கஜேந்திராழ்வான்.

பழங்கொடுத்தவன், சபரி.

தோயங்கொடுத்தவன், ரந்தி தேவராஜன்.

## ரந்தி தேவன் சரித்திரம்.

ரந்திதேவர் சந்திரகுலத்தில் கீர்த்திபெற்ற ஓர் அரசர், அவர் கொஞ்சகாலம் ராஜ்யபரிபாலனம் செய்து உலக விஷயங்களை அநித்யம் என்று வைராக்கியம் தோன்றத்தன் ஐச்வர்யங்களை எல்லாவற்றையும் ஜாதிபேதமின்றி ஜனங்களுக்குத் தானம் செய்தார். பின்னர் பத்நீஸகிதராய் வனம் சென்று அங்கு வானப்ரஸ்தாசிரமத்திலிருந்து ஸத்கர்மங்களை யனுஷ்டித்துக் கொண்டிருந்தார்.

ஸூத்திரம்.

இப்படியிருக்கையில் நாற்பத்தெட்டு நாள் ஓர் உபவாஸ விரதம் இருந்து நாற்பத்தொன்பதாம் நாள் காலையில் பாரணைக்கு வேண்டி அளவு ஆஹாரம் சேகரித்துப் பாரணை செய்ய யத்தனிக்கையில் ஒரு பிராமணன் மிகுந்த பசியுடன் வந்து தனக்கு ஆஹாரம் கொடுக்கும்படி அவரைக் கேட்டுக்கொண்டான். அவர் பாதி ஆஹாரத்தை அந்தப் பிராமணனுக்குக் கொடுத்துவிட்டார். பின்னர் ஒரு சூத்திரன் பசியுடன் வர அவனுக்கும் இரங்கி கொஞ்சம் ஆஹாரத்தைக் கொடுத்தார். சூத்திரன் போனதும், ஒரு நாய் வாலைக்குழைத்துக்கொண்டு பசியுடன் வந்தது. மிகுதியாயிருந்த உணவை அதற்குக் கொடுத்துவிட்டுத் தன்னிடம் இருந்த ஜலத்தைக் குடிக்கப் போகும் தருணத்தில் சண்டாளன் ஒருவன் வந்து தனக்கு அதிக தாஹமாக இருக்கிறது, குடிக்க ஏதாவது கொடுத்தால் உபகாரமாக இருக்குமென்று கேட்டுக்கொண்டான். இந்தச்சமயத்தில் கூட அரசன் மனம் நொந்துகொள்ளாது, மிகுதியாயிருந்த ஜலத்தை அவனுக்குக் கொடுத்துவிட்டு, "எனக்கு மோக்ஷம்கூட வேண்டுவதில்லை. உலகத்தில் உள்ளோர் துயரமெல்லாம், என்னிடம் வந்துசேருவதால், அவர்களுக்குச் சுகம்வருமாயின் நான் துக்கம் அனுபவிக்கத் தயாராக இருக்கிறேன். இப்படிச்செய்தால் எனக்கு எல்லா துன்பங்களும் நீங்கிவிடும்" என்று கூறினார். அப்பொழுது பகவான் பிரத்தியக்ஷமாகி அவருக்கு ஸாந்தி உண்டாக்கும்படி செய்ய, அவர் மேலாப்பதவியை அடைந்தார்.

ஸ்ரீமத் பாகவதம். 9—21.

141. தேவையாயிராதே-துக்கரூபமாயிருக்காதே,

143. 'பாதகமும்' என்கிற 'உம்' சப்தத்தாலே ப்ராதான்யத்தைக்காட்டுகிறது. ப்ரதாநமாக யெண்ணப்படும் பாதகமாவது:— பஞ்சமாபாதகம்.

145. ஏழை-ஜ்ஞாநஹீனன். ஏதலன்-உறவு இல்லாத வன்னியன். கீழ்மகன்-ஜ்ஞாந வ்ருத்தங்களால் அத்யந்த அபக்ருஷ்டன். என்னாது-இத்தோஷங்களை எண்ணாமல். பச்சை-உபஹாரம்.

ஸ்ரீபரதாழ்வானுடைய நன்மையாவது:—

கைகேயி "ராஜன்" என்று சொன்ன சொல்லைக் கேட்டமாத்திரத்தால், தன்னை ஸ்வதந்த்ரனுக்கி விட்டாளென்னு மத்தாலே, தான் இல்லையாய்விட்டோ மென்னுமத்யந்த பீதனாய், ரத்

ஸ்தோத்திரம்:

னத்தைப் பறிகொடுத்தவன் அரசனிடம் முறையிடுமாப் போல், 'விலலாப ஸபாமத்யே' என்று அப்பெரிய ஓலக்கத்தின் கண், தன் இழவையும் நீதியையும் பலவிதமாக பகர்ந்தும் ப்ரலாபித்தும் பயன்படாமையால், பாராளும் பெருமாள் பாடே பாத சாரியாய்ப் படர்ந்து, பெருமாள் மீண்டெழுந்தருளிள வேணுமென்று தலையால் இறைஞ்சி 'ஶேஷ்யே புரஸ்தாச்சாலாயாம்' என்று பெருமாள் திருமுன்பே ப்ராயோபவேஶம்பண்ணத் துணிந்தும், விஹித்தமாய் ப்ராப்தமாய் ஸ்வரூபாநுரூபமான ப்ரபத்தியை பண்ணிண நன்மையே இவரிடத்திலுள்ளது.

இது ஶேஷிக்கு அப்போது அநிஷ்டமாயிருந்தபடியால், ப்ரபத்தியும் பலியாமல் தீமையாய் விட்டதித்தனை.

ஸ்ரீதுஹப்பெருமாள் தீமையாவது:—

ஸ்வ்ரூபத்தை மறந்து ஜாதி ப்ரயுக்தமான வழிபறித்தல், பரஹிம்ஸை செய்தல் முதலான பாபக்ருத்யங்கள்.

'இந்த தோஷங்கள் ஜன்மஸித்தமேயாகிலும் மஹாபாபரூபமானது பெருமாளுக்கு அபிமதமாகலாமோ' என்கிற சங்கையிலே 'அதுவும் புண்யம்' என்கைக்காக புண்யபாப லக்ஷணத்தை யருளிச்செய்கிறார் (யத்த்வத் ப்ரியம்) இத்யாதியாலே.

146. கொள் கலம்-இட்டு வைக்கும் பாத்திரம், பாஜநம்.

147. ஸகாஶத்திலே--ஸமீபத்திலே. அந்யபரையாய்-பர்த்தாவறியவேறு புருஷனை யடைந்தவளாய்.

148. ஸ்வாதந்த்ர்ய நிருத்தமாய்-ஸ்வாதந்த்ர்யத்தாலே கட்டுப்படாததாய். அப்ரதிஹதம்-தடையற்றது. ஒரோதசையிலே என்றது:—நம்மாழ்வார், பரதாழ்வான் முதலானவர்கள் ஆர்த்தராய், ஶரணமடைந்த காலத்தில் அவை பலிக்காமையை ஸூசிப்பிக்கிறது. அதாவது ஆழ்வார், (இன்னின்ற நீர்மையினியா முறுமை) என்று, ஶரீர ஸம்பந்தத்தைப் போக்கித் தரவேணுமென்று பல விடங்களில் ப்ரபத்தி பண்ணியும் பலியாமைக்குக் காரணம், இவரைக் கொண்டு நாட்டுக்கு வெளிச்செறிப்பு பண்ணுகை முதலான ஈஶ்வரேச்சையே. அப்படியே ருஷிகள் முதலானவர்களுடைய அபீஷ்டத்தை பூர்த்திசெய்ய திருவுள்ளங் கொண்டு, பரதாழ்வானுடைய எண்ணத்தை விபலமாக்கினதுவும் அவனுடைய கார்யமே

ஸூத்திரம்.

ஈஶ்வரன் ஸ்வாதந்த்ர்யத்தால் செய்யும் காரியத்திற்கு ஒருக்கா லும் கண்ணழிவில்லை என்கிற விடத்தில், "நிரங்குஶ- ஸ்வதந்த்ர ஞனவவன் ஈஶ்வரத்வச்செருக்காலே செய்யுமவற்றுக் கடி யாராய க்கூடாதெ"ன்னுமத்தையும் இவ்விடத்தில் அநுஸ்தேயம்.

"பட்டத்துக்குரிய யானையுமரசும் செய்யுமவை யாராயாது".

ஆசாரிய ஹ்ருதயம்.

இதன் பொருள்:—அராஜகமான தேசத்திலே பட்டத்துக்குரிய யானையைக் கண்ணைக்கட்டி விட்டால் அவ்வானை யெடுத்தவனொ ருவன்ராஜாவாமளவில் அல்லாதாரெல்லாம் கிடக்க இவனையிப்படி யெடுக்கைக் கடியென்னென்றும், ராஜாவானவன் தன் செருக்கா லே ஒருத்தியைத் தனக்கு மஹிஷியாக பரிக்ரஹிக்கு மளவில் இங் ஙனொத்த ஸ்த்ரீகள் பலருமுண்டாயிருக்க இவளை யிப்படி யிவன் பரிக்ரஹிக்கைக் கடியென்னென்று மாராய்வாரில்லை யென்றபடி.

149. அஸக்ருத் கீர்த்தநம்-அநேகந் தடவை சொல்லுகிறது.

151. மாழை-அழகு.

152. அவ்யவதாநேந-புருஷகாரத்வாரமன்றிக்கே; மத்யஸ்தரில்லாமல் கூடு பூரித்து-கூட்டைப் பூரித்து அதாவது குவித்தென்றபடி.

153. தேவும்-தேவத்வம், பரத்வம் என்றபடி. தன்னையும்-ஸ்வரூபம்.

"ந்யக்ரோத பீஜே வடவத் ப்ரணவே ஶப்த ஜாலவத், ஸித்தே ததீய ஶேஷத்வே ஸர்வார்த்தாஸ்ஸம்பவந்திஹி." இந்த ஶ்லோக த்தால் சேதனனுக்கு ததீய பாரதந்த்ர்யம் ஸ்வரூபம் என்னுமிடம் ஸித்தம்.

159. ஸாதந விஶேஷம்-ஈஶ்வரோபாயம் பல சதுஷ்டயம்-இஹலோ க ஐஶ்வர்யம், பரலோக ஐஶ்வர்யம், கைவல்யம், பகவல்லாபம். முக்தகண்டமாக-சாப்தமாக. உத்தமனாலே-ப்ரத்யே என்கிற க்ரி யையாலே. (தமிழிலக்கணத்தில் தன்மை, முன்னிலை, படர்க் கையைச் சொல்லும் பதங்களில், தன்மை சப்தத்திற்கு உத்தமன் என்று ஸம்ஸ்கிருத பாஷையில் வழங்குவது). ஆக்ஷிப்தனான-ஸித் தித்த.

160. அதில் இந்த நமஸ்ஸு-தான் என்றது:— திருமந்த்ரத்தில் நமஶ்ஶ ப்தம் ப்ராபக விரோதி கழிக்கையாலே, அதைப் போலன்றியே ப்ராப்ய விரோதியைக்கழிக்கிறது இந்த நமஸ்ஸு.

ஸூத்திரம்.

'ஆருயிர் பட்டதெனதுயிர்பட்டது' என்றத்தை 'எனதுயிர் பட்டது ஆருயிர்பட்டது' என்றன்வயித்து, என்னுடைய ஆத்ம வஸ்துவுக்கு வந்த ஹானியை, ஆருடைய ஆத்ம வஸ்து அடைந்தது என்று பொருள் கொள்ளவேணும்.

161. சட்டையாவது:— ஸ்த்ரீகள் தங்களுடைய அநந்யார்ஹதையை காட்டும் பொருட்டு சரீரத்தில் யிட்டுக்கொள்ளும் அங்கி. இது முக்யமாய் தங்கள் அவயவங்களை மறைக்க ஏற்பட்டிருந்தபோதிலும் ஆபரணம் போலே அழகாயுள்ளது.

162. ஆர்ஷம்-ருஷி ப்ரோக்தமானது; புராணம் முதலானது. இதில் சொல்லும் சப்தம் வியாகரணத்திற்கு விருத்தமாயிருந்த போதிலும் தோஷமாக எண்ணப்படமாட்டாது. லிங்கவ்யத்யயம்-லிங்கவித்யாஸம். (பால் மாறுட்டம்) அதாவது 'பீர்வா' என்று சொல்ல வேண்டியதை 'பீருணு' என்று வித்யாஸமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஸூத்ரத்தில்ச் சொல்லப்படுகிற ஸ்லோகத்தால் "ஸ்பர்ச விரோதியா·மென்று நாயகி, திருக்கழுத்திலொரு முத்துத் தாவட முட்பட பூண்பதில்லை" என்று அர்த்தம் கொள்ளும்போது, 'பீர்வா' என்கிற சப்தமிருக்கவேண்டும். 'பீருணா' என்று இருந்தபடியே அர்த்தம் சொல்லும்போது, 'ஸ்பர்ச விரோதியாமென்று நாயகன், நாயகி திருக்கழுத்திலொரு முத்துத்தாவட முட்பட பூண்பதில்லை, (அதாவது நாயகனுல் பூணப்படவில்லை) என்று கொள்ளவேணும்.

'பீர்வா' என்கிறது, ஸம்ஸ்கிருதத்தில் ஸ்த்ரீலிங்கத்தைக் காட்டும், மூன்றும் வேற்றுமை ஒருமைச்சொல்.

'பீருணா' என்கிறது, அப்படியே புல்லிங்கத்தைக் காட்டும் சொல்.

163. இறாய்க்கை-பின்வாங்குகை. எதிர் வழி·நேரே பார்க்கை, அல்லது போகதசையில் ஶேஷி அபிப்ராயாநுகுணமாக தானும் சிறிது வ்யாபரிக்கை.

இந்த ஸூத்ரத்தில் ஶேஷத்வத்தோடு கூடின பாரதந்த்ர்யமே ஸ்வரூபமென்றறுதி யிடுகிறபடியால், ஶேஷத்வ பாரதந்த்ர்யங்களினுடைய தர்மங்களை தனித்தனியே முதலில் அறியவேணும். இவைகளையறியும்போது 'ஸர்வம் அஷ்டாக்ஷராந் தஸ்தம்' என்று சொல்லுகிறபடியே திருமந்திரத்தை யிட்டே நிரூபிக்க வேணும்.

ஸூத்திரம்.

அப்படி நிரூபிக்கும்போது அதில் ப்ரணவத்தால் ஶேஷத்வமும், மநஸ்ஸால் பாரதந்த்ர்யமும் சொல்லப்படுகிறது. அதாவது மகாரவாச்யனான ஜீவன் எம்பெருமானுக்கே ஶேஷமென்று ப்ரணவத்தாலும், அசித்தைப்போல் அவனுடைய இஷ்டத்திற்கு விநியோக பாத்திரன் ஜீவன் என்று நமப்பதத்தாலும் அர்த்தமாகிறது. இந்தப்ரணவந்தன்னில் ஜீவன் ஜ்ஞாதாவென்று மகாரத்தின் தாது வர்த்தத்தாலும், அவன் எம்பெருமானுக்கு அனந்யார்கஶேஷ பூதன் என்று, அகார உகாரங்களாலே சித்திக்கிறபடியால், இந்த சேதனன் ஜ்ஞாதாவாய் அத்தால் கர்த்தாவாய், அத்தால் போக்தாவாகிறான். அப்போது இவன் செய்யும் கார்யம் ஜ்ஞானத்திற்கு அவிருத்தமாயும், போகத்தில் தனக்கு அந்வயமற்றதாயும் ஏற்படாது. அதாவது 'ஆட்கொள்வானொத்தென்னுயிருண்டமாயன்' என்னும் ஸ்வபாவத்தை யுடைய ஈஶ்வரன், போகதசையில் இவனை கைங்கரியம் கொள்ளும்போது, இந்த சேதனன் தன்னுடைய ஶேஷத்வத்தை தான் காப்பாற்றிக் கொள்ளவேணுமென்று உத்தியோகிப்பான். அப்போது அது ஈஶ்வரனுக்கு மிடருபிடியாயிருக்கும். இப்படி அவன் முகவிலாஸத்தை கெடுக்கச் செய்தது கேவலம் இவனுடைய ஜ்ஞானத்தால் வந்தது. ஆகையால் ப்ரணவத்தின் அர்த்தத்தை விபஜித்துப்பார்க்கும்போது சேதனன் தன்னுடைய ஶேஷத்வமாகிற ஸ்வரூபத்துக்கு விரோதம் வாராமல் எவ்வளவு மட்டும் தான் கைங்கரியம் செய்யலாமோ அவ்வளவுதான் இவன் செய்வானென்றும் மற்றப்படியானால் அதற்கு இசையானென்றும் நிச்சயிக்கப்படுகிறது.

பாரதந்த்ர்யத்தைக் காட்டுகிறது நமப்பதமானபடியால், இந்த பாரதந்த்ர்யத்தின் லக்ஷணத்தை யறியும்போது, ஜீவன் ஜ்ஞானவானாயிருந்தபோதிலும் அசித்தைப்போல் எம்பெருமானுக்கு விநியோக யோக்யதையைக் காட்டுகிறது.

ஆக ப்ரணவத்தால் ஏற்பட்ட கேவல சேஷத்வமாவது:—சேதனன் தன் சேஷத்வமாகிற ஸ்வரூபத்தை நோக்கிகொள்ள வேணுமென்று போக தசையில் அவனுடைய கைங்கரியத்தில் இசையாதொழிகை.

நமப்பதால் சொல்லப்படும் கேவல பாரதந்த்ர்யமாவது:—அசித்தைப்போல் தன்னை ஆள்கொள்ளக்கடவதென்று செய்த்தலை நாற்றுப்போல் செயலற்றுக் கிடக்கை.

ஸூத்திரம்.

ப்ரணவத்தாலும் நமப்பதத்தாலும் வருகிற, சேஷத்வத்தோடு கூடின பாரதந்த்ர்யமாவது:—இந்த சேதனனை கைங்கரியம் கொள்ளும் காலத்தில் போகதசையில் போகானுரூபமாக இவனும் சில வியாபாரங்களை மேல் மேல் செய்யவேண்டியதாயிருக்க, அசித்தைப்போல் எதிர்விழிகொடாதிருக்கை.

நமப்பதத்தாலும் ப்ரணவத்தாலும் வருகிற, பாரதந்த்ர்யத்தோடுகூடின சேஷத்வமாவது—ஈஶ்வரன் போக தசையில் சேதனனை கைங்கரியம் கொள்ளும்போது கேவலம் தன்னுடைய முகமலர்த்திக்காக இச்சேதனன், அசித்தைப்போல் இல்லாமல் சில வியாபாரங்களை போகானுரூபமாகச் செய்யுமவை.

ஆகையால் கீழ்ச்சொன்னவைகளில் முதல் மூன்றும் ஒரோர் காரணங்களாலே போக விரோதியாகையால், அவைகள் த்யாஜ்யங்களாய் இவைகளே ஆதரணீயங்களாகக் கடவது. இத்தால் உண்டாகும் பலன்களை முமுக்ஷுப்படியில் அருளிச் செய்கிறதாவது- " இந்நினைவு பிறந்தபோதே க்ருதக்ருத்யன்; இந்நினைவு இல்லாதபோது எல்லா துஷ்க்ருதங்களும் க்ருதம்; இந்நினைவிலே யெல்லாஸுக்ருதங்களுமுண்டு; இதன்றிக்கே யிருக்கப்பண்ணும் யஜ்ஞாதிகளும், ப்ராயச்சித்தாதிகளும் நிஷ்ப்ரயோஜனங்கள்; இது தன்னிலே எல்லாபாபங்களும் போம் எல்லாபலங்களுமுண்டாம்'

இவ்விடத்தில் ஆசாரிய ஹ்ருதய வாக்யங்கள் அநுஸந்தேயமாவது:—

" ஶேஷத்வ போக்த்ருத்வங்கள் போலன்றே பாரதந்த்ர்ய போக்யதைகள் ".

" ஜ்ஞாந சதுர்த்திகளின் மேலேயிறே ஆநந்த ஷஷ்டிகளுக்குதயம் ".

(இதன் அர்த்தத்தை ஆசாரியன் ஸந்நிதியில் கேட்டுத் தெளிய வேண்டும்).

இத்தர்மங்களை இராமாயண புருஷர்களில் இளைய பெருமாளும் ஸ்ரீ பரதாழ்வானும் அனுஷ்டித்துக் காட்டினபடி:—

பெருமாள் காட்டிற்கு எழுந்தருளும்போது இளைய பெருமாளைப்பார்த்து 'நில்' என்று சொன்ன மாத்திரத்தில் சேஷி திருவுள்ளம் போல் நிற்கவேண்டியதாயிருக்க, கிஞ்சித்காரமில்லாதபோது ஶேஷத்வமில்லை என்று தன் ஸ்வரூபத்தைப்பார்த்து, பெருமாளை

ஸூத்திரம்.

நிர்பந்தித்தும் 'குருஷ்வமாம் அனுசரம்' என்று ப்ரார்த்தித்தும் பின் தொடர்ந்தது, கேவல ஶேஷத்வமாகும்.

ஸ்ரீ பரதாழ்வான் வஸிஷ்டர் முன்னிலையில் "ராஜ்ஜியம்சாஹம்ச ராமஸ்ய" என்று தன்னை ஸ்வதந்த்ரனாக நினையாமல் சொத்தாக பாவித்து வார்த்தை யருளிச்செய்ததால் கேவல பாரதந்த்ர்யத்தின் வேஷத்தை வெளியிட்டார்.

பாரதந்த்ர்யத்தோடு கூடின ஶேஷத்வத்தையும், இவர் அநுஷ்டித்துக் காட்டினதுண்டோ வென்னில்? பெருமாள் நாட்டைத் துறந்துக் காடேறச் சென்றவளவில், சொத்தை ஆளவேண்டியது ஸ்வாமியானபடியால், தான் நியமிப்பது நியாய மற்றதென்று நினைத்து, அவரை மீண்டு எழுந்தருளப் பண்ணுவதில் ஒரு நிலையாய் நின்ற விடத்திலும் பலியாமையால், அது ஶேஷிக்குத் திருவள்ள மில்லை என்றெண்ணி தன் ஸ்வரூபம் அழிய மாறியாகிலும், ஸ்வாமி திருவுள்ளத்தைப் பின் செல்வதே கர்த்தவ்யம் என்றெண்ணி "ஆருரோஹ ரதம் ஹ்ருஷ்ட:" என்று ஸந்தோஷத்தோடே ஸ்ரீ பரதாழ்வான் மீண்டார் என்பது ஸுஸ்பஷ்டம்.

இந்த பாரதந்த்ர்யத்தோடு கூடின ஶேஷத்வத்தை, நம்மாச்சரியர்கள் பல விடங்களிலும் அநுஷ்டித்துக் காட்டின ஐதிஹ்யங்களாவன:—

(1) ஒரு நாள் எம்பெருமானார் நீராடி யெழுந்தருளும்போது பெரிய நம்பி யெதிரே யெழுந்தருளி எம்பெருமானாரை தண்டம் ஸமர்ப்பிக்க, அவருந் தலை துலிக்கிக்கொண் டெழுந்தருளினார். அப்போது பெரிய நம்பி அருகிருந்தவர்கள் நம்பியைப்பார்த்து, ஶிஷ்யரான எம்பெருமானாரை ஆசார்யரான தேவரீரே தண்டம் ஸமர்ப்பிக்கலாமோ? இது ஶிஷ்யாசார்ய க்ரமமன்றே? இது எதுக்காக இப்படி செய்தருளிற்றென்ன ; பெரிய நம்பி அருளிச்செய்தபடி:— ஆளவந்தார் திருவடிகளிலொழிய அடியேன் சிரஸ்ஸு வணங்காது. ஆளவந்தாரும் முதலிகளும்போலே யிருந்தாராகையாலே இவரே நமக்காசார்யரென்றருளிச்செய்து எழுந்தருளினார். அவர்களும், எம்பெருமானாரண்டையிலே யெழுந்தருளி விண்ணப்பம் செய்தபடி:—ஆசார்யரான பெரிய நம்பி தண்டம் ஸமர்ப்பித்தால் சிஷ்யரான தேவரீர் கூட தண்ட மிடாமலும், அஞ்சலி பண்ணமலும் போனல் சிஷ்யாசார்ய க்ரமம் நடக்குமோ? இப்படி

ஸூத்திரம்.

தேவரீர் செய்யலாமோ வென்ன; வாரீர்காள் இப்போது நாம் நம்பிக்கு இஷ்டம் செய்யவோ, அநிஷ்டம் செய்யவோ? என் நினைவாலே அவர் திருவுள்ளத்தைப் பின் செல்லவேணுமென்று போனேம். அதினால், தோஷமில்லை யென்றருளிச்செய்யக் கேட்டு, நம்பி திருவுள்ளமும், எம்பெருமானார் திருவுள்ளமும் ஒன்றாயிருந்ததென்று கொண்டாடினார்கள்.

உடையவர் வார்த்தாமாலை.

(2) எம்பெருமானார் திருவடிகளிலே ஆழ்வான் தண்டம் ஸமர்ப்பித்து விண்ணப்பஞ் செய்தபடி:— ஆழ்வார்கள் எம்பெருமானைக்கண்டவுடன் மங்களா சாஸநமே யாத்ரையாயிருக்க, ஸ்ரீபீஷ்மர் பரமாத்ம ஜ்ஞாநமுடையவராயிருக்க, பகவத் பரிக்ருஹீதரான பாண்டவ பக்ஷபாதத்திலே சேர்ந்திராதே பாண்டவர் ப்ரதிபக்ஷத்திலே நின்று விரோதி கார்யஞ்செய்து கண்ணன் திருமேனியிலே அஸ்த்ர ஶஸ்த்ரங்கள் விடும்படியான செயல் கூடினபடி யெங்ஙனே? யென்ன; அது கேளீர், ராஜாக்களைப் பணிக்கனாய் ஸாமம் பயக்குவிப்பானவன் ஆயமறிந்து தானிச்சித்தபடி தட்டிக்கொட்டி ஸ்ரமம் பழங்கி அவனோடே போர் பொருதுமாபோலே; பீஷ்மாதிகளும், ஸர்வேஶ்வரனுடைய லீலா ரஸாதீநராக ஸங்கல்பாந்தர்கதராகையாலே ஈஶ்வரனென்றே யறிந்து செய்யக்கூடும். ஆழ்வார்களெல்லோரும் பெருமாளுடைய ஸௌந்தர்யாதிகளைக்கண்டு அத்தலைக்கு என்ன தீங்குவருகிறதோவென்று வயிறு பிடித்து மங்களா ஶாஸநத்திலே தத்பராராயிருப்பர்கள். பீஷ்மாதிகள், லீலா ரஸாதீநராக ஸங்கல்பாந்தர்கதராகையாலே அவர்களோடு லீலா ரஸ மநுபவிப்பரென் றருளிச்செய்தார்.

உடையவர் வார்த்தாமாலை.

(பணிக்கன்-உபாத்தியாயன்; கூத்து முதலிய பயிற்றுவோன். ஆயம்-ஸ்நேஹம்.)

(3) ஒரு நாள் ஸ்வாமி உடையவர் இரண்டு ஸ்ரீ வைஷ்ணவர்களை ஏற்படுத்தித் ததீயாராதனைச் செலவுக்குத் திரவியம் இல்லையென்று அருளிச்செய்து நீங்கள் பிள்ளை யுறங்காவல்லி தாஸர் திருமாளிகைக்குப் போய் அவர் இல்லாதபோது, அவர் தேவி பொன்னாச்சியார் நித்திரை செய்யும் காலையில், பதிவிருந்து அத்தேவியார் அணிந்திருக்கும் ஆபரணங்களைக் கழற்றிவரச்சொல்லி அனுப்பி

ஸூத்திரம்.

னர். அப்படியே அந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஸமயம் பார்த்து உள்புகுந்து ஒரு பக்கமாய் ஶயனித்திருந்ததைக்கண்டு அந்த பக்கத்து ஆபரணங்களை கழற்றிக்கொண்டார்கள். உடனே இது தெரிந்து அந்த அம்மாள் தமது மற்றொரு பக்கத்து நகைகளையும் பாகவத கைங்கர்ய நிமித்தம் கழற்றிப் போகட்டுமே யென்று மெதுவாய்த் திரும்ப, அந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள் பொன்னாச்சியார் விழித்துக் கொண்டாரென்று கழற்றின ஆபரணங்களை உடையவர் முன் வைத்துத் தண்டன் ஸமர்ப்பித்தார்கள். இது நிற்க பிள்ளையுறங் காவல்லி தாஸர் திருமாளிகைக் கெழுந்தருளின போது நடந்த விருத்தாந்தங்களை கேள்வியுற்றார். அப்போது தன் தேவியை மற்றொரு பக்கத்து நகையை ஏன் அவர்கள் கழற்றும்படி ஸம்மதப் படவில்லை என்று கேட்டார். அதற்கு அந்தம்மாள் "மற்றொரு பக்கம் நகையும் பாகவத விநியோக மாகட்டு மென்று திரும்பினேன், உடனே அவர்கள் அடியேன் விழித்துக்கொண்டதாக நினைத்துப் போய்விட்டார்கள்" என்று விண்ணப்பிக்க, அப்போது பிள்ளை யுறங்காவல்லி தாஸர் தேவியார் மீது மிகவும் கோபித்துக்கொண்டு "நீ அசித்தைப்போல் இருக்கவேண்டியது உன்னுடைய ஸ்வரூபமாயிருக்க, ஸ்வதந்த்ரப்பட்டு ஒரு பக்கம் திரும்பாதிருக்கும் பக்ஷத்தில் வந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள் மற்ற ஆபரணங்களையும் கழற்றி ததீயாராதன கைங்கரியத்தில் உபயோகப்படுத்தியிருப்பார்கள். உனக்கு பாரதந்த்ர்ய ஜ்ஞான மில்லாதபடியால் ஆசாரிய கைங்கரியம் இழக்க வேண்டியதாயிற்று. இனி உன்னுடைய ஸம்பந்தம் வேண்டுவதில்லை" என்றுசொல்லித்தான் மூன்று நாள் பரியந்தம் அமுது செய்யாமலிருந்தார். இத்தை கேள்வியுற்ற ஸ்வாமி உடையவர், அவர்களை வரவழித்து நடந்த காரியங்களை நன்றாகக் கேட்டு பிள்ளை உறங்காவல்லி தாஸரைப் பார்த்து உமக்கு கேவல பாரதந்த்ர்யஜ்ஞானம் தெரியும், உம்முடைய தேவிகளுக்கு ஸ்வரூபத்திற்குச் சேர்ந்த பாரதந்த்ர்யத்தோடு கூடின ஶேஷத்வ ஜ்ஞானம் போரும். அவள் ஸம்பந்தத்தால் இந்தஜ்ஞானம் உமக்கு வரவேண்டியதாயிருக்க நீர் பிணங்கியிருப்பது தகாது" என்று அருளிச்செய்தார்.

குருபரம்பரை, பன்னீராயிரப்படி.

இந்த ஐதிஹ்யத்தால் சில ஸம்ஶய முண்டாகும். அதாவது "ஸ்வாமி எம்பெருமானர் மடத்துத் ததீயாராதனச் செலவிற்கு, ஸ்ரீ வைஷ்ணவர்களைக்கொண்டு பாகவதர்களுடைய பொருளைக்

ஸூத்திரம்·

களவு காணும்படி நியமிப்பார்களா ?” என்பது. இது ஸ்வாமி
வேணுமென்று நடத்திக்காட்டியதேயன்றி இயல்பாக வந்ததல்ல.

எம்பெருமானார் முதலிகளுடன் திருக்காவேரிக் கெழுந்தருளி
நீராட்டஞ்செய்து அநுஷ்டானங்களை முடித்து வருகையில், முத
லியாண்டான் ஒரு பக்கத்திலும் கூரத்தாழ்வான் ஒரு பக்கத்திலு
மாக ஈரவாடை வஸ்திரத்தை ஏந்திவர அவ்வஸ்திரத்தின்மீது தம
து கைகளை வைத்துப் பிடித்துக்கொண்டு, வருவர். அக்காலமில்
பிள்ளையுறங்கா வல்லி தாஸர் ராஜஸ்தானத்திற்குப் போய் சேவ
கம் ஒப்புவித்துத் திரும்பும்போது, ஸ்வாமியைக் கண்டு தண்டன்
ஸமர்ப்பித்து நிற்பர். எம்பெருமானாரும் அவரைத் தமது பக்கல்
வரவழித்து அவர்மீது தமது திருக்கைகளை வைத்துக்கொண்டு
தினந்தோறும் மடத்துக்கெழுந்தருளுவர். இவ்விதம் நடந்துவரு
ங்காலத்தில் முதலிகளனைவரும் அத்யாஶ்சர்யத்துடன் ஒருவர்க்
கொருவர் அந்தரங்கமாய் யோசித்துக்கொண்டிருப்பார்கள். இவர்
களுடைய தன்மையை யறிவிக்கவேணுமென்று,ஒருநாள்மடத்தில்
சில ஸ்ரீவைஷ்ணவர்கள் உலர வைத்திருந்த திருப்பரி யட்டங்களை
வேறு சில ஸ்ரீ வைஷ்ணவர்களைக் கொண்டு அப்பரியட்டங்களில்
ஒவ்வொரு சாண் சேதித்து வரும்படி நியமித்தார். அவர்களும்
அவ்வண்ணம் செய்த மறுநாள், அப்பரி யட்டங்களைக் கண்ணுற்ற
ஸ்வாமிகள், தூசு (துணி) போனால் தூசு போயிற்றென்று துணி
யாமல், தங்கள் ஸர்வ ஸ்வத்தையும் பரி கொடுத்தவர்கள் போல்
பரிதபித்தும் பாகவதர்களை பரிபவித்தும், ஒருவருக் கொருவர்
பிணங்கி சீறுபாறுமாயிருப்பதைக் கண்டு, “வாரிகோள் ! ஸ்வாமி
காள் !, ஒரு கந்தலை ஸ்ரீ வைஷ்ணவர்கள் விரும்பியெடுத்ததாகயி
ருந்தால், நீங்கள் அவர்கள் கொண்டதற்குக் கைக்கூலிக் கொடுத்து
ஸந்தோஷிக்க, வேண்டியிருக்க அவர்களை தூஷிப்பதும், பழைய
துணி போனால் கோடி யுடுப்போம் என்று உகந்திருக்க வேண்டி
யதாயிருக்க இடி விழுந்தாப்போலிருக்கும் உங்கள் ஸ்வரூபத்தை
யும், தன் தேவியின் சில ஆபரணத்தைக் கொண்டவர்கள், ஸர்வ
த்தையும் திருவுள்ளம் பற்றவில்லையே யென்று வ்யாகுலமுற்ற
பிள்ளை யுறங்காவல்லி தாஸரின் ஸ்வரூபத்தையுமறிந்த உங்களுக்
கு, அவர் விஷயத்தில் யான் நடந்துகொண்டது கூடுமென்று
தோற்ற வில்லையா ?” என்று எம்பெருமானார் அருளிச்செய்தார்.

நல்லடிக்காலத்தில் நம்மாசிரியர்கள் ஸ்ரீ வைஷ்ணவர்களைத்தங்

ஸூத்திரம்.

களேபாதி ப்ராக்ருதிமான்களாக நினைத்திருக்கும் புல்லிமை யின்றிக்கே யாயிற்றிருப்பது. திருவுடை மன்னர், செழுமாமணிகள், நிலத் தேவர், தெள்ளியார், பெரு மக்கள், பெருந்தவத்தர், உருவுடையாரினையார், ஒத்துவல்லார், தக்கார், மிக்கார், வேதம்வல்லார், வேதவிமலர், சிறு மாமனிசர், எம்பிரான்றன் சின்னங்கள் என்று நம் குலநாதரான ஆழ்வார்கள் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு இப்படி திருநாமம் சாற்றுகையாலே கேவலம் தன்னேடொக்க ஒரு மனுஷ்யரென்று ஸ்ரீ வைஷ்ணவர்களை நினைத்திருக்கை பாகவதாபசாரம்.

171. திருமலையில் வாஸத்துக்கு அங்கத்வமும், ஆழ்வார் திருவுள்ளத்தில் வாஸத்துக்கு அங்கித்வமும், ஸித்திக்கையாலே ஸாத்ய ஸாதன பாவம் லபிக்கிறது.

172. கனைகடல்-சப்திக்கிற கடல்.

174. ஹேதுத்வயம்-ப்ராப்ய ப்ரீதிவிஷயத்வ க்ருதஜ்ஞதைகள்.

175. ஸிம்ஹாவலோகநமாவது:— பூர்வம் சொல்லிவந்த அர்த்த விசேஷங்களை மறுபடி ஜ்ஞாபகத்திற்கு கொண்டுவரும்பொருட்டு அவைகளை சுருங்கச்சொல்லுவது. அது எதைப்போல வென்னில் 'ஸிம்ஹமானது குகையைவிட்டு வெகுதூரம் போய் சற்று நின்று திரும்பி தான் வந்த வழி எவ்வளவென்று பார்ப்பதுபோல்'

ஆந்தரகுணம்:—அந்த: பாவம்-ஆந்தரம். அத்தால் அந்தர குணங்களைச்சொல்லுகிறது.

176. "உபாஸகன் ஈஸ்வரனை புஜிப்பிக்கவேணுமென்று நினைத்திருக்கும்,ப்ரபந்நனை ஈஸ்வரன்புஜிப்பிக்கவேணுமென்றுநினைத்திருக்கும்"

உடையவர் வார்த்தாமாலை.

177. விருப்புறினும் தொண்டர்க்கு வேண்டுமிதமல்லால்
திருப்பொலிந்தமார்பனருள் செய்யான்—நெருப்பை
விடாதகுழவி விழ வந்திருந்தினுலும்
தடாதே யொழியுமோதாய்.

ஞான ஸாரம்.

179. அவஸரப்ரதீக்ஷனாய்- ஸமயம்பார்த்துக்கொண்டு. சூழல்-ஆலோசனை, உபாயம்.

181. அக்நி-ஆஶ்ரயாஶ:. ஆஶ்ரயம்-அஶ்நாதி-தன்னுடைய இருப்பிட

ஸூத்திரம்.

த்தைத் தானே புஜிக்குமது. தான் பற்றிவந்த விறகைத்தானே நீறுக்கும்.

திருமலையில் ஜீயர் அருளிச்செய்யும் வார்த்தை:— அஹங்காரமாகிறது-ஒரு சண்டாளன், மமதையாகிறது- அச்சண்டாளனுக்கு பார்யை; ராகத்வேஷங்களாகின்றன-இவர்களுடையப்ரஜைகள், இவ்வஹங்காரம் ஒன்றையுங்கொல்ல இவை இத்தனையும் நசிக்கும். எங்ஙனேயென்னில்; பதிவ்ரதையாகையாலே பார்யை அநுமாணம் (உடன்கட்டை யேறுதல்) பண்ணும், மூலைகொடுப்பாரில்லாமையாலே சிசுக்கள் நாக்குவற்றி நசிக்கும்''

வார்த்தாமாலை.

182. இடையாட்டம்-ப்ரஸ்தாபம், வ்யாபாரம்.

184. ஆடுகிறபாம்பு—கோபத்தால் ஆடுகிற ஸர்ப்பம். ஆகாம்யநர்த்தம்—இனி வரும் துன்பம்.

185. நீர்ப்பண்டம்—பனிக்கட்டி. மாந்துகை-க்லேசிக்கை.

186. பல-பலவிதமான விஷயாந்தரங்களை.

187. பூயஸ்தை-ஆதிக்யம். தர்மம்-நித்யநைமித்யாதிகள். துஷ்டம்—தூஷணம்: நிந்தனை. ஸ்வைரஸஞ்சாரம்-காமுகனாய்த்திரிதல்.

188. ப்ரமேயங்களை-அர்த்தங்களை.

189. மஹாநர்த்தமாவது-ஜன்மாந்தரத்திலும் தப்பிக்கவொண்ணாதபாபம். தந்த்ரேண-ஒன்றாகச்சேர்த்து

190. ததநுகுணரூபமாவது— திருமண்காப்பு, திருமணித்தாவடம், திருவிலச்சனை முதலான வேஷம்.

'உருவுடைத்துப்போலே' என்றது, யதாபூர்வம் ஸ்வரூபத்தையுடைத்தானது போலே என்றபடி.

191. உண்டை-குறுக்கிழை. பாவு-நெட்டிழை, வரிசைபடப் பரப்பின நூல். பாறி-ஓடி. பாற-நன்றாக.

192. ஆனைத்தொழில்-அதிமாநுஷ வியாபாரம்.

193. பகவதுக்தியை-'அஸ்வமேதத்தில்' பகவத்வசனத்தை.

194. பாகவதாபசாரம் தான் அநேகவிதம்:— அதில் ப்ரதாநமான அபசாரம் பன்னிரண்டு. அவையெவையென்னில்:—

ஸூத்திரம்.

1. ஜன்மநிரூபணம்:— பகவத்பக்தர்களை "எக்குற்ற வாளரெதுபி றப்பேதியல் பாக நின்றோர், அக்குற்றமப்பிறப் பவ்வியல்பே ந ம்மையாட் கொள்ளுமே" என்று நினையாமல், சூத்ரன், நிஷாத ன், சண்டாளன் என்று தர்மவியாதர், ஸ்ரீகுகபெருமாள், மாற னேர்நம்பி முதலானவர்களை குறைய நினைத்தல்.

2. ஶரீரநிரூபணம்:— பகவத்பக்தர்களை தேவதிர்யக் மநுஷ்ய ஸ் தாவர ரூபங்களான சதுர்வித சரீரங்களை பரிக்ரஹித்திருந்தாலு ம் இவர்கள் ஆணென்றும் பெண்ணென்றும் அஸுர ராக்ஷஸரூப மென்றும், மிருகமென்றும், பட்சியென்றும் நினைத்து, பொன்னாச் சியார், ஸ்ரீவிபீஷணாழ்வான், ஸ்ரீகஜேந்த்ராழ்வான், ஸ்ரீ பெரிய உ டையார், திருவனந்தாழ்வான் முதலானவர்களை தாழ நினைத்தல்.

3. பாகநிரூபணம்:— ஷட்பாவ விகாரமான பால்ய யௌவந வ்ரு த்தாதி வயோநிரூபணஞ் செய்கை.

4. ஆச்ரமநிரூபணம்;— ப்ரஹ்மசர்ய கிரஹஸ்த வாநப்ரஸ்த ஸன்னி யாஸ, ஆச்ரமங்களி லிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களை பேத புத்தி செய்தல்.

5. அவ்யவநிரூபணம்:— திருமேனியிலேயாதல்; அவயவங்களிலே யாதல், ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஒரு தோஷமுண்டாகிலும், அவ ர்கள் ஜ்ஞானமே ஸர்வாவயவ பூர்த்தியென்று, நினையாமல் அத் தோஷங்களைப் பரார்த்திக்கை.

6. ஆலஸ்யநிரூபணம்:— பரபந்நனானவன் தம்முடைய திருமேனி யை வியாதி முதலியவைகளால் யுபேக்ஷை பண்ணி ஹேயமாயி ருக்குமிடத்தில் குத்ஸியாமல் அவர் விக்ரஹமே போக்யமாக பா ராதிருத்தல்.

7. வாஸநிரூபணம்:— கோயில் திருமலைபெருமாள் கோவில் நி ன்று மெழுந்தருளின ஸ்ரீவைஷ்ணவர்களை எத்தனை ஆதரிப்பார் களோ, அப்படியே ஒரு குப்பத்திலிருந்து எழுந்தருளின ஸ்ரீவை ஷ்ணவர்களை அவர்களிருந்த ஸ்தலமே திவ்யதேசமென்று உத் யேச்ய ப்ரதிபத்தி செய்யாதிருக்கை. இவ்விடத்தில் சாண்டிலி யின்கதை அநுஸந்தேயம்.

8. பந்து நிரூபணம்:— எழுபத்து நான்கு ஸிம்மாஸனாதிபதிகள் மற்றும் பிரஸித்தமான ஆசார்யர்கள் தவிர, உபாய சூந்யராய்

ஸூத்திரம்.

ஒதுங்கிவர்த்திக்குமவர்கள் வந்தனைக்கு அயோக்கியரென்று பேத புத்தி பண்ணுகை.

10. ப்ரகார நிரூபணம்:—திருவாராதனம், திருநந்தவனஞ் செய்கிற வர்களிடத்தில் பூஜ்ஜியதாப் ப்ரதிபத்தியும், திருமாலை திருவி ளக்கு சாத்துபடி மற்றுமுள்ள பரிசாரங்கள் செய்கிறவர்களையும் தேவதாந்த்ர ஸாதனாந்தராதிகளை விட்டு 'சோம்பரையுகத்திபோ லும்' என்கிறபடியே ஒன்றுஞ் செய்யமாட்டாதே வெறுமனே யி ருக்கிறவர்களை வேஷதாரிகளென்று நினைவுசெய்து, அவர்களை ஸாமான்னியர்களாக புத்திபண்ணுவது.

11. வர்த்தனநிரூபணம்:— ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமேனியாத்ரை ததீயாராதனார்த்தமாகவாதல், கிருஷி உத்யோக வியாபாரவர்த் தநாதிகளைச் செய்து வருவராயின், அவர்களை மதியாதிருத்தல்.

12. தோஷநிரூபணம்:— ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமேனி போகமா ன ப்ரவ்ருத்தியில் தோஷத்தை ஏறிடுவது.

"பாகவதாபசாரமாவது:—ஸ்ரீவைஷ்ணவனோடொக்க தன்னை யும் ஸமான ப்ரதிபத்தி பண்ணுகை."

ப்ரமேயரத்னம்.

எம்பெருமான் பக்கலிலே அபராதம் பண்ணினால் ஜந்மாந்தரத் திலே யீடேறலாம். ஸ்ரீவைஷ்ணவர்கள் பக்கலிலே அபராதம் ப ண்ணினால் ஜந்மாந்தரத்திலுமில்லை. ஆசார்யன் விஷயத்தில் அப சாரம் பண்ணின நாலூரானும் ஈடேறினான். பகவத் விஷயத்தி ல் அபராதம் பண்ணின சிசுபாலனுமீடேறினான். பாகவதவிஷய த்திலபசாரம் பண்ணினார் இன்னாரீடேறினாரென்று இதுக்கு மு ன்பு கேட்டறிந்ததில்லை.

பிராட்டியும் (நகஸ்சிந்நாபராத்யதி)என்னுமவளாகையாலே தன் விஷயத்தில் அபராதம் பொறுக்கும். (மித்ரபாவேந) என்னுமவ னாகையாலே ஈஸ்வரனும் தன் விஷயத்தில்அபராதம்பொறுக்கும். பாகவதவிஷயத்தில் அபராதம் பண்ணினால் புருஷகாரபூதையா ன பிராட்டி ஒரு கையும் ப்ரபத்தியுபதேசம் பண்ணின வாசார் யன் ஒரு கையுமாக ப்ராப்யஸ்தலத்தேறப் பிடித்துக்கொண்டு போகிலும் ப்ரதிபந்தகமாயே விடும்.

எம்பெருமானார் தம்முடைய அந்திமதசையிலே, "ஸகல வேத ங்களிலும், ஸகல ஶாஸ்த்ரங்களிலும், ஸகலமான ஆழ்வார்கள்

ஸூத்திரம்.

திவ்ய ப்ரபந்தங்களிலும் ஸகலாசார்ய பாசுரங்களிலும் பார்த்த விடத்தில் ஒருவதிகாரிக்கு த்வயமொழிய புருஷார்த்தமில்லை, ஆசாசார்யாபிமாநமொழிய மோக்ஷோபாயமில்லை, பாகவதாபசாரமொழிய மோக்ஷவிரோதியில்லை" என்றருளிச்செய்தார்.

வார்த்தாமாலை.

## அவர்கள் திருநாமத்தின் ஏற்றமாவது:—

நல்லடிக்காலத்தில் நம்மாசிரியர்கள் ஸ்ரீ வைஷ்ணவர்களைத் தங்களோபாதி ப்ரக்ருதிமான்களாக நினைத்திருக்கும் புல்விமை யின்றிக்கே யாயிற்றிருப்பது. திருவுடை மன்னர், செழுயாமணிகள், நிலத் தேவர், தெள்ளியார், பெரு மக்கள், பெருந்தவத்தர், உருவுடையாரினையார், ஒத்துவல்லார், தக்கார், மிக்கார், வேதம் வல்லார், வேதவிமலர், சிறு மாமனிசர், எம்பிரான்றன் சின்னங்கள் என்று நம் குலநாதரான ஆழ்வார்கள் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு இப்படி திருநாமம் சாற்றுகையாலே கேவலம் தன்னோடொக்க ஒரு மனுஷ்யரென்று ஸ்ரீவைஷ்ணவர்களை நினைத்திருக்கை பாகவதாபசாரம்.

பகவதபசாரம் பண்ணுகையாவது—எம்பெருமானுடைய நற்சீவனான ஸ்ரீ வைஷ்ணவர்கள் திறத்துப்பண்ணும் அபசாரம். பாகவதாபசாரம் பண்ணுகையாவது ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய உயிர்நிலையான எம்பெருமான் திறத்துப்பண்ணு மபசாரம். பாகவத ஸம்ஶ்லேஷம் பகவத் ஸம்ஶ்லேஷத்தையும் பிறப்பிக்கும். பகவத் ஸம்ஶ்லேஷம் பாகவத ஸம்ஶ்லேஷ பர்யந்தமாயல்லதிராது. அபாகவத ஸம்ஶ்லேஷம் பாகவத விஶ்லேஷத்தையும் பிறப்பித்து பகவத் விஶ்லேஷத்தையும் பிறப்பித்து இவனையும் முடித்துவிடும். பாகவத ஸம்ஶ்லேஷம் பகவத் ஸம்ஶ்லேஷத்தையும் பிறப்பித்து அபாகவத விஶ்லேஷத்தையும் பிறப்பித்து இவனையும் எடுத்துக் கரைமரஞ்சேர்த்துவிடும்.

மாணிக்கமாலை.

ஜன்ம நிரூபணத்தால் பெருமாளுக்குப் பிறந்த சீற்றத்திற்கு ஓர் நிதர்சனம்:—

அரக்கர் அமர் ஆரம்பத்தில் முடியுடை மன்னன் சடை முடி தரித்துத் தரைமேல் நிற்க, மாயயாக்கை பூண்டு மாதாவை மாயம் செய்த மா பாதகன் மகுடத்தை மண்மீது மடித்தி, மாயோன் பா

ஸூத்திரம்.

லடைந்த அம்மாருதியை, "த்வயி கிஞ்சித் ஸமா பந்நே கிம் கார்யம் ஸீதயா மம" என்னுமாப்போலே "இன்றுஶ்ரயித்த உமக்கு ஒரு வாட்டம் வரில் நித்யாஶ்ரிதையான பிராட்டியாலும் காரியமில்லை" என்று பெருமாளருளிச்செய்தார். (இவ்விடத்தில் 'வாட்டம் வரில்' என்றது ராவணன் திருவடியைப் பார்த்து "ஹே குரங்கே உன்னுடைய ஜாதித் தொழிலைக் காட்டினயே" என்று ஜன்ம நிரூபணம் பண்ணுமதென்று நம்மாசாரியர்கள் நிர்வாஹம்.)

(ஶ்லோகார்த்தம்.)

"த்வயி கிஞ்சித் ஸ்மாபந்நே கிம் கார்யம் ஸீதயாமம
பரதேந மஹா பாஹோ லக்ஷ்மணேந யவீயஸா
ஶத்ருக்நேந ச ஶத்ருக்ந ஸ்வஶரீரேண வாபுந:"

பிராட்டி நிமித்தமாகவிறே யுமக்கு கிஞ்சித் அவமதி படவேண்டுகிறது, இதுக்கு நிமித்த பூதையானவவளையும் வேண்டேன்; அவரிலும் ப்ரியதமரான பரதன் நிமித்தமாக வுமக்கு வாட்டம்வரில் அவனையும் வேண்டேன்; அவனுக்கும் ப்ரியனான ஶத்ருக்நன் நிமித்தமாக வுமக்கு வாட்டம் வரில் அவனையும் வேண்டேன்; இவ்வளவுமல்ல, இவர்களித்தனை பேர் நிமித்தமாகவு மொரு வாட்டம் வரில் இவர்களித்தனை பேரையும் வேண்டேன்; இவர்களுக்கெல்லாம் ஜீவநமிறே திருமேனி, அத்தையும் வேண்டேன்; ஆனபின்பு உமக்கொரு வாட்டம் வராமலிருக்கு மித்தனையே நமக்கு வேண்டுவதென்று கருத்து"

## ஜீயர் அரும்பதம்.

196. அர்ச்சா—அவதார—உபாதானஸ்ம்ரு, சப்தங்களுக்கர்த்தம். அர்ச்சா—'பூஜா ப்ரதிமயோ:' என்கையாலே அர்ச்சா ஶப்தம் ப்ரதிமாவாசகம். 'அவதார' ஶப்தம் ஆவிர்பாவ வாசகம். 'உபாதான' ஶப்தம் பரிமாணுஶ்ரயத்ரவ்ய வாசகம். 'ஸ்ம்ரு'— சிந்தாயாம் என்று சிந்தாவாசி, அதாவது ஆஶ்ரிதர் உகந்தது. இத்தை ஆழ்வார் "நெஞ்சினால் நினைப்பான் யவனவனாகும்" என்றருளிச்செய்தார். க்ரூரம்—பாதகம், அதாவது பகவன் நிக்ரஹ ஹேது.

199. த்ரிஶங்கு வ்ருத்தாந்தத்தால் குல குருவை விரோதித்துக்கொண்டு வேறு குருவை யடைவது, அனர்த்த ஹேதுவாமென்பது யறியத்தக்கது. ஆனால் "ஜ்ஞான மநுஷ்டான மிவை நன்றாகவே யுடையனான, குருவை யடைந்தக்கால்" 'திருமா மகள்கொழுநன்

ஸூத்திரம்.

தானே வைகுந்தம் தரும்' என்றருளிச் செய்ததற்கு விரோதம் வாராதோ வென்கிற ஶங்கை பிறக்கக்கூடும். இவ்விடத்தில் த்ரிஶங்குவினுடைய குல குருக்கள் ஜ்ஞாநாநுஷ்டான மில்லாதவர்களென்று சொல்லவொண்ணாது. இவர்கள் திரு வுள்ளத்திற்கு விரோதமாக நடந்தபடியால் ஶக்திமானான விஸ்வாமித்திரனும் அவனை ஈடேற்ற வஶக்த்தனான். ஆகையால் குல குருவின் அநுமதியைக்கொண்டு ஒரு ஶக்திமானை யடைந்தால் காரியமாமித்தனை. கேவல நாஸ்திக குரு விஷயமாய் இப்பாசுர மருளிச்செய்ததாகக்கொள்ளவேணும்.

202. ஸகல வேதங்களையும்-திராவிட வேதங்களையும்.

203. அபிவாதநாதிகள்-அபிமுகீ கரணார்த்தமாக ஸ்வ நாமோச்சாரண பூர்வகமான நமஸ்காரம். விசாரித்து-ஆலோசித்து. இவ்விடத்தில் ''மதுரகவி சொன்ன சொல் நம்புவார் பதி வைகுந்தம் காண்மினே'' என்றத்தையும், '' கூரத்தாழ்வான் திருமகனார் திருவவதரித்த பின்பு இடைச்சுவர் தள்ளி இரண்டு விபூதியும் ஒன்றாய்த்து'' என்றத்தையும் ஸூசிப்பிக்கிறது. இன்னமும் '' ஆற்றில் கெடுத்து குளத்தில் தேடாதே'' என்கிற வசனம் ''ஒருவரிடத்தில் அபசாரப்பட்டு மற்றொருவரிடத்தில் பொறுக்கவேணுமெ''ன்று அநுவர்த்தித்தல் கூடாதென்பதைக் காட்டுகிறது.

இவ்விடத்தில் பெரிய திருவடி நாயனார் மானஸமாகவே அபசாரப்பட்ட போதிலும், தானும் மானஸமாகவே பொறுத்தருளவேணுமென்று நினையாமல் காயிகமாகவும் வாசிகமாகவும் சென்று ப்ரார்த்தித்த பிறகு, முன்பு போலே யானாரென்றஇந்தஐதிஹ்யத்தால், ஒரு கரணத்தாலே அபசாரம் வந்ததாயிருந்தாலும் அத்தை போக்கிக்கொள்ள த்ரிகரணங்களும் வேணுமென்பதை நன்றாய் யறியவேணும்.

ஆனால் '' மநஸ்ஸாலே நினைத்ததுக்கு அநுதாப முண்டாகவே ஈஸ்வரன் க்ஷமித்தருளும்.'' என்றது, ப்ரத்யக்ஷமாய் அவர்களில்லாத காலத்தில் என்று கொள்ளவேணும்.

வைநதேயருக்கு வந்த அபசாரமாவது:—

1. பாகவதை விஷயத்தில் வாஸ நிரூபணம்.

2. இவள் பாதசாரிணி யாகையாலே கடலையும் மலையையும் கடந்து ஒரு திவ்யதேசத்திற்கு எழுந்தருள சக்தியற்றவள்.

ஸூத்திரம்.

3. நாம் பக்ஷிராஜா ஸர்வேஸ்வரனுக்கு வாகனம் என்கிற நினைவு

4. காலவனை காலால் இடிக்கிக்கொண்டு வந்தாப்போல், இவனையும் இடிக்கிக்கொண்டு போவோம் என்று காலவனுக்கு ஸமானமாக நினைத்த அபசாரம்.

அயநம்-ஸூர்யனுடைய கமனம். தக்ஷிணாயநம்-தக்ஷின திக்கமனம், உத்தராயணம்-உத்தரதிக் கமனம். மகராதி ஆறு மாதத்துக்கு உத்தராயணமென்றும், கடகாதி ஆறு மாதத்திற்கு தக்ஷிணாயன மெனப்பெயர். மகர ஸங்கராந்தியான புண்ய காலம். அவ்வளவு போராது:— இப்படி கலங்கி வார்த்தை சொல்லுவது போராதென்றபடி. மூசிப்பு-இளைப்பாறுதல்; சோம்பல்.

வாக்கொன்றை நன்றாகக் குறிக்கொள்ளாவிடில் ஸகல துன்பங்களையு மடைவார் என்பதை, "யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்-சோகாப்பர் சொல்லிழுக்கப்பட்டு" என்கிற குறளாலும் அறியத்தக்கது.

204. நிரபேக்ஷ ஸாதநம்-பூர்ண ஸாதநம்.

206. உத்தானைகாதசி-ஸர்வேஸ்வரன் க்ஷீராப்தியில் யோக நித்ரையில் நின்றும் திருப்பள்ளி யுணரும் திநமான கார்த்திக சுக்ல ஏகாதசி. விதாஸ்ரமம்-வாமனாச்ரமம். ஸாத்வததந்த்ர நிஷ்ணாதனாய்-ஸத்வ ப்ரதிபாதகமான சாஸ்த்திர தர்மத்திலே நியதனாய். (சாஸ்த்திர மாமது—ஸ்ரீ பாஞ்சராத்திரம்)

நம்பாடுவான் நைச்சியத்திற்கு ஜன்மம் காரணமா? ஜ்ஞானம் காரணமா? நம்பாடுவான் ஜன்ம ஸித்தமான நைச்சியத்தையுடைடவரென்று சொல்லும் ப்ரகரணத்தில் ஜன்ம ஶப்தத்திற்கு ஜ்ஞான ஜன்மம் என்று சிலர் சொல்லுகிறார்கள். அதாவது இவருடைய நைச்சியத்திற்குக் காரணம் ஜ்ஞானமே யொழிய, ஜன்மத்தால் வருவதல்ல வென்றுநிஷ்கர்ஷித்து, ஜன்ம ஶப்தத்திற்கு ஜாதி பரமாய் அர்த்தம் கொள்ளாமல், ஆத்ம பரமாய்க்கொண்டு 'ஜ்ஞான ஜன்மம்' என்று பொருள் கொள்ளுகிறார்கள். ஜன்ம ஶப்தம் ஜ்ஞானத்தைக் காட்டுமோவென்றால், சில ப்ரமாணங்களில் ஜன்ம சப்தத்திற்கு ஜ்ஞானபரமாய் அர்த்தமாகிறது. எங்ஙனேயென்னில்:— 'அன்று நான் பிறந்திலேன்-பிறந்த பின் மறந்திலேன்' என்றும், 'செத்தத்தின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்றெங்கே கிடக்கும்' என்றும், "வித்யாதஸ்தம் ஜநயதி" என்று இத்யாதி ப்ரமாணங்களால் ஜ்ஞானம் 'பிறந்ததாகப் பொருளா

லைஷூத்திரம்.

கிறது. இந்த நியாயத்தை வுட்க்கொண்டு 'ஜன்மம் நைச்சியவித்தம்' என்கிற விடங்களில் ஜன்ம சப்தத்திற்கு ஜ்ஞான ஜன்மமென்று ரூடியாக பொருள் கூறுவது கூடாது.

இவ்வர்த்தம் கோல்விழுக்காட்டில் நம்பாடுவான் முதலானவர்களுக்கு நைச்சியம் ஜ்ஞானத்தால் ஏற்பட்டதாகச் சொன்னாலும் மற்றும் ஜ்ஞானமில்லாதவர்களுக்குண்டாகும் நைச்சியத்திற்கு, இத்தையே காரணமாகச்சொல்லுவது பொருந்தாது. ஏனெனில்; லோகத்தில் ஜ்ஞானமில்லாதவன் தாழ்ந்த ஜன்மத்தில் பிறந்ததை கொண்டு எல்லோரிடத்திலும் தன் ஜன்ம வித்தமான நைச்சியத்தைக்காட்டுவதை எப்போதும் காணலாம். இதற்கு ஜ்ஞானம் காரணமாகமாட்டாது. ஆகையால் இவர்களுக்குவரும் நைச்சியம் இயல்பாகவேயுள்ளது. மற்றவர்களுக்கு ஜன்மத்தால் அஹங்காரமும். இவர்களுக்கு ஜன்மத்தால் நைச்சியம் வந்த ஏற்றமுண்டு. ஆகையால் இவர்களுக்கு நைச்சியம், ஜன்மவித்தமென்று கொண்டாடத்தட்டில்லை. ஜன்மத்தை ஜ்ஞானபரமாக மூலக்காரரும், விசதவாக்சிகாமணிகளான வ்யாக்யானக்காரர்களும் எங்கும்வெளியிடவில்லை. அஸ்மத் ஆசாரியரும் இவ்வர்த்தம் ஸாதித்ததில்லை. அவர்கள் திருவுள்ளத்திற்கும் இது சேராது.

(பர்யாயஶப்தங்களைக்கொண்டு ஒரு அபிப்ராயத்தை வேறு விதமாகமாற்றிவிடலாமென்பதை, 'தாமரைக்கண்ணனுக்கு'பதில் 'கழுக்காணிக்கண்ணன்' என்று ஒரு வித்வான் கூறியதை இவ்விடத்தில் அறியத்தகுந்தது. இதன் விவரணம் ஈட்டில் காணலாம்.)

'நைச்யம் ஜந்மவித்தம்' என்பதற்கு ஓர் ஐதிஹ்யமாவது:—

பெரிய திருநாள் தீர்த்தம் ப்ரஸாதித்துப்பெருமாளெழுந்தருளுகிறபோது எம்பெருமானார் தாமும் தீர்த்தமாடி ஸேவித்தெழுந்தருளுகிறவர், பிள்ளை யுறங்காவில்லிதாஸர் திருக்கை கொடுத்துவர, இதென்னென்று சிலர் விண்ணப்பம் செய்ய, ஜந்மமுயர்ந்திருக்கத்தாழநின்றோமே யென்கிற அபிமானமுண்டிறே யெல்லார்க்கும், அக்கொத்தையுமில்லாத வரிறேயிவரென்று அருளிச்செய்தருளினார்.

வார்த்தாமாலை.

207 ஒரு தலை - ஒரு தட்டு, ஒரு கூட்டம்.

பட்டர், ஸகலசாஸ்த்திரங்களையும் அத்யயனம் பண்ணி பரதத்வத்

ஸூத்திரம்·

தில் நிச்சயஜ்ஞானமில்லாத ஓர் ஶாஸ்திரி எழுந்தருளினல், வா, போ, என்று ஏகவசனத்தாலும், ஶாஸ்த்திரஜ்ஞானமில்லாமல் பர தத்வத்தை நிச்சயமாய் அறிந்த பாகவதரை ஆதரித்து எழுந்தருள வேணுமென்று ப்ரதிபத்திபண்ணியஐதிஹ்யம் இவ்விடத்தில் அநு ஸந்தேயம்.

208 'ஏழையேதலன்' இத்யாதியாலே அபிஜநவித்யாவ்ருத்தங்களால் தண்ணியரான ஸ்ரீ குகபெருமாள் விஷயமாக அவை யொன்றை யும் பாராதே ஶரண்யரான பெருமாள்தாம் 'உன் தோழி' என்று புருஷகாரஸம்பந்தத்தையும், 'உம்பி' என்று பாகவதாஹங்காரத்தை யுமுண்டாக்கி, 'தோழன் நீ எனக்கு' என்று தாமுமங்கீகரித்து, 'இங்கொழி' என்று தாமுகந்த கைங்கர்யத்தையும் கொண்டாரெ ன்கையாலே ஜந்மவ்ருத்தாதிகள் அப்ரயோஜகம், பகவத்க்ருபை யே ப்ரயோஜகமென்னுமிடம் வ்யக்தம்.

பரகாலநல்லான்ரஹஸ்யம்·

210 விஶிஷ்டன்-அதிகன், மேலானவன்.

211 ப்ரஷ்டாவானவன்-முன்நடக்கிறவன்,

212 ப்ரம்ஶம்-ப்ரமம், நசித்தலையுண்டாக்குமது. ப்ரம்ஶஸம்பாவனையா வது-நழுவுதலுக்கு ஹேதுவானது. அதஸ்மிந்தத்புத்தியாவது-ஶ்ரேஷ்டமல்லாததிலே ஶ்ரேஷ்டபுத்திபண்ணுமது. பயஜனகமாவ து:—'கன்னத்தைக்கவ்விவிக்கும் ஹீநஜந்மமென்று த்யாகநிஷ்ட் டர்க்கு விளைக்குமது.

ஆ-வி.

213 பாவிக்கவேணும்-அப்பியஸிக்க வேணும்.

217 "ஶ்வபசோபி" ஶ்லோகத்தால் விஷ்ணுபக்தன் ஶ்வபசனயிருந்தா லும் த்விஜனைக்காட்டிலும் அதிகன் என்று சொன்னத்தைக்கொ ண்டு இந்த த்விஜன் விஷ்ணுபக்தியுடையவனு? அல்லது விஷ்ணு பக்தியில்லாதவனு? என்று ஶப்தத்தால் தோற்றவில்லை. ஆனல் இவ்விடத்தில் சொன்ன த்விஜன் விஷ்ணு பக்தியுடையவனென் றே கொள்ளவேணும். அப்போதுதான், விஷ்ணுபக்தியுடையஶ்வ பசன் விஷ்ணு பக்தியுடைய த்விஜனைக்காட்டிலும் அதிகன் என்று அர்த்தமாகும். இத்தை வேறுவிதமாக, விஷ்ணுபக்தியில்லாத த்வி ஜனைக்காடடிலும், விஷ்ணுபக்தியுடைய ஶவபசன் அதிகன்என்று அர்த்தம்கொண்டால், கீழ்ச்சொன்ன ப்ராகரணத்திற்கும், ச்லோ

ஸூத்திரம்.

கத்தின் பூர்வோத்தர வாக்யங்களுக்கும், ருஷியின் திருவுள்ளத்திற்கும் சேராது.

1. ப்ரகரணத்திற்குச் சேராததாவது:—

உத்க்ருஷ்டாபக்ருஷ்ட ஜன்மாக்களிருவர்க்கும், பகவத் ஸம்பந்த முண்டானல் இரண்டு மொக்குமோ வென்னில்? "ஒவ்வாது" என்று அருளிச்செய்ததால், இருவர்க்கும் பகவத் ஸம்பந்த முண்டாயிருந்தும் ஒருவர் மற்றொருவரைக்காட்டிலும் விலக்ஷணர் என்று ஸூத்ரக்காரர் அறுதியிட்டிருக்கிறபடி இந்த ச்லோகமும் பகவத் ஸம்பந்தமுடைய த்விஜனைக்காட்டிலும், பகவத் ஸம்பந்தமுடைய ச்வபசன் அதிகன் என்று சொல்லுவதாகவே கொள்ள வேணும்.

2. ச்லோகத்தின் பூர்வோத்தர வாக்யங்களுக்குச் சேராததாவது:—

ச்லோகத்தின் பூர்வார்த்தத்தில் சொன்ன த்விஜ சப்தத்திற்கு விஷ்ணு பக்தியில்லாத த்விஜன் என்று சொல்லிவிட்டால், பின்னும் உத்தர வாக்யத்தில் "விஷ்ணு பக்தி விஹீநஸ்து" என்று சொன்னத்தையே சொல்லக்கூடாது. அப்படியே சொல்லிற்றென்றால் "கூறியது கூறல்மிகை படகூறல்" என்கிற தோஷத்தில் விழும். ஆகையால் இவ்விடத்தில் த்விஜ சப்தத்திற்கு விஷ்ணுபக்தியுடைய த்விஜனையே காட்டித்தாயிற்று.

3. ருஷி திருவுள்ளத்திற்குச் சேராததாவது:—

ருஷிதிருவுள்ளத்தைப் பின்பற்றிய நம்மாசாரியர்கள் தங்கள் ஸித்தாந்தத்திற்கு இத்தையே ஆதாரமாக எடுத்திருக்கிறபடியால் இருவர்கள் அபிப்பாரயம் அதுவே என்று நிச்சயிக்கலாம். வ்யாக்யானத்தில் "இங்ஙனன்றாகில் கீழ்ச்சொன்ன வர்த்தத்துக்கு இது ப்ரமாணமாக மாட்டாதிறே." என்றருளிச்செய்தது, இருவர் திருவுள்ளமும் ஒன்றேயாகக்காண்கைக்காக.

இன்னமும் உத்தரவாக்யத்தில் "ச்வபசாதம:" என்கிற பதத்திற்கு, விஷ்ணு பக்தியில்லாத ச்வபசனை சொல்லிற்றாகக் கொள்ள வேணும்.

தாலத்திழிகுலத்துச் சண்டாள மானுலும்
மேலத்தவாதனின் மேன்மைத்தே—கோலக்
குறுங்குடி வாழ்மாயன் குரைகழற்காளாகப்
பெறுங்குடியாய் வாழ்வார் பிறப்பு.

நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதி.

ஸூத்திரம்.

(தாலத்து-பூமியின்கண். மேல்-மேன்மையாகிய, அ-அந்த, தவ ரதனின்-தவசிகளைப் பார்க்கிலும். ஆள் ஆகப்பெறும்-அடிமையா கப் பெறுகின்ற.)

227. அபக்ருஷ்ட ஜந்மாவானவன் அந்த சரீரந்தன்னிலுத்க்ருஷ்டனுக க்கூடுமென்னுமிடத்துக்கு அநேக உதாஹரணங்களாவன;—

## விச்வாமித்ரர் ப்ரஹ்மர்ஷியான சரித்திரம்.

1. ஓர் ஸமயத்தில் விச்வாமித்ரர் கடுந்தபஸ்ஸு செய்துகொண்டிரு க்கையில் தர்ம தேவதை அவரைப் பரீக்ஷிப்பதற்காக வஸிஷ்டரூப த்துடன் வந்து, "எனக்குத் தாங்கமுடியாத பசி உண்டாயிருக்கி றது. சீக்ரம் அன்னம் போடு" என்று கேட்ட மாத்திரத்தில், விச்வாமித்ரர் உடனே திவ்யமான சருவை ஸித்தம் செய்தார். ஆனால் அதில் கவனத்தை யெல்லாம் செலுத்தினதால் அதிதி யைப் பூர்ணமாய் உபசரிக்க முடியவில்லை. பிறகு இதா தபஸ்வி களால் கொடுக்கப்பட்ட அன்னத்தை அந்த அதிதி புஜித்தபிறகு, விச்வாமித்ரர் தான் சமைத்த அன்னத்தைக் கொடுக்க எடுத்துக் கொண்டுவந்து கொடுக்க, "எனக்கு வேண்டாம். நான் புஜித் தாய்விட்டது. நீ இங்கேயே இரு" என்று அந்த அதிதி போய் விட்டார். அவரிடத்தில் வைத்த பக்தியால் விச்வாமித்ரர் அந்த அன்னத்தை தலையில் வைத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு அசையாமல் காற்றைப் புஜித்துக்கொண்டு கட்டையைப்போல் நின்று கொண்டிருந்தார். நூறு வர்ஷங்களான பிறகு தர்ம தேவ தை மறுபடியும் வஸிஷ்ட ரூபத்துடன் அங்கே வந்து, விச்வாமித் ரர் அன்னத்தைத் தலைமேல் வைத்துக்கொண்டு அசையாமல் நிற் பதைக்கண்டு ஸந்தோஷ மடைந்து, அந்த அன்னம் அதிக உஷ் ணமாயும் அப்போது சமைக்கப்பட்டதுபோலும் இருக்கக் கண்டு அதை ஒப்புக்கொண்டு, "ப்ரஹ்மர்ஷே! நான் உமது பக்தியால் மிகவும் ஸந்தோஷித்தேன்" என்று ஆசீர்வதித்துச் சென்றார். உடனே விச்வாமித்ரருடைய க்ஷத்ரியத்தன்மை நீங்கி, ப்ரஹ்மர்ஷி யானர்.

பாரதம் உத்யோகபர்வம்-106.

(சரு-அக்கினிஹோமம் செய்யத்தகுந்த அன்னம்; தேவருணவு.) இன்னமும் விச்வாமித்ரர் பிராம்மணரான சரித்திரம்— பாரதம் அநுஶாஸன பர்வம் தானதர்ம பர்வம். 7-வது அத்யாயத்தில் காணலாம்.

ஸூத்திரம்.

ஸ்ரீராமாயணம் பாலகாண்டம் 65-வது ஸர்க்கத்தில் பாரக்கக்காணலாம்.

2. கல்லாயிருந்த அஹல்யை, அதே ஜன்மத்தில் ஸ்த்ரீரூபத்தையடைந்தாள் என்பதை ஸ்ரீராமாயணத்தில் விசதமாகக் காணலாம்.

3. த்ரிசங்கு விஷயம் 198-வது ஸூத்திரத்தில் கண்டுகொள்ளுவது.

4. வீதஹவ்யனும் அவன் வம்சமும் பிராம்மணரான சரித்திரம்:—

வைவஸ்வத மனுவின் புத்ரனான சர்யாதியின் வம்சத்தில் வீதஹவ்யனென்று ஒரு அரசன் பிறந்தான். அவனுடைய புத்ரர்கள் காசீ தேசத்தரசனான ஹர்யச்வன்மேல் படையெடுத்து அவனைக் கொன்றார்கள். சில் காலங்கழித்து ஸுதேவனென்ற அவனுடைய புத்ரனான திவோதாஸன் அவர்களுடன் வெகுகாலம் யுத்தஞ்செய்து தோற்றுப் பாரத்வாஜ மஹர்ஷியைச் சரணமடைந்தான். அவர் ஒரு யாகஞ்செய்து, ப்ரபஞ்சத்திலுள்ள ஸகல சக்திகளையும் ஒன்று சேர்த்து, அவைகளுடன்தான் திவோதாஸனுக்குப் புத்ரனாய்ப் பிறந்தார். அந்த ப்ரதர்த்தனன் வீதஹவ்யனுடைய புத்ரர்களை வெகு ஸுலபமாய் ஸம்ஹரித்தான். வீதஹவ்யன் ராஜ்யத்திலிருந்து ஓடிப் பிருகு மஹர்ஷியைச் சரணமடைந்தான். ப்ரதர்த்தனன் அவனைத் துரத்திக்கொண்டு அவருடைய ஆச்ரமத்திற்குச் சென்றான். பிருகு அவனை விதிப்படி உபசரித்து, வந்த காரணத்தைக் கேட்டார். ப்ரதர்த்தனன், "ஸ்வாமி! வீதஹவ்யன் இங்கே வந்திருக்கிறான். அவனுடைய புத்ரர்கள் என் வம்சத்தையழித்தார்கள். அவர்களைக் கொன்றேன். இவன் மிகுந்திருக்கிறான். இவனையும் கொல்லப்போகிறேன்; வெளியில் அனுப்புங்கள்" என்றான். அதற்குப் பிருகு, "குழந்தாய்! இங்கே க்ஷத்ரியன் ஒருவருமில்லையே. இங்கிருப்பவர்களெல்லோரும் ப்ராஹ்மணர்களல்லவா" வென்றார். ப்ரதர்த்தனன் மஹர்ஷியின் தருமத்தையறிந்து சிரித்து "அப்படியா! என் வீர்யத்தின் மஹிமையால் வீதஹவ்யனுக்கு ஸ்வபாவமாயுள்ள க்ஷத்ரிய ஜன்மம் போய் ப்ராஹ்மண ஜன்மம் வந்ததைப்பற்றி அளவற்ற ஸந்தோஷமடைந்தேன். உத்திரவு பெற்றுக்கொள்ளுகிறேன்" என்று விஷத்தைவிட்டு விட்ட ஸர்ப்பம்போல வந்த வழியே சென்றான். இப்படிப் பிருகு மஹர்ஷியின் தபோ மஹிமையால் வீதஹவ்யன் ப்ரா

ஸூத்திரம்.

ஹ்மண ஜன்மத்தையும், அதற்குரிய ஞானத்தையும் ஆசாரத்தையு மடைந்தான்.

பாரதம் அநுசாஸனபர்வம்-8.

5. ஒரு நாய் பயந்து ரிஷியைச் சரணமடைந்து ஒரு ஜன்மத்தில் வரவர மேற் பிறப்பை யடைந்த வைபவம்:—

ஒரு அரண்யத்தில் ஒரு ருஷியினிடம் நாய் வெகு ப்ரீதியுடன் வசித்து வந்தது. இந்த நாயை கொல்ல ஒரு சிறுத்தைப் புலி அங்கு வந்து சேர்ந்தது. நாய் பயந்து ரிஷியைச் சரணமடைந்தது. அந்த நாயை ருஷி தன் சக்தியால் சிறுத்தைப்புலியாக செய்து விட்டார். பிறகு ஒரு பெரிய புலி இந்த சிறுத்தையை கொல்ல வந்தது. இது ருஷியைச் சரணமடைந்தவுடன் பெரிய புலியா யிற்று. இவ்விதமாக அந்த நாய் யானையாகவும், சிங்கமாகவும், சரப்மாகவும் ஆயிற்று. இந்த சரபமான நாய் ருஷியை கொல்ல நினைத்தது. அந்த ரிஷி சரபத்தை பழய நாயாக செய்துவிட்டார்.

6. ப்ரமரகீட ந்யாயத்தாலும் ஒரு ஜன்மத்தில் வேறு சரீரமடைந் ததைக் காணலாம்.

"வேட்டு வேளானும் போலே...ஸாம்யம் பெற ஊதி" என் கிற வாக்கியத்தைக் கண்டுகொள்க.

ஆசாரிய ஹிருதயம்.

231. தத்வார்த்தங்களை இன்னார் சொல்லி இன்னார் கேட்கவேணுமெ ன்கிற நியதியில்லை.

பிதா புத்ர ஸம்வாதத்தில் பிதாவுக்கு புத்திரன் உபதேசம் பண் ணினன், அகஸ்த்யருக்கு லோபா முத்தரை யுபதேசம் பண்ணி னன். கௌசிக்கு ருத்தானுபதேசித்தான். ஆசாரிய புத்ரனை சுக்ரனுக்கு ஜனகனுபதேசித்தான். பரம ருஷிகளுக்கு தர்ம வ்யா தனுபதேசித்தான். ஆண்டாள் பட்டர் பக்கலிலே ஶ்ரவணம் பண் ணியிருந்தாள். "பராதாயா ப்ரமேயாய குஹோ ககனகோசர: என் கிறபடியே குஹப் பெருமாள் ஸ்ரீபரதாழ்வானுக்கு ராம விருத்தாந் தத்தைச் சொன்னர். "விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லா ழிவெண்சங்கே" என்று நாய்ச்சியார் ஸ்ரீ பாஞ்சஜந்யத்தைக்கேட் டாள். ஆகையால். பகவத் வைபவம் சொல்லுமவன் ஆசாரியன். கேட்குமவன் ஶிஷ்யன்.

தத்வபூஷணம்.

ஸூத்திரம்.

ப்ரம்ஸம்-மறதி. ஸந்திக்தங்கள்-ஸந்தேகங்கள். வ்யங்க்யம்-குறிப்பு; குற்றுவார்த்தை.

233. ஜ்ஞாநாதிகையாய் பரிவையான ஸ்ரீ ஸபரியின் ஜலஸ்பர்ஸமில்லாத திருக்கையாலே முன்புதான் பரீக்ஷித்து த்விஜஸ்பர்சமுள்ள தித்தித்தவற்றைத் திருப்பவளத்திலே கொடுக்க, துறைவாசியறிந்து விடாய் கெடவமுது செய்தருளினர்.

ஆ-வி.

அபிஜநாதிகளால் வருமபிமாநகந்த மற்ற ஸ்ரீ ஸபரியின் ஸ்பர்சமுள்ளவை ஆத்ம குணகதர்சிகளான விசேஷஜ்ஞர்க்கு அதீவ பாவந போக்யங்களாயிருக்கு மென்னுமிடத்திற்கு மற்றுமோர் ஐதிஹ்யமாவது:—

பிராட்டியைப் பிரிந்த துக்கத்தால், கோதாவரியே! நீ ஸீதையைக் கண்டாயா? என்று பெருமாள் கேட்டபோது பயந்து உண்மையைச் சொல்லாத கோதாவரியைப் பார்த்து, இது முதல் ஜனங்களுக்கு ஸ்நாநம் செய்ய யோக்யதை யற்றவளாய்ப் போகக்கடவாய் என்று சாபங்கொடுத்தார். பின்பு கோதாவரி ருஷிகளை முன்னிட்டுக் கொண்டுபோய் இராகவனைச் சரண மடைந்தாள். பெருமாள் க்ருபை பண்ணி, கோதாவரியே! சபரி நீராடின தீர்த்தத்தோடு நீ சேர்ந்தால் உனக்கு என்னுடைய சாபம் விட்டுப்போகுமென்று சொல்லி தன் வில்லின் நுனியினுற்கீறி சபரீ நீராடின தீர்த்தத்தை கோதாவரியோடு சேர்த்து விட்டார். அது முதல் கோதாவரி எல்லாத்தீர்த்தங்களிலும்ஸ்ரேஷ்டமாய் விளங்குகிறுள்.

பராசரவிசிஷ்ட பரமதர்மசாஸ்த்ரம்.

ஸ்ரீ ராமாயணத்திலே சபரியினுடைய வேற்றம் சொல்லுகையால் உபேய வேற்றம் வெளியிடுகிறது.

ப்ரமேயரத்னம்.

234. இவ்விடத்தில், பட்டர் பிள்ளை யுறங்காவல்லி தாசரை ஸம்ஸ்கரித்தாரென்பது யறியத்தகுந்தது.

மாறன்—|—நேர் = மாறனேரென்றத்தால், நம்மாழ்வாருக்குச்சமானமானவர். மால்—|—தன் = மாறன், என்றத்தால், நம்மாழ்வார் திருமாலுக்குச் சமானர். மாறனேர் நம்பி சுமார் 900 வருஷங்களுக்கு முன்னிருந்தவர். யமுனைத் துறைவரது 'அரும்பெற்ற புதல்வரான' ஓர் உத்தம மாணுக்கர். கழனி திருத்திப் பிழைக்

ஸூத்திரம்.

கும் பள்ளர் வகுப்பில் பிறந்தவர். இவர் இரண்டாம் சடகோபரோ! என்று ஸ்ரீ யாமுனாசார்யரும் அதிசயிக்கும்படி பகவத்விஷய ஞானத்தின் பரிமளம் வீசி, மெய்யடியார் உள்ளங்களை யெல்லாம் கவர்ந்தது. ஓர் அம்மையார், காலக்ஷேப கூடத்திற்குத் தம் மனை விட்டு மேல் வீடு அடைந்ததும், மாறனேர் நம்பியின் திருவடி தீண்டியதால் கூடம் பரிசுத்தமாய் விட்டதென்று ஆளவந்தார் அருளிச்செய்வர். பெரியநம்பி செய்த சரமகைங்கரிய மாட்சியும், பெரிய நம்பிகள் அநியாயமாய் ஜாதி ப்ரஷ்டம் செய்யப்பட்டதும், அவரது செல்வமான அத்துழாய் அம்மை, தன் பெண்மை வாய் திறந்து, ஆணையிட்டுத் தேரை மறித்து, 'தந்தையும் தாயுமான' பெரிய பெருமாளிடத்தில், தன் தந்தை விஷயமாகக் குறையிரந்து நியாயம் பெற்றதும், முனிவாகனரான ஆழ்வாரைப்போல், நம்பிகளும், அண்ணன், தோளின் மேல் எழுந்தருளி, நம்பெருமாளது விசேஷ ப்ரீதிக்கு இலக்கான விஷயம் விளக்கப்பட்டன.

இராமாநுஜன்.

235. வம்ச பூமிகளை யுத்தரிக்கக் கீழ்க்குலம்புக்க வராஹ கோபாலரைப் போலே யிவரும் நிமக்நரை யுயர்த்தத் தாழவிழிந்தார். (தாழ்விழிந்தார்-சதுர்த்த வர்ணத்திலே திருவவதரித்தார்.)

ஆசாரிய ஹ்ருதயம்.

236. கினியச்சுமந்து-நெருங்க சுமந்து.

237. ஸத்கர்ஹிதம்-நிந்தையோடு கூடியது.

238. ஆஸ்தாநம் பண்ணுகை-ஏறிட்டுக்கொள்ளுகை.

239. அபிபவித்து-அநாதரித்து, திரஸ்கரித்து. கந்தல்-ப்ரதிபந்தகம், கெடுதல்,

"பொன்னைப் புடமிடப் புடமிட உருச்சிறுகி ஒளிவிஞ்சி மாற்று எழுமாப்போலே, ஸங்கோசமற்று ஜ்ஞாந விகாஸ முண்டானவாறே நாய்ச்சிமாருடனே ஸாம்யஞ்சொல்லலாயிறே யிருப்பது இவ்வாத்மாவுக்கு என்று திருக்கோட்டியூர் நம்பி யருளிச்செய்வர்."

240. நைஸர்கிகமாக-நித்யமாக. கடி-அழகு, வாசனை, புதுமை, மலர்-புஷ்பம்.

241. நிலைக்கு நிலை-அவஸ்தைகள் தோறும்.

242. த்விபரார்த்தமாவது:— ப்ரஹ்மாவுடைய ஆயுஸ்ஸு பரமெனப் பெயர் பெறும். அதிற் பாதியாகிய ஐம்பது வருஷம் பரார்த்த

ஸூத்திரம்.

மென்று சொல்லப்படும். தற்காலத்தில் இருக்கிற ப்ரஹ்மாவுக்கு முதற் பரார்த்தமாகிய ஐம்பது வயஸ்ஸூஞ்சென்றன. இப்போது நடப்பது இரண்டாம் பரார்த்தத்தில் முதல் வருஷத்து முதன் மாசத்து முதற்றினம். இது சுவேதவாககற்ப மெனப்படும், பிரளய ஜலத்தில் முழுகியிருந்த பூமியை ஈஶ்வரன் வெள்ளைப்பன்றியுருவங்கொண்டு மேலே எடுத்த கற்பமாதலிற் சுவேதவராக கற்பமெனப்பட்டது. இக்கல்ப்பத்தில் ஆறு மநுக்கள் இறந்துபோனார்கள். இப்போது ஏழாம்மநுவாகிய வைவஸ்வத மநுவினுடைய காலம் நடக்கின்றது. இவருடைய காலத்திலே இருபத்தேழு சதுர் யுகங்கள் சென்றன. இப்போது இருபதெட்டாஞ் சதுர் யுகத்துக் கலியுகம் நடக்கின்றது.

243. அப்யுதயங்கள்-இஷ்ட ப்ராப்திகள், விருத்திகள். அபதே ப்ரவ்ருத்தர்-அமார்க்கத்தில் நடக்கிறவர், வேதசாஸ்த்ர விருத்தமான ஆசாரமுள்ளவர். ஸாத்வஸம்-பயம். ஏழையர்-பெண்கள். இழிப்ப-நிந்திக்க. நிரை-ஒழுங்கு. அசனம்-போசனம். ஆச்சாதனம்-வஸ்த்தரம், மேலங்கி, ஜாத்யாஶ்ரய நிமித்த துஷ்டங்களாவன:— ஜாதி துஷ்டமாவது-ஜாதியினாலேயே சில பதார்த்தங்கள் தோஷங்களை உண்டு பண்ணுமது. அவையாவன:— மது, மாம்ஸம், உள்ளி, முருங்கை, முதலியவை. ஆஶ்ரய துஷ்டமாவது:— ஸத்வபதார்த்தங்களாயிருந்தாலும், தேவதாந்தர ஸம்பந்தமுடைய ஸ்த்தலங்களில் உண்டாகும் பதார்த்தங்களும், மற்றும் ஸம்ஸாரிகள் அபிமானித்த பதார்த்தங்களும் தோஷங்களாம். நிமித்த துஷ்டமாவது:—கீழ்ச்சொன்ன இரண்டு தோஷங்களற்றதாயிருந்தாலும் அவைகள் ஶ்ராத்தாதி காரியங்களுக்கு ஏற்பட்டிருந்தால் அவைகளும் தோஷங்களாம். இவைகள் ஒன்றுக்கொன்று க்ரூரமாய் ஜ்ஞானத்தைக்கெடுக்கும். அந்த தோஷங்களாவன:— பிணச்சோறு, மணச்சோறு, விலைச்சோறு, புகழ்ச்சோறு, எச்சிற்சோறு, மற்றும் பகவந் நிவேதநமல்லாத அந்நம், தேவத்ாந்தர அன்னம், ஸம்ஸாரிகள் அன்னம் முதலானவைகள்.

உபபாதந ஸ்தலமாவது— "கர்த்தவ்யம் ஆசார்ய கைங்கரியம்" என்கிற வாக்யம்.

இரண்டாம் ப்ரகரணம் முற்றிற்று.

## மூன்றும் ப்ரகரணம்.

ஸூத்திரம்.

244. கப்பு-தனக்கடைத்த ஆஶ்ரயம். ஆஶ்ராவிக்கை-கோறுதல். பரிஹரிக்கிறூர்-ஸமாதானம் சொல்லுகிறூர். அஸ்தானே-அவிஷயத்திலே. மறுகும்படி-மனங்குழம்பும்படி, தபிக்கும்படி.

245. பேசப்பிசகும்படியான-பேசினல் நலுங்கும்படியான. குழைச்சரக்கு-துர்ப்பல வஸ்து, அதாவது குழைந்துபோன பொருள். (இத்தால் தன்னுடைய இருப்புக்கு ஒரு பாத்திரத்தை ஆஶ்ரயமாகயுடைத்தாயிருக்குமது.)

மேலே சொல்லுகையாவது— 248-வது ஸூத்திரத்தில் சொல்லுமவை.

246. தலை நீர்ப்பாடு-முதல் மடை. திருவபிஷேகம் பண்ணுகை-முடிசூடுகை. ஆபிஜாத்யாதி-மேல் பிறப்பு, சீலம், வயஸு, விருத்தம் முதலியவை. அத்வரம்-யாகம். ஆர்ப்பரவம்-ஆரவாரம். சொட்டை-ஓராயுதம். கணையம்-ஆனை கட்டும் கம்பம். இப்புடைகளில்:- இந்த விதத்திலே. குற்றுயிராய்-ஸ்வல்ப ப்ராணராய், தனிவீரம்-அஸஹாய யுத்தம். வான்பகை-மஹா வைரம். ஶைஶவம்-பால்யம்.

கண்டுபாக்யானமாவது:—கண்வ புத்திரரான கண்டு மஹாமுனிவரால் சொல்லப்பட்ட கதை. அதாவது "சத்துருவாகிலும் தன்னிருப்பிடத்துக்கு வந்து காயிகப் பிரபத்தியான அஞ்சலியையாவது, மானவிகப் பிரபத்தியான ஆதரத்தையாவது, வாசிகப் பிரபத்தியான பிரார்த்தனையையாவது செய்தால் அவனை யெவ்வளவுங் கொல்லக்கூடாது. பயப்பட்டாவது, பயப்படாமலாவது, சத்துருக்களுக்குள் எவனொருவன் சரணமென்று வருகிறனே அவனை தன் பிராணன்களை விட்டுக் காப்பாற்றவேண்டும்." என்னுமது.

247. நடுக்கொத்தாவது:—நடுவிலே கொத்திடல், அதாவது அல்பம் கொத்திருத்தல். கோல்-பாணம். வன்னியன்-காட்டாள். குறும்பன்-துற்சனன். 'ஸ்ரீ பரதாழ்வானுக்கு விஶேஷம் சொல்லுகிறவிடத்திலே' என்றது ஸ்ரீ பரதாழ்வானுக்கு பெருமாள் விஷயமாய் நடந்த விருத்தாந்தம் சொல்லும்போது' என்றபடி. என்றத்தை ராத்ரியில் விருத்தாந்தத்தை- 'என்று அற்றை ராத்ரியில் நடந்த விருத்தாந்தத்தை' என்றபடி.

வைத்திரம்.

மங்களாசாஸனத்தில் ஆழங்கால் பட்டிருக்கும் பிள்ளையுறங்காவில்லிதாசர், பெருமாள் வளைய மசைதல். பிராட்டி புடவை யசைதல், எம்பெருமானார்மேல் ஈ எறுதல், ஸ்ரீ வைஷ்ணவர்கள் திருப்பரியட்டம் அலைதல் செய்யில் தமக்கு தாஸத்வமில்லையென்று அவர்களுக்கிப்படி வாராமைக்காக உருவின வாளை யுறையிலாடாமல் நாள்தோறும் ஸேவித்துக்கொண்டிருப்பர். அருளாளப்பெருமானெம்பெருமானாரும் பார்த்து, பிள்ளாய்! உம்முடைய ஆயுதம் என்று வினியோகப்படுவதென்ன; அவரும், உம்முடைய ஜல பவித்ரம் விநியோகப்படுமன்று அடியேனுடைய வாயுதம் விநியொகப்படுமென்று விண்ணப்பஞ்செய்தாராகையாலே இந்த வநுஷ்டான மவர்க்கே யுண்டென்றருளிச்செய்தார் நாடாதூரம்மாளுக்கு எம்பெருமனார்.

249. மதிநலம்-பக்தி ரூபாபந்நஜ்ஞாநம்.

251. வயிரவுருக்கு-சாணை பிடித்த வயிரம்.

252. ஆழங்கால்-மேலே கிளப்பவொண்ணாதபடி சேற்றில் ஆழத்திலே அமிழ்ந்தின கால், இத்தால் பலித்தது ஈடு பாடு. பகவத் குணங்களில் மனம் தளர்ந்து தேற்றமற்றிருக்கை.

254. மறுகுதல்-மனங்குழம்புதல். உறகல்-உறங்காதே கொள்மின்.

256. அந்தாமம்-பரமபதம். துவராமுன்-அழிவதற்குமுன். தழைப்பு-செழிப்பு, வாழ்வு.

259. இட்டு மாறினாப்போலே-மாறியிட்டாப்போலே. தொடை-ஸம்பந்தம், கொள்கை-க்ரஹிக்கை. அதாவது தெரிந்துகொள்ளுகை. நவ நவ-புதுமை புதுமை. உந்மேஷம்-விருத்தியடைதல். அபூர்வமான-முன்பில்லாத.

260. உருவுதல்-வாடுதல்.

265. ஆமுஷ்மிகம்-ஸவர்காதி பரலோகஸுக ஐஸ்வர்யங்கள் முதலியவை. வேதாந்த மர்யாதையாலே-வேதாந்தத்தில் சொன்னாப்போலே, நினைப்பான்-நினைக்கப்படுமவன்.

268. நைரபேக்ஷ்யத்துக்கு-பூர்த்திக்கு.

273. மற்றிருந்தீர்கட்கு-என்னோடே வேறுபட்டிருந்தவுங்களுக்கு; "செவிடரோடு ஊமையர் வார்த்தை" கூட்டுவது.

274. ஸமுச்சயம்-சேர்ந்திருத்தல். ஸமவிகல்பமாவது-அங்கிருந்தாலும்

ஸூத்திரம்.

சரி, இங்கிருந்தாலும் சரி என்று நினைக்கும்படி பேதித்துச்சொல்லுகை, ஊற்றிருக்கை-ஊன்றி யிருக்கை. தந்நியோகம்-ஆசார்ய நியமநம்.

275. கணனையில்-எண்ணிக்கையில்.

276. கைங்கர்ய வேஷம்-ப்ராப்ய லக்ஷணம்.

278. அபிஸந்தி-எண்ணம். 'ப்ரவ்ருத்தி தர்மந்தானே' என்றது ஆந்ருஸம்ஸ்யத்தாலே அநுஷ்டித்தது பகவத் ஸ்வபாவ விசேஷத்தாலே பந்தகமாகாதென்றபடி. அகாணே-செய்யாவிடில். ப்ரத்யவாயம்-பாபம். எதிர் விழி-நேரே பார்க்கை. தனி ஸ்லோகத்திலே-தனி சரம ஸ்லோக வியாக்யானத்திலே. இச்சை-ஸ்வரூபம், இரக்கம்-உபாயம், இனிமை-உபேயம்.

279. "புண்யத்துக் கஞ்சுகிறவன் பாபத்தை பண்ணுனிறே" என்கிற வாக்யத்திற்கு, அவதாரிகையில் சொன்ன த்ருதீய யோஜனையே மிகப்பொருத்த மென்பதை கண்டுகொள்ளுவது.

280. நற்றமாக-குணமாக.

287. மடிச்சீலை-மடியிலே கட்டின காசுப்பை. உளையும்படி-நோவும்படி. சுருள்-மயிர். சுருள் நாறுத பூவாவது-பூவில் சாபலத்தாலே முந்துற தன் தலையிலே வைத்து மேந்து சுருள் நாறப்பண்ணிக் கொடுக்கையாகிற பூவன்றியே.

290. க்ரமமிருப்பது-உத்பத்தி க்ரமமிருப்பது.

291. புரஸ்கரிக்கை-முன்னிடுகை.

292. தத்த்வஹிதாதிகள்-ஸ்வரூபம், உபாயம், புருஷார்த்தம். அநுக்ஷணம்-மேல் மேல். ஆர்த்தியாவது-ஆர்த்த ப்ரபன்னனுக்குண்டான வ்யஸநாதிசயம்; துக்கம். அபிநிவேசமாவது-ஆக்ரஹம், ஸம்யக்பரவேசம்.

299. ஆகந்துகம்-நடுவில் ஸம்பவித்தது.

301. உத்தேசிக்கிறார்-சொல்லுகிறார்.

302. வேஷம்-அவாந்தரபேதம். பீடை-ஹிம்ஸை.

303. வர்ணாச்ரம விபரீதமான வுபசாரமாவது:—ப்ரபந்நாதிகாராநுகுணமாக ஸ்வரூபகத வர்ணாச்ரம விபரீதமான ஸ்வார்த்த ஸ்வதந்த்ர புத்த்யா பண்ணு முபசாரம்.

ஆ-வியா.

ஸூத்திரம்.

பகவதபசாரம் பண்ணுகையாவது எம்பெருமானுடைய நற்சீவ்ஞன ஸ்ரீ வைஷ்ணவர்களின் திறத்துப்பண்ணும் அபசாரம்.

மாணிக்கமாலை.

அஜஹத் ஸ்வபாவனாய்-நித்யம் விடாத ஸ்வபாவத்தையுடையவனாய். ஸம்ஸ்தானத்தை-திருமேனியை. மெய்ப்பாடு-குறிப்பு வெளிப்படுத்தும் தோற்றம். துயரில்-துக்கத்திலே. வைதிகமந்த்ரம்-புருஷஸூக்தம், விஷ்ணு காயத்திரி முதலியவை.

304. நேரே-ஸாக்ஷாத்.

305. அஸஹ்யாப சாரத்திற்கு ஈச்வர விஷயத்திலும் ஓர் நிதர்சனம். காசிக்கரசனான பவுண்ட்ரகன் என்பவன் கண்ணனுடைய திருமேனியின் ஸௌந்தர்யத்தையும், சதுர் புஜத்தையும், பஞ்சாயுதங்களையும், பீதாம்பரம் முதலிய திவ்யாபரணங்களையும் கண்டு அஸூயையினால் அவனை கொன்றுவிட்டு தான் ஸந்தோஷ மடையவேணுமென்றெண்ணி தான் வாஸுதேவன் என்கிற நாமத்தைப்பூண்டு பன்னிரண்டு வருஷம் கோரமான தபஸ்ஸு செய்தான். அப்போது ருத்திரன், வாசுதேவனென்றபேரும், சதுர் புஜங்களும், கருடன் முதலியவைகளும் கொடுத்து கண்ணன் திருமேனிச்சாயையும் அளித்தான். இத்தைக்கொண்டு, தான் பவுண்டரக வாஸுதேவனென்று விருது கூறிக்கொண்டு உலகெங்கும் ஸஞ்சரித்து யுத்தஞ்செய்து வந்தான். கடைசியாக துவாரகைக்கு வந்து கண்ணனுடன் எதிர்த்தான். கண்ண பிரான் தன் சக்கரத்தால், அவன் தலையையும், படைகளையெலாம் அறுத்து காசி நகரக்காவலையும் தொலைத்துவிட்டனர். (ஈச்வர விஷயத்தில் இவ்வபசாரம் காணும்போது, பாகவத விஷயத்தில் காண்கைக்குச் சொல்லவேண்டா.)

306. நிபந்தம்-காரணம். அவஜ்ஞை-அவமதி.

308. பரிமாற்றம்-நடத்தை. உஜ்ஜிஜீவிஷுக்கள்-உஜ்ஜீவனத்தில் இச்சையுடையவர்கள். உபஸத்தி-அநுவர்த்தனம், ஸேவை.

309, உத்தீர்ணராய்-கடந்தவராய்.

311. விப்ரதிபத்தி-விபரீதப்ரதிபத்தி. நினைப்பிட்டு-ஸங்கல்பித்து.

312. உபதேஶஸுத்தியாவது-நிர்தோஷ உபதேஶம்.

316. ஆசார்யத்வபூர்த்தியில்லாத ஆசார்யர்களாவன:—

ஸூத்திரம்.

ஆசார்யபேதமும் ஆத்மபேதத்தோபாதி பிதாவை, மாதுலனை, ஸாவித்ர்யுபதேசம் பண்ணினவனை, அத்யயனம் பண்ணிவைத்தவனை ஒரு மந்த்ரம் உபதேசித்தவனை, பகவந்மந்த்ரம் உபதேசித்தவனை, இப்படி ஆராய்ந்து பார்த்தால் அனேகராயிருப்பர்கள். இவர்களுடைய முமுக்ஷுவுக்கு த்யாஜ்யர்கள். ஸம்ஸாரத்தில் ஸ்திரீபுமான்கள் ஸம்ஶ்லேஷரூபமான ஸ்ரீகோபாலமந்த்ரத்தை உபதேசிப்பாரும், புத்ரப்ரதமான மந்த்ரத்தை உபதேசிப்பாரும், ஐசுவரியமென்ன, ஆரோக்யமென்ன, விஜயமென்ன, ஶத்ரு நிரஸனமென்ன இவற்றுக்குத் தக்க மந்த்ரங்களையும் உபதேசிப்பாரெல்லாரும் ஸம்ஸாரத்தை வ்ருத்திப்பிப்பார்கள். ஆகையாலே ஆசார்யராகமாட்டார்கள். இவ்வர்த்தம் திருமந்த்ரத்தைக் குறித்தன்று, விநியோகங் கொள்ளுகிற நினைவைப்பற்ற.

மாணிக்கமாலை.

320. கோபால, ராம, ஹயக்ரீவ, நாரஸிம்ம, மந்த்ரங்களில் ஆதிசப்தத்திற்கு வராக, ஸந்தான, மத்ஸ்ய, கல்கி, மந்த்ரங்களை நிரை நிரையாகக் கொள்ளவேணும்.

321. உபஜீவநம்-உபதேசம். பரிசர்யை—கைங்கர்யம். அநுபுபூஷை-அநுபவிக்கவேணுமென்கிற இச்சை. பூர்வர்கள்-நம்பிள்ளை முதலானவர்கள்.

322. ப்ரதிபத்தி-அநுஸந்தானம். அநுபந்தி-தொடர்ந்து வருமது. அவித்யா-அஜ்ஞானம். ஆதிசப்தத்தால் அந்யதாஜ்ஞான விபரீதஜ்ஞானங்கள். ஸாலேக்யம்-ஸமானலோகத்வம். ஆதிசப்தத்தால் ஸாமீப்யம், ஸாயுஜ்யம், ஸாரூப்யம்.

325. இதுவும்-க்ருதஜ்ஞதையும்.

327. ஹேயோபாதேயங்களினுடைய ஹாநோபாதாநங்களாவது:—

ஹேயத்துக்கு ஹாநமும், உபாதேயத்துக்கு உபாதாநமும் என்றபடி. விடும் விஷயம்-பற்றும் விஷயம். ஸ்காலித்தியமாவது-ஹேயத்துக்கு உபாதானமும். உபாதேயத்துக்கு ஹாநமும் என்றபடி. த்ருஷ்டத்தில் ஸங்கோசமாவது:— தேஹ தாரண விஷயமாக ஆடை உணவு மாத்திரத்தில் குறைந்திருப்பது.

331. நெஞ்சுளைதல்-துக்கப்படுதல்.

332. ப்ராப்தியில்லை யோக்யதையில்லை.

ஸூத்திரம்.

333. ... த்தி-ஸேவை. வேஷத்தை-விசேஷாகாரத்தை. இவ்விடத்தில் பின் பழகிய பெருமாள் ஜீயர் வைபவம் அநுஸந்தேயம்:-ஆசாரியனுடைய ஜ்ஞானம் வேண்டா-சிஷ்யனுக்கு விக்ரஹமே அமையும், கருட த்யானத்துக்கு விஷம் தீருமாப்போலே ஆசார்யனை தியானித்திருக்கவே ஸம்ஸாரமாகிற விஷம் தீர்த்துக்கொள்ளலாமென்று ஆச்சான்பிள்ளை யருளிச்செய்வர்.

" ஆசாரியன் சிச்சனுருயிரைப் பேணுமவன்—தேசாருஞ் சிச்சனவன் சீர் வடிவை "

334. ஸ்வரூபமாய்-ஸ்வரூப நிரூபகமாய்.

337. தன் வஸ்துவை 'வாங்கி' என்னாதே 'கொண்டு' என்றத்தால்தான் பூர்வம் கொடுத்து வைத்திருந்து, பிறகு காலோசிதமாக சிஷ்யனிடத்தில் பெற்றுக்கொள்ளுவதைப்போல் ஸூசிப்பிக்கிறது.

339. ஆசார்ய ஸ்வாபஹாரியாய்-ஆசாரியனுடைய சொத்தை அபஹரிக்கையாய். முறைகேடான-ஸம்பந்த விருத்தமான.

343. அநுவதிக்கை-ஒருவன் சொன்னத்தை அநுஸரித்து தான் சொல்லுகை.

345. ப்ரணவத்தால் ஜ்ஞானமும், நமஸ்ஸால் வ்யவஸாயமும், நாராயணாய பதத்தால் ப்ரேம ஸமாசாரங்கள் கண்டு கொள்ளுவது. தததநுரூபாநுஷ்டானங்களாவது:— த்வயம், சரம ச்லோகங்களில் சொன்ன வநுஷ்டானம்.

346. உத்தேசிக்கிறார்—எடுத்துச்சொல்லுகிறார்.

347. இதுதான் என்றது பகவதந்யஶேஷத்வம். சதுர்த்தியாலும் என்றது-லுப்தசதுர்த்தியாலுமென்றபடி. பிறராவது-தேவதாந்த்ரபரர்கள்.

350. போரப்பொலிய—மிகவும் பூர்ணமாக.

351. குறியிட்டஞ்சப்பண்ணுகையாவது—சூடுபோட்டு பயமுறுத்தல். புடைகள்—ப்ரகாரங்கள்.

354. காசாதிதுஷ்டத்ருஷ்டியாவது—காமாலைமுதலிய கண்ரோகம். த்வித்வாதிகள் என்றத்தால் இரண்டும் இரண்டுக்கு மேல்பட்டதும் என்று கண்டுகொள்வது. பந்தமாவது—நாரஸம்பந்தத்தால் வருமவை.

356. இது—தோஷஜ்ஞானம்.

ஸுத்திரம்.

359. நைர்தோஷ்யம்-நிர்தோஷம். வைமுக்யம்-முகம் மாறுதல். அநாத்மந்யாத்மபுத்தி-தேஹாத்மபுத்தி - அஸ்வேஸ்வபுத்தி - தன்னதல்லாததை தன்னதென்று புத்தி பண்ணுகை. ஸ்ரீபராதாழ்வான் ஸம்ஸாரிகள் தோஷத்தை தன் தோஷமாக 'மத்பாபமேவாத்ர நிமித்தமாஸீத்' என்றுனிறே.

360. ஸம்பந்தஜ்ஞானமாவது—நாராயணத்வப்ரயுக்தஸம்பந்தம். அயோத்தியில் பெருமாளவதரிப்பதற்குமுன் ஒருவர் தலையை ஒருவர்வாங்கவேணுமென்கிற வுட்பகை யாவற்குமிருந்தபோதிலும் பெருமாள் அவதரித்தபிறகு அவர்கள் ஒருவர்க்கொருவர் ஸ்நேஹபாவத்தைக்காட்டினது எல்லோருக்குமுள்ள பெருமாள் ஸம்பந்தமே காரணமாம்.

361. இடையாட்டம்—ப்ரஸ்தாபம்.

363. தர்ஜனம்-சவுக்காலே அதட்டல், பர்த்ஸநம்-வாயாலே அதட்டல்.

364. ஸர்வஜ்ஞவிஷயங்களுக்கும் என்றது நித்யஸூரிகளுக்கும் என்றபடி.

365. ப்ரதிக்ரியை-சிக்ஷை. பாருஷ்யம்-பருஷவசனம். செறுப்புகளை-குறைவுகளை.

நம் தர்ஶனத்துக்கு மஹாவிரோதியானவனும், தனக்கு கோரதீங்குசெய்தவனுமான நாலூரானை 'க்ஷிபாமி நக்ஷமாமி' என்று சொல்லவேண்டியிருக்க, தான் பெற்றலோகம் நாலூரானும் பெறவேணுமென்று ப்ரார்த்தித்த அம்மஹா தயாகுணமுடைய ஆழ்வான், "பாபிகளுக்கன்றோ இரங்கவேண்டுவது மீனுக்குத்தண்ணீர்வார்த்துப் பயனென்" என்றருளிச்செய்தாராம். இவர் திருக்குமாரர் ஸ்ரீபட்டர், ஒலக்கத்திலே தன்னை பரிபவித்த ஒருவனுக்கு, "நாமறியாத நம்முடைய குற்றங்களை யெடுத்துக்காட்டின இம்மஹோபகாரகனுக் கென்செய்வோம்" என்று, தான் அணிந்திருந்த முத்துத்தாவடத்தை பரிசிலாகக் கொடுத்தாரென்பது ப்ரஸித்தமிறே. இத்தால் குற்றஞ்செய்தவர்கள் பக்கல் க்ருபை, சிரிப்பு, உகப்பு, உபகாரஸ்ம்ருதிவரவேண்டுமானல் பொறுமை வேணும். அது கோபமுள்ளவிடத்தில் நிற்காதானபடியால், கோபத்தின் தண்மை, தன்மைகளை யறியவேணும். இத்தையறியாமல் மற்றெல்லாமறிந்தாலும்அறியாமையைக்காட்டும். பிறரால்தனக்குதீங்கு விளைந்தபோது மனம் கலங்கி வருவதோர் துர்குணத்திற்கு கோபமென்று சொல்லப்படும். இதுதான் உத்தேசித்தகாரியம் நிறைவேறு

தகாலத்திலும் வருவதுண்டு. இக்கோபம் வருவதற்குக் காரணங்கள் அறியாமை, பேராசை, துராசை, அகங்காரம், வருமை, பிணி, மூப்பு, பசி, ஸஹவாசம், ஸ்வயநயம் பாராட்டுதல் முதலிய மற்றுமனேகமுள. கோபத்திற்கு ஸத்ருசமான தீமைவிளைக்கும் பதார்த்தங்களைச் சொல்லும்போது, நஞ்சு, அக்னி, சூரா, சண்டாளர்களைச் சொன்னபோதிலும் அவைகள் ஒரோருவகைகளில் ஒப்பாகுமல்லது, முற்றிலும் ஒவ்வாது. நஞ்சு யாவனொருவன் ஶரீரத்தில் ஸம்பந்தப்பட்டதோ அவன் சரீரத்தையே கெடுக்குமதொழிய பிறரைக் கெடுக்காது. இத்தால்வரும் தோஷங்களை மணிமந்திரசக்திகளால் பரிகரிக்கலாம். இல்லையேல், மரணமுண்டானாலும் ஜந்மாந்தரங்களுண்டாய், அப்போது உஜ்ஜீவிக்க யோக்யதையுண்டு. கோபமோ! எதிரிகள் மனதைப் புண்படுத்தி அவர்களையும் கோபத்திற்கு ஆளாக்குகிறது. இத்தால் பாகவதாபசாரங்களுண்டாய் மீளா நரகமே இவர்களுக்கு என்று மிருப்பிடமாகும். நஞ்சு சரீரத்தைக் கெடுக்கும். கோபமோ ஆத்மாவைக்கெடுக்கும். நஞ்சு சரீரத்தைக்கொல்லும் என்கிற நினைவால், அத்தை யாரும் சேரவொட்டார். கோபம் கொல்லாதென்கிற ப்ரமத்தையுண்டுபண்ணி முடிவில் கொல்லும். ஆகையால் நஞ்சைக்காட்டிலும் கோபம் கொடியதே.

நெருப்புக்கும் கோபத்திற்கும் ஒற்றுமையதிகம். அக்னி சிறு பொறியானாலும் ஊரெல்லாம் பொசிக்கி, தானும் உருமாய்ந்து சாம்பலாகிவிடும். ஆகையினால் தான் இதற்கு "ஆஶ்ரயாஶ:" என்று பெயருண்டாயிற்று. அப்படியே கோபமானது ஒரு பெரிய ஸமூஹத்தைக் குலைத்து தன்னையும் நிலை கொலையச் செய்யும். வீட்டிற்குள் புகுந்த ஸர்ப்பம் இன்னாரைக்கடிப்பதென்கிற வித்யாசமுண்டோ! அதுபோல கோபமுடையவனைக் கண்டு எல்லோரும் நடுங்கினால் அவனுக்கு ஸுகமுண்டோ? முடிவில் எல்லோரும் ஸமயம் பார்த்து அவனை கெடுக்கப்பார்ப்பார்கள். ஆகையால் கோபம் கூடாது; கோபம் தன்னையுடையவனைக் குலமுதலற அழிக்கும் என்பதை கம்பர் இராமாயணத்தில் காட்டியதைக் காணத்தகுந்தது.

"மூங்கிற் பிறந்து முழங்குதீ மூங்கின் முதலற முருக்குமாப்போலத்
தாங்கருஞ்சினத்தீத்தன்னுள்ளேபிறந்துதன்னுறுகிளையெலாஞ்சயிக்கும்
ஆங்கதன் வெம்மையறிந்தவர்கமையா வதனையுள்ளடக்கவுமடங்கா
தோங்கிய கோபத்தீயினை யொக்கு முட்பகை யுலகின் வேறுண்டோ"

**கம்பராமாயணம்.**

[முருக்குதல்-அழித்தல், கொல்லல். கமை-க்ஷமை, பொறுமை]

தோபம் மதுபானத்தைக்காட்டிலும் தாழ்ந்ததல்ல.

மதுபானம் மதியைக் கெடுத்து மானத்தைப் போக்குவது போல, இதுவும் அறிவைக் கெடுத்து அவமானத்தை யடையச் செய்கிறது. உண்டமாத்திரத்தில் உளைதல் செய்யுமது கள்ளுக்குண்டு. இது நினைத்தமாத்திரத்தில் பொங்கியெழுந்து புலன்களை யழியச்செய்யும் ஆகையால் கோபம் பஞ்சமாபாதகத்தைக் காட்டிலும் அதிகபாதகமே. கோபத்திற்குச் சண்டாளனை ஒப்பிடுவது உலகவழக்கம். இவை ஒன்றுக்கொன்று தோஷத்தில் குறைவற்றதல்ல. கேவல சண்டாளன் யாகாதிகளிலும் பெரியோர் குழாங்களிலும் புகுதல் கூடாதோ, அப்படியே மூர்க்கனென இவனும் ஸாதுகோஷ்டிக்கு அநர்ஹன். சண்டாளனைக்கண்டால் விலகுவதுபோல், கோபிஷ்டனைக்கண்டால் உள்ளே பதுங்குவர், ஆகையால் சண்டாளன் கோபத்தைக் காட்டிலும் கோரனன்று.

இன்னமும் கோபமானது சரீரதத்வம், மனோதத்வம், ஸதாசாரம், பாரமார்த்திகம், பாந்தவ்யம், ஸல்லாபம் முதலியவைகளுக்குச் சத்ரு. கோபம் நமனுக்குச் சமானமே. எங்ஙனேயென்னில்; வைத்திய. சாஸ்த்திரத்தை ஆராய்ந்தால் கோபத்தால் உஷ்ணமும, உஷ்ணத்தால் அதிக இரத்தோட்டமும், அதிக இரத்தோட்டத்தால் இருதயம் கெட்டு, அத்தால் மரணமுமுண்டாகிறது. அந்தோ ! இவர்கள் கோபத்தால் நமனுக்கிரையாவதே ! என்று திருவள்ளுவர் எடுத்துக்காட்டியதை விவேகிக்கத் தகுந்ததே !

தன்னைத்தான் காக்கச் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

குறள்.

அதிக கோபமுடையவன் மாணமடையாமல் உயிருடனிருந்தாலும் செத்தவனுக்குச் சமானமென்று அவரே யருளிச்செய்கிறார்.

இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

குறள்.

இதன் பொருள்— "கோபத்திலே மிகுந்தவர் உயிருடையவராயிருக்கினும் செத்தாரோடொப்பாவார். (அதாவது அதிக கோபமுடையவர்க்கு ஞானம் பெறுதற்கு உரிய உயிர் இருக்கினும் கலக்கத்தினாலே அதனை அடையாமை நிச்சயமாதலால் இறந்தாருக்கு சமானமாகிறார்) கோபத்தை நீக்கினவர் முக்தரோடொப்பாவார். (அதாவது கோபத்தை விட்டவர்க்கு நிலையில்லாத உடம்பு இருந்தாலும் ஞானத்தினால் முக்தியை அடைவது நிச்சயமாதலால் முக்

திபெற்றுரோடொப்பார்.) [இறந்தார்—கோபத்திலே மிகுந்தவர்.] ஆகையால் ஒருவன் தீயொத்த துன்பஞ் செய்யினும் அவன்மேல் கோபியாமை நன்மையிலும் நன்மை.

கோபமுள்ளவரிடத்தில் மனோதத்வம் சரியாய் வேலை செய்யாது. மனது கெடாமலிருந்தால் புத்திதெளிவாயிருக்கும், விஷயங்களை நன்றாய் க்ரஹிக்கும், ஞாபகசக்தி குறையாது, யோசனைக்கு இடமுண்டாகும், அப்போது நியாயம் விளங்கும். மற்றப்படி சீற்றமுண்டானவனுக்கு இவைகள் ஒன்றும் தோன்றாது. ஆகையால் கோபத்தை விடவேணும்.

ஸதாசாரம் உண்டாகும்போது கோபம் கூடாது. ஸதாசாரத்திற்குக் காரணம் அன்பு. அன்பு, கோபமுள்ளவன் ஊரிலும் நிற்காது. பெரியோர்கள் ப்ரீதியில்லாதாரிடம் பிணங்கார். இவர்கள் ஸந்நிதியன்றி அடக்கம், வாய்மை, தூய்மை, முதலிய நற்குணங்கள் கூடாது. ஆகையால் நல்லொழுக்கம் வேண்டுமானால் கோபத்தை துறத்தவேணும்.

இருட்டுக்குச் சத்ரு வெளிச்சம்போல், பொறுமைக்குச் சத்ரு கோபமே. பொறுமையில்லாதவனிடத்தில், மற்றெல்லாக் குணங்கள் நிறைந்திருந்தாலும் பயன்படாது. பொறுமையின் பெருமையைப் பாவுதல் பாரதமாம்.

ஒறுத்தார்க் கொருநாளே இன்பம்-
பொறுத்தார்க்குப் பொன்றந் துணையும் புகழ்.

குறள்.

இத்தால் பிறர் குற்றங்கண்டு தண்டித்தவர்க்கு ஒரு நாளே இன்பம். பொறுத்தவர்க்கு உலக மழியுமளவும் இன்பமும், புகழுமுண்டாகும்போது, இத்தை புறக்கணித்து எல்லாத்தீமைகளுக்கும் கொள்கலமான கோபத்தை கோடல் கோளே! அசேதநமான விருக்ஷமும் தன்னைச் சேதிக்கிறவனுக்கு நிழலைத்தருவதுபோல், தன்னிடத்தில் தீங்கு செய்தவனுக்கும் நன்மை செய்பவனே மனிதனவன். கோபங்கொண்டவர்களை கோபத்தால் ஜெயிக்கமுடியாது. சாந்தத்தாலும், இனிய வார்த்தையாலும் அவர்களை வென்றுவிடலாம். நெருப்பை ஜலத்தாலன்றி அக்னியால் அணைதல் அவமே!

" மிகுதியால் மிக்கவை செய்தாரைத்தாந்தந்-
தகுதியால் வென்றுவிடல் "

என்பது ஶாஸ்த்ர ஸித்தம், ஆகையால் பொறுமையுடையவனுக்கு ஸாதிக்கக்கூடாததொன்றுமில்லை. கோபிக்கக்கூடும் காரியமும் கூடாது.

பொறுமையைக்காட்டிலும் சிறந்த குணம் விடாமுயற்சி. இது பொறுமையுள்ள விடத்திலேயே நிறம்பெறும். பொறுமையாலும் விடாமுயற்சியாலுமன்றோ நம்மாசாரியர்கள் அரிய பெரிய காரியங்களை அநுஷ்டித்தார்கள். ஸ்வாமி எம்பெருமானர் திருக்கோட்டிபுரத்திற்கு பதினெட்டாவ்ருத்தி எழுந்தருளி யெடுத்த அம்மஹாநிதிக்குக் காரணம் விடா முயற்சியன்றோ !. "ஒன்றி யொன்றி யுலகம் படைத்தானும்" விடா முயற்சியை கைக்கொண்டான். ஆகையால் ஸத்காரியங்களை ஸாதிக்கும் ஸாதுக்கள் சண்டாளமான சினத்தலைச் சேதிக்கவேணும். கோபத்திற் கிடங்கொடுத்தவன் மேலானவர்களைக் கடுமையான வார்த்தைகளால் அவமானஞ் செய்வான். எதையும் செய்வான், எதையும் சொல்லுவான். தூஷிக்கவேண்டியவனை பூஷிப்பான். கோபத்தை ஜெயித்தவர்களை ஸாதுக்கள் கொண்டாடுகிறார்கள். பொறுமையுள்ள ஸாதுக்களுக்கு ஜயம் எப்பொழுதும் நிச்சயம். கோபிஷ்டன் தகுந்த ஸமயத்தில் தன் சக்தியை உபயோகிக்க முடியாது.

ஆனல் கோபத்தால் நன்மையும் இல்லையோ ? என்னில்; சிலவுள. பெற்றோர்கள் பிள்ளைகளிடத்திலும், பெரியோர்கள் சிறுவர்களிடத்திலும், ஆசாரியன் சிஷ்யனிடத்திலும், எஜமானன் வேலைக்காரனிடத்திலும், பர்த்தா பார்யையிடத்திலும், தங்கள் லாபத்தை உத்தேசிக்காமல், அவர்கள் நன்மையே கருதி கோபிக்கும் கோபம், 'கொண்ட சீற்ற மொன்றுண்டு' என்றாப்போல் ஹித ரூபமாக பகவந் நிக்ரஹம்போலே புருஷார்த்த கோடியில் அந்தர்பூதம். அது, மற்றவர்களுக்கு வருவதுபோல் ராஜஸதாமஸங்களால் கலங்கிவருவதொன்றல்லாமையால் அவர்கள் ஹ்ருதயத்தில் சீற்றமே யிராது. விரோதி வாய்மூடவொட்டாதானபடியால், இத்தையே வியாஜமாகக்கொண்டு காலத்தை போக்கும்போது, முடிவில் பாகவதாபசாரத்தில் மூட்டிவிடும். ஆகையால் குற்றத்தைப்பொறுப்பதே பெறுமை. இந்த கோபமாகிற பிசாசத்திற்கு இடம் கொடுத்தால், தலை விரித்தாடும். இத்தை தலை[illegible]டுக்காமல்ச் செய்வதே விவேக பலம். புத்திமான்கள் பழக்கத்[illegible]ஸாலபயாய் இத்தை வசப்படுத்தலாம். மதாந்தரஸ்தர்களான [illegible]ப்பாதரிமார்களும், சீற்றத்தை வெளிக்காட்டாமலிருப்ப[illegible]மைக்கும் காணலாம். அந்தோ ! நல்லடிக்காலத்திலும்,

ஸூத்திரம்.

சில நிஹீன ஜந்துக்கள் மடத்தின்வாசலில் போர்புரிவதைக்கண்டு, ஸ்வாமி ஸ்ரீவரவரமுனிகள், 'இவைகள் யாரிடத்தில் ஸ்ரீவசநபூஷணம் கேட்டது' என்று சில ஸ்ரீவைஷ்ணவஸ்வாமிகளைக் குறித்து வெறுத்ததுண்டு. ஆதி காலத்தில் ருஷிகளும் இந்த கோபத்தால் ஒரு க்ஷணகாலத்தில், யுகங்களாக செய்துவந்த கோரமான தபோ பலன்களை இழந்தார்கள். இதுக்குக்கால நியதி அதிகாரி நியதி கிடையாது. ஆகையால் ஆகார நியதிபெற்று, உயர்ந்த ஜன்மத்தை யடைந்து, அத்யாத்ம ஶாஸ்த்ரத்தை யுணர்ந்து, ஆசாரிய ஸம்பந்தமும் பெற்ற ஸ்ரீவைஷ்ணவர்கள், ஒருவருக்கொருவர் சீறுபாருமாய் நின்று, அத்தால் அனர்த்தத்தை யாவதாத்ம பாவியாயனுபவிப்பதைக் காட்டிலும், சீறியதாய், லோக நிந்தையற்றதாய், உஜ்ஜீவன ஹேதுவான சமதமாதிகளைக் காலமெல்லாம் கைக்கொள்ளுவார்களாக.

366. இவ்வதிகாரி-த்வயாதிகாரி. நடுவுள்ளபேறுகள்-ஆபிமுக்யாதிகள். ப்ரதிபாத்யாம்ஶத்துக்கு-த்வயாதிகாரத்திற்கு. அநாத்ம குணம்-அவித்யாதிகள். இது விதுவாக-இந்த இந்ததோஷ மடியாக.

"திருவேங்கடமுடையான், தன் ஸ்வரூபத்தை மறந்து என் ஸ்வரூபத்தை நினைத்தானாகில் பழைய நரகங்களொழிய வேறேயெனக்கொரு நரகம் ஸ்ருஷ்டிக்கவேணும். அன்றிக்கே என் ஸ்வரூபத்தை மறந்து தன் ஸ்வரூபத்தை யுணர்ந்தானாகில் பழையதிருநாடு போராது, எனக்கென்று ஒருதிருநாடு ஸ்ருஷ்டிக்கவேணும்" என்று சிறியாண்டான் பணித்தார்.

368. [illegible]-பாதையை, தீற்றி-புஜிப்பித்து. தோற்றக்குழி-கர்ப்பஸ்தானம்.

372. அப்ரதிஷித்தம்-வேண்டாமென்று தடுக்காமலிருக்கை.

374. விதிவாய்க்கின்று-க்ருபைகரை புரண்டிருக்கும்போது. காப்பார்-தடுப்பார்.

376. உபஜீவித்துக்கொண்டு-அநுஸந்தித்துக்கொண்டு. அநவதானம்-அஜாக்ரதை.

"ஒரு ப்ராஹ்மணன் இறப்பில் நின்றும் விழ அவ்வளவிலே சிறியாச்சான் அங்கேற வெழுந்தருள, ப்ராஹ்மணன். ஆச்சான்! பெருமாள் என்னைத்தள்ளினபடி கண்டீரே யென்ன, அங்ஙனன்று காண், கர்மத்தாலே நாம் விழுந்தோம், பெருமாளெடுத்தாரென்று நினைத்திரா யென்றருளினர்."

ஸூத்திரம்.

378. 'சீற்றமுள' - சீறும்படியாக நான் செய்தவை பலவுண்டு. கலவர் - கப்பல்காரர்.

380. அரிசினம் - அரிந்து போகடவேண்டும் கோபம்.

மூன்றும் ப்ரகரணம் முற்றிற்று.

---

## நான்காம் ப்ரகரணம்.

381. த்ரிபாத்த்வம் - மூன்று அம்சத்தோடிருத்தல். பாதம் - நாலில் ஒன்று. ஜீயர் - வாதிகேஸரி அழகிய மணவாள ஜீயர். உருக்காட்டாதே, சரீரத்தில் ப்ரகாசியாதே. அபிமானிகளான - நியாமகர்களான. யுகபதேவ - ஏக காலத்திலேயே. இட்டு மாறினாப்போல் - அவஸ்தாந்தரத்தை அடைந்தாப்போல். ஸம்ஹ்ருதி ஸமயம் - கரணகளேபர மற்ற நிலைமை. அசிதவிஶேஷிதராய் - அசித்தைக்காட்டிலும் வேறுபாடில்லாதவராய் சிச்சக்தி - ஞானசக்தி. தானறிந்த ஸம்பந்தம் - யாத்ருச்சிகாதிகள். ஆட்சி - பரிபாலனம். தொடர்ச்சி - அநுபவம். உதாஸீனன் - பிறத்தியான். பசை - இரத்தப்பசை. இடம் - அவகாசம். க(வ)ர்மகாலம் - வெய்யிற்காலம். துலை - ஏத்தம். மருபூமி - பாலைநிலம். சூது - த்யூதம். சதுரங்கம் - ரதகஜதுரகபதாதி ப்ரதிமை. தாவந்மாத்ரம் - அவ்வளவுமாத்ரம். மடிமாங்காயிடுதல் - பொய்க்குற்றஞ் சாத்துதல். யாத்ருச்சிகம் - யத்ருச்சயாபவம் யாத்ருச்சிகம். இந்த ஸம்பவத்திற்கு இருவர் அபேக்ஷிதம். ப்ராஸங்கிகம் - ப்ரஸங்கே பவ ப்ராஸங்கிகம். இந்த ஸம்பவத்திற்கு ஒருவர் அபேக்ஷிதம். ஆநுஷங்கிகம் - அகஸ்மாத் ஸந்நிதானம் (ஸம்பந்தம்) ஆநுஷங்கிகம். இதற்கு மூவர் அபேக்ஷிதம். சேதநவிதிதம் - சேதநனறிந்தது.

382. ஆபிரூப்யம் - ஸௌந்தர்யம். ஜாதிஸ்ம்ருதி - பூர்வஜென்மஞானம். தலைசீய்த்து - உன்மஸ்தகச் செருக்கு, வாளா - வெறுமனே,

386. பூர்வர்கள் - பெரியவாச்சான்பிள்ளை முதலானவர்கள்.

387. வக்ஷ்யமாண - சொல்லப்போகிற. ஸ்முச்சயிக்கிறது - சேர்த்துச்சொல்லுகிறது. யௌகபத்யம் - ஏககாலஸ்ருஷ்டி.

ஸூத்திரம்.

388. தந்நிரூபணமாவது-ஏககாலஸ்ருஷ்டி நிரூபணம்.

391. அச்சகர்மாவாய்-ஸூக்ஷ்மகர்மாவாய். நிரூபணவிஶேஷங்கள்-விசாரவிசேஷங்கள்.

392. ஸம்ஜ்ஞிகன்-பேரையுடையவன். வித்தமன்-அறிந்தவன். ஸம்பாரத்தை-ஸாமான்களை. ஸமீக்ஷா-கடாக்ஷம்.

498. உபபாதகமாக-விவரணமாக.

401. விித்தவத்கரித்து-ஸ்தாபித்து. முந்நீர்-முன்னே ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஜலம். கடல்.

403. விதி-பகவத்கிருபை. காப்பார்-தடைசெய்வார். மட்டு-அவதி.

406. நிவர்த்யம்-சரீரம்.

406. அபியுக்தர்-பெரியோர். அநபிஜ்ஞர்-தெரியாதவர். உபஸத்தி-சேவை.

408. வரி-ரேகை. மைந்தன்-மிடுக்கன். அடு-கொலைசெய்யும். புலா-தபிக்கும்படியாக. ஒருபடி-ஏகப்ரகாரம்.

409. உறுவதறிந்து-ப்ராப்யத்தையறிந்து. உண்டபோது-அநுபவித்தபோது. உம்பர்-அதுக்குமேலே. மாறு-உபமானம். சாயல்-அவயவகாந்தி. மாமை-ஸமுதாயகாந்தி. துவர்ந்து-உலர்ந்து. ஒருவரிருவர்-கீழ்ச்சொன்ன மூவர். ஒருவார்த்தை—வேளைக்கொருவார்த்தை. உண்டுகளித்தேற்கும்பரென்குறை-குணங்களை யநுபவித்த எனக்குமேல் வேண்டுவதொன்றுண்டோ.

“தேவு மற்றறியேன்” என்றிருக்கும் ஸ்ரீமான்களான அதிகாரிகள், ஆழ்வார் திருமகள் ஆண்டாள், நம்மாழ்வார் திருவடிகளிலே ஸ்ரீமதுரகவியாழ்வார், நாதமுனிதிருவடிகளிலே குருகைகாவலப்பன், ஆளவந்தார்திருவடிகளிலே தெய்வவாரியாண்டான், எம்பெருமானார் திருவடிகளிலே வடுகநம்பி, நம்பிள்ளை திருவடிகளிலே, பின்பழகிய பெருமாள் ஜீயர், வடக்குத் திருவீதிப்பிள்ளை திருவடிகளிலே பிள்ளை லோகாசாரியர், இவர் திருவடிகளிலே கூரகுலோத்தம தாஸர், திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளிலே நம்முடைய ஜீயர். (ஸ்ரீமணவாளமாமுனிகள்)

### அந்திமோபாயநிஷ்டை.

410. வ்யுத்பத்திதசை-ஆரம்பதசை. அதினுடைய யாதாத்ம்யம்-ஸ்வரூபத்தினுடைய யதாவஸ்திதாகாரம்.

ஸூத்திரம்.

411. அடிதாறு-பாதரேகை. அவிநாபூதாய்-விடாதவாய்.

412. ஓடவைத்து-புடம்வைத்து, நிஷ்கரிஷித்து.

413. மலாவகுண்டித-அழுக்காலே மூடப்பட்ட. ஸ்வகீய-ததீய. ஆவிர்பூதமானஸ்வரூபம்-பகவத்சேஷத்வ ஆவிர்பாவம்.

415. புறப்பூச்சு-வெளிப்பார்வை.

417. விஷயத்தை-தர்மியை.

418. ப்ரக்ரியை-க்ரமம். இவ்விஷயம்-ஈஶ்வரவிஷயம்.

420. தவளவண்ணர்-சுத்தஸ்வபாவர். தகவுகள்-கிருபைகள். ஆகாத்தில்-இரத்தணுகரத்தில். நிதிவிளையும் ஸ்தானத்தில்.

421. ஸஹ்ருதயமாக-மனப்பூர்வமாக.

423. முற்றூட்டு-பூர்ண அநுபவம். வேறொன்று-ததீயவிஷயம். மருவான்-விரும்பான். பாவை-மரப்பாவை. சுழியாறுபடுத்தி-ஆற்றின் சுழியில் அகப்பட்டு.

426. பேறு-ப்ராப்யம். அப்பேறு-திருவடியாகிற பேறு.

427. ஸ்வோக்தியாவது-ஆசார்யன் உபகாரகன் என்றது. அமோகம்-வ்யர்த்தமாகாதது. சரணத்வோக்தி-சரண திருஷ்டாந்த் தொக்தியை. முறுகி-மீறி. ஸம்ப்ரதிபந்நம்-ப்ரஸித்தம்.

433. ஒரு முகத்தாலே-ஒரு ப்ரகாரத்தாலே.

434. உத்தாரகத்வத்தில்-மோக்ஷோபதாயகத்வம்; ஸம்ஸாரத்தினின்று தாண்டுவிப்பிக்கை.

435. பற்றுசுகளாவது-யாத்ருச்சிகாதிகளும், நாமார்-இத்யாதிகளும்.

436. சீர் தூக்கி-சீர்-பாரம், தூக்கி-நிருத்து; ஒத்துப்பார்த்தல்.

439. ஜலஜம்-தாமரை. அந்தரம்-ஆகாசம், அலரா-விகஸியா.

441. நடுவிற் பெருங்குடி-க்ராம மத்தியத்திலிருக்கும் குடியானவன்.

## பாகவத வைபவம்.

கைகேயி பகவதபசாரம் பண்ணினளே யாகிலும், தன் மகன் என்றாகிலும் பாகவத ஸ்நேஹமுண்டாகையாலே முக்தையானாள். சக்ரவர்த்தி, பகவத் ஸ்நேஹம் பண்ணினனேயாகிலும் முக்தனாகிறிலன். பட்டர், எம்பெருமானை யறிகையாவது-அவனுக்கு அரை வயிற்றுப்படி, ததீயரை யறிகையாவது அவனை முழுக்கவறிகை

யென்றருளிச்செய்தார். முதலியாண்டான், பாகவத சேஷத்வ விதுரமான பகவச் சேஷத்வமும், தேஹாத்மாபிமாநம்போலே பொல்லாதென்றருளிச்செய்தார்.

திருமங்கையாழ்வார்க்கு ததீய விஷயத்திலுண்டான ஊற்றஞ் சொல்லுகிறது:— "நம்பி தன் நல்லமாமலர்ச் சேவடி தென்னியிற் சூடியுந் தொழுதும்-எழுந்தாடியும்" என்கிற பாசுரத்தைக் கேட்டு, இவர் கால்வாசி யறிந்தவராயிருந்தாமென்று, ஆழ்வீர்! திருச்சேறையிலே வாரீர், உம்முடைய வபேக்ஷிதத்தைத் தலைக்கட்டித்தருகிறோமென்ன; இவர் திருச்சேறையிலே யெழுந்தருள, இவ்வாழ்வாருடைய அசைந்த வளையத்திலே அழுகைவழிய வார்த்தாப்போலே, தம்முடைய திருவடிகளைக் கொண்டுவந்து வைக்கப்புக, அத்தைப் புறங்கையாலே தட்டி, "உன் பொது நின்ற பொன்னங்கழலோ வென் தலைமேலிருப்பது, உன்றாள் தொழுவார்காண்மின் என் தலைமேலிருப்பது" என்ன, அத்தைக்கேட்டு லஜ்ஜாவிஷ்டனாய், உமக்கு அந்தர்யாமியாயிருந்தோமே யென்ன, எம்பெருமான் தாள்தொழுவா ரெப்பொழுது மென்மநத்தே யிருக்கின்றாரேயென்ன; ஆகிலும்-அர்ச்சாவதாரமாய் ஸுலபனாயிருந்தோமேயென்ன, கடன் மல்லைத்தலசயநத் துறைவாரைக்கொண்டாடும் நெஞ்சுடையாரவரெங்கள் குல தெய்வமேயென்ன. ஆகில் அடியிலே நமக்கு தாஸரென்று புகுந்தீரே யென்ன, 'மற்றெல்லாம் பேசிலும் நின்திரு வெட்டெழுத்துங்கற்று நானுற்றது முன்னடியார்க்கடிமை" என்ன, அடியிலே நம்மைக் கவி பாடவென்றிழிந்து நம்மடியார் திறத்திலே மண்டிற்று என்னென்ன? "ராஜபுருஷ:" என்னுமாப்போலே ஒருவனைக் கவி பாடுமவன் ஊரும் பேரும் தாரும் குடியும் வைத்துக் கவிபாடுமாப்போல சொன்னேனித்தனை, ததீய விஷயமே யுத்தேச்யமென்ன, ஆகிலும் பிரித்துச் சொன்னீரே யென்ன, பர்த்தாவின் தேஹத்தை விரும்பின பதிவ்ரதைக்குக் குற்றமுண்டாகிலிறே திவ்ய மங்கள விக்ரஹத்தை விரும்பின வெனக்குக் குற்றமுண்டாவதென்று, தமக்கு ததீய விஷயத்திலுண்டான ஊற்றத்தைச் சொல்ல, ஈச்வரன் திருவுள்ளமுகங்களித்து இவ்வாழ்வார்க்குத் தோற்றோமென்று இவர் திறத்திலே மடலெடுக்கும்படியாயிற்று ஈச்வரன் திருவுள்ளம்.

வார்த்தாமாலை.

## பாகவதா நுவர்த்தனக்ரமம்.

இது த்ரி ப்ரகாரமாயிருக்குமென்று நம்பிள்ளை யருளிச்செய்வர்.

ஸூத்திரம்.

ஸத்கார யோக்யர், ஸஹவாஸ யோக்யர், ஸதாநுபவ யோக்யர் என மூன்றுவகையாயிருப்பர்.

ஸத்கார யோக்யராவார்— நாமரூப ப்ரதாநர். இவர்கள் அவனுடைய பெயரும்; சின்னங்களும் தரித்திருக்குமவர்கள். இவர்களுடைய ஜந்ம வ்ருத்தங்களெப்படி யிருந்தாலும் அவமதிபண்ணப் போகாதே சக்த்யநுகுணமாக கிஞ்சித்கரித்து பகவத் விக்ரஹத்தில் அபசாரத்துக்கு பயப்படுமாப்போலே இவர்கள் விஷயத்திலும் பயப்பட்டு அர்க்யபாத்யாதிகளாலே திருவுள்ளம் ஸுப்ரஸந்நமாம்படி ஆராதித்துக்கொண்டு ப்ரவர்த்திக்கவேணும். அவமதி பண்ணினுனாகில் பகவந் நிக்ரஹ பாத்ரனாய் கர்ம சண்டாளனாய் விடுமாகையாலே ஸ்வநைச்யோக்திகளாலு முகப்பித்துக் கடக்க வர்த்திக்கவேண்டும்.

ஸஹவாஸ யோக்யராவார்:— ஜ்ஞாந ப்ரதாநர். த்யாஜ்யோபாதேய விவேக ஜ்ஞாந பரிபூர்ணராய் த்யாஜ்யங்களை பரித்யஜித்து உபாதேயத்தைப்பற்றி சரமோபாய நிஷ்டரான த்ருப்தாதிகாரிகள். இவர்கள் சஹவாசம் பண்ணுகைக்கும் ஒருவருக்கொருவர், ப்ரக்ருதி சம்பந்த நிபந்தந சித்தகாலுஷ்யம் வாராதபடி போதகராகைக்கும் யோக்யர்.

ஸதாநுபவ யோக்யராவார்:— அநுஷ்டான ப்ரதாநர். அவர்களாரென்னில் த்யாஜ்யபூமியான இவ்விபூதியிலே ஜிஹாசை பிறந்து பகவதநுபவா லாபத்தாலே பரமார்த்தராய் பாலோந்மத்த பிஶாசாவிஷ்டரைப்போலே தம்முடம்பை மறந்து இருந்தவிடத்திலிராதே சம்சாரிகளைக்காணவு மாட்டாதே "இவை யென்ன உலகியற்கை, கொடுவுலகம் காட்டாதே" என்று, திவாராத்ரி நித்ரையற்று, திருநாமங்களை ஜல்பித்துக்கொண்டு, பித்தரென்று லௌகிகர் நகைக்கும்படி சஞ்சரித்துக்கொண்டிருக்கும் மஹாத்மாக்கள். இப்படிப்பட்ட அதிகாரிகளையாய்த்து ஆசார்யர்களாக வரணம் பண்ணவும், தீர்த்த ப்ரசாத ஸ்வீகாரம் பண்ணவும் யோக்யராய் சேதநரை கரையேற்ற வல்லரென்று விஶ்வஸிக்கத்தகுந்தது.

## விலக்ஷணமோக்ஷாதிகாரி நிர்ணயம்.

442. கொள் கொம்பு-கொழு கொம்பு; ஆதாவு கோல். சுள்ளிக்கால்-சிறு குச்சு. உபக்னம்-பற்றுக்கோல். பரிணமத்துக்கு-வியாபரிக்கைக்கு. கொழுந்துவிக்கும்-படர்விக்கும். மஹதாஶ்ரயம்-பெரிய கொம்பு.

ஸாஹித்யம்.

ஈஶ்வரன் மோக்ஷப்ரதன் என்றிருந்தபோது ஆசார்யனைத்தஞ்சமென்றிருப்பான். ஆசார்யனை மோக்ஷ ப்ரதனென்றிருந்தபோது ஆசார்ய வைபவரு, சொன்னவனைத்தஞ்சமென்றிருப்பான்.

வார்த்தாமாலை.

கேவல பகவத் சேஷத்வம் தேவதாந்தர சேஷத்வத்தை விளைவிக்கக்கூடும். பாகவத சேஷத்வமுண்டானால் மாத்திரம் பகவத் சேஷத்வம் ஸித்திக்கும். இது தேவதாந்தர சேஷத்வத்திற்கு அருகமாக்காது.

443. நாயகக்கல்-நடுரத்நம். நாயகமணி-பிரதானமணி. அதிஷ்டிகை-பீடிகை. மேலடங்கலும் 448-ஸூத்திரம்முதல். ஸத்ஸம்ப்ரதாய ஸித்த-உபதேசபரம்பராப்ராப்தம். ஆப்தன்-ப்ராமாணிகர். துரபிமானம்-அஹங்காரம். ஈஶ்வராபிமானமாவது-ஈஶ்வரனுக்குண்டாகும் அஹங்காரம். அதாவது "அஹம்த்வா மோக்ஷயிஷ்யாமி" என்னுமது. பிள்ளை-வடக்குத்திருவீதிப்பிள்ளை.

445. வைத்த சிந்தை-ஈஶ்வரன் கொடுத்த ஞானம்.

446. காலன் கொண்டு மோதிரமிடுகையாவது-தன்னுடைய விநாசத்தைப்பாராமல் கெடுதலை விளைவிக்கும் காலதானத்தைப் பெற்று, அத்தால் வரும் பொன்கொண்டு மோதிரம் செய்து கையிலிட்டு வாழவேணுமென்றிருத்தல்.

447. பாரிஶேஷ்யாத்-என்றது சில பொருள்களை விவகரித்து மிகுந்தது எதுவோ அதைச்சொல்லுவது. இவ்விடத்தில் மிகுந்ததாவது மற்ற உபாயங்களையெடுத்து ஆசார்யாபிமானமே உத்தாரகம் என்று மற்றவைகளைக் கழித்துச் சொன்னது. உபபாதித்து-நிரூபித்து.

449. ஜீமூதம்-மேகம். ஸரித்ஸலிலம்-ஆற்று ஜலம். வாபீ-குளம். கூபம்-கிணறு. பயஸ்ஸு-ஜலம். பிபாஸை-தாகம். கனித்ராதிகள்-கிடப்பாரை முதலியவை.

452. விநியோகவிஷயமாவது—கிஞ்சித்காரவிஷயம். ஶேஷமாயிருக்கும்-அங்கமாயிருக்கும்.

456. ப்ரூணஹத்யா-கர்ப்பத்தை நசித்தல். ஏதேனுமொருபடி என்றது கைங்கரிய புத்தியையும் கொள்ளுகிறது.

457. ப்ரச்யுதி-நழுவுதல், விரோதம்.

## ஆசாரிய வைபவம்.

ஆசாரியராவார்:— ஹம்ஸலக்ஷணத்தையுடையவர்கள். ஈஸ்வ
ரன் ப்ரஹ்மாவுக்கு வேதப்ரதானம் பண்ணும்போது ஹம்ஸரூப
மாக விருந்ததற்கடி, ஆசாரியாள் சேதனுக்கு ஜ்ஞாநப்ரதாநம்
பண்ணும்போது ஹம்ஸலக்ஷணத்துடனிருக்கவேணுமென்றே.
ஹம்ஸமானது-ஶுத்தவெள்ளையாகையாலே இவரும்-ஶுத்தஸ்
பாவராயிருப்பர். அதுக்கு கமநஸாதநமான இரண்டு பக்ஷங்கள்
போல் இவருக்கும் கமநஸாதனம் ஜ்ஞாநாநுஷ்டானங்கள். ஹம்ஸ
மானது சேற்றில் கால்வையாதே தாமரைமலரிலிருக்குமாப்போ
லே இவரும் ஸம்ஸாரஅள்ளலில் கால்வையாதே மாநஸபத்மத்
தில் மனத்தை செலுத்துவர். அது பாலும் நீரும் கலந்து வைத்தா
ல் பாலை யெடுக்குமாப்போலே இவரும் அஸார அல்பஸாரமான
ஶாஸ்த்ரங்களை விட்டு ஸாரதமமான ஶாஸ்த்திரத்தை பஜிப்பர்.
அதின் நடை அழகாய் ஒரேவிதமாயிருக்குமாப்போலே, இவரும்
ஶ்ரேஷ்டமான ஆசாரத்தில் ஊன்றி அதில் குறைவுவாராமலிருப்
பர். கடலில் அலைகள் மோதினாலும் அதற்குப் பின் வாங்காமல்
தன் ஆசாரமாகிய மத்ஸ்யத்தையே அது நாடியிருக்கும். இவரும்
ஸம்ஸாரத்திலிருக்கும்போது தாபத்ரயாதிகளுக்கு இடையாமல்,
மத்ஸ்யாவதாராதிகளையே த்யாநித்திருப்பர். அது தன் குஞ்சுகளு
க்கு வாய்க்கடங்கின இரைதேடியிருக்குமாப்போலே, இவரும் ஸா
த்மிக்க ஸாத்மிக்க உபதேசிப்பர். தன் கதியை குஞ்சுகளுக்கு ப
ழக்குமாப்போலே இவரும் தன் அநுஷ்டானத்தை ஶிஷ்யனுக்கு
நடத்திக் காட்டுவர். ஆகையால் இவர்களை பரமஹம்ஸர் என்று
1 சொல்லுவது ஆன்றோர் மரபு. இவர்களுடைய ஜ்ஞானம், மயர்
வற்றதாய் ஶாஸ்திர ஆராய்ச்சியில் சோர்வற்ற ஆழ்ந்தமதியுடைய
தாயும்; தூணம் "நீர் நுமது" என்கிற அஹங்காராதிகளற்றதாயும்
காமக்ரோதாதிகள் கலசாததாயும், ஆர்ஜவம், பொறுமை, தூய்
மை, வாய்மை, க்ருபை முதலியவைகள் பரிபூர்ணமாயுடையதா
யும், வைராக்யம், வெருப்பும், விருப்புமற்றதாயும், "முனியார்
துன்பங்கள் முந்திலுமின்பங்கள் மொய்த்திடினும் கனியார்மன
ம்" என்பதாயும், "இடாரான ஆக்கையிருக்க முயலார்-மடவார்ம
யக்கின் மயங்கார்" என்னும்படி கலக்கமற்றதாயும், "சோதியரா
வின் பின் போந்தாரையன்றித் தொழேன் உடலைக் காதியராவி
னும் பொன்மா மகுடம் கவிக்கினும்" என்னும்படி
யான சீலத்தை யுடையதாயும்; பக்தி, நித்யமாய், மறந்தும் பலா

ந்தரங்களை இச்சியாததாயும், ஈஶ்வரன் ஸம்ருத்தியையே, பரயோஜனமாயுடைத்தாயிருக்கும். இவர்களுக்கு மற்ற திருநாமங்களைவிட 'ஆசாரியன்' என்கிற திருநாமம் மிகவும் வழங்கிவந்ததுக்குக் காரணம், அவர்கள் தர்மங்களை 'ஸ்வயம் ஆசரதே' என்று விதித்தபடி, அநுஷ்ட்டித்துக் காட்டியதே ஹேதுவாம். ஶாஸ்த்திரங்களில் 'ஸாமான்யம்' 'விசேஷம்' என்று சொல்லும் இரண்டு தர்மங்களில், விசேஷ தர்மத்தை உபதேசித்து விடாமல், ஊற்றத்துடன் நடத்திக் காட்டியதால், ஆசார்ய பதம், இவர்களுக்குண்டாயிற்று. இந்த விசேஷ தர்மத்தை இவர்கள் நடத்திக்காட்டியதற்கு மூலம்,— அத்யந்த காமமானது ஊரார் நிந்தையை ஒருவனை பார்க்க வொட்டாதாப்போல், இவர்களையும் விசேஷ தர்மத்தில் மூட்டிவிட்டது, விசேஷ சாஸ்த்திரத்திலிருக்கும் மஹா விஶ்வாஸமே. இதற்கு நிதர்ஶன பூதர்கள் ஈஶ்வரன் முதலாக ஆசாரியான் இறுதியாக வுள்ளவர்கள்.

இவர்களுடைய வைபவத்தை இவர்கள் திருநாமங்களே காட்டித் தருகிறபடி:—

"சிஷ்யனை ஆசரிப்பிக்கவல்லராதலால் ஆசார்யரென்றும், அஜ்ஞாந இருளை அகற்றுமவராதலால் குருவென்றும், தெள்ளிய ஜ்ஞாநத்தை உபதேசிப்பவராதலால் தேசிகரென்றும், சிஷ்யனைச்சொத்தாகவுடையவராதலால் ஸ்வாமியென்றும், அதிகாரத்தை உண்டாக்குமவராதலால் ஆசானென்றும், ப்ரஹ்மத்தை நயிப்பிப்பவராதலால் ப்ராஹ்மணரென்னும், ப்ரஹ்ம தேஜஸ்ஸை அளிபவராதலால் ஆர்யரென்றும், ஜ்ஞாநபிதா வாதலால் குரவரென்றும், பழுதற்ற மெய்ஞ்ஞானியாதலால் பகவரென்றும், பரிசுத்தராதலால் தீர்த்தரென்றும், ஆத்மோஜ்ஜீவநத்துக்குக் காரணராதலால் அடிகளென்றும், புத்திமானாதலால் புங்கவரென்றும், பண்டிதராதலால் பட்டாரகரென்றும், உத்தரிப்பிக்குமவராதலால் உத்தாரகரென்றும், கடிப்பிப்பவராதலால் கடகரென்றும் ஒப்புயர்வற்ற உபகாரகராதலால் பரமோபகாரகரென்றும், திருநாமங்களையுடையவர்."

**அர்த்தபஞ்சக ஸாராம்ருதம்.**

463. பல்லவிதமாக்கும்-புஷ்பிதமாம்படிச்செய்யும்.

நான்காம் ப்ரகரணம் முற்றிற்று.

பெரிய ஜீயர் திருவடிகளே சரணம்.

அரும்பதவிளக்கம் முற்றிற்று.